

13

தனிச்சுற்றுக்கு மட்டும்

2006
ஆனி
ஜூலை

புது எழுத்து

ஆசிரியர்: மனோன்மணி

புது எழுத்து

ஆசிரியர்
மனோன்மணி

ஆசிரியர் குழு
சா. தேவதாஸ்
சிபிச்செல்வன்
ஜி. குப்புசாமி

பதிப்பாசிரியர்
ஆர். சுகவனம்

வடிவமைப்பு
தி. முரளி

ஒளி அச்சு
தே. சங்கர்

அச்சகம்
மணி அச்சகம், சென்னை

அனைத்துத் தொடர்புகளுக்கும்
மனோன்மணி
39 ஜே.கே.சி. தெரு
காவேரிப்பட்டணம் 635 112
தொலைபேசி: 04343 252665
செல்: 98426 47101
மின்னஞ்சல்
puduezuthu@yahoo.com

அட்டையில்
சால்வடார் டாலி

13

அஞ்சலி



Pramoedya Ananta Toer
6.2.1925 - 30.4.2006



கவிஞர் சுரதா

விலை ரூ.30 (தபாலில் ரூ.40)
ஆண்டு சந்தா ரூ.200

கவிதை

சிறுகதை

கட்டுரை

மொழிபெயர்ப்பு

நேர்காணல்

கிரேக்கக் கவிதைகள்

சிறுகதை

ஆளுமை

கட்டுரை

தேவதச்சன் கவிதைகள்



Thomas Brill

1.

உபயோகமில்லாத பொருட்கள் எதையாவது எப்போதாவது
நீ கையால் தொடுகிறாயா
உபயோகமற்ற பொருட்கள் ஒரு விலங்கைப் போல்
மூச்சுவிட்டுக் கொண்டிருக்கின்றன.
அகிலம் எல்லாம் அசைந்து கொண்டிருக்கும்போது
அவைகள் அசைவற்று நிற்கின்றன.
நாளைக்காலை, இந்தக்
கனியின் தோல்
குப்பைக் கூடையில் கிடக்கும்
அப்போது அது
காணும் கனவுகளிலிருந்து அதுவும்

தப்பிக்க முடியாமல் போகும்,
மூலைக்கு மூலை தள்ளி விடப்பட்ட
முதியவர்கள் போல.
எனினும் நம் விரல்களுக்கு, ஏதோ
வினோத சக்தி இருக்கிறது
உபயோகமற்றபோதும், உடைவாளை சதா
பற்றிக் கொண்டிருக்கிறது
சென்று வாருங்கள், உபயோகமற்ற பொருட்களே
நீங்கள்
இன்னொரு ஆறைப்போல் ஓடிக்கொண்டிருக்கிறீர்கள்
எப்போது வேண்டுமானாலும் திரும்பி வாருங்கள்
வந்து,
மீண்டும் மீண்டும்
அன்பின் தோல்வியைக் காணுங்கள்.

2.

அடுக்குமாடிக் கட்டிடத்திலிருந்து
விழுந்து கொண்டிருந்தனர்.
பாதித் தூரம் செல்கையில்
மீனாய் மாறினர்
மூச்சுத் திணறி துடித்தனர்
தொடர்ந்து விழுகையில்
பிறந்து இரண்டுநாள் ஆன
குருவிக் குஞ்சாய் ஆயினர்.
அவர்களது
பழுப்பு நிற உடல் நடுநடுங்கி
குப்புற விழுகையில்
தரையைத் தொட்டு
கூழாங்கல்லாய் தெறித்தனர்
பூமிக்குள் விழுந்து
பூமிக்குள்ளிருந்து வெளியேறுகையில்
ரோமங்கள்
முளைத்த ரத்தம் ஆனார்கள்
ரத்தம்
எனச் சொட்டி,

சொட்டு சொட்டாய்
அடுக்குமாடிக் கட்டிடத்திலிருந்து
விழத் தொடங்கினர்
எல்லோரும் சுற்றியிருக்கும்போது,
அவனும் அவளும்
யாருமில்லாது
அடுக்குமாடிக் கட்டிடத்திலிருந்து
விழுந்துகொண்டிருக்கின்றனர்.

3.

தப்பித்து
ஓடிக்கொண்டிருக்கிறது, ஆறு
பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து.
அதன் கரையோர நாணலில்
அமர்ந்திருக்கிறது
வயதான வண்ணத்துப்பூச்சி ஒன்று.
அது இன்னும் இறந்து போகவில்லை
நமது நீண்ட திரைகளின் பின்னால்
அலைந்து திரிந்து களைத்திருக்கிறது
அதன் கண்கள் இன்னும் நம்மைப்
பார்த்துக் கொண்டிருக்கின்றன
பசியோடும் பசியோடும்
யாருமற்ற வெறுமையோடும்.
அதைச்சுற்றி, கொண்டாடி கொண்டாடி
பிடிக்கவரும் குழந்தைகளும் இல்லை.
அதன் சிறகுகளில் ஒளிரும்
மஞ்சள் வெளிச்சம்
காற்றின் அலைக்கழிவை
அமைதியாய் கடக்கிறது
நீ
திரும்பிப் போனால், இப்போதும் அது
அங்கு
அமர்ந்திருப்பதைக்
காணலாம். உன்னால்
திரும்பிச் செல்ல முடிந்தால் □

பெருந்தேவி கவிதைகள்



Manab Barua

பலாபலன்

பட்சிகளோ பறிப்பவரோ
இல்லாத இடத்தில்
கனிகளுக்கென்ன வேலை யென்று
மறுகுவதற்கில்லை
அர்த்தம் கைதாவிப்
பறிக்க ஏலாத
பேரதிக ஒளியைத்
தம் இரைப்பைகளில் இட்ட சொற்கள்
அவற்றிடமிருந்தே பெற்றன.

●

சபை


அவரவரிடமிருந்து
ஒரு ஆகச்சிறந்த என்னை
எடுத்து விரியுங்கள் மேசை மீது.
இசைந்த எண்களின் ஆட்டம்
ஜோராய் நடக்கட்டும்.

●

கருணை கொண்டொழுகு

மறதியெனும் நெடுங்கணக்கில்
கூடக் குறையக்
காத்துக்கொண்டிருக்கும்போது
மூன்று இலைகள் முதலில்விட்டு
கணக்கின்றி மூடிவிட்ட சிறுபரப்பு
ததும்ப
பொரிகள் இறைக்க வேண்டாம்.
கவனம்,
கொட்டும் மழையில்
அருங்கலைப் பொருட்களின்
பழங்கடைப்
பெயரும் ஒருத்தியின் பின்னே
கரைந்தோடிக்கொண்டே அழைக்கும்போது
வசதியற்றிருக்கிறேன்
என்று
தன்பால் இரக்கமுற்றும்
அவள் கைவிரித்துவிட வேண்டும்.
●

Poldenski



பூ வேர் ஆய்வு

ஒரு வயலட் பூ
உன் என் கண் திருஷ்டியைக்
கழிக்குமென்று
பறிக்கச் செல்கின்றனர்
காதலர் ஆண் பெண்.

காதலின் முதல் கோப்பை நிறைய
அம்மலர்களே உருகி வார்க்கின்றன
என்று
தேனாடித் திளைக்கும்
அவர்கள்
அறிவிக்கின்றனர் தம்மை
பெண் பெண் என்றும்
குடும்பப்பேழையில்

இன்பக்கொட்டு முழக்குகிறது
ஒரு கௌளி.
எம்மனச்சமாதானங்களில்
அவரவர் கற்பனைக்கென்றே
பூத்து மணக்கின்றன
வெவ்வேறு
வயலட்கள் போன்றவை.
கடவுளரை தேவதைகளைப் போலும்
வயலட்களை
வேறென்ன வளர்க்கும்
கண்ணீரே அல்லது குருதியேயன்றி?
மல்கும் போராளிகள் எங்கும்
முளைபாரிக்க
வயலட்களைச் சுற்றியும்.
உண்மையில் உள்ளனவா அவை
என்று கேட்ட கற்றறிவாளன்
மறதிக்குச் சபிக்கப்பட்டான்.
மறைந்து போனது பின்னர் தான்
என்று முணுமுணுத்த இன்னொருத்தி
தன்னைத் தத்தம் கொடுத்துவிட்டாள்
அவற்றின் தத்துவத்துக்கு.
யாத்ரீகர்களோ
வயலட்களைப் பறிக்கச் செல்லும்
காதலர்பின் நகர்கிறார்கள்
அவர்களைக் காதலிக்கிறார்கள்
அவர்களின் நோட்டுப்புத்தகங்களில்
பூரேகை
தன்னைச் சிறிதுசிறிதாக வரைந்தவண்ணம்
'வயலட் யானையின் நிறம்'
என்றெழுதிவைக்கப்பட்ட
காலக்குறிப்பைத்
தின்று
தன்னைப்படர்கிறது.

ஆம், வயலட் நிஜ மலரல்லவா நம் தோட்டத்தில்?

'ஸதன்யநதி'

1.

நீர் பாயும்வேளை, நான் உறக்கத்தில் இருந்தேன். ஒரு சங்கின் ஓசை, கனவில் ஒலித்து மறைந்தது. சூர்யோதயம் எழுந்தது. உணவு, உடை, காலணிகள் தயாராய் இருந்தன. உண்டு, உடுத்தி, அணிந்து வெளியேறினேன். சூரியனின் கதிர்கள் இந்நிலத்தில் பரவியபோது, இயந்திங்கள் இயங்கத் தொடங்கின. நான் சாலையில் நடக்கத் தொடங்கினேன். எதிரில் வந்தவர்கள், ஆற்றில் 'வெள்ளம்' என்றார்கள். நதியைப் பார்க்க வேண்டும்போல் இருந்தது. நான் இயங்கித் தளர்ந்தபோது, சூரியன் மறைந்தது. நதியைப் பார்க்கச் சென்றேன். அப்போது சாலைகள் நீரில்லா நதிகள் என்றே தோன்றின. நதியை அடைந்தேன். இருள் சூழ்ந்திருந்தது. கண்கள், நீரில் சுழித்தோடும் கருமையை உண்டன. செவிகள், நீரின் ஓலத்தைப் பருகின. கால்கள் நீரில் இறங்கி, நனைந்தன. அதன் குளிர்ச்சியில் என் இரத்தத்தில் நதியின் ஈரம் படரத் தொடங்கியது.

2.

மாலைவேளை. கரையில் அமர்ந்திருந்தேன். முன்னிரவில் பார்த்த நதி. யாமத்தின் நதியாகவே மிளிர்கிறது. இப்போது நதியின் உடல் சிவந்திருக்கிறது. அந்தச் சிகப்பு நிறம், நாகம் விழுங்கிக் கொண்டிருக்கும் சூரியனின் இரத்தம் என்றே படுகிறது. சிறிதளவே வெளிச்சம் இருந்தது. வானில் மேகங்கள் இல்லை. பறவைகள் இல்லை. நட்சத்திரங்கள் இல்லை. சந்திரனும் எழவில்லை. பாய்ந்து கொண்டிருக்கும் நதியை ஆழமாகப் பார்க்கிறேன். நதி பளிங்காகிறது. பளிங்கை ஆழ்ந்து பார்க்கிறேன். ஓரிரு பறவைகளின் நிழல்கள், பளிங்கில் நீந்துகின்றன. அவற்றின் கருத்த நிழல்களில், வானம் இறக்கத் தொடங்கியது. நான் கரையைக் கடக்கிறேன். என் தேகத்தால், இப்பளிங்கை அணைக்கும்போது, இப்பெரும் நதியில் எனது உடல், சின்னஞ்சிறு நிழலாகி நீந்துகிறது. பளிங்கை உடைத்து வெளியேறுகிறேன். வானில் பறவைகள், மேகங்களைச் சுமக்கின்றன. மேகங்கள், நட்சத்திரங்களைச் சுமக்கின்றன. நட்சத்திரங்கள், பௌர்ணமியைச் சுமக்கத் தொடங்கிவிட்டன.

3.

பல வருடங்களாக வாடிக்கிடந்த நதியில், முதல் வெள்ளம் பாய்ந்தபோது, அதில் மூர்க்கம் தெறித்தது. அதன் ஓலம், உக்கிரமாய் இருந்தது. நான் உறங்கிக்கொண்டிருந்ததால் அதன் ரௌத்திரத்தை உணர முடியவில்லை. நேற்று, நள்ளிரவில், பாய்ந்து வந்த நதியின் வருகையை வரவேற்ற, பேடி சாமியொருவன், சூடம்

ஏற்றி, நீர் தெளித்து, புஷ் பம் வீசி சாந்தப்படுத்தியிருக்கிறான். நதியின் மணலுடனான புணர்ச்சியை, ஆக்ரோஷத்தை அவன் உணரவில்லை போலும். இன்று, மாலையில் நதியை அடைந்தேன். கரையோரமாக ஒதுங்கிய மலர்கள் இறந்தபடி அசைந்தன. நதியைத் தீண்டினேன். மிகக் குளிர்ச்சியாக இருந்தது. முதல் வெள்ளம் நதியில் பாயும்போது நாம் கொண்டாடியே ஆகவேண்டும். என் மதுவின், முதல் மிடறை, நதிக்கு ஊற்றுகிறேன். இரண்டாம் மிடறிலிருந்து தொடங்கும் எனக்கான மதுவைப் பருகத் தொடங்குகிறேன். போதை தோன்றத் தொடங்கி, என் உடலில் செடியென வளர்ந்தும்விட்டது. அதில் பூத்திருந்த ஒரு மலரைப் பறித்து, அதன் உடலில் மிதக்கவிடுகிறேன். என் முதல் மிடறு மதுவைப் பருகிய நதியில் மூர்க்கம் இல்லை. ரௌத்ரமும் இல்லை. அது போதையுடன் பாய்கிறது. வெவ்வேறு காலங்களில். வேளைகளில், தாகம் தீர விரும்புபவர்கள், நதியை அள்ளிப் பருகுகிறார்கள். அவர்கள் விழுங்கும் முதல் மிடறு, மதுவாகவே இருக்கிறது. பருகித் தாகம் தீர்ந்த அவர்கள், என்னைப் போலவே, சாந்த சொரூபிகளாகிக் கிளை படருகிறார்கள்.

ராணிதிலக்



1.

என் உடலைக் காலம் வளர்க்கிறது. எலும்புகள் தளர்கின்றன. சதைகளின் திரட்சி அழிகின்றன. வயோதிகம் அடைந்தபடி, இருக்கும் என் உடலைச் சுமந்தபடி, நதியைத் தஞ்சமடைகிறேன். நான் நதியை உற்றுப் பார்க்கிறேன். நீர் பாயவே இல்லை. நீர் பாய்வதை உற்றுப் பார்க்கிறேன். அங்கே நதி இருப்பதில்லை. நதி காலத்தைக் குழப்பி, அகாலத்தை வளர்க்கிறது. நான் நதியில் இறங்கி, மூழ்கி, எழுகிறேன். நதி இளமையாய் ஓடுகிறது. அது என் உடலை வளைக்கிறது. தற்போது, என் எலும்புகள் இரும்பாகிவிட்டிருந்தன. சதைகள் திரண்டுவிட்டன. அப்போது, என் உடலில் இருந்து மணம் வீசத் தொடங்கியது. நீங்கள் நினைப்பது போலவே, அது நதியோடதாய் இருந்தது.

சுகிர்தராணி கவிதைகள்



Ethael Evans

சிறையுறாதப் பறவையாகிப் பறக்கின்றேன்
இடவலமெங்கும் தேகத்தின் பெருவெளி
துயரத்தின் கயிறு பிணைக்காத
கால்கள் காற்றை வலிக்கின்றன
இமையற்ற விழியசைவுகளில்
புவியின் வளைக்கோணம்
நெடிய இறக்கைகளின் நிழல்கள்
வாழ்வின் புகைநிலங்களைப் போர்த்துகின்றன.
மயிரின் கதகதப்புக்குள் ஒளிந்திருக்கும்
வெளிர்தசையின் இரத்தப்
புயல்கண்ணாய் சுழல்கிறது
விரலிடைகளில் வனச்சஞ்சாரமும்
மனிதர்கள் கடந்து திரியும் பரப்பும்
சட்டமிட்ட சித்திரமாய் நகர்கின்றன.
என் கூரிய அலகால்
உடலைக் கோதுகின்றேன்
இறகுகள் உதிர்ந்துன்
நீர்நிலைகளில் சொட்டுகிறது இரத்தம்
உன்னிருப்பிடத்தின் உத்திரங்கள்
கரைந்தமிழ
கூடலசைவில் புரண்டுபடுக்கும்
உன் முதுகினில் உறுத்துகிறது.
நானற்ற கூண்டின் பெருஞ்சாவி.

ஒருவேளை

தோலினால் அடி தைக்கப்பட்டக்
கூடையுடன் அவள் கிளம்புகிறாள்
முனைமழுங்கிய இரும்புத்தகடும்
சேகரிக்கப்பட்ட சாம்பலும்
அவள் கைகளில் கனக்கின்றன.
மனித நெரிசலில் திணறும்
வீடொன்றின் பின்புறம் வந்து நிற்கிறாள்
பார்வையில் படுகிறது.
ஆணியில் சுழலும் சதுரத்தகடு.

ஒற்றைக்கையால் அதை உயர்த்தியபடி
சாம்பலையள்ளி உள்ளே வீசுகிறாள்
பின்
துளையின் முரட்டுப் பக்கங்களில்
முழங்கை சிராய்க்க
இடவலமாய் கூட்டிக் கூட்டி
கூடையில் சரிக்கிறாள்.
நிரம்பிய கூடை தலையில் கனக்க
நெற்றியில் வழியும் மஞ்சள்நீரை
புறங்கையால் வழித்தபடி
வெகுஇயல்பாய் கடந்து போகிறாள்,
அவளுக்காக என்னால் முடிந்தது
ஒருவேளை மலங்கழிக்காமலிருப்பது
●

புகையும் சாம்பல்

பனைகள் நிரம்பிய முரட்டுவெளியில்
பூஉதிர பிஞ்சுதிர
ஒலித்தடங்குகிறது குரல்.
புதுமொந்தையின் நிறச்சோறு தீர
துக்கத்தைக் கடந்தவன் போல்
விறைத்த சடலத்திற்குத் தீயிடுகிறான்.
நெருப்பின் காமம் தோலாடையை உரிக்க
வெண்தசைகள் பளிச்சிடுகின்றன.
சூட்டின் வலிமை நரம்புகளைச் சுண்ட
உறுப்புகளை உயர்த்துகிறது சுட்ட உருவம்.
நீண்ட கோலினால் தட்டுகிறான்
முகத்தில் தெறிக்கின்றன நெருப்புத் துளிகள்.
சிதையின் பக்கங்களைக்
குத்திக் கிளறுகிறான்.
வண்டல் நிறத்தில் உருகுகிறது உடல்நெய்.
ஆகாயக் கழுகின் வட்டமிடல்போல்
இராமுழுவதும் சுற்றிச் சுழல்கிறான்.
மதுவின் கிறுகிறுப்பும் காற்றின் நெடியும்
அவனைக் கீழே தள்ளுகின்றன
ஆறடி நீளத்திற்குப்
புகைந்து கொண்டிருக்கிறது சாம்பல்.
□

பாலமுருகன் கவிதை



கண்ணாடி மீன்கள்

கண்ணாடி மீன்கள் வாழ்கின்றன
சிரிப்பதில்லை
ஏன் சிரிப்பதில்லை என்ற உங்கள் கேள்வியை
அவை புரிந்துகொள்கின்றன
ஆனால் பதிலளிப்பதில்லை
ஓய்வாத நீரைப்பற்றி
மீன்களைத் தவிர
யாரும் புரிந்துகொள்வதில்லை.
அதன் கண்களில் பிரதிபலித்துக் கொண்டிருக்கும்
திகைப்பை
நீங்கள் இயல்பானது என்றால்...
ஆனால் அவை மீன்கள்
வேறு என்னதான் செய்யும்?

அய்யப்ப மாதவன் கவிதைகள்



சாகசம்

அப்பையனின் காகம்
கதவைக் கொத்திக்கொண்டிருக்கிறது
இரும்புச் சதையைக் கடித்துக் குதறுகிறது
விழுங்குகிறது
கதவை முழுதும் விழுங்கிய அது
பறக்க முடியாமல பறக்கிறது
அச்சிறுவன பறக்கும் கதவை
பார்த்துக்கொண்டிருக்கிறான்.



3366 க்வாலிஸ்

3366 என்ற எண் கொண்ட க்வாலிஸ் காரைத் தேடிப்
பிழைப்பாகிவிட்டது இன்று
பார்க்கவிருக்கும் அவனை இதுவரைப் பார்த்ததில்லை
போனில் அழைத்துப் பேசிக்கொண்டே இருக்கிறேன்
பசசை நிறத்தில் சட்டையணிந்து
முதல்வரிசையில் 3366 எண் கொண்ட
க்வாலிஸ் கார் அருகில் இருப்பதாகக் கூறுகிறான்
எந்தப் பக்கத்து முதல் வரிசையென்று
கேட்கத் தவறிவிட்டேன்
ஒவ்வொரு வரிசையாய் வேர்வை கொட்ட
இப்படியும் ஒரு பிழைப்பா
என்ற பெரும் வெறுப்பில்
கார் பைத்தியம் போல
இருக்கிற QUALIAS CAR ஐ எல்லாப்
பார்க்கிறேன்
எந்த வரிசையிலும் எங்குமே இல்லாத
வருத்தத்தில் ஒரு சிகரெட்டைப் புகைக்கிறேன்
மறுபடியும் போனில் பேசுகிறான் பச்சை சட்டை க்காரனிடம்
அவன் வேறொரு பிரச்சினையில்
அங்கிருந்து கிளம்பிவிட்டதாகக் கூறுகிறான்
3366 போய்விட்டது.

பா. தேவேந்திர பூபதி கவிதைகள்



Salvador Dali

இரகசிய சம்மதம்

சாலைகளின் வழியே
இரகசியத்தைக் கடந்துவது என்றால்
உன்னுடன் பிரயாணிப்பது
எனினும் ஒரு சிநேகிதிக்கு மேல்
உன்னால் புன்னகைக்க இயலாது
நானும் எப்பொழுதும் ஒரு கண்ணியவானாகவே
மிகப் பொறுப்புடன்
இது மிகவும் பகிரங்கமானது
என்று மற்றவர்கள் சிரித்துக்கொள்வார்கள்
மென்மையான சம்மதத்துடன் தவறைத்தான்
நாம் இரகசியமென்கிறோம்
இரகசியம் வெளியாகும் வேளை
அவர்கள் இவ்வளவு பொறுமையாக
தவறை ஏற்றுக்கொள்வார்களா
ஒரு சிநேகிதியும் ஒரு கண்ணியவானும்
பிறகு எப்படித்தான் பழக முடியும்

இந்த நகரத்தின் ஈசான்ய மூலையில்
நமது கட்டில் மிதந்துகொண்டிருக்கிறது
சிலநேரம் சூரியக் கதிரும்
பலநேரம் நிலவொளியும்பட்டு
மேகங்களுக்கிடையே அடிக்கடி
மறைந்து விடுவதை நீயும் கண்டிருப்பாய்
அது இறங்குமிடம் ஒரு அடர்ந்த காடாகவோ
அருகில் ஒரு நதியின் சலசலப்பும்
இருக்க வேண்டுமென்பது உன் பிரார்த்தனை
நான் அதனருகில் சில புள்ளியினங்களையும்
அலையும் விலங்குகளையும் வேண்டியிருப்பேன்
உண்மையில் நறுமணமூட்டப்பட்ட ஒரு அறை
இன்னும் கூட வசதியானது என்பேன்
மிதக்கும் கட்டிலை அது முழுவதுமாக
உள்வாங்கி ஆறாத மனப்புண்களின்
சயனத்தை நமக்கு வழங்கவும் கூடும்
அந்நேரம் அதன் கால்களிலிருந்து ஏதேனும்
பதுமைகள் உயிர்த்தெழுந்து நமக்கிடும்
நிபந்தனையுடனான விடுகதைகளை
விடுவிக்க இயலாமல்
கூடலற்றுப்போன நமது திகைப்பு
ஒரு தத்துவமாகி வெளியில் உறைந்தும் போகலாம்
இத்தனைக்கும் பிறகு
மிதக்கும் கட்டிலை தரை
இறங்கியது யாரென்ற
விவாதம் மட்டும் நமக்குள் தொடங்கி விடக்கூடாது
என்பதுதான் செல்லமே
என்னுடைய நித்திய பிரார்த்தனை.

குலசேகரன் கவிதைகள்

சாலைக் கவிதைகள்

கடவுளுக்கு ஒரு கடிதம்

எங்கும் நிற்காமல்
ஓடிக்கொண்டிருக்கும் சாலையின்
சலசலப்பிலிருந்து கரையொதுங்கி
கடைப்படிக்கட்டுகளில் அமர்ந்து
தலைகலைந்து கிழிந்த ஆடையில்
எழுதிக் கொண்டிருக்கிறாள் கிழவி
சற்றும் தயங்காமல் தொடர்ந்து
பழையதான சில தாள்களில்
உலகின் கடைசியில் மிஞ்சியிருக்கும்
ஒரு புழுக்கைப் பென்சிலால்
மிகத் தீர்க்கமான எழுத்துக்கள்
சீராய் ஓடிக்கொண்டிருக்கும் வரிகள்
குழந்தைமையின் கோணல்களற்று
மெத்தப் படித்ததுப்போன்றக் கையெழுத்தில்
அச்சடித்ததைப் போலிருக்கின்றன
எல்லாம் சிறு சுழிகள் கோடுகள் கூட்டல்
பெருக்கல் குறிகளாகவே நிரம்பி
காகிதங்கள் கூடிக் கொண்டிருக்கின்றன
இறுதித் தேர்விலிருப்பவள் போல்
சிரத்தையாக எழுதி
யாராலும் வாசிக்க முடியாத அதை
அவ்வப்போது எடுத்து
அவளேப் படித்து ரசிக்கிறாள்

•

கழுவ முடியாத இரத்தம்

சற்றுமுன் நடந்து கொண்டிருப்பவள்
கீழே வீழ்ந்து விட்டாள்
அசைவற்றிருக்கும் அவளின்
தலையிலிருந்து பெருகும் இரத்தம்
சாலையின் கண்கள் கால்கள்

எல்லாவற்றையும் நனைத்து சிவப்பாக்கி
மூழ்கடித்துக் கொண்டிருக்கிறது
அனைவரும் பார்த்திருக்கிறோம்
கனத்தப் பேருந்து இடித்து
பயணம் தடைபட்டதையும்
அடியற்ற மரம் போல்
அவள் சரிந்ததையும்
யாரோ ஒருவர் ஊற்றும்
கடைசித் தண்ணீர் வாயில்
சிற்றோடை போல் ஓடுகிறது
சக்கரங்கள் சுழல முடியாமல்
அங்கேயே நின்றிருக்கிறது
அந்த ஒரு கணத்தோடு
மனிதர்கள் வாகனங்கள்
உடன் மரணமுற்றோம்
பிறகு மீண்டும் உயிர்பெற்று
அவரவர் வழியில் செல்கின்றோம்
கைகளில் ஒட்டியிருக்கும் கறையை
போகும் வழியெங்கும் துடைத்து

●



Thomas Brill

நின்ற வழி

ஆட்களாலும் வாகனங்களாலும்
இட்டு நிரப்பப்பட்டிருக்கும் சாலையில்
நான் கொண்டு செல்லப்படுகிறேன்
சுற்றிலும் பல்வேறு முகங்கள்
கண்ணில் விழுந்து மறைகின்றன
செல்ல வேண்டிய வழி
முன்னால் வளர்ந்து கொண்டிருக்கிறது
என் மேல் குறிக்கப்பட்டுள்ள
நேரத்தை நோக்கி விரைகிறேன்
அடைவது எப்போதுமே சந்தேகம்
எனக்கான முடிவு காத்திருக்கிறது
அதற்குள் நெருங்க வேண்டும்
மேலும் என்னை வேகமாக்க
இடையில் தடுப்பது போல்
ஒரு கரம் நீள்கிறது

சீ. கோவிந்தராஜ் கவிதைகள்

காளையின் கோபம்

காயடித்துத் தகுதியாக்கி
ஓயாமல் உழைப்பில் ஆழ்த்தும்
எஜமானனை எதிர்க்கத் துணிவில்லை
எருதுக்கு. . .
அவன் புல் போடுகிறான் தவிடு
புண்ணாக்கும் தருகிறான்
என்பதற்கு மட்டுமில்லை
ஆனால்
தினம் தினம்
அது தன் பாய்ச்சலைக் காட்டி
பயமூட்டுகிறது
அதிகாலை வாசல் தெளிக்க
சாணம் எடுக்க வரும்
பெண்களிடம் மட்டும்.



போர்வை

எப்போதும் போர்வையே
அத்யாவசியமாகக் கருதியதில்லை
எனினும்
போர்வையுடன்தான் படுக்கிறேன்
நான் உறங்கும் வரை
காத்திருக்கும் போர்வை
வெளியில் எழுந்து உலாவப் போனாலும்
நான் அறியப் போவதில்லை
சில நாட்களில்
இழுத்து போர்த்த போர்வையை எடுத்தால்
ஒரு உடலாகக் கனக்கிறது
நீண்டு கிடக்கும் கை கால்களோடு
அப்போது அதை அப்படியே விட்டு விடுகிறேன்
அதன் கனவை கலைத்துவிடக் கூடாது என்று.

தனிமையின் வலி

மழைக் கால இரவில்
மருத்துவனிடம் சென்று திரும்பிக் கொண்டிருந்தேன்
ஒற்றையடிப் பாதை
நான் பேச ஆர்வமில்லாதபோது
என் செருப்பு
பேசத் தொடங்கியது
பதிலுக்கு தவளைகளும் பேசுகின்றன
இரண்டோடும் பேச எனக்கு
ஒன்றுமில்லை
திடீரென என் செருப்பு கனக்கிறது
பாதையோரம் கழட்டிவிட்டு
வீட்டுக்கு வந்து விட்டேன்

கனவின் விளையாட்டரங்கம்

உடைகளிலெல்லாம் மண் படிய
மூன்று சிறுவர்கள் விளையாடுகிறார்கள்
மண்ணைக் குழைத்து
உருண்டையாகவோ வட்டமாகவோ செய்து
வகைவகையான தின் பண்டங்களைத் தயாரித்து
பாவனைகளில் உண்டு ஊட்டி மகிழ்கிறார்கள்.
ஒருவனின் அம்மா
தன் அதட்டலான அழைப்பில்
அவர்களைப் பிரித்து அழைத்துச் செல்லும் தன்
மகனை
குளிப்பாட்டி உணவூட்டி உறங்கவும் வைத்துவிட்டாள்
அதுவரை பிரிந்திருந்த அவன் நண்பர்கள்
ஓடோடி வந்து கூடி விட்டார்கள்
அவன் அம்மாவால் நுழையவே முடியாத
கனவின் விளையாட்டரங்கில்.

❑

எழிலரசி கவிதைகள்

அம்மாவீடு

நான் இருந்து
விட்டுச்சென்ற வீடு
எனக்கு மறுபடியும் வாய்ப்பதில்லை.
நெருடல்களும் புழுக்கங்களுமாய்
பிதுக்கம் கொண்டதன் பிற்பாடு
ஒரு போதும் என்னை அது
ஏற்றுக்கொள்வதில்லை
அவ்வப்போது மையம் கொண்ட
தென்றல் திட்டுகள் எண்ணங்களில் மேலோங்கும்
என்னைச் சிறைகொண்டு
உள்புதைக்க முயன்றதன் பிறகு
என் சிறகசைப்பில் அடைப்பட்டதோ
என்னை மீட்டும் தன்னிடம்
கொள்ள விரும்புவதில்லை
அன்று
படிப்பதற்கென
விடுதிக்குச் சென்றதன் பிறகு
என்வீடு விடுமுறைக்கால ஓய்விடமாயிற்று
திருமணத்தின் பிறகு
என் அம்மாவீடாயிற்று.
இன்று
வேலையின் பொருட்டு
வேறிடம் பெயர்ந்து
மீளும் சமயம்
என் வீடு மற்றொருவர் வசம்.
சுற்றிலும் நிறைந்துள்ள
பொருட்களின் மௌனப்
பேச்சில்
முடிவெடுத்தேன்

இனி
வீட்டை வெறுப்பதில்லை
நேசிப்பதுமில்லை.



மகரந்தம்

பாதம் பாவாமல் மிக எச்சரிக்கையாக
வலம் வந்தால் உணரலாம்
எல்லா இடங்களும் மலரின் சாட்சியங்களே
அப்போதுதான் அரும்பும் மொட்டுகள்
அவற்றின் இதழ் விரியும் தருணங்கள்
விரிதலின்போது தடைபடும் கூம்பல்கள்
என மலர் வாசம் விரியும்
வீடுகளின் தோற்றங்களில் விரிதலும் கூம்பலும்.
அது எதிர்படும் முகங்களிலும்
மிதக்கும் தாவும் மலர்கள்
பறவைகள் விலங்குகள்
தூரத்து மலைகள் கருமேகக் குவியல்களாய் முகிழ்க்கும்
மரங்கள் பச்சைப் பூச்செண்டுகள்
இப்படி
வெளி நிறைந்துள்ள
பெருமலரொன்றில்
மிதக்கும் மகரந்தம் நான்.

பொன். இளவேனில் கவிதைகள்

ஆழம் சென்றுவிட்டவனின் நினைவுக் குறிப்பு

தொலைதூரம் அலைந்து போய்விட்ட
அவளின் இரவுகள் உனதாகிவிட்டன
மென்மொழியின் வாசனையை
விழுங்கிவிட்ட உன் குரல்
சாத்தியபடியே இருக்கிறது
மீளவியலாது
தென்றலின் வனத்துக்குள்
அழைத்துச் சென்றுவிட்ட
அவளின் பாடல் குவிந்துவிட்ட
உன் மண்டபம் அமைதியாகிறது
கிளிகள் உறங்கும் பொழுதொன்றில்
எளிமையாய்ச் செல்கிறாய்
பளிங்கு மாளிகையின்
வாயிலுக்குள்.

குளியல் வெளி

என் பாறையை வளைத்திருந்தது
நீர் திரட்சி
முங்கும் முன் குலுங்கின்
சதைக்கூடு
மின்னும் நீர் கண்ணாடியில்
பதிந்திருந்த சூரியன்
குன்றுகளென மதர்தெழுந்த மேகங்கள்
மறுகறையை துளியென காட்டும் தூரம்
வர்ண ஜாலமிடும்
காட்சி வெளியை
பார்த்துக் கொண்டிருக்கிறேன்
அவர்கள்யென்
அம்மணத்தை பகடியாக்குகிறார்கள்.



குறிப்புகள் எழுதுபவன்

உறங்குபவர்க்கான உத்தேசம் வருமா
குறிப்புகள் எழுதுபவனுக்கு
சரியான குறிகளில் விழுகிறது பழுத்த
பழங்கள்
மின்னும் குறிப்புகள் நட்சத்திரமாகிறது
வானம் முழுக்க குறிப்புகளோ குறிப்புகள்
நட்சத்திரங்களின் வீதியில்
கழுகுகளே பறக்கிறது
கழுகுகளின் பிடியிலோ சிறு குஞ்சுகளின்
அலறல்கள்
ஓலங்களின் சாலைகளில் ஆந்தைகளே
விழித்திருக்க
குறித்துக்கொள்ளாக வேண்டும் குறிப்புகளை
குறிப்புகள் தீரவும் போவதில்லை
மரங்களுக்கு செவியும் கேட்பதில்லை
தொடரும் பயணத்தில் இறுதிகளும்
தெரிவதில்லை
இறுதிகள் என்பதும் நிரந்தரமாவதில்லை.

அஜயன்பாலா சித்தார்த்தன் கவிதை

சிறுவனின் சங்கீதம்

நான் இரவில் நீந்தி பகலை தொடுபவன்
கப்பல்கள் என்னை முட்ட வரும் போது
அலட்சியப்படுத்தி நீந்துவேன்

கைகள் சோரும்போது ஒரு மீனை
துணைக்கழைப்பேன்.

இரவுகள் எனக்கானவை
அங்கே யாரும் வர அனுமதிக்க மாட்டேன்

பூனை ஒன்றின் துணையோடு
எல்லா வீதிகளையும் கண்காணிப்பேன்

ரப்பர் பாப்பாக்கள் கிளி பொம்மைகள்
குழந்தைகள் வீடுகளின்
எல்லா வாசல்களிலும் வைப்பேன்

பன்றிகளின் வசிப்பிடம் சென்று
அவற்றின் தூக்கத்தைக் கலைப்பேன்

எஜமானர்களுக்குத் துரோகமிழைக்கும்படி
நாய்களுக்கு சமிக்ஞை செய்வேன்

குருட்டுப் பிச்சைக்காரர்கள் வசிப்பிடம் சென்று
சண்டை தீர்த்து சமாதானம் செய்வேன்

குள்ளர்களின் வசிப்பிடம் சென்று
குட்டிகரணம் கற்பேன்

சினிமா போஸ்டர்களில்
நடிகைகளின் ஜட்டி தெரிகிறதா
என குனிந்து பார்ப்பேன்



நடிகர்களுக்கு ஒங்கி குத்து விடுவேன்.

நடித்து விட்டு கட்டிப் புரளும்
கவிஞர்களுக்கு சிகரட் வாங்கித் தருவேன்

வெறுமையுடன் அவர்கள் சோர்ந்து போகும்போது
இன்று நல்ல கவிதை எழுது
என உற்சாகப்படுத்துவேன்
இரவில் போலீஸ் வேனை பார்த்தால்
தபால் பெட்டியின் நிழலில் மறைந்து கொள்வேன்

மனிதர்கள் பிசாசுகளாக திரியும்
காலைப் பொழுது எனக்குப் பயங்கரமானது
பறவைகள் எனக்கு எச்சரிக்கை விடுக்கும்போது
அறைக்குத் திரும்பி
கனவை போர்த்தி உறங்குவேன்.

❐

சாலமிகுத்துப் பெயின்



நான் உங்களுக்குச் சொல்கிறேன்: அந்த இரவில் ஒரே கட்டிலில் இருவர் படுத்திருப்பர்; ஒருவர் எடுத்துக்கொள்ளப்படுவார்; மற்றவர் விட்டுவிடப்படுவார். இருவர் சேர்ந்து மாவரைத்துக் கொண்டிருப்பர். ஒருவர் எடுத்துக்கொள்ளபபடுவார்; மறறவர் விட்டு விடப்படுவார். இருவர் வயலில் இருப்பர். ஒருவர் எடுத்துக்கொள்ளப்படுவார்; மற்றவர் விட்டு விடப்படுவார். அவர்கள் இயேசுவைப் பார்த்து, "ஆண்டவரே இது எங்கே நிகழும்?" என்று கேட்டார்கள். அவர் அவர்களிடம், "பிணம் எங்கே இருக்கிறதோ அங்கேயே கழுகுகளும் வந்து கூடும்" என்றார்.

-லூக்கா 17, வசனம 34-37

கால பைரவன்

என்னை அந்த நட்பத்துடன் அவள் சோகத்திலிருந்து இக்கரை சேர்க்கிறது. அல்லது அதற்கு முன்பாகவே கூட தொடங்கிவிடும் சாத்தியமும் இருக்கிறது. இது கதையாக எழுதப்பட வேண்டியதென்பதில் அவள் மீதான ஆர்வமே கணிப்பொறி விஞ்ஞானியான என்னை தீவிரத்துடன் எழுத வைப்பதாக உணருகிறேன். அவள் மீதான எனது பிரியத்தை நிறைந்த பட்சம் தெரிவித்துவிட முடியும் என்ற ஆசையாகவும் இருக்கலாம். நிராகரிக்கப்பட்ட வெற்று மனத்திற்கு வருணனைகளில் ஆர்வமோ அக்கறையோ ஏற்படாதென்பதால் கதையின் மொழி மிகவும் வறட்சியானதொன்றாக மாற்றம் கொண்டிருப்பதை தயவு செய்து பொறுத்துக் கொள்ளவும்.

கணிப்பொறி மென்பொருள் தயாரிப்பு நிறுவனத்தில் ஓர் இளநிலை விஞ்ஞானியாக இருக்கும் எனக்கும், அவளுக்குமான உரையாடல் வெகு சாதாரணமாகத்தான் நடந்தேறியது. இப்போது நினைக்கையிலும் கூட அதில் எந்த ஆச்சரியத்தையும் உணர முடியவில்லை. என்னுடைய ஒவ்வொரு கட்ட வளர்ச்சியிலும் அவளது அன்பு என்னை மேலும் ஓர் அங்குலமாவது நகர்த்தவே செய்திருக்கிறது. அது இந்த நிமிடம் வரையிலும் நிஜமானதாகவே நான் நம்புகிறேன். அது எந்த அளவிற்கு தொடர சாத்தியமுள்ளதோ அதே அளவிற்கு மறுக்கப்படுவதற்கு வாய்ப்பிருப்பதாகவும் எண்ணுகிறேன். அதிகப் பனிப்பொழிவு காணப்பட்ட ஓர் நாளின் முன்னிரவில் நான் அவளிடம் கேட்டேன்.

“என்னை எப்படி உள்வாங்கிக் கொண்டிருக்க”

நான் கேட்டு விட்டு அவளைப் பார்த்தேன் அந்த வினாடியில் அவள் மீது படர்ந்த பதற்றத்தை தெளிவாக உணர முடிந்தது. இருவராலும் பேசிக்கொள்ள முடியாத சூழல். சமீப நாட்களாக மணித்துளிகள் இவ்வாறாகத்தான் கழிந்து கொண்டிருக்கின்றன. அதன் பிறகான இரண்டு மூன்று சந்திப்புகள் மிகவும் கட்டையாக நடந்தேறின. என் மீதான அவளது அபிப்ராயம் மெல்ல மாறியிருக்கக் கூடுமென நினைத்துக்கொண்டேன்.

வேறொரு சந்தர்ப்பத்தில் மீண்டும் அவளைக் கேட்டேன்.

“நான் கேட்டதற்கு பதிலே இல்லையா”

வெகு அலட்சியத்துடன், மிகுந்த பாதுகாப்போடும் அவள் கூறினாள்

“எப்பவும் போலத்தான் நான் உன்ன நெனச்சிகிட்டு இருக்கேன்”

“நா இது மாதிரியான பதிலை உன்கிட்ட இருந்து எதிர்பார்க்கல” என்று நான் கூறியதும் அவளது விழிகளில் கோபத்தின் சாயைகள் மின்னக்

தொடங்கின. நெடிய மூச்சை உள்ளிழுத்தபடி என்னை நோக்கிக் கேட்டாள்.

"என்னை எப்படி நீ நெனச்சிகிட்ட"

அவளின் இந்த கேள்வி என்னுள் கலவரத்தை ஏற்படுத்தியது. சொல்லப் படாத வார்த்தைகளும் புரிந்து கொள்ளப்படாத பிரியமும் என்னுள் அப்படியே தேங்கிக் கிடந்தன. கல்லெறிந்த குளத்தின் அதிர்வுகளைப் போல மெல்ல அவளது இருப்பும் இயக்கமும் எனது மனதில் கவியத் தொடங்கியபோது, நான் தூக்கத்தை இழக்கத் தொடங்கியிருந்தேன். நீண்ட இரவுகளையும் குட்டி பகல்களையும் கற்பனை செய்து பார்க்கத் தொடங்கி னேன். என் மனதில் உள்ளதை அவளிடம் எப்படி சொல்வது என்ற குழப்ப மும், சொன்னால் எப்படி அவள் எடுத்துக்கொள்வாள் எனும் பயமும் என்னை மெல்ல அரிக்கத் தொடங்கியிருந்தது. ஒரு பெண்ணிடம் தன் காதலை (சில நேரங்களில் இவ்வார்த்தை புனிதமானதாகவும், பல நேரங்களில் கலாசாரத்தை சீர்குலைப்பதாகவும் புரிந்து கொள்ளப்படுவதன் அர்த்தம்தான் இன்னும் விளங்கவில்லை) சொல்வதில் உள்ள சூட்சுமங்கள் என்னிடம் சிறிது கூட கிடையாது. எனக்கு திருமணம் ஆகியிருந்தாலும் கூட காதலைச் சொல்வதில் பெரிய தேர்ச்சி இல்லை என்பதை உணர்ந்தே இருந்தேன். 'தேக்கி வைக்க தேக்கி வைக்க வெகும் கூடிக்கொள்ளும்' கதை போல் அப்படித்தான் நடந்தது. நானும் சில உத்திகளை கையாண்டு பார்த்தேன். சமீபத்தில் வெளியான ஓர் கட்டுரையில், "அன்பு, பாசம், நட்பு, காதல் எனும் வகைகளில் உறவுகள் கிளைத்துக் கிடப்பதாகவும், அப்படி எனில் அவளுக்கும் எனக்குமான உறவுக்கு என்ன பெயர் என்று கேட்டு, ஆம் அதுவேதான் என்று முடிக்கபட்டிருக்கும். ஆழ்ந்து யோசித்தாலும் கூட அக்கட்டுரையை யார் எழுதியது என்பதை நினைவில் கொண்டுவர முடியவில்லை. இந்தக் கட்டுரையை அவளிடம் காட்டி கேட்டேன்.

"எனக்கும் உனக்குமான உறவுக்கு என்ன பெயர்?"

கட்டுரையை திரும்பத் திரும்ப வாசித்தவள் என்னிடம் கூறினாள்.

"நான் நினைக்கும் வார்த்தை அதில் இல்லை"

ஆச்சரியத்தோடு அவளிடம் கேட்டேன்

"என்ன வார்த்தை?"

நான் முடிக்கும் முன்பாகவே மிகவும் இயல்பாகவும், குரலில் லேசான பதற்றத்துடனும் கூறினாள்.

"சகோதரப் பாசம்"

அவளின் வார்த்தையை ஓரளவு முன்கூட்டியே கணித்திருந்தேன். அக்கட்டுரையை என்னிடம் காட்டியவள் ஒருவித தீவிரத்துடன் கேட்டாள்.

"நீ இதில் எதுவாக என்னை உணர்கிறாய்?"

நான் மிகவும் மெதுவான குரலில் கூறினேன்.

"இந்த நான்காகவும் தான் உன்னை உணர்கிறேன்."

நான் கூறியதை கேட்டவுடன் அவளது முகம் இறுகிக்கொண்டது. அவளது கைகள் மெல்ல நடுங்கத் தொடங்கின. நெற்றிப் பொட்டில் ஒரு நரம்பு புடைத்துக் கொண்டிருந்ததை காண முடிந்தது. உள்ளுக்குள் எரிச்சலை கூட்டி விழுங்கியவள் முதன்முதலாக என்னை அலட்சியத்தோடு பார்த்தாள். அவளின் உக்கிரமான பார்வை என்னால் தாங்கிக் கொள்ள முடியாமலிருந்தது. அன்றிலிருந்து தான் எங்களின் உரையாடல்கள் தடைபடத் தொடங்கியிருந்தன என்ற முடிவுக்கு வரமுடிகிறது. அதன் பிறகான நாட்களில் ஒருவரை ஒருவர் சங்கடத்தோடு பார்த்துக்கொள்ள வேண்டியிருந்தது.

குளிர்ந்த காற்று வீசிய ஒரு மாலைப் பொழுதில் அவளை தனிமையில் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அவள் எப்பதிலையும் கூறாததால் மீண்டும் அவளிடம் கேட்டேன்.

"நான் உன்ன அந்த நான்கு வார்த்தைகளோடும் பொருத்திப் பார்க்கறது உனக்கு எதாச்சும் கஷ்டமா?" என்னுடைய நீண்ட கேள்வியை கூர்ந்து கேட்டவளின் முகம் சட்டென இறுக்கம் கொண்டது. உஷ்ணத்தோடு மூச்சை வெளிவிட்டபடி கூறினாள்.

"உனக்கு புத்தி கெட்டு போச்சுனு நெனைக்கிறேன்"

"அதுலாம் ஒன்னும் இல்ல. நான் நல்லாத்தான் இருக்கேன்"

"என்ன ஒன்னும் இல்ல. ரெண்டு பேருக்கும் கல்யாணம் ஆயிட்டப்புறம் எப்படி இன்னொரு காதல் வரும்? (கடைசி வரை அவள் காதல் என்ற வார்த்தையை பயன்படுத்தவே இல்லை) அப்ப உன் மனைவி மேல வச்சிகிறு இருக்கிறதுக்கு என்ன பேரு?"

தனக்கு கோர்வையாக பேசத்தெரியாதென்றவள் மிகவும் நிதானமாகவும், அழுத்தம் திருத்தமாகவும் பேசினாள். அவள் என்னை அடித்திருந்தால் கூட இந்தளவு வருத்தமேற்பட்டிருக்காது. வார்த்தைகளுக்கு வலிமை அதிகமென்பதை, நாம் ப்ரியம் வைத்திருப்பவர்கள் உபயோகிக்கும் போதுதான் புரிந்துகொள்ள முடிகிறது. நான் பேச்சிழந்தவனாக நின்று

கொண்டிருந்தேன். மீண்டும் அவளே பேசினாள்.

"ஒருத்தங்க மேல ஏற்கனவே வந்த காதல், ரெண்டாவது தடவ எப்படி வேறொருத்தவங்க மேல வரும்?"

சட்டென அவளின் கேள்விக்கு என்னால் பதில் சொல்ல முடியவில்லை. அன்பையும் பிரியத்தையும் சட்டென நம்மால் வரையறை செய்துவிட முடியும் என்றும் தோன்றவில்லை. அறிவியலை உணர்வுபூர்வமாகவும் அன்பை பரிசோதனை செய்ததன் மூலமும் பெறப்பட்ட அறிவின் விளைப்பயன் இது என்று சொல்லத் தோன்றியது. என் அமைதியை கலைத்தவளாக மீண்டும் பேசினாள்.

'வாய்தொறந்து பே. இன்னும் என்னலாம் மனசுல வச்சிகிட்டு இருக்கற?" நிறைய பேச வேண்டும் என்றாலும் ஒரு வார்த்தையைக் கூட என்னால உரு திரட்ட முடியவில்லை. நா உலர்ந்து ஒட்டிக் கொண்டிருந்தது. மெல்ல என்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு அவளிடம் பேசத் தொடங்கினேன். இருட்டு எங்கும் கவியத் தொடங்கியிருந்தது.

'காதல்ன்றது ஒரு உணர்ச்சி, கோபம், சிரிப்பு, அழுகை மாதிரி. தன் வாழ்நாளில் யாரும் ஒரே ஒரு தரம் மட்டும் அழறது கெடையாது. வெவ்வேறு சந்தர்ப்பங்களில் நாம் கோபப்படுகிறோம். அது போலத்தான்

"உன்னை பேசி ஜெயிக்கறது கஷ்டம்டா. எல்லாத்துக்கும் உங்கிட்ட பதில் இருக்கும். இல்ல பேசி மழுப்பிடுவே."

"இதுல மழுப்பறதுக்கு என்ன இருக்கு?"

"அப்ப காதல்ன்றது புனிதமானது கெடையாதா?"

"காதல்ல போயி புனிதம், புனிதம் இல்லைன்னு பாக்கறது மடத்தனம். பசிக்குது சாப்பிடறோம். அது போலத்தான். உணர்ச்சிகள்ல புனிதங்களுக்கு எடமே கிடையாது. அளவுகள் வேணும்னா மாறலாம்."

நான் பேசப் பேச அவள் என்னை கூர்ந்து பார்த்தாள். சிறிது நேரம் அமைதி நிலவியது. கொசுக்கள் மொய்க்கத் தொடங்கின. தெரு விளக்கு எற்றப்பட்டு விட்டிருந்தது. என் மனைவி சூடாக தேனீர் கொண்டு வரவும், அவள் விடைபெற்றுக் கொள்ளவும் சரியாக இருந்தது.

விடுமுறை முடிந்த இரண்டொரு நாட்களில் அவள் ஊருக்கு புறப்பட்டாள். கணவனுடன் அவள் புறப்பட்டு போவதை அவளது அம்மாவும் அப்பாவும் வீதியில் இருந்து பார்த்துக் கொண்டிருந்தனர். அவளைப் பார்க்க வேண்டும்

என்ற ஆவலோடு நானும் பார்த்தேன். என் பார்வையை அவளும் திரும்பிப் பார்க்க வேண்டி வந்தது. அழகிய ஒரு புன்னகையைப் போல என் பார்வையை விட்டு கடந்து சென்றாள். அதன் பிறகு நேரில் பார்க்கும் சந்தர்ப்பமே கிடைக்கவில்லை. தொலைபேசியிலும், கைபேசியிலும் பேசிக்கொள்ள வேண்டியிருந்தது. என்னால் அவளைப் பார்க்காமலும், பேசாமலும் இருக்க முடியாது என்று தோன்றியது (அவளுக்கு அப்படி எந்த ஒரு கட்டாயமும் இல்லை என்பதை பிறகான உரையாடல்களில் தெரிந்து கொண்டேன். கதையின் முதல் பிரதியில் இருவராலும் பார்த்துக் கொள்ளாமலும் பேசிக்கொள்ளாமலும் இருக்க முடியாது என்றே எழுதியிருந்தேன். அவ்வாறு தான் நினைத்ததே இல்லை என்று கூறிவிட்ட பிறகு மேற்கண்ட வரிகள் அர்த்தமற்றவைகளாகத் தோன்றின. உலகின் முதல் வலி எப்படித் தோன்றியிருக்கும் என உங்களால் யூகிக்க முடிகிறதா)

அந்த வாரத்தின் வியாழன் காலை என நினைக்கிறேன். அலுவலகத்திலிருந்து அவளை தொலைபேசி மூலம் தொடர்புகொண்டேன். அப்போது அவள் கேட்டாள்.

"அன்னைக்கி அம்மா வீட்ல இருந்து எங்க வீட்டுக்கு போறப்ப நீ பாக்க தான?"

"ஆமா"

"எனக்கு எப்படி இருந்திச்சி தெரியுமா?"

"எப்படி இருந்திச்சி?"

"ஒரே எரிச்சலா இருந்திச்சி"

முதன் முதலாக நானே என்னை அருவருப்பாக உணர்ந்தேன். ஒரு புழுவைப் போல் துடிதுடித்தேன். என்னை அறியாமலேயே கண்களில் நீர் கிளம்பின. அதற்கு மேல் அவளுடன் என்னால் பேச இயலவில்லை. தொடர்பை துண்டித்தேன். அறை முழுக்க ஏசி வியாபித்திருந்தும் உடம்பு வியர்க்கத் தொடங்கியது.

பிறகான கொஞ்ச நாட்கள் எந்த தொடர்புகளுமற்று இருந்தோம். அலுவலகத்தில் என் சொந்த முயற்சியில் புதியதொரு மென்பொருளை வடிவமைத்திருந்தேன். அந்த சந்தோஷத்தை அவளுடன் பகிர்ந்து கொள்ள எண்ணி தொடர்பு கொண்டேன். வழக்கமான நலம் விசாரிப்புகள். பிறகு நீண்டதொரு மௌனம். நானே பேசினேன்.

"புதுசா ஒரு சாப்ட்வேர் வடிவமைச்சிருக்கேன். உங்கிட்ட நான் முதல்ல

தரணும்னு நெனைச்சிருக்கேன்;

அத கொடுக்கும்போது உங்கிட்ட இருந்து ஒன்ன எதிர்பார்க்கறேன்''

''என்ன சொல்லு?''

''என்னை சாந்தப்படுத்துகிற அழுத்தமான ஒரு முத்தம்''

இதை எப்படி கூறினேன் என்று தெரியவில்லை. ஆனால் தெரிவித்து விட்டிருந்தேன். தொடர்பில் இருந்தாலும் அவள் எதுவும் பேசவில்லை. அவளது மூச்சுக்காற்றை மட்டுமே உணர முடிந்தது. சூழலின் அமைதியை கலைத்தபடி நானே பேசினேன்.

''ஏன் பேசாம இருக்கற''

''என்னால் பேச முடியல. நீ ஏண்டா இப்படி ஆன''

''இல்ல எனக்கு அது அவசியமா படுது. நீ செஞ்சுதான் ஆவணும்.''

''நீயே ஏன் உனக்குள்ள ஆசைய வளர்த்துட்டு கஷ்டப்படுற''

''நான் யாரையும் கஷ்டப்படுத்தல. வேற யாருகிட்டயும் போயி நா கேக்கல. உங்கிட்டதான் கேக்கறேன். உன்னால முடியும். அடுத்த முறை உன்னை சந்திக்கிறேன்னா அது இதுக்காகத்தான் இருக்கும்.''

வேகவேகமாக பேசிவிட்டு நீர் அருந்தினேன். கண்களில் நீர் கோர்த்துக் கொள்ள, எந்த நேரமும் வெடித்து அழுதுவிடுவேன் போல இருந்தது. அவள் எந்த பதிலும் பேசவில்லை. வைத்துவிடட்டுமா என்று கேட்டேன். 'ம்' என்று மட்டும் சத்தம் வர, நான் தொலைபேசியை துண்டித்தேன். சிறிது நேரம் கழித்து அவள் தொடர்பு கொண்டாள்.

''நீ சொல்ற எல்லாத்தையும் கேக்கறேன். அனா தொட்டுக்காம பழகிக்க முடியாதா? (அவளால் 'தொட்டுக் கொள்ளாமல்' என்று தமிழில் கூற முடியவில்லை. 'டச்' பண்ணிக்காம இருக்க முடியாதா என்றே கேட்டாள்)

நான் அமைதியாக இருந்தேன். அவளே என்னை, ''பேசு. பேசு'' என்று கேட்டுக் கொண்டிருந்தாள். எதையும் கூறும் மனநிலையில் நான் இல்லை. ஆனாலும் அவள் என்னை விடுவதாக இல்லை. பேசச் சொல்லி அதிகப்படியான நெருக்கடியை கொடுத்தாள். நான் பேச ஆரம்பித்தேன்.

''ஏன் தொட்டுக்கிட்டா என்ன ஆயிடும்''

''என்னால முடியாதே''

"ஏன்"

"அவருக்குன்னு கொடுக்கிறதுக்கு எங்கிட்ட இது ஒண்ணுதான இருக்கு"

இருவரும் அவர் அவர்களுக்கான நிலைப்பாட்டில் பிடிவாதமாக இருந்தோம். மிகுந்த கவனத்துடன் சொற்களைப் பயன்படுத்த ஆரம்பித்தவள் என்னிடம் கூறினாள்.

"என் மூலமா எந்த பொருளையும் உனக்கு கொடுக்கக் கூடாதுன்னு நெனைக்கிறேன்"

"ஏன்"

"அது எந்த அளவு உன்ன தீவிரப்படுத்தும் என்று எனக்குத்தான் தெரியும்"

"அதுலாம் ஒன்னும் பன்னாது"

"உனக்கென்ன தெரியும். எனக்குத்தான் தெரியும்"

அவளுக்கு என்ன பதில் கூறுவதென்று தெரியவில்லை.

என் தீவிரத்தை எவ்வாறு அவளுக்கு உணர்த்துவது என்றும் புரியவில்லை. தீவிரத்தின் நெருக்கடியால் நான் ஏற்கனவே ஒரு முறை மரணத்தின் விளிம்பு வரை சென்றிருக்கிறேன் என்பதை எப்படி அவளுக்கு உணர்த்துவது. மரணத்தை தொட்டிருந்தாலும் கூட இந்த அவஸ்தைகளுக்கு இடமில்லாமல் இருந்திருக்கும். என் யோசனையை தடை செய்யும் விதமாக மீண்டும் அவளே பேசினாள்.

"வேற எதையாவது கேட்டால் பரவாயில்லை"

"உன்னைத் தவிர வேற எதையும் என்னை சமாதானப்படுத்த முடியாது" என்று நான் கோபத்தோடு கூறினேன்.

"எனக்கும் உனக்கும் பொருத்தமே வராதுடா"

"அத நான்தான் தீர்மானிக்கணும்னு நெனைக்கிறேன்" என்று கூறி தொடர்பைத் துண்டித்தேன்.

இயல்புகள் அற்று பேச்சுக்கள் குறைந்திருக்க ஒரு நாள் மதியத்தில் என்னிடம் கூறினாள்.

"நீ கேட்டது கிடைக்கும். ஆனா எப்பன்னு தெரியல. கண்டிப்பா நான் மறக்க மாட்டேன்"

நான் பதில் கூறாமல் இருந்தேன். அவள் என்னை சமாதானம் செய்வதாக நினைத்துக்கொண்டேன். கலகலப்புடன் பேசுவது முற்றாக நின்றுவிட்டிருந்தது.

''எனக்கு பேச வரல''

''நா ஒண்ணு சொன்னா கேப்பியா''

''சொல்லு''

''நீ கேட்டத நான் செய்யிறேன்னு சொல்லிட்டேன். அது மாதிரி நீயும் எனக்கு எதையாவது விட்டுக்கொடேன்.''

''எதை விட்டுக் கொடுக்க''

''நான் செய்யறேன்னு சொன்னதை விட்டு கொடுத்திடேன்''

ஒருவரை முடிவை நோக்கி நகர்த்துவதில் உள்ள சாதுர்யத்தை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவள் திறமையுடன் காய் நகர்த்துவதைக் கண்டு வியந்தபடி இருக்கும் போதே அவள் என்னிடம் கேட்டாள்.

''அத விட்டுக்கொடுத்திட்டா, அதுக்கும் இதுக்கும் சரியாயிடும் இல்ல''

''நாம என்ன கூட்டல் கழித்தல் கணக்கா போடறோம்''

அவள் மௌனமாக இருந்தாள். மூச்சை இழுத்து விடுவதை கேட்க முடிந்தது. லேசாக இருமலும் செய்தவள் என்னிடம் பேசினாள்.

''டைம் ஆவுதுல்ல எதனாச்சும் பேசு''

''என்னால பேச முடியல''

''ஏன்''

''கஷ்டமா இருக்குது''

''அப்ப வச்சிடட்டா''

''உன் விருப்பம்''

நான் கூறி முடித்ததும் அவள் தொலைபேசியை வைத்து விட்டாள். எனது இதயம் பட படவென அடித்துக் கொண்டிருந்தது. எதுவும் தெளிவில்லாமல் தோன்றின. அலுவலக உதவியாளரை அழைத்து சூடாக தேனீர் கொண்டு வருமாறு பணித்தேன்.

பகல் பொழுதின் இருப்புகளைத் தொடங்கி வெக்கையும் அனலும் வீச

தொடங்கிய கடந்த மாதத்தின் இரண்டு நாட்களில் அவளுடன் பெரிய இரு உரையாடல்களை நடத்தியிருக்கிறேன். உக்கிரத்தோடு கணை பெய்த அவ்வுரையாடல்கள் துக்கத்தையும் அழுகையையும் தாங்கிக்கொண்டிருந்தன. வார்த்தைகள் வலி மிக்கதாக மாறிவிட்டிருந்தன. வெகு சாதாரணமாகப் பிரயோகிக்கப்பட்ட வார்த்தைகள் கூட பதற்றத்தின் அளவை அதிகப்படுத்தின. இருவரும் மாறி மாறி அழுதுகொண்டிருந்தோம். தாங்கிக் கொள்ள முடியாத ஒரு தருணத்தில் நான் அழத் தொடங்கிய போது அவள் பதற்றத்துடன் கூறினாள்.

"அழாதடா. நீ அழறது என் உயிர குடிக்கிறமாதிரி இருக்குடா"

அழுகையை, அவள் எவ்வளவுதான் கெஞ்சிக் கேட்டாலும் என்னால் நிறுத்திக் கொள்ளமுடியாமல் தவித்தேன். இருவருக்குமான விவாதம் நீண்டபடியிருந்தது. அவளிடமிருந்து வந்த வார்த்தைகள் உஷ்ணத்தை தாங்கியிருந்தன கேட்பவரை சிதைத்துவிடக் கூடிய வார்த்தைகள். அதுவரை நான் அவளை அத்தனை கோபத்துடன் எதிர் கொண்டதில்லை (என் ஒரு முகத்தைத்தான் பார்த்திருக்க. இன்னொரு முகத்த காட்னா நீ தாங்கவே மாட்ட. மேற்கண்ட வரியில், இன்னொரு முகத்த காட்னா நீ இருக்கவே மாட்ட என்றுதான் முதல் பிரதியில் எழுதினேன். ஆனால் அவள், நான் அப்படிச் சொல்லவில்லை என்று கூறி தாங்கமாட்ட என்று வார்த்தையை மாற்றி எழுதுமாறு கூறினாள். ஒரு சின்ன சந்தோஷம்) அவள் வார்த்தைகள் என்னால் சுலபத்தில் செரித்துக்கொள்ள முடியாமல் இருந்தது. யாரை விடவும் அவளை நான் அதிகமாக காயப்படுத்தியிருக்கிறேன். கொதிநீரை அவள் முகத்தில் தெளிப்பதுபோல என் இன்னொரு முகத்தை காட்டிவிடுவது. அடுத்த நாள், அவ்வாறு நடந்துகொண்டதற்காக அவளது மன்னிப்பைக் கோருவதும் வழக்கமாகிப் போனது.

நிராகரிப்பின் வலியையும் தோல்வியின் வேதனையையும் தாங்கிக்கொள்ள இயலாதவனாக அவளிடம் கேட்டேன்.

"என்னை ஏன் ஒரு புழுவைப் போல தூக்கி எறிஞ்சிட்ட"

"யாரு நானா"

"ஆமா, நீ தான் என்ன நிராகரிச்ச"

"அது ஒன்னுமட்டும்தான வேணாம்னு சொன்னேன். உன்ன நிராகரிக்கணும்னு எப்பவாவது சொன்னனா?" என்னுடைய எல்லா கேள்விகளுக்கும் அதற்கு சமமான பதில்கள் அவளிடமிருந்து வந்தன. நான் அமைதியிழந்தவனாக நெளிந்தேன். காமம் என்பது ஓர் உடற்பயிற்சி மாதிரிதானே.

நம்மை சாந்தப்படுத்திக் கொள்ள உதவும் ஒரு வழிமுறைதான் அது என்பதை எப்போது நாம் புரிந்து கொள்ளப் போகிறோம் என யோசித்துக் கொண்டிருக்கும்போதே அவள் என்னிடம் கூறினாள்.

"நீ கேட்டத தான் தான்னு சொல்லிட்டேனே. அப்புறம் உன்னை எப்படி நிராகரிச்சதாவும்"

நான் மௌனமாக இருந்தேன். அவளே என்னிடம் பேசினாள். வாயைத் திறந்தால் அழுதுவிடும் நிலை எனக்கு.

"எதனாச்சும் பேசு. மனசுல பூட்டி பூட்டி வச்சிகிறு எவ்ளோ நாள் தான் இருக்கறது"

"நான் நிராகரிக்கப்பட்டிருக்கிறேன். தோல்வி அடைந்திருக்கிறேன். தயவு செய்து என்னை பொருட்படுத்தாத" என கூறி முடிக்குமுன் அழுகை வெடித்துக் கிளம்பியது.

"ப்ளீஸ் அழாதடா. நீ அழறது என் உயிரையே உலுக்குற மாதிரி இருக்கு. நா உன்ன நிராகரிக்கல. தோற்கடிக்கவும் இல்ல. நீ கேட்டத நான் கொடுத்துட்டேன். எனக்காக அத விட்டு கொடுன்னுதான் கேட்டேன். நீயும் விட்டு கொடுத்திட்ட. இதுல நீ எங்க தோத்த. நெஜமாகவே நீ தான் ஜெயிச்சிருக்க."

அவளின் இந்தப் பேச்சை எப்படி எடுத்துக்கொள்வது. தந்திரம் என்பதா? சாமர்த்தியத்தில் சேர்த்தியா ஒன்றும் விளங்கவில்லை. கால் பந்தாட்டத்தில் எப்படியும் ஜெயித்துவிட வேண்டும் என்ற வேகத்தில் பந்தை உருட்டிச் செல்லும் வீரனைப்போல மிகவும் சாதுர்யமாக அவள் காய்களை நகர்த்துவதாகப்பட்டது. எந்த கட்டத்திலும் எனக்கு வழிவிடாமல் அவள் முன்னகர்வதையே பிரதானமாகக் கொண்டு வார்த்தைகளை நுணுக்கமாக உபயோகிப்பதில் தீவிரமாக செயல்பட்டாள். என் கண்களில் இருந்து நீர் தாரை தாரையாக வழிந்துகொண்டிருந்தது. தொலைபேசியில் பேசிக்கொண்டிருக்கிறோம் என்பதே மறந்து போனது. மீண்டும் அவளே நினைவூட்டும் விதமாக என்னிடம் பேசினாள்.

"டேய் ஏன் மௌனமா இருக்க?"

என்னால் அவளுக்கு உடனே எந்த பதிலையும் கூறமுடியவில்லை.

"உன்ன திருப்தி படுத்தற எதுவும் எங்கிட்ட கெடையாது"

"வேறெதாவது சொல்லு. நீயே உன்ன மலினப் படுத்திக்கவேணாம்"

"அப்படி எந்த விதத்துல உன்ன பாதிச்சேன்"

"சட்டுனு சொல்றதுக்கு அது ஒன்னும் வாய்ப்பாடு இல்ல"

"ஆவுன்னா இது ஒன்ன சொல்லிடு"

திரும்பத் திரும்ப பேசிக் கொண்டிருந்தோம். அவள் கவனத்தோட இருந்தாள். என்னிடம் இருக்கும் அவனை எப்படியாவது பத்திரமாக பிரித்துக் கொண்டு போய்விட வேண்டுமென்பதில் தீவிரத்துடன் இருந்தாள். அதற்கான எல்லா நுட்பங்களும் அவளிடம் இருந்தன.

சில சந்தர்ப்ப சூழல்களால் அதன் பிறகு அதிகமாக பேசிக்கொள்ளும் வாய்ப்புகள் இல்லாமல் போனது. அது ஒரு விதத்தில் அவனை மகிழ்ச்சியடையச் செய்திருக்கக்கூடும். கதையின் முடிவை நீர்கண்டவாறு எழுதுவதில் கொஞ்சம் வருத்தம்தான் ஆனாலும் இதைவிடவும் வலிநிறைந்த வரிகளைக் கொண்டு இக்கதையை நிச்சயம் என்னால் முடிக்க இயலாது.

அடர்த்தியான சோகத்தையும் வலியையும் பொறுக்க முடியாத ஒரு நாள் இரவில், மிகவும் சுலபமான வழியில் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணத்துடன் இருக்க என்னைப் பார்த்து கிடைக்கப் பெறாத சில முத்தங்களும் வெளிவராத சில வார்த்தைகளும் எள்ளி நகையாடிக் கொண்டிருப்பதை நன்கு உணர முடிந்தது.

கதையை முடித்தபின் அவனுக்கு அனுப்பி வைத்தேன் நான் அனுப்பிய சில நாட்கள் கழித்து என்னைத் தொடர்பு கொண்டு பேசினாள்.

"இந்த முடிவு கதைக்கு மட்டும்தானே"

"ஆமா. அதுல என்ன சந்தேகம். கதையில வேற எதையாவது மாத்தனுமா?"

"இல்லை என்று இழுத்தவள், "நிச்சயமா இந்த முடிவு கதைக்கு மட்டும் தானே" என்று மீண்டும் கேட்டாள்.

"ஆமா" என்று மட்டுமே கூறினேன்.

"நீ என் செல்லம்டா" என்று கூறி தொடர்பைத் துண்டித்தாள்.

கதையின் முடிவு கதைக்கு மட்டுமேயானதாக இருக்க வேண்டிய எந்த அவசியமும் இல்லையென நினைக்கிறேன். முடிவை நோக்கி நகர்த்தப் பட்ட வலி மிகுந்த அத்தருணங்களையே மிகவும் முக்கியமென கருதுகிறேன். முதன் முதலாக சிறிதளவு தந்திரத்தோடு ஒரு முடிவெடுத்த போது, அறையை கொஞ்சம் கொஞ்சமாக இருள் கவ்வத் தொடங்கியிருந்தது.

தலைப்பு மரணமுற்ற மூன்று கதைகள்

விஸ்வாமித்திரன்



1

ஆகாய வெளியில் உடலற்று நிற்பதை உணர்ந்தான். மிதத்தலின் லயம் உயிர்ப்பைத் தணித்திருந்தது. இருத்தலுக்கும் இன்மைக்கும் உள்ள உட்பிளவில் காமமுற்ற கொலையுடலின் விறைத்த குறியென நீடித்த நினைவைச் சுமந்திருந்தான் அத்தருணம். இடையிடையில் தானாய் சிரிக்கும் பழக்கமும் தொற்றிக் கொண்டது. அவன் உலவும் பாதைகளில் பூக்கும் மேகங்கள் முதியவனின் சுருங்கின வாயின் வெற்றிலைக் கறைகளென நிறம் பீறிட்டு அவனை சூழ்ந்து சதா வலை துழாவிக்கொண்டிருந்தன. வாழ்வின் நுண்திசைகளில் கண்டிருக்கும் அனுபவங்கள் புதரில் மறைந்து இரைவெறிக்கும் மிருகத்தை சூழல்படுத்திற்று. தான் ஊடுறுவி வெளியேறின எதனுடைய ஆரம்பத்தையும் அவனால் நினைவுகூர முடியவில்லை. அனைத்தையும் மயக்கமடைந்த கனவாக பாறையடைத்திருந்தது

அம்மாவின் முலைத்தொடர்பு. ஒரு பொழுதில் தாமரைவடிவ தியானம் இருப்பின் ஒய்வுக் கலவியாகத் துவங்கியது. அந்நிலையின் தன்மயக்கம் மழைக்கால வனப் பயணம்போல. நிர்வாணமற்று படுக்கையமர்ந்திருந்த பொழுதுகளில் பயத்தில் அடைத்திருந்த அறைக் கதவினை நோக்கி யாராவது கல்வீசக் கூடும் என்ற நினைவின் முதலடிபட்ட ரத்தக் கசிவு நகுலனுடைய எழுத்தின் சுயம்புநீத்தலில் காயம்பட்ட பூனைகளின் கண்ணீர்வடிவை ஒத்திருந்தது. கண்ணாடியில் உடல் மெலிந்த நவீனனை அடிக்கடி சந்தித்தான். புத்தனை பிரதிபலித்தது அவனது நெஞ்சின் எலும்பு வரிகள். இதுநாள் வரையிலான நகுலனை புணர்ந்தெழுந்த அவனது கவிதைகள் பிரசுரிக்கப்படாமலே அவன் பாதுகாத்திருந்த தகரப் பெட்டியுள் விந்து துடைத்த கைக்குட்டை மற்றும் மஞ்சள் பத்திரிகையென பாவிக்கப்படுவனவற்றோடு பதுங்கின. கூடிப் பொழுதுகளை வேர்தொலைந்து உடன்தொற்றின நண்பனின் மனக்கலக்கப் பேச்சுக்கள் ஆக்கிரமித்துக் கொண்டன. அவனது மீத நகர்வை தனது சுய இச்சைக்கு வழிப்படுத்தத் திட்டமிட்டு அவனது உறவின் சுவடைப் பின்தொடர்ந்தது நண்பனது துர்நாற்றமடிக்கும் நிழல். அந்த நண்பனது முகத்தினுள்ளே பிதுங்கின தசைநெளிவுகளில் தூக்கம் சிரமறுத்த இரவுகளின் காற்று பொசுங்கும் சப்தத்தை புகைத்தூதும் மூச்சுத் திணறலோடு இவனது காசநோயுற்ற தந்தை நொடிகளின் எலும்புகள் நொறுங்கிவிழ இருமிக் கொண்டிருந்தார். இல்லாது போன அவரை நினைக்கும்போதில் இன்று போலிருக்கும் நேற்று. இதைக் காண சகியாமல் உயிரோடு இருப்பதான பாவனை தனது அழிதல்கணத்தை காம்யூ உடல் கலைந்த விபத்தைப் போன்றதொரு விபத்தில் எதிர்விழைந்திருந்தது. புணர்ச்சி குறித்த கிளர்வுகளும் பெருகின. சுதா ரகுநாதனின் குரல்பெருகும் ஒலிநதியில் பிணமாய் தவழ்வதாக ஓர் கற்பனை மஞ்சுளா நள்ளிரவு இசையின் மடியில் இன்னொரு பிறப்பைக் தந்தது போலிருந்தது. அதேபோல குற்ற உணர்வு மனம்நைந்த தோற்றத்தோடு உறவை தற்காப்பு செய்ய துளிர்படும் தூக்கவேளைகளில் உத்தர வெறித்தல் என்பது அற்புதமான நிலவொளியின்போதான கவிதைவாசிப்பு. மெய்யடங்கிப் போயிருந்த இந்த தருணங்களைத் தவிர்த்த வேளைகளில் நண்பர்களின் உறவுச்சுற்றம் அவனது மொழியின் சமாதானமற்ற கூர்மையை நையப்புடைத்தன. அனைவரது நாக்குகளும் அவனுள் நுழைந்து நரம்பின் உட்குகைகளை ஊடுருவி நெகிழ்ந்தோடும் குருதியினை உறிஞ்சித் திளைத்தன. சமீபமாக, பேசும் உரையாடலின் இடையிடையே அகவயத்தில் அழுகை குழிவீழ்ந்த யானையென மருள்வதை மதியுணர்ந்து அதிர்வடைந்தான். அந்நிலை யாருமற்ற

மாலைத் தனிமையின் மலைசரிவு. கதவுடைந்த கழிவறையில் தன்மைதுனம் செய்யும் சிறுவனின் (மீசைப் பருவத்தில் இவனது கண்ணாடியில் பூனைமுறைத்தது) மனக் கலவரத்தில் சக மனிதர்கள் தன்னுடைய தனிமையுள் பாயமுயல்வதை வழக்கப்படுத்தியிருந்தது நாட்களின் இடப்பெயர்வு. செத்து விடுவேனோமோ என்ற பயமும் தொடர்தியானப் பொழுதுகளில் அடைகாத்தது புத்தனின் கண்கள் மூடின ஒளிமௌனம். பாழடைந்த அடுப்பின் கரப்பான்களாய் திரியும் பயத்திற்கும், அவனது பிறப்புறுப்பிற்கும் ஒருமைவடிவம் இருப்பதை அவன் அகப்பட்டுக் கொண்ட நூலகங்களே பிரதானமாக பறைசாற்றின. அவன் விருப்பத்தை பழுதடையாமல் மனதில் தாங்கியிருக்கும் அவளுடனான (அவள் பெயரின்பின் வானம் கைவிரிக்கும் பரப்பில் ஒவியமிருந்தது) கற்பனை உராய்வுத் தோற்றங்களின் மன உலா கண்டு மெலிதான நடுக்கத்திற்கு வந்திருந் தான். அவளைக் காண்பதன் சந்திப்பைத் தவிர்க்கப் பார்த்தான். இயலாவிகமாய் கிழிபட்டு சக்கரமாய்ச் சுருண்டிருக்கும் சுவர்க்காகி தங்கள் அவளது மார்பெழுச்சியை பிரதிபலித்தன. பெண்ணுடைமை தொட்டுணரும் முதல்கணம் தசையின் இருப்பு புயல்மரங்களாய் சரியும் என அஞ்சி தஞ்ச மாற்றுக்கென திரைப் படங்களின் இடையே நிர்வாணம் நீலம் போல் வருமெனத் தேடி திரையரங்குகளுக்கு சென்று வந்தான். உரிக்கும் நேரத்தில் அணிந்து கலைந்தனர் நடிகர்கள். அங்கும் விளைந்தது ஏமாற்றம். இடைவேளையில் சற்றும் எதிர் பாராமல் இவனது இடுப்பை வாய்குழியடைந்த கிழவர்கள் தினவுடன் கண்கூர்ந்தார்கள். காற்றின் அபரிமித விந்தாய் சூழ்ந்திருந்தது மூச்சை புதைத்துவிடும் சிகரெட்டுகளின் புகை போக்கம். கழிவறைத் தரையில் செத்த பாம்புகளாய் நீண்டிருந்த சிறுநீர் கோடுகளில் எண்ணை பிசுபிசுப் பில் திரையில் தப்பிவிட்ட நீலம் அலைவதைக் கண்டு உடல் குறுகினான். அகம் வெடிக்கு முன்னே அங்கிருந்தும் இங்கிருந்தும் தப்பிக்க ஆகாயம் இறுதிப் புகலிடமானது. எனினும் மிதத்தல் தரும் கொடும் அயர்வை அவனது உள்ளம் ஏற்கும் நிலையி லில்லை. தொடரும் காலத்தின் பூரான் நகர்வை தவிப்பின் கவலையோடு பார்த்துக்கொண்டிருந்தான். இடைநேரங்களில் ஓஷோவின் தாடி பிடித்து இழுப்பதற்கான ஞானம் விரல்களில் கிளைபாவின. தலைதவழ்ந்து மேலிருந்து பார்த்ததில் பூமியின் பச்சை ரோமங்களாகத் தென்பட்டன நெடும் மரங்கள். நிலை தன்னுணர்ந்து உடல் நலிவுற வேண்டுமென பேச்சை அழித்தான். உயிர்ப்பைக் காப்பாற்றும் தன்முனைப்பில் மரணம் பூப்படையாத பழைய ஞாபகங்கள் அவனை இன்னும் தொலைகாலம் மிதக்கும்படியே இருக்க சபித்திருந்தன.

கதை அல்லது கவிதை எனத் தோன்றியவையுள் உடல் ஒலியற்ற வேதனையை பதுக்கியுள்ளதை கூறும் வயதையடைந்திருக்கும் நனவில் மனத்தை நேரில் காண தலைப்பட்டான் இருப்பு சலிப்புறத் துவங்கின ஓர் இளம்பருவம். அப்போதைய அயர்வில் கைவிட்டுப் போன இல்லாதவைகளைப் பற்றி நினைவின் நடைதருணங்களில் அசைபோடுவது அவனைத் துரத்தியவண்ணம் இருந்தது. தப்பியோடும் நோக்கம் பெற்றிருந்தான். இவ்வேளைகளில் மூலிகைகளென கற்பனை தந்த செடிகளின் சாம்பலை விநியோகித்து உடல்காத்தான். பதிலுக்கு கிடைத்த பணத்தில் விரவிக் கொண்ட செடிகளின் கோபம் இதயம் வெறுத்து துப்பின எச்சில் அவனது உடைகளில் அழுக்காய் வழிந்தது. எனினும் தைரியம் குன்றாமல் தற்காலிக உணவை செடிகளின் உயிரிலிருந்து உறிஞ்சுவதாகவே தொடர்ந்தது அவனது இதுவரையிலான வாழ்வியல்முயற்சி. தோல்வியுற்று சருகு எய்தின செடிகள் உதிர்ந்த சாலைகள் அவனது நடமாட்டத்தை மகத்தான குற்றமென பகிரங்கமாகத் தடயப்படுத்தின. அத்தருணங்களில் பதுங்கித் திரிந்த வீதியோரம் பிம்பம் கசியும் கண்ணாடிகள் வழி தன்னைக் காணும்குணத்தில் இருப்பின் நீட்சியை உறுதிப்படுத்தி தன்னை இணைதொடர்ந்தான் அவன். நிற்கும்போது காணும் காட்சிகளுக்கும் நடக்கும்போது காணும் காட்சிகளுக்குமான உருவபேதம் முதுகில் குத்தப்பட்டுவிடும் அருகிலான கத்தியின் இரும்புவாசனையாய் பயமுறுத்தியது. இடம்பெயர இயலாவிதம் செய்திருந்தது வெயில்கால நாயின் மந்த கதி. பிறப்பெடுத்த வாலின் குறுகுறுப்பை எதிர்படும் நகைச்சுவையம்சங்களுக்கு சிரிக்கத் தலைபட்ட கணங்களில் அசையும்போதிருந்து கண்டுகொண்டான். அவனுக்கு எதிராய் வந்து பின்புறம் கடந்துகொண்டிருந்த பலரது உடல்கள் நகரும் கொலைவாட்களாய் உரசிச் சென்றன. அனைத்தும் புத்தி பேதலித்து புதிராய் உலவும் நகரநகர்வில் அரிதாகப் பார்வையில் படும் ரயிலின் வேகம் அவனை பிரமிப்பைத் தந்தது. ரயிலின் தற்கொலைகளில் உயிரின் வலி நினைவில் பிடிபடாதது போல. அதற்கடுத்தாற்போல் பெண்களின் பின் அசைவுகளில் அவனது கண்கள் நிலைகுத்தி அலைந்தன. ஒருமுறை பெண்குறியை பெரும் சோழி என்று கூறி நகைத்த நண்பனை உயிருடன் நிர்வாணமாக பிரேத அறைகளுள் பூட்டிவிட்டு சாவியைத் தொலைத்துவிடும் மூர்க்கம் வெகுண்டது பால்யகாலம். அவனது பாலியல் நுகர்வை இவன் பெறமுடிந்ததில்லை. இதன் ஞாபக இடைச்செருகலில் ஏற்பட்டுவிடும் நள்ளிரவு விழிப்பு பெருங்கொடூரம். அருகில் பல

பெண்ணுடல்கள் தீரா கற்பனையில் நெளியும். பல குறிகளிணைந்து நீண்டுவிட்ட காமப் பாம்பை மரணப்படுத்துவது என்பது சூழ்ந்த வற்றிலிருந்து விலக்கம் பெறக் காத்திருக்கும் அவனுக்கு மிகவும் வலிகளாலானது. அத்தருணம் மூண்டெழும் உடல்களின் பாரம் சுமக்கவியலாமல் வீறிடும் மயானத்தின் நெடிய காக்கைக்கூக்குரல். நகுலனிலிருந்து ஓஷோவை அவன் மாற்ற சப்தம் அடைந்ததும் இவ்விதம்தானா என்று சமீபமாய் ஆச்சர்யத்தை அவ்வப்போது எண்ணிக் காணும்படி மனவியப்பு பெற்றிருந்தான். அடிக்கடி தலை சுற்றுவது போல் தோன்ற அகத்தில் சிரிப்பு ஒலியோடியது. ஓஷோவின் தாடிக்குள் மறைந்துகொள்ள துடித்தான். மீண்டும் மேகங்கள் அவனை உறிஞ்சிவிடுவது போல் பாவனைப் படுத்தி மேல்தொடர்ந்தது. நீண்ட காலத்தை தன்வயப்படுத்தின சிலநொடிகளுக்கு முன் தலைநசுங்கி இறந்த பெண்ணை சாலையோரம் தென்படக் கண்டான். அவனது இதுவரையிலான பிராயத்தில் இவ்விபத்து எதிர்பாராத முதன்முறை. சற்றே அவன் கால்கள் புரண்டு கொலுசுகள் குலுங்கின. அவளது இருப்பிற்கு முன்னும் பின்னுமாக தன்னைத் தொடரும் காற்றின் ஊளையிடல் சஞ்சலப் படுத்தியது. அவளை இனித் திரும்பவும் காணவே காணஇயலாது என்ற யதார்த்தம் அவனது கதை கவிதைகளில் ஊடுறுவி ரத்தம் வழிய நின்றது அவன் மீதமிருந்த தற்காலம். காகிதத்திலிருந்து கண்களுக்குள் விரவிச் செல்லும் சொற்புற்றாய் எழுத்தைக் கொன்றால் இறைமை பெறலாம் என்ற வாசகம் அவனை அவ்விடம் விட்டகன்றுவிட முறையீடு செய்தன. ஓர் அச்சம் சிதிலமடைந்த மறைவிடத்திற்கு அழைத்துச்சென்று இவ்வரி களைத் தான்தான் கையளித்ததாக கூறின வெகு கணமே ஓஷோ ஒட்டடை படர்ந்த சிற்பமாக மாறிவிட்டிருந்தார். தாடி மாத்திரம் தொலைவில்காணும் அருவியென அசைந்துகொண்டிருந்தது. தியான நேரம் விறைக்கும் குறியை பொழுதுபோகாமல் வாசலில் நின்றிருக்கும் அயலான்போல வேடிக்கை பார்ப்பதை தவிர்த்து அறைமுழுக்க சிதறிவிட்ட புத்தகங்களைத் தூசுதட்டி அலமாரிப்படுத்தும்படி நண்பர்களென சூழ்ந்திருந்த நண்பர்கள் வேண்டுகோளிட்டார்கள். உடையிலிருந்து உள்ளுடலுக்குத் தாவிவிட்ட செடியின் சாம்பல் வாசனை தகிக்கப் பெற்ற இவன் அவர்களின் திடீர்வருகையை புதிராகப் பார்த்தான். அவர்களது குரல்கள் வலியற்றதாக இருந்தது ஆச்சரியம் கொள்ளச் செய்தது. வார்த்தைகளும் அவர்களும் கொண்டிருந்த தொடர்பு பணம் கொடுத்து பாலுணர்ச்சி தணித்த உடலின் சுகத் தளர்வை ஒத்ததாயிருந்தது. வாழ்வை பரிட்சிக்காத அவர்களிடமிருந்து

தனிமைப்பட்டு தன் மைதுனம் போல் எழுத்தென தோன்றினவைகளை எழுதிப்பெற்ற பரவசத்தை மீண்டும் இசைவழி இனம் கண்டான். அவன் சுழலும் சுற்றில் வேறு இணையென மாற்றுக் காணமுடியாத இளையராஜாவின் இசைப்பகிர்வில் பிறந்த மகிழ்வு இக்காலகட்டத்தின் பல சந்தர்ப்பங்களில் இவனது இதயத்தில் வானுயரும் செடிகள் நட்டன. உடலம் குறுகி உயிர்பெருகியது. அன்பின் அணையா சுடர்வினை. ஓஷோவின் கல் குளிர்ச்சி மீண்டும் இவனுள் சிலைவிடத் துவங்கியது. தாடி வளர்க்க முயன்றான். இவனது வசிப்பை ஜீரணப்படுத்திக் கொண்டது மனம் சூன்யப்பட்ட தற்காலிக உலகம்.

3

தொடர்வது எதற்கான பயணம் என்பது அறிதலுக்குப் பிற்பாடு தெளிவாகக் கூடும். வாழ்வு ஒரு நுட்பமான கற்பிதம். இசைவும் மறுப்பும் ஒருசேர அதன் சிதைவை உற்பத்தி செய்துவிடுகின்றன. இதற்கெல்லாம் நடுநாயகமாக அமர்ந்துகொண்டிருக்கும் சிந்தனை தான் அனைத்தையும் பேணும் கூன்விழுந்த குரூரம். வரலாற்றின் முதல் கொலையாளி. சிந்தனை தொலைந்தால் சீர்படும் உலகம். எனவே சிந்தனை பின்னும் கொடும்வலையில் அகப்படாது மனம் தப்ப அவனுக்குத் தென்பட்ட ஒற்றைவழி சிற்பங்களின் மௌனம் புதையுண்டிருக்கும் கோவில்களுக்குச் செல்வது என ஆனது. அங்கு துயிலும் அமைதி உவப்பாயிருந்தது. எனினும் பக்தர்களின் இச்சைகளனைத்தும் ஒன்று திரண்டு உருக்கொண்ட ஆவேசப் பறவையென வெளவால்கள் காலத்தின் கைகளுக்கெட்டாத சுதந்திரத்தின் சாப வாசனையுடன் சலசலத்தன. அவற்றின் அலையடிப்பை ஒற்றைத் துணையெனக் கொண்டிருக்கும் சுவர் சிற்பங்களின் அசைவற்ற கனிவு அவனது மனத்தை நிதானப்படுத்திற்று. அழிவடைந்த சிற்பங்களில் தென்படும் முலைத் தோற்றம் போன்று பெருகின வடிவங்கள் இவனைக் கவர்ந்தன. எண்ணெய் பிசுக்கேறிய எறும்புகள் அவ்வடிவ நேர்த்திகளை கால் சுகித்தபடி நடமாடித் திரிந்தன. இவனது உடலிலும் எறும்புகளின் குறுகுறுப்பு கற்பனையிட்டது அக்கணம். சுற்றியிருந்தவர்கள் பாரம்பரிய சிதறல் வயப்பட்ட கண்களோடு இவனை உற்றுப்பார்த்தார்கள் அந்நியன் எனும்படி. தன்னலம் மட்டுமே பிரார்த்தனையாக தனக்கிணையாக வேறு ஒன்று இருக்கிறது

என்பதே அவர்களுக்கு அருவெறுப்பைத் தருவதானது. அவர்களது ஒவ்வொரு சொல்லிலும் வெருண்டோடின எலிகளின் தற்காப்பு. அங்கிருக்கும் அவனுக்கு சமயங்களில் இவனாக தானிருப்பதே ஆதுரமான புகலிடமாக இருந்தது. உள் இருள் கூடி பார்வையின் புறமாகவும் விரவத் துவங்கினது போலிருந்தது தூண்களின் பாழடைந்த கரியபூச்சு. சுற்றில் தென்பட்ட யாளியின் வாய்பிளவின் இருட்துளையுள் இவனது மனம்நலிவுற்ற நண்பன் முகம்நீண்டான். (ஒருமுறை யாளியின் விதலிதமான வடிவம் சிற்பிகளின் தன்குணச் சாயலை வெளிப்படுத்துவதாக அதே நண்பன் காரணப்படுத்தியிருந்தான்). அந்த நண்பன் உடன்வந்திருந்தது இப்பொழுதுதான் நினைவில் உறைத்தது. அவன் தன்னுள் உரையாடிக் கொண்டிருந்த சமயம் நண்பன் பலமுறை குறுக்கிட்டு பல சொல்லியபடியே உடன்தொடர்ந்திருந்தான் போல. இவன் அரிதாய் கவனித்து எதிர்வினையாற்றும்போது உடனே பதிலீடுசெய்துவிட ஏகும் பதற்றத்தை மௌனமாக அடைகாத்து உள்ளடர்ந்த சிரிப்புடன் கண்கூர்ந்தான் நண்பன் பதுங்கின புலியின் வன்ம அடிப்படையில். யாளிகளின் விதலிதமான குறிவிழிப்புக்கள் இவனது உள்மோகம் தூண்டின. தூரம் கடந்த இகவயம். உடனடி யாக இருப்பதான விஷயங்கள் இல்லாதனவாக சாயை அடைந்தன. நண்பன் சுவரொலியின் அசரீரியாக தொடர்ந்த வண்ணமிருந்தான். இவன் நின்று அமர்ந்து நடந்தான். நிற்பதன் வலி அமர்வதில் பெருகியது. பெற்றோரோடு வலமிட்ட சிறுவர்கள் கோவிலை விளையாட்டு மைதானமாக்கும் தவிப்பிலிருந்தனர். அவர்களது மழலைத் துடிப்பை துல்லியமிடும் முகவெட்டுக்களில் இவனுக்கு அவன் கடந்துவந்திருக்கும் பல கலைஞர்கள் நெரிசலாகத் தென்பட் டார்கள். வெகுநேரம் நடந்த அயர்வில் எண்ணத்தின் பிடிபடாத குறியீட்டுப் புதிர்களின்வழி நிலை விட்டகலத் தோன்றியது. இளைய தலைமுறையாய் ஊற்றெடுத்த சிறுவர்களின் மனதை ஈடுசெய்யாத உடலின் அசூர வளர்ச்சி நிழலாய்த் துரத்த வானம் தெரிந்த கடல் வெளியில் சற்றுப்பொழுது அலைந்தான். வழிநாய்கள் முகம்சுணங்கி ஏதேச்சையான முறைத்தலை கையாண்டன. எங்கு சென்றிடினும் விடுபட எண்ணுவதிலிருந்து விடுபட முடியவில்லை. காற்று மூச்சு திணறும்படி கடலலைகள் பதறியெழுந்தன. கடல்நீர் கால்களை அரித்து சூட்சமமாக உள்ளிழுத்தது. துயரத்தை தசைகளாய் பெருக்கி பெரும்சிறுவனென வளர்ந்துவிட்ட இவனது உடல் சிறுபடகாக அலைபடும் என இரைதேடும் வேட்கையில் சிற்பங்களின் எண்ணெய் ருசி சலித்த எறும்புகள் இவனது இருப்பிடம்நோக்கி இடம்பெயரத் தலைபட்டன. ❑

கலை, இலக்கிய 'சோ' டைம் வர்த்தகம் உலகமயம்

சநரு



தலை விசுவாமித்திரர் விண்ணில் வீசிய எண்ணெய் சுரண்டியில் மனைவி மக்கள் தேடி சண்டாளனாக திரிகிறான். உடலோடு சொர்க்கம் வேண்டிய காசிராஜன்.

கலை-இலக்கிய படைப்புகளில் மறைபொருள், தொனிப்பொருள், சுயம், சுதந்திரம் தேடும் கலாக்காரர்கள் கலாச்சார கலப்பு - நவீனம், பின் நவீனம் என பேசி அழைக்கிறார்கள்.

வசனம் (1) நீண்ட நேரம் ஒரு பாறையை பார்த்துக்கொண்டிருந்த சிற்பி மைக்கிலாஞ்சிலோவிடம் ...

போப் ஆண்டவர் ''ஹலோ மைக்கி பாறையில் எதை பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்?''

சிற்பி மைக்கி ''குதிரையை''

போப் ''பாறையில் குதிரை எங்கே இருக்கிறது?''

மைக்கி ''குதிரை இல்லாதவற்றை செதுக்கிவிடுவேன்''

இந்த டயலாக்கை, ஒரு கலைஞன் டொன்டி ம்பார் அவர்கள் கலைஞனோடு வாழுகிறான் என்பதற்கு உதாரணமாக சொல்லி மேற்கோள் எடுத்து அழைக்கிறார்கள் கலை படைப்பில் செய்நேர்த்தி விரும்பிகள்.

வசனம் (2) வாடிக்கையாளரிடம் பேரம் பேசிக்கொண்டிருந்த நவீன ஓவிய தந்தை பிக்காசோவிடம் ...

பார்வையாளர் ஒருவர் ''மிஸ்டர் பிக்காசோ நீங்க வரைந்த ஓவியம் எனக்கு புரியவில்லையே?!''

பிக்காசோ "நான் நைட்டிங்கேல் பறவையாக பல படைப்பு படைச்சு பறக்கிறேன்" இந்த டயலாக்கை பரவசமா பாடி பறக்கிறார்கள் நவீன கலாகாரர்கள்.

நமது கேள்விகள்

1. எந்த குதிரை அல்லது பாறை மைக்கிலாஞ்சிலோவிடம் "ஐயா சிற்பி என்னை சிலையா செதுக்கற ... இ ... ஈ ... என அழுதது?"

2. "பிக்காசோ ... எங்களுக்கு நைட்டிங்கேல் ரோஸ்ட் கொஞ்சம் பெப்பர் தூக்கலா செய்து கொண்டாங்க?" என ஆர்டர் கொடுத்துடு.

துணை கேள்விகள்

1. "பிரமாண்டமான வெண்பளிங்கு டேவிட்டின் தூல்வளை மடிப்புக்கு அடியில் மைக்கிலாஞ்சிலோ காலத்து அரசு, மதம், இனக்குழு அடையாளங்கள் முட்டி முனங்கிக் கொண்டிருக்கிறது. கலை படைப்பு ரகசியத்தில் படைப்பாளி சார்ந்துள்ள சமூக அடையாளம் தவிர்க்க முடியாதது எனில், இன பேதமற்று 'மனிதம்'-'கலை' என எஞ்சி இருப்பது எது?

2. "உலக பெரு முதலாளிகளுக்கு இணையாக ஓவியர் பிக்காசோ தனது கலை படைப்புகளில் சேர்த்த முதலீடுகள் தவிர்த்து மனிதம்-கலை என எஞ்சி இருப்பது எது?

கேள்வி-விலைகள்!

விவரிக்க முடியாததும், வியாபாரம் அற்றதுமான 'அது' 'வாழ்வின் விளைகலையின் நுண்மம். ஓயாத உளி ஓசையில், கித்தான் நெசவு அசைவில் கூடி கலந்த பொழுதில் படைப்பாளியுள் மிக அந்தரங்கமாய் நேர்ந்தது வாழ்வின் நம்பிக்கை, ஆக்கம், ஊக்கம் எனில் ... - பொங்கு பிளந்த தளிரில், தோளை நுழைக்கும் ஊசிமுனையில், கடைவாய் விளிம்பில், சுவாச காற்றில், ஒரு சாமானியனில் ரகசியமாய் நேர்ந்த ஆக்கமும் ஊக்கமும் வேறு என்ன?

அமைதி வேண்டி எங்கும், எதிலும் உடல், மனம் லயித்த பொழுதே ஆனந்தமயம் எனில், அது சிற்பம், சித்திரம் வடிப்பதால் மட்டும் ஆகுமோ?

விந்தையும் விளையாட்டும்

'கற்ற வித்தையும்-வெளிப்பாடும் தன்னை யாவுமாய் பாவித்த பொழுதின் அடையாளம்'

வான் நிலவில், மாடு மேய்க்கும் ஒளவை கிழவியை சுட்டிக் காட்டினாள்

அம்மா. அங்கு நாவல் மர உச்சியில் நின்று "பாட்டி சுட்டபழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா, கேள்" என்றது குழந்தை.

வித்தையும் வியாபாரமும்

புவியை மானிடம், பத்திர பதிவு செய்து கொண்ட வகையில், நூறு ஆண்டு காலம் தீண்டாத விசம், இருளில் வெளிச்சமிட ... பாவித்து, கவனித்து, நாகம் கொண்டு வந்தவை யாவும் இங்கு கடைச்சரக்கு அதுவே தனி விவரணை.

நமது தெருக்கோடி ஆத்தா கடையில் இட்லி தின்றும் ஆங்கிலேயருக்கு, நமது மாமா தொப்புலான் என்ற கெய்டு விவரித்து "திஸ் ஐஸ் எ நமையே மாடு சார்" இப்படி ஆங்கிலேயருக்கு இணையாக நமது கெய்டுபமா 'மாடர்ன் ஆர்ட்' வரைய, அதை தனது வித்தின் எச்சமாக காசு கொடுத்து வாங்கும் ஆங்கில பரதேசிகளுக்கு நன்றி.

தங்கள் விருந்தில் வேர்கடலை மிட்டாய்க்கு ஆகும் செலவு தொகை ரூ. பத்து லட்சத்திற்கு நமது தொப்புலான் மாமா கலை படைப்பை வாங்கி கலையை பாதுகாக்கும் நம்ம சுதேசி வைர வியாபாரிகளுக்கு நன்றி. ஒரு சதுர அடி ஒரு லட்சம் ரூபாய் என நூறு கோடி ரூபாய்க்கு கலைபடைப்பு வாங்கிய சுதேசி காலிமனை பெரு வியாபாரிக்கும் நன்றி ... நன்றி .

'பயம் வேண்டாம் - நாம் யாவரும் கோடீஸ்வரர்கள்'

படைப்பு சுதந்திரம், சுயபரிசோதனை என சுய இரக்கம், பாலியல் [illegible] தெளிவற்ற விமர்சனம் என படைப்பு படைத்து பேசி பிழைக்கும் கலை வித்தகர்களா நீங்கள்?

கேள்

ஏரியில் தூர் வாரும் நம் விரல் இடுக்கில், மண் துகள் விருட்சங்களாக கிளை துளிர்க்கும். நமது ரத்த நாளங்களில் உற்சாகம் பெருக ... நமது வீட்டுப் புலக்கடையில் மலர்ந்த காட்டுப் பூ உலகு வியக்கும் கட்டிட கலை ஆகட்டும், சிற்பம், சித்திரங்களாகட்டும். கை நீட்டு பாட்டி வீட்டு சீதனமான அஞ்சறை பெட்டியில் அடை காக்க நாகம் எழுந்து நம்மை தீண்டினாலும், அல்லது பொன் கிடைத்தாலும் பெருமை. தங்கையார் சாம்பல் குவியலில் கை நீட்ட வைரம் கிடைத்தாலும், விதிவழி ஞானம் கிடைத்தாலும் பெருமை.

[illegible] உத்தரவாதமும், கவர்ச்சி உரையும் வித்தை - உலகமயம்.

❐

பெரிய அணைகள் - பெரிய துப்பாக்கிகள்

அ. முத்துக்கிருஷ்ணன்



பெரிய அணைகள் - இது உலகை கடந்த முப்பது வருடங்களாக அச்சுறுத்தி வரும் பிரச்சினை. வழக்கம்போல் அணை வேண்டும் என்பவர்கள் உலகை வளர்ச்சி நோக்கி கரம்பிடித்து அழைத்துச் செல்பவர்களாகவும், அணை கட்டுவது ஆபத்து என்பவர்கள், அதை எதிர்ப்பவர்கள் வளர்ச்சியின் தடைக்கல்லாக நிற்பவர்களாகவும் பொதுவாக சித்தரிக்கப்படுகிறார்கள். பெரிய அணைகள் இதுவரையில் கோடிக்கணக்கானவர்களை சொந்த நாட்டில் அகதிகளாய் மாற்றியிருக்கிறது. சொந்த நாட்டில் பிச்சைக்காரர்களாய் பெரிய நகரங்களின் தெருக்களில் புழுதிபடிந்த முகங் களுடன் அலையும் கோடிக்கணக்கானவர்களைப் பற்றி

எப்பொழுதுமே இந்த தேசத்திற்கும் அதன் ஊடகங்களுக்கும் கவலை இல்லை. இப்படி பிச்சைக்காரர்களாய் அலையும் இவர்கள் யார்? சொந்த வீடு, ஏக்கர் கணக்கில் வயல் வெளிகள், கோவில், மாந்தோப்பு, புளியந்தோப்பு (மலைகள் சூழ்ந்த கிராமத்தில்) திண்ணைகள் நிறைந்த தெருக்கள். மங்கை, சாவடி என கேலிப் பேச்சுகளுடன் மிகுந்த குதூகலத்துடன் வாழ்ந்த மனிதர்கள்தான் இன்று நம் அரசாங்கத்தின் கொள்கை முடிவுகளால் இப்படி மாற்றி அலைகிறார்கள். திருவிழாக்களை தொலைத்துவிட்டு தெருக்களில் ஒட்டிய சினிமா போஸ்டர்களை வேடிக்கை பார்த்து சிறுவர்கள் கண்களை உருட்டிக் கொண்டு மறைகிறார்கள்.

வெயில் காலங்களில் அணையின் நீர்மட்டம் குறையும் சமயங்களில் அவர்கள் ஞாபகம் ஊரின் நாம்புகளை அரிக்க, கிராமங்களுக்கு பயணப்படுகிறார்கள். நீர் மட்டம் குறையக் குறைய கானா வீடுகளும், கோவில் கலசங்களும் மெதுவாக எட்டிப் பார்க்கும் சமயங்களில் அங்கு சில வாரங்கள் தங்கி விடுகிறார்கள். ஞாபகங்கள் மனதில் உருவாக்கும் எண்ணற்ற சித்திரங்கள் வாழ்வின் கோரத்தை உணர்த்திக்கொண்டே இருக்கிறது. இவ்வளவு கொடுமைகளைச் செய்துவிட்டு அரசாங்கம் அணை கட்ட கடன் கொடுத்த உலக வங்கித் தலைவருக்கு கச்சிதமான உடற்கட்டுடைய பெண்களை அமர்த்தி அழகி போட்டியும், வடிவமைப்பு ஆடை திருவிழாக்களையும் நடத்துகிறது. அழகிய பெண்களின் ஒய்யாரமாக நடந்து திரும்பும்பொழுது அவர்களின் நேர்த்தியான பாவாடைகள் உலக வங்கி கவர்னரின் கன்னங்களை உரசுகிறது. நூற்றுக்கணக்கான மீடியா புகைப்படக் கலைஞர்கள் தங்கள் புகைப்படக் கருவிகளை க்ளிக் செய்த வண்ணம் உள்ளனர். இந்த புகைப்படக் கருவிகள் அவலம் நிறைந்த நடைபாதை வாழ்க்கையைப் பார்த்ததேயில்லை.

அணையிலிருந்து தயாரிக்கப்படும் ஆயிரக்கணக்கான மெகா வாட் மின்சாரம் நாட்டை, அதன் தொழிற்சாலைகளை வளர்ச்சி நோக்கி நகர்த்துகிறது. இதுநாள் வரையிலும் கிராமப்புறங்களில் மூன்று வேளை மின்சாரம் ஆறு மணி நேரம் மட்டுமே எட்டிப் பார்க்கிறது. பிறகு எங்கே தான் செல்கிறது இந்த மின்சாரம். உற்பத்தியாகும் இந்திய மின்சாரத்தில் பெரும் பகுதி பெரிய நகரங்களின் விளம்பரப் பலகைகளுக்கே போதவில்லையாம். உலகமயத்திற்கு பிறகு இந்திய சந்தைக்குள் படையெடுத்துள்ள ஆயிரக் கணக்கான நிறுவனங்கள் விளம்பரங்களுக்கே அதிகப்படியான பணத்தைச் செலவிடுகிறது. இந்த வண்ண ஜொலிப்பில் தான் மயங்கி கிடக்கிறது இந்திய நடுத்தர வர்க்கம். இத்தனை லட்சம் குடும்பங்களின் வாழ்க்கையை அழித்தொழித்துவிட்டு இந்த ஜொலிப்பை பெறத்தான் வேண்டுமா? நகரங்களில் அதிகப்படியான மின்சாரம் பயன்படுத்தும் ஒவ்வொருவரும் கொஞ்சம் சிந்தியுங்கள். இந்த மின்சாரம் பலரின் ரத்தத்திலிருந்து பெறப்பட்டது.

அணை கட்டுமானத்தை உக்கிரத்துடன் தடுத்து நிறுத்த முயன்றவர்கள் இன்று மறுசீரமைப்பு மற்றும் அவர்களுக்கான வாழ்வாதாரங்கள் உத்திர வாதப்படுத்தும் போராட்டங்களாக மாறியுள்ளது. இந்திய அரசும், மாநில அரசுகளும் மறுசீரமைப்பு நடந்துவிட்டதாக கூறுகிறது. எல்லா மறுசீரமைப்பும் காகிதத்தில் மட்டுமே நடந்துள்ளது. கிழட்டுப்பைய புலம்பலாய் இந்திய அரசு உச்சநீதிமன்றத்தின் ஆணைகளை, உத்தரவுகளை உதாசினப்படுத்தி வருகிறது.

கடந்த சில வாரங்களாக எந்த மறுசீரமைப்பும் நடைபெறாத சூழலில் மீண்டும் நர்மதை அணையின் உயரத்தை அதிகரிக்க முடிவு செய்துள்ளது மத்திய அரசு. நர்மதா பச்சாவ் ஆன்தோலனின் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் மேதா பட்கரின் தலைமையில் புதுதில்லி சாஸ்திரி பவன் அருகில் அணி திரண்டு முகாமிட்டுள்ளனர்.

மேதா பட்கர் அங்கு உண்ணாவிரதம் இருந்து வருகிறார். இந்த உண்ணாவிரதம் மத்திய அரசாங்கத்தையும் மட்டற்ற வளர்ச்சியை கோருபவர்களையும் உலுக்கி வருகிறது. இந்தியாவின் அறிவு ஜீவிகள் பலர் இந்த எளிய தாயின் உண்ணாவிரதத்திற்கு ஆதரவு தெரிவித்து அவர் அருகில் அமர்ந்து வருகிறார்கள். வி.பி. சிங், அருந்ததிராய், வந்தனா சிவா என அந்த பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. இந்தியாவின் சரித்திரத்தில் எப்பொழுதும் நடந்திராதது போல் ஒரு பெண்ணைக் கைது செய்ய ஆயிரத்து இருநூறு காவல் துறையினர் நள்ளிரவில் சென்றார்கள். எல்லாம் வேடிக்கை, வேடிக்கையின் ஒரு பகுதி.

சயிப்–உத்–தின்–சோஸ் அவர்களுக்கு மேதா பட்கர் எழுதிய கடிதம் இங்கே ...

சயிப்-உத்-தின்-சோஸ்
மத்திய நீர்வளத்துறைஅமைச்சர்
புதுதில்லி.

நீங்கள் அறிந்திருப்பீர்கள். சர்தார் சரோவர் அணையின் உயரத்தை அதிகரிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுவிட்டது. 110.64 மீட்டரிலிருந்து 121.96 மீட்டரை 12 மீட்டர் உயரம் அணையின் உயரம் அதிகரிக்கும். இந்த உயரம் அதிகரிப்பதால் ஏராளமான வயல்கள், வீடுகள் மூழ்கிப் போகும். ஏற்கனவே 35,000 குடும்பங்கள் அங்கு எந்த மறுசீரமைப்பு நிவாரணங்களும் வழங்கப்படாமல் நிர்கதியாய் சிதறி கிடக்கிறது. ஆனால் மகாராஷ்ட்ரா, குஜராத் மற்றும் மத்திய பிரதேசத்து மாநில அரசுகள் ஏராளமான நிவாரணங்கள் வழங்கப்பட்டதாக அப்பட்டமாக பொய் சொல்கின்றன. நாங்கள் உங்களுக்கு அங்குள்ள சூழ்நிலையை விளக்குகிறோம். தயவு செய்து நீங்கள்

தலையிட்டு கட்டுமானப் பணிகளை நிறுத்த வேண்டும். அங்கு உள்ள மக்களின் வாழ்க்கை மறுசீரமைப்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் - உத்திரவாதப்படுத்த வேண்டும்.

பள்ளத்தாக்கில் உள்ள சூழ்நிலை எங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கி கடும் வேதனை அடையச் செய்கிறது. சிலவற்றை இங்கு தருகிறோம்.

அக்டோபர் 2004, பிரதமர் மன்மோகன்சிங் நீர்வளத்துறை அமைச்சரை நேரடியாக நர்மதா பள்ளத்தாக்கை பார்வையிட்டு அங்குள்ள புனரமைப்பு குறித்த நிலைமையை ஆய்வு செய்ய உத்தரவிட்டார்.

ஜனவரி 5, 2006 அன்று நடந்த கூட்டத்தில் உங்கள் செயலர் ஹரிநாராயணன் ரொக்க இழப்பீடு வழங்குதல் மறு வாழ்வளிப்பாக கருதப்பட மாட்டாது என உறுதியளித்தார்.

மார்ச் 6, 2006 தேதியிட்ட எல்.சி. ஜெயினுக்கு எழுதப்பட்ட கடிதத்தில் நீங்கள் அணையின் உயரம் அதிகரிக்கப்படுவதற்கு முன்னால் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய விபரமான நடைமுறைகளை எடுத்துரைத்தீர்கள்.

ஆனால் எந்த நடைமுறைகளும் பின்பற்றப்படாமல் உயரம் அதிகரிப்பதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

உத்தரவுக்காக காத்திருந்தது போல் அரசு வேகத்தில் கட்டுமானப் பணிகள் துவங்கியது.

நீங்கள் இதுவரையிலும் உங்கள் பயணத்தை மேற்கொள்ளவில்லை. நீங்கள் பரிந்துரைத்த எந்த நடைமுறையும் பின்பற்றப்படவில்லை. இந்த நடைமுறைகள் பற்றி எந்த ஒரு கிராம சபையிலோ கிராம பஞ்சாயத்திலோ விவாதிக்கப்படவில்லை. தகவல்கூட தெரிவிக்கப்படவில்லை. இந்த ஒட்டு மொத்த நீர் ஆழ்ந்த பகுதியும் பட்டியலிடப்பட்ட பகுதி (Sheduled Area) அங்கே PESA சட்டம் அமலில் உள்ளது. அதனால் நில ஆர்ஜிதம் செய்வதற்கு முன்னாலும், மறுசீரமைப்புகளை நிர்ணயிப்பதற்கும் கிராம சபையை கலந்தாலோசிப்பது சட்டப்பூர்வமாக கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மிகத் தெளிவாக இவை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இதுநாள் வரையிலும் திட்டத்தால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கானவர்களும் மாற்று குடியிருப்பு இடங்களோ, மறு வாழ்வளிப்போ வழங்கப்படவில்லை. இந்த சூழ்நிலையில் எந்த அடிப்படையில் உங்கள் செயலர் ஹரிநாராயணன் தலைமையில் கூடிய நர்மதா கட்டுப்பாட்டு ஆணையம் அணையின் உயரம் அதிகரிப்பதற்கான

உத்தரவை கொடுத்தது. உங்கள் சௌகரியத்திற்காக இங்கே மறு சீரமைப்பு தொடர்புடைய பல தீர்வு காணப்படாத விசயங்களை சுட்டிக் காட்டுகிறோம்.

நர்மதா நடுவர் மன்றத்தின் அடிப்படையான பரிந்துரைப்படி அணைநீர் கிராமங்களை மூழ்கடிப்பதற்கு ஆறு மாதங்களுக்கு முன்னரே பாதிக்கப்பட்ட மக்களுக்கு முழுமையான வசதிகளுடனான மறு சீரமைப்பு கிராமங்கள் அளிக்கப்பட வேண்டும். அதே போல் விவசாயம் செய்வதற்கு நல்ல நிலமும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இது ஒருபுறம் இருக்க 110.64 மீட்டரான தற்போதைய உயரத்துக்குள் பாதிக்கப்பட்ட 10,000 குடும்பங்களுக்கு எந்த மறுசீரமைப்பும் எட்டவில்லை.

உச்சநீதிமன்றம் தனது பல்வேறு தீர்ப்புகளில் மறுசீரமைப்பு தொடர்புடைய பல வழிகாட்டுதல்களை அளித்துள்ளது.

பயிரிடத்தக்க நிலம் அணை கட்டுமானம் துவங்குவதற்கு ஒரு ஆண்டுக்கு முன்பாகவே வழங்கப்பட வேண்டும். முழுமையான மறுசீரமைப்பு நிலம் நீரில் மூழ்குவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பே அளிக்கப்பட வேண்டும். கட்டுமானப் பணிகள் நடைபெறும் அதே வேகத்துடன் மறுசீரமைப்பு பணிகளும் நடைபெற வேண்டும். அதில் எந்த இணக்கத் தீர்வுக்கும் இடமில்லை. திட்டத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வாழ்க்கை மறுவாழ்வளிப்புக்கு பின் சௌகரியத்துடன் இருக்க வேண்டும்.

மூன்று மாநில அரசுகளும் உச்சநீதிமன்றம் மற்றும் நடுவர் மன்றத்தின் எந்த வார்த்தையையும் மதிக்கவில்லை. இங்கே சில சம்பவங்கள்:

மத்திய பிரதேசம்:

பயிரிடத்தக்க நிலம் இதுவரை ஒரு குடும்பத்திற்கு கூட வழங்கப்படவில்லை.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அளிக்கப் போவதாக அரசாங்கம் வாக்குறுதி அளிக்கும் நிலம், அரசாங்கம் நீதிமன்றத்தில் அளித்த வக்காலத்து படி ஆக்கிமிப்புக்குள்ளானது.

பயிரிடத்தக்கதல்ல, வழக்குகளுடையது அல்லது அப்படி ஒரு நிலமே இல்லை.

சிறப்பு சீரமைப்பு என அரசாங்கம் ரொக்க பணத்தை பிரித்தளிக்கிறது. அது சட்டத்துக்கு புறம்பானது மற்றும் அந்த பணத்தை வைத்து பாதிக்கப்பட்ட குடும்பங்களால் நிலம் வாங்க இயலாது.

மறுசீரமைப்பு பகுதிகள் இன்றும் உருவாகவில்லை. பல கிராமங்களுக்கு இன்னும் பகுதிகள் தேர்வு செய்யப்படவில்லை. பல பகுதிகள் எந்த வசதிகளும் இல்லாதவை. பல பகுதிகளில் எல்லா குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கும் அளவுக்கு வீட்டு மனைகள் இல்லை. இதனால்தான் மத்திய பிரதேச அரசாங்கம் குடும்பத்திற்கு 50,000 ரூபாய் கொடுத்து தனது பொறுப்பிலிருந்து விடுபட முயல்கிறது. இது சட்டத்திற்கு புறம்பானது. கிராமங்கள் நீரில் மூழ்கும் பொழுது குடும்பங்கள் இருப்பிடங்களின்றி தெருவில் தவிக்கும்.

மகாராஷ்டிரா:

90 மீட்டர் உயரத்திற்குள் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இன்னும் எந்த மறுசீரமைப்பும் செய்யப்படவில்லை.

நீதி துறை ஆணையரின் தலைமையில் 2002ல் நடவடிக்கை அறிக்கை உருவாக்கப்பட்டது. பல மக்கள் பிரதிநிதிகள் உட்பட எல்லோரும் முதலில் திட்டத்தால் வெளியேற்றப்படும் மக்களின் பட்டியல் வெளியிடும் வேலை இன்னும் முடிந்த பாடில்லை.

திட்டத்தால் பாதிக்கப்பட்ட 800 குடும்பங்களுக்கு நிலம் (வயல்) ஒதுக்கப்படவில்லை. பாதி பேர் தங்கள் சொந்த கிராமங்களிலேயே வாழ்ந்து வருகின்றனர். மீதி மக்கள் மறு குடியமர்வு இடங்களில் வாழ்ந்து வருகிறார்கள். மேஜரான மகன்களுக்கு இரண்டு ஹெக்டேர் நிலம் வழங்கப்பட வேண்டும் என மிக அழுத்தமாக உச்சநீதி மன்றம் தீர்ப்பளித்த பொழுதும் அதனை ஏற்க இயலாது என்று மகாராஷ்டிரா அரசாங்கங்கள் தொடர்ந்து தெரிவித்து வருகிறது. மகாராஷ்டிரா அரசாங்கம் அந்த தீர்ப்பு மத்திய பிரதேசத்திற்கு மட்டும்தான் பொருந்தும் என விளக்கமளித்து வருகிறது. அந்த தீர்ப்பை நடுவர் மன்றமும் ஆமோதித்துள்ளதால் அது எல்லா மாநிலங்களுக்கும் பொருந்தும்.

சமூகமாக வாழத் தகுதி இல்லாத தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் 2500 பேர் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களை இன்னும் பட்டியலிட்டு அறிவிக்கவில்லை திட்டக்குழுவினர். இவர்களுக்கு மறு வாழ்வளிப்பு அளிக்கப்பட வேண்டும்.

நூற்றுக்கணக்கான குடும்பங்களுக்கு Ex parte இடங்கள் வழங்கப் பட்டுள்ளது. ஆனால் மகாராஷ்டிரா அரசாங்கம் அத்தகைய இடங்கள் வழங்குவதில்லை என்று கொள்கையை எழுத்துப் பூர்வமாக வைத்துள்ளது. அந்த இடமும் பயிரிடத்தக்கதல்ல. வெளியேற்றப் பட்டவர்களுக்கு லாயக்கானதல்ல. வெளியேற்றப்பட்டவர்கள் அதனை நிராகரித்துள்ளனர்.

மகாராஷ்டிரா அரசாங்கத்தின் அறிக்கைப்படி இன்றும் மறுவாழ்வளிப்பு வழங்கப்படாத பல குடும்பங்கள் இருக்கின்றன. அப்படியிருக்க அடுத்த கட்ட உயரம் அதிகரிப்பு ஆணை எப்படி வழங்கப்பட்டது. 121.92 மீட்டர் உயரத்திற்கு கீழ் 113 குடும்பங்கள் நீர்கதியாய் தவிக்கிறது.

குஜராத்:

அரசாங்கம் முழுமையான மறுசீரமைப்பு நடவடிக்கைகள் நடந்துவிட்டதாக பறைசாற்றுகிறது. ஆனால் அங்கே மக்கள் கடும் அவதிகளுக்கு ஆளாகி, துயரம் மிகுந்த வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள். அறிவிக்கப்பட்ட அளவு நிலம் வழங்கப்படவில்லை. அந்த நிலமும் பயிரிடத்தக்கதல்ல. மழைக்காலங்களில் நிலங்கள் நீரில் தேய்ந்து வருவது வழக்கமாகிவிட்டது. மழைக்காலம் வந்துவிட்டால் குடியிருப்புகளுக்குள் நீர்புகுந்துவிடுகிறது. சிறிய வயல்களின் அறுவடை கூட கைக்கு எட்டுவதில்லை.

அதனால், உங்கள் அறிக்கைகள் படியே நர்மதா பள்ளத்தாக்கில் எந்தவித மீட்பு நடவடிக்கையும் முழுமையாகவோ திருப்திகரமாகவோ நடைபெறவில்லை. நீங்கள் உயர அதிகரிப்பு உத்தரவை மறுபரிசீலனை செய்ய வேண்டும். அதை செய்யும் தார்மீக பொறுப்பும் பலமும் உங்களிடம் உள்ளது. உங்கள் பதவியால் இதில் தலையிடுங்கள். லட்சக்கணக்கான ஆண்கள், பெண்கள், குழந்தைகளின் வாழ்க்கையை பாதுகாக்க வாருங்கள். கட்டுமானம் முடிந்துவிட்டால் இவர்கள் வாழ்வில் செப்பனிட முடியாத சேதம் நிகழ்ந்துவிடும். மனிதத்துவமான சிக்கலை அரசாங்கம் கையாள நேரும். இது மனிதன் உருவாக்கிய சுனாமி, மனிதன் உருவாக்கிய பூகம்பம்.

உடனடியாக தலையிட்டு கட்டுமானத்தை நிறுத்துங்கள். மறுவாழ்வளிப்பு நடவடிக்கையை மேற்கொள்ளுங்கள். நாங்கள் உங்களை நேரடியாக பள்ளத்தாக்கு வரும்படி அழைப்பு விடுக்கிறோம். நீங்கள் நேரடியாகவே சூழ்நிலையின் உக்கிரத்தை அறிந்து கொள்ளுங்கள். பிரதமரின் அலுவலகமும் உங்களுக்கு இது போன்ற உத்தரவை நவம்பர் 2004ல் அளித்தது. 121.92 மீட்டர் அளவுக்கு கீழ் பாதிக்கப்பட்ட கடை கோடி மனிதன் வரை மறுசீரமைப்பு வந்து சேரட்டும். அதை உத்திரவாதப்படுத்தி நடவடிக்கையாக மாற்றுங்கள். அவை முழுமையடைந்த பின் தான் அணை கட்டுமானம் துவங்க வேண்டும்.

மேதா பட்கர் மற்றும் பிறர்
நர்மதா பச்சாவ் ஆள் தோலன் □

சங்க கால நடுகற்கள் கண்டுபிடிப்பு

கா. ராஜன்



இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட பழந்தமிழ் (தமிழ்ப் பிராமி) எழுத்துப்பொறிப்புப் பெற்ற மூன்று சங்ககால நடுகற்களை முதன் முதலாகத் தமிழ்ப் பல்கலைக்கழக கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறையினர் கண்டுபிடித்துள்ளனர். தமிழகத்தில் தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி வட்டத்தில் அமைந்துள்ள புலிமான்கோம்பை என்ற சிற்றூரில் இந்நடுகற்கள் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டன. இச்சிற்றூரான புலிமான்கோம்பை வைகை ஆற்றின் தென்கரையில் வத்தலக்குண்டிலிருந்து தெற்கே 15 கி.மீ. தொலைவிலும் ஆண்டிப்பட்டியிலிருந்து 19 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது.

இந்தியாவில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டவற்றில் மிகப் பழமையானவை என்ற பெருமையை இந்நடுகற்கள் தட்டிச் செல்கின்றன. வரலாற்றுச் சிறப்பு மிக்க இச்சங்ககால நடுகற்களின் கல்வெட்டுப் பொறிப்பு இதுவரை தமிழகத்தில் கிடைத்த பழந்தமிழ் (தமிழ் பிராமி) கல்வெட்டுகளில் காலத்தால் முந்தியதாகும். மூன்றடி உயரமும் ஒன்று முதல் ஒன்றரை அடி அகலமும் கொண்ட இந்நடுகற்கள் நிலத்தில் ஓர் அடி ஆழத்தில் நடப்பட்டிருந்தன. இந்நடுகற்கள் சங்ககாலத்தைச் சார்ந்த முதுமக்கள் தாழிகளை உட்கொண்ட ஈமச்சின்னத்தின் ஒரு பகுதியாக நடப்பட்டிருந்ததால் தமிழக வரலாற்றாய்விலும் சங்ககால ஆய்விலும் சிறப்பான இடத்தை பெற்றுத் திகழ்கின்றன. சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பெறும் நடுகற்கள் தற்பொழுது முதன்முதலாகக் கிடைத்துள்ளதால் சங்க இலக்கிய ஆய்விற்கு ஒரு புதிய பரிமாணம் கிடைத்துள்ளது. இதுகாறும் தமிழகத்தில்

சமணர் உறைவிடங்களிலேயே பழந்தமிழ் (தமிழ் பிராமி) கல்வெட்டுக்கள் கண்டறியப்பட்டுள்ளன. இவ்வரிய கண்டுபிடிப்பின் மூலம் தமிழக மக்கள் பரவலாக எழுத்தறிவு பெற்றிருந்தனர் என்பது உறுதிப்படுகிறது.

சமணச்சின்னத்தின் ஒரு பகுதியாகக் காணப்பெற்ற இந்தக் கற்கள் விவசாயத்திற்காக நிலம் பண்படுத்தப் பெற்றபொழுது அப்புறப்படுத்தப் பட்டுக் கிடந்தன. பின், கால ஓட்டத்தில் மண்ணுக்குள் புதையுண்டும் போயின. ஏராளமான முதுமக்கள் தாழிகள் புலிமான்கோம்பையிலும் பரம் உயர் பதுக்கைகள் இவ்வூரின் எதிர்ப்புறம் வைகை ஆற்றின் வடகரையில் அமைந்துள்ள பூம்பட்டியிலும் காணக்கிடைக்கின்றன. புலிமான் கோம்பைக்குக் கிழக்கே இரண்டு கி.மீ. தொலைவில் அமைந்துள்ள கெப்பத்துப்பட்டி என்ற சிற்றூரிலும் சமணச் சின்னங்கள் காணப்படுவதால் சங்ககாலத்தில் இப்பகுதி சிறந்த நிலையில் இருந்திருக்க வேண்டும் என்பது உறுதிப்படுகிறது.

கிடைக்கப் பெற்ற மூன்று நடுகற்களுள் ஒன்றில் "கல் பேடு தீயன் அந்தவன் கூடல் ஊர் ஆ கோள்" என்ற எழுத்துப் பொறிப்புள்ளது. இதற்கு, "கூடல் ஊரில் நடைபெற்ற ஆகோள் பூசலில் உயிர்நீத்த பேடு தீயன் அந்தவன் என்பவனுக்கு எடுப்பித்த கல் எனப் பொருள் கொள்வதால் இது வெட்சிப் பூசலில் (போரில்) ஈடுபட்ட வீரனுக்கு எடுக்கப் பெற்றதாகும். சங்க இலக்கியமான மலைபடு கடாம் கல்லெறிந்து எழுதிய நல்லரை மராஅத்த கடவுள் ஓங்கிய காடுஏக கவலை எனவும் திருக்குறள் எந்தைமுன் நில்லன்மின் தெவ்விர் பலர் என்னை முன்னின்று கல் நின்றவர் எனவும் குறித்தலால் கல் என்ற சொல் நடுகல்லையே குறிப்பதாக எடுத்துக் கொள்ளலாம். ஆகோளைப் பற்றி வரும் தெளிவான முதல் நடுகல் இது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். தொல்காப்பியம் இதனை வள்ர் கொளை ஆகோள் பூசன் மாற்றே' (தொல் 20:3) என்று கூறும்.

அடுத்த நடுகல்லின் முன்பகுதி உடைந்துபோய் உள்ளது. கி.மு.மூன்றாம் நூற்றாண்டிற்கும் முற்பட்ட பழந்தமிழ்ப் பிராமி வரிவடிவத்தில் எழுதப் பெற்ற இந்நடுகல்லில் இரு வரிகள் காணப்பெறுகின்றன. முதல் வரி 'அன் ஊர் அதன்' என்றும் இரண்டாவது வரியில் '....ன் அன் கல்' என்றும் காணப்பெறுகின்றன.

அடுத்த நடுகல்லில் 'வேள் ஊர் பதவன்' எனக் காணப் பெறுகிறது. இதற்கு 'வேள் ஊரைச் சார்ந்த பதவன்' அவ்வன் என்பவனுக்கு எடுக்கப்பெற்ற நடுகல் எனப் பொருள் கொள்ளலாம்.

மேற்குறிப்பிட்ட மூன்று நடுகற்களில் இரண்டாவது மற்றும் மூன்றாவது நடுகற்கள் கி.மு.மூன்றாம் நூற்றாண்டிற்கும் முற்பட்ட காலத்தைச்

சேர்ந்தவையாகும். ஆ கோளைப் பற்றிக் குறிப்பிடும் முதல் நடுகல் கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கணக்கில் கொள்ளலாம். உயிரெழுத்துக்களில் பிரித்தெழுதப்படுதல் பழமரபு. அதே மரபு இங்கும் பின்பற்றப்பட்டுள்ளது. எனவே இக்கல்வெட்டுகள் மூன்றும் காலத்தால் முற்பட்டவை எனக் கருதலாம். தொல்லெழுத்தியல், எழுத்தமைப்பியல் மற்றும் மொழியியல் ஆகியவற்றின் அடிப்படையில் இக்கல்வெட்டுக்கள் காலத்தால் முந்தியவை.

நடுகற்களைப் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் விரவிக் கிடக்கின்றன. இருபத்தைந்திற்கும் மேற்பட்ட சங்க காலப் புலவர்கள் இவற்றை வியந்து கூறியுள்ளனர். தொல்காப்பியம், அகநானூறு, புறநானூறு, மலைபடுகடாம், ஐங்குறுநூறு, பட்டினப்பாலை போன்ற இலக்கியங்கள் நடுகற்களைப் பற்றியும் அவற்றில் காணப்பெறும் எழுத்துக்களைப் பற்றியும் சிறப்புறக் கூறுகின்றன. சீத்தலைச்சாத்தனார், "விழுத்தொடை மறவர் வில்இட வீழ்ந்தோர், எழுத்துடை நடுகல்" (அகம்:53) எனவும் ஓதலாந்தையார், "வழுத்தொடை மறவர் வில்லிடத் தொலைந்தோர், எழுத்துடை நடுகல்" (ஐங்குறுநூறு:352) எனவும், மதுரை மருதன் இளநாகனார், "பேஎம் முதிர் நடுகல், பெயர் பயம் படரத் தோன்றும் குயில் எழுத்து" (அகம்:297), "மரம்கோள் உமண்மகன் பெயரும் பருதிப், புன்தலை சிதைத்த வன்தலை நடுகல்,கண்ணி வாடிய மண்ணா மருங்குல், கூர் உளி குயின்ற கோடுமாய் எழுத்து" (அகம்: 343) எனவும் குறிப்பிடுகின்றன. இக் குறிப்புகள் அனைத்தும் சங்க காலத்தில் எழுப்பப்பெற்ற நடுகற்களில் எழுத்துக்கள் இருந்தன என்பதைப் புலப்படுத்துகின்றன. இப்போது கிடைத்துள்ள சங்ககால நடுகற்கள் மூலம் முதன்முறையாக இவ்வுண்மை உறுதிப்படுத்தப் பெறுகிறது.

இந்நடுகல்லின் ஒளிப்படத்தைப் பார்வையுற்ற மூத்த கல்வெட்டறிஞரும் தமிழ்ப் பிராமி வரிவடிவ ஆய்வில் ஆழ்ந்த புலமை பெற்றவருமான ஐராவதம் மகாதேவன் அவர்கள் இந்நடுகற்களைக் கண்டுபிடித்த ஆய்வுக் குழுவிற்குத் தமது பாராட்டுக்களையும் மகிழ்வையும் தெரிவித்துக் கொண்டார். மேலும், இந்நடுகற்களைக் குறித்து அவர் தெரிவித்த கருத்துக் கள் வருமாறு: எழுத்தமைதியின் அடிப்படையில் இந்நடுகற்கள் மாங்குளம் தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுக்களை ஒத்திருப்பதால் இவற்றின் காலத்தை கி.மு. இரண்டாம் நூற்றாண்டின் துவக்கக் காலத்திற்கு முன்பாக எடுத்துச் செல்லலாம்; இந்தியாவில் கிடைத்த நடுகற்களின் காலத்தால் முந்தைய நடுகற்கள் என்ற பெருமையை இந்நடுகற்கள் பெறுகின்றன; தமிழகத்தில் கிடைத்த தமிழ்ப் பிராமி கல்வெட்டுக்களில் பிராகிருதச் சொற்கள் கலந்து வரும் நிலையில் இந்நடுகற்கள் பிராகிருதச் சொற்களின் கலப்பின்றித் தூய தமிழ்ச் சொற்களைக்கொண்டு எழுதப் பெற்றுள்ளன; சங்க காலத்

இல் தமிழகம் முழுவதும் கல்வி அறிவைப் பெற்றுத் திகழ்ந்திருந்ததை இக்கண்டுபிடிப்பு உணர்த்துகின்றன'.

இந்நடுகற்களைப் படித்துணர்வதற்குத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் பேராசிரியரும் இந்திய வரலாற்று ஆய்வுக்கழகத்தின் உறுப்பினருமான பேராசிரியர் எ.சுப்பராயலு அவர்கள் பெரிதும் துணைபுரிந்தார். முன்னாள் கல்வெட்டியல் துறைத் தலைவர் பேராசிரியர் செ.இராசு அவர்கள இலக்கியச் சான்றுகளை அளித்துதவினார். மத்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறையைச் சார்ந்த முனைவர் சு.இராசவேலு, டாக்டர் இராசமாணிக்கனார் வரலாற்று ஆய்வு மையத்தின் இயக்குநர் முனைவர் இல. தியாகராஜன் மற்றும் கல்வெட்டறிஞர்கள் முனைவர் சூ.சுவாமிநாதன், முனைவர் மு.நளினி போன்றோர் கல்வெட்டுக்களைக் கண்ணுற்று இக்கண்டுபிடிப்பை நிகழ்த்திய ஆய்வுக்குழுவைப் பாராட்டினர்.

இந்நடுகற்கள் தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறையின் தலைவர் முனைவர். கா.ராஜன் தலைமையில் இயங்கிய ஆய்வாளர்கள் திரு.வி.பி. யதீஸ்குமார் மற்றும் திரு.சி.செல்வகுமார் ஆகியோர் கள ஆய்வில் கண்டுபிடித்தனர். ஆய்வாளர் முனைவர் மா.பவானி மற்றும் திரு.உ.வெங்கடாசலம் ஆகியோர் நடுகற்கள் கிடைத்த இடத்திற்கு வந்து கல்வெட்டுக்களைப் படிக்க உதவிபுரிந்தனர். இக்களப் பணி ஃபோர்டு அறக்கட்டளைத் திட்ட நல்கையிலும் பல்கலைக்கழக மானியக்குழுத் திட்ட நல்கையிலும் மேற்கொள்ளப் பெற்றது. ❑

மாமல்லை அருகில் சங்க கால முருகன் கோவில் -கண்டுபிடிப்பு

சு.இராசவேல்



மாமல்லை, கிழக்குக் கடற்கரையில் அமைந்துள்ள பல்லவர் கால கலைகளுக்கு கட்டியம் கூறும் வகையில் சங்ககாலத் துறைமுகமாக விளங்கிய இந்நகரத்தின் சிறப்பை பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடுகிறது. இருப்பினும் பல்லவர் காலத்தில் இங்கு மிகுந்த அளவில் குடைவரைகளும் ஒற்றைக்கல் கோவில்களும் கற்றளிகளும் அமைக்கப்பட்டன. பிற்கால சங்க இலக்கிய நூலான பெரும்பாணாற்றுப்படையில், உருத்திரன் கண்ணனார் காஞ்சிபுரத்திற்கு அருகில் நீர்ப்பெயற்று என்னும் பெயரில் அமைந்த ஒரு துறைமுகப்பட்டினத்தைக் குறித்து கூறுகின்றார். இத்துறைமுகப்பட்டிணம் மாமல்லையாக இருக்கலாம் என வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர். இருப்பினும் இதுவரை சங்க காலத்திற்கான சான்றுகள் இப்பகுதியில் கிடைக்காததால் மாமல்லபுரம் சங்ககாலத்தில் துறைமுக நகரமாக செயல்பட்டதா? என்ற வினா ஆய்வாளர்களிடம் நிலவி வந்தது. இரண்டு ஆண்டுகளுக்கு முன் இந்தியத் தொல்லியல் மதிப்பாய்வுத்துறையின் கடலகழாய்வுப் பிரிவினர் சுனாமியால் வெளிப்போந்த சில கட்டடச் சிதைவுகளை முழுவதுமாக வெளிப்படுத்தினர். இவை மாமல்லபுரக் கடற்கரைக் கோவிலுக்கு 270 அடி தெற்கில் அமைந்துள்ளது. இவற்றுள் சிறிய புலிக்குகை எனப்படும் ஒற்றைக்கல் சிற்பத் தொகுதி 10 ஆண்டுகளுக்கு முன்புவரை மண்மேடு அற்று அனைவரும் காணும் வகையில் இருந்தது. இச்சிறிய

கோவிலுக்கு வட மேற்க்காக அதாவது கடற்கரை கோவிலில் இருந்து தென்மேற்க்காக 250 அடி தொலைவில் கடற்கரைக்கோவிலின் அமைப்பில் அதிட்டானப் பகுதி உடைய கற்றளிக்கோவில் ஒன்றின் எச்சங்களையும் மேற்குறித்த அகழாய்வுப் பிரிவினர் சுனாமியின் விளைவால் வெளிப்பட்டதை அகழ்ந்தனர். இக்கோவில் விமானத்தின் சிதைவுகளும் பக்கச் சுவர்களின் தாங்குதளக் கற்களும் சில உடைந்த கற்றூண்களும் பல்லவர் கால எழுத்தமைதியில் அமைந்த ஒரு சிறிய கல்வெட்டுத் துண்டும் இக்கற்றளிக் கோவிலின் கருவறைப் பகுதியின் உட்பகுதியை 2 மீட்டர் ஆழமாகத் தோண்டியபொழுது வெளிப்படுத்தினர்.

இக்கற்றளித் தொகுதி கடந்த நூற்றாண்டுவரை இப்பகுதியில் இருந்திருக்க வேண்டும். கடற்சீற்றத்தாலும் அடிக்கடி கடலால் மணல் அடித்து வரப்பட்டு இக்கோவிலை முழுவதுமாக அழித்திருக்கவேண்டும். அமைப்பில் வடக்கில் உள்ள கடற்கரைக் கற்றளிக்கோவில் போன்று அமைந்துள்ள இக்கோவிலின் அதிட்டானப்பகுதியை 1884 ஆம் ஆண்டு அலெக்சாந்தர் ரீ அகழாய்வு செய்து சில புனரமைப்புகளையும் மேற்கொண்டுள்ளார். (அலெக்சாந்தர் ぇ-2000 years of Mamallapuram N.S.Ramaswami p134-135) இவ்வகழாய்வில் கோவிலின் அதிட்டானப்பகுதி வெளிப்பட்டது. அவ்வாறு அகழாய்வு செய்து கண்டுபிடிக்கப் பட்ட உடைந்த சிலைகளின் எச்சங்கள் மற்றும் துண்டுக்கல்வெட்டு ஆகியவற்றை இக்கோவிலின் கருவரைப்பகுதியைத் தோண்டி அதனுள் இட்டுப் புதைத்துள்ளார். பொதுவாக அகழாய்வில் உடைந்த பயனற்ற எச்சங்களை இவ்வாறு கண்டு பிடிக்கப்பட்ட இடத்திலேயே கொட்டி மூடிவிடுவது வழக்கம். மேலும் இக்கோவிலின் கருவறையின் வடகிழக்குத் தரைப்பகுதியில் சுண்ணக்காரை கொண்டும் புணரமைத்து உள்ளனர். இவை யாவும் இக்கோவில் கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்பு வரை இருந்துள்ளமையை நமக்குத் தெரிவிக்கின்றது. தற்பொழுது உள்ள கடற்கரைக்கோவிலுக்குத் தென்மேற்காக 250 அடி தொலைவில் இக்கோவில் இருந்ததாக அலெக்சாந்தர் ぇ குறிப்பிடுகின்றார். எனவே சமீபத்தில் கடற்கரைக்கோவிலின் தென்மேற்க்கில் சுனாமியின்மூலம் வெளிப்பட்ட கற்றளிக்கோவிலின் எச்சங்கள் இந்த நூற்றாண்டின் தொடக்கம் முடிய இருந்துள்ளமையை நம்மால் அறியமுடிகிறது.

இருப்பினும் மாமல்லபுரக் கடற்கரையில் பல்வேறு வரலாற்றுப் புகழ்பெற்ற சின்னங்கள் பல ஆண்டுகளுக்கு முன்பே மண்மேடிட்டு அழிந்துள்ளமையை கிழக்குக் கடற்கரையில் பல்வேறு இடங்களில் மணல் மேடுகள் தொடர்ச்சியாக உள்ளமையின் மூலம் அறியமுடிகிறது. இத்தகைய மண்மேடு ஒன்றை இக்கட்டுரை ஆசிரியர் தமிழ்நாட்டைச் சுனாமி தாக்குவதற்கு முன்பே கண்டறிந்தார். இம்மண்மேடு மாமல்லபுரத்திலிருந்து வடக்காக உள்ள புகழ்பெற்ற புலிக்குகை அமைந்துள்ள சாளுவான்குப்பம் என்னும் ஊரில் புலிக்குகையிலிருந்து 200 அடி வடகிழக்காக கடற்கரையை ஒட்டி அமைந்துள்ள இயற்கையான நீண்ட பாறையை

மாமல்லை அருகில் சங்க கால முருகன் கோவில் -கண்டுபிடிப்பு

சு.இராசவேல்



மாமல்லை, கிழக்குக் கடற்கரையில் அமைந்துள்ள பல்லவர் கால கலைகளுக்கு கட்டியம் கூறும் கலைக்கூடம். சங்ககாலத் துறைமுகமாக விளங்கிய இந்நகரத்தின் சிறப்பை பெரும்பாணற்றுப்படை குறிப்பிடுகிறது. இருப்பினும் பல்லவர் காலத்தில் இங்கு மிகுந்த அளவில் குடைவரைகளும் ஒற்றைக்கல் கோவில்களும் கற்றளிகளும் அமைக்கப்பட்டன. பிற்கால சங்க இலக்கிய நூலான பெரும் பாணாற்றுப்படையில், உருத்திரன் கண்ணனார் காஞ்சிபுரத்திற்கு அருகில் நீர்ப்பெயற்று என்னும் பெயரில் அமைந்த ஒரு துறைமுகப்பட்டிணத்தைக் குறித்து கூறுகின்றார். இத்துறைமுகப்பட்டிணம் மாமல்லையாக இருக்கலாம் என வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர். இருப்பினும் இதுவரை சங்க காலத்திற்கான சான்றுகள் இப்பகுதியில் கிடைக்காததால் மாமால்லபுரம் சங்ககாலத்தில் துறைமுக நகரமாக செயல்பட்டதா? என்ற விணா ஆய்வாளர்களிடம் நிலவி வந்தது. இரண்டு ஆண்டுகளுக்கு முன் இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத்துறையின் கடலகழாய்வுப் பிரிவினர் சுனாமியால் வெளிப்போந்த சில கட்டடச் சிதைவுகளை முழுவதுமாக வெளிப்படுத்தினர். இவை யாவும் மாமல்லபுரக் கடற்கரைக் கோவிலுக்கு 270 அடி தெற்கில் அமைந்துள்ளது. இவற்றுள் சிறிய புலிக்குகை எனப்படும் ஒற்றைக்கல் சிறபத் தொகுதி 10 ஆண்டுகளுக்கு முன்புவரை மண்மேடு அற்று அனைவரும் காணும் வகையில் இருந்தது. இச்சிறிய

பாறைகளை வெட்டி கல்வெட்டு அமைத்துள்ள நீண்ட பாறைக்கு வடக்கில் அகழாய்வுக் குழி இடப்பட்டதில் 6 அடி ஆழத்தில் அழிந்துவிட்ட கோவிலின் கருங்கற் கட்டுமானத்தின் அதிட்டானப் பகுதியும் மூன்று கற்றூண்களும் வெளிப்பட்டன. இக்கோவில் கருவறை அந்தராளம், அர்த்த மண்டபம், முன் மண்டபம் ஆகிய அங்கங்களைப் பெற்றும் திருச்சுற்று மாளிகையைப் பெற்றும் விளங்கியுள்ளது. கற்றூண் மூன்றில் இரு கற்றூண்களின் நான்கு பக்கங்களிலும் பல்லவர்கால எழுத்தமைதியில் கல்வெட்டுக்கள் இரண்டு காணப்பட்டன. முதல் கல்வெட்டு பல்லவ மன்னன் இரண்டாம் நந்திவர்மனின் 12 ஆவது ஆட்சி ஆண்டு (கி.பி.808) தமிழ் கல்வெட்டு ஆகும். மாமல்லபுரத்தைச் சார்ந்த சீராப்பிரியன் என்பவர் திருவிழிச்சில் சுப்ரமண்யர் கோவிலுக்கு இவ்வூர் சபையாரிடம் [illegible] கழஞ்சு பொன்னை கொடையாக அளிக்கின்றார். இதன்படி இப்பொன்னைப் பெற்ற சபையார் இப்பொன்னிலிருந்து வரும் பலிசையால் (வட்டியால்) ஆண்டாண்டு வரும் கார்த்திகைத்திருநாளில் விழா எடுக்கவும் அதன்பொழுது இக்கோவிலில் விளக்கு எரிக்கவும் ஆவன செய்கின்றனர் என்ற செய்தி இக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிறிதொரு தூண் கல்வெட்டு பல்லவ மன்னன் கம்பவர்மனின் 17 ஆவது ஆட்சி ஆண்டு (கி.பி.886) தமிழ் கல்வெட்டு ஆகும். இக்கல்வெட்டு மணையில் கோட்டத்து மணையில் ஊரைச்சார்ந்த வசந்தனார் என்ற பெண் 16 கழஞ்சுப்பொன் திருவிழிச்சில் சுப்ரமண்யர் கோவிலுக்கு விளக்கு எரிக்கவும் பிற செலவினங்களுக்கும் அளித்த கொடையைப் பற்றிக் குறிப்பிடுகிறது. இப்பொன்னைப் பெற்ற இவ்வூர் சபையார் அதன்படி ஒவ்வொரு ஆண்டும் ஐப்பசி மாதத்திலிருந்து தொடர்ந்து விளக்கெரிக்க சம்மதிக்கின்றனர். இக்கோவிலுக்கு மேற்குறித்த வசந்தனார் நிலக்கொடையும் அளிக்கின்றார். இவர் சியபிமன் என்கின்ற கம்பபட்டனின் மனைவியாவார். இவர் காண்டில்ய கோத்திரத்தைச் சார்ந்தவர். இவரது மற்றொரு மனைவியான கங்கை என்பாரும் இக்கோவிலுக்கு விளக்கெரிக்க கொடையளித்துள்ள செய்தி இங்கு கண்டுபிடிக்கப்பட்ட மற்றொரு கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது. மணையில் என்ற ஊர் இன்றைய திருவள்ளூர் மாவட்டத்தில் அரக்கோணத்திற்கு அருகில் மணவூர் என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. இக்கல்வெட்டுக்களைத் தவிர மூன்றாம் கிருஷ்ணரின் மற்றொரு கல்வெட்டும் திருச்சுற்றுமாளிகைத் தூண் ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்டது.

இக்கல்வெட்டுக்களின் மூலம் பல்லவர் காலத்தில் இங்கு சுப்ரமணியர் எனப்படும் முருகனுக்கு மிகப்பெரிய கோவில் ஒன்று இருந்துள்ளது என்பதை அறிய முடிகிறது. பல்லவர் காலத்தில் இருந்த கற்றளி கோவில் கி.பி 13-14 ஆம் நூற்றாண்டு வரை இருந்துள்ளது. அதன்பிறகு கடற்சீற்றத்தால் இக்கோவில் முழுவதுமாக அழிக்கப்பட்டு மணல் மேடிட்டுள்ளது. இக்கோவில் கருவறை வடக்கு நோக்கி பிறகு கிழக்காக (வடகிழக்காக) பாறையை நடுவில் நிறுத்தி திருச்சுற்று மாளிகையுடன் விளங்கியது. வடக்கு நோக்கிய கருவறை இடைகழி, அர்த்த மண்டபம், முக

மண்டபம் மற்றும் பலிபீடப் பகுதி முருகனுக்குரிய வஜ்ஜிர அமைப்புடைய கற்றூண் போன்றவை காணப்படுகின்றன.

இக்கற்றளிக் கோவிலை மேலும் அகழாய்வு செய்ததில் இக்கற்றளிக்கு முன்பே இங்கு செங்கல்லில் ஆன திருச்சுற்று மாளிகையுடன் கூடிய செங்கல் தளி ஒன்று இருந்ததமையை அறிய முடிகிறது. பல்லவர் காலத்திற்கு முன்பே இங்கு சங்க இலக்கியங்களில் கூறப்படும் தமிழ் கடவுளான முருகனுக்கு கோவில் கட்டப்பட்டுள்ளது. இக்கோவில் கி.பி. 7-8 ஆம் நூற்றாண்டளவில் கடலால் அழிக்கப்பட்டு அதன்மீதே பல்லவர்கள் கற்றளியாக இக்கோவிலை விரிவுபடுத்தி உள்ளனர் என்பதை அறிய முடிகிறது. செங்கற் தளியின் செங்கற்கள் ஒவ்வொன்றும் காவேரிப்பூம்பட்டிணம், அரிக்கமேடு மற்றும் உறையூர் ஆகிய இடங்களில் கிடைத்த சங்க கால செங்கற்களின் அளவை பெரிதும் ஒத்துள்ளன. மேலும் இக்கோவிலின் வெளிச்சுவற்றை சுண்ணாம்பு சாந்து கொண்டு பூசி உள்ளனர். பல்லவர் காலத்திற்கு முற்பட்ட செங்கற் தளியின் தரைப்பகுதியும் சுண்ணாம்பு கொண்டு பூசியுள்ளனர். இக்கோவிலின் கருவறைப் பகுதியையும் இடைகழியையும் பல்லவர்கள் மாற்றியமைக்கும் பொழுது சிறிது விரிவுபடுத்தியுள்ளனர். கருவறைப் பகுதியை அகழ்ந்தபொழுது 29 வரிசையில் சதுர வடிவுடைய அறை ஒன்று ஆழமான தொட்டி போன்று அமைக்கப்பட்டுள்ளது. கருவறையின் கற்சிவ மாடம் போன்ற மேடைப்பகுதி செங்கற்கள் கொண்டு நேர்த்தியாக பாவப் பட்டுள்ளது. கோவிலின் பின்புற மேடைப்பகுதியுடன் வடக்கு நோக்கிய கருவறைப்பகுதி அதன் முன்னுள்ள இடைகழி, நீள்சதுர அர்த்தமண்டபம் ஆகியவற்றையும் இயற்கையாக அமைந்த பாறையையும் பயன்படுத்தி செங்கற் திருச்சுற்று மாளிகை அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்வகழாய்வில் சங்க காலத்தைச் சேர்ந்த கூரை ஓடுகளும் கிடைத்துள்ளன. சங்க காலத்தில் செங்கற்தளி மீது மூங்கிலை வேய்ந்து ஓட்டோடுகள் கொண்டு கூரை வேய்ந்துள்ளமை இதன் மூலம் அறிய முடிகிறது. மேலும் சுடுமண்ணால் ஆன கைகளைக் கோர்த்து நடனமாடும் மகளிர் பொம்மை ஒன்று இங்கு கிடைத்துள்ளது. இது முருகனுக்காக ஆடப்படும் ஆடலாக இருக்கலாம். சங்க காலத்தில் இப்பகுதியை தொண்டைமான் இளந்திரையன் என்பவர் ஆட்சிபுரிந்தார். இவர் ஆந்திரப் பகுதியுடன் நல்லுறவு வைத்திருந்ததாக சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. ஆந்திரப் பகுதிகளில் பல பௌத்த விகாரைகள் கிறித்துவ தொடக்க காலத்தில் செங்கற்களால் கட்டப்பட்டன. அத்தகைய தாக்கத்தாலும் தொடர்பாலும் தமிழகத்தின் மிகச் சிறந்த துறைமுக நகரமாக விளங்கிய மாமல்லைப் பகுதியில் தமிழ்க் கடவுள் முருகனுக்கு செங்கற் தளியை இம்மன்னனோ இம்மன்னனின் வழிவந்தோரோ கட்டியிருத்தல் வேண்டும் என்பது இவ்வகழாய்வின்மூலம் அறியமுடிகிறது. □

கட்டுரையாளர், சென்னை, இந்தியத் தொல்லியல் ஆய்வுத் துறையில் கல்வெட்டுப்பிரிவில் பணியாற்றுகிறார்.

பாடும் சிதார்

கௌரி ராம் நாராயணன்

தமிழில்: சாந்தி சாதனா



கலைந்த முடியுடனும் கசங்கிய உடையணிந்தவனுமாய் அந்த பதினொரு வயது பையன். கல்கத்தாவில் உள்ள அவனது வீட்டிலிருந்து பத்து நாட்களாக பல்வேறு ரயில்கள் அவனை புதுதில்லிக்கு விட்டுச் சென்றது. கையில் சிதாருடன் கிழிந்த ஆடையணிந்த அச்சிறுவன் வாயில் காப்போன் பதான் அறியாவண்ணம் ரகசியமாய் அகில இந்திய வானொலி நிலையத்துக்குள் நுழைந்தான். அங்குதான் நிகழ்ச்சி உதவியாளர் ஜூல்பிகர் ஹுசைன் அவனைக் கண்டார். களைப்பானது அப்பையனின் குரலில் தொனிக்கும் பெருமையை மறைக்கவில்லை. 'நான் விலாயத்கான் காலஞ்சென்ற இனாயத் கான் சாஹேபின் மகன்'.

"மகனே!" என்று ஹுசைன் ஆதுரத்துடன் அவனைக் கட்டி ஆரத் தழுவினார். "நீ உண்மையில் எனது குருவின் மகனா? எது உனை கொணர்ந்திங்கு சேர்த்தது? தனியாக? இந்நகரத்தில்?"

ஆனால் ஹுசைனாகட்டும், பிறகு அகில இந்திய வானொலி இயக்குனர் ஜெனரல் பொகாரியாகட்டும் பள்ளியை விட்டு வெளியேறிய அவனை எதற்கும் அனுமதிக்கத் தயாராயிருந்தனர். "நீங்கள் என்னைத் திரும்ப அனுப்ப முயற்சித்தீர்கள் என்றால் நான் திரும்பவும் ஓடிவிடுவேன்" என்றான் தேம்பல்களுக்கிடையே.

பொகாரி ஒன்றும் அத்தகைய சர்வாதிகாரி அல்ல. அவர் தந்தையற்ற அக்குழந்தையை ஆதரிக்கவும், அவனது சங்கீதத் திறமையை போற்றி வளர்க்கவும் முடிவு செய்தார். அதிலும் இட்டாவா கரானாவின் தகுதியும் பெருமையும் கொண்ட அக்பர் அவையின் தான்சேன் சந்ததி வழி வந்த இளந்தென்றலல்லவா விலாயத்கான்.

பொகாரி வாகன பழுதுபார்க்கும் இடத்தை பையன் தங்குமிடமாக ஒதுக்கித் தந்தது மட்டுமில்லாமல் அவனை அகில இந்திய வானொலி நிலையத்தின் கலைஞனாக்கி ரூ 10 மாத வருவாய் பெற ஏற்பாடும் செய்தார். கடுங்கண்ட கேள்விக்கு பதிலிறுத்த பின்னர் இது நிகழ்ந்தது.

"நீ ஏந்தியுள்ள சிதாரை உனக்கு வாசிக்கத் தெரியுமா?" என்றவுடன் உடனடியா பிரவாகமாய் பொங்கியது பைரவி. அதை ரசிக்க நிலையத்தார் ஒன்று கூடினர். ஜெய்ப்பூர் கரானாவின் மூத்த சிதார் இசைக் கலைஞரான முஷ்டாக் ஹுசைன்கான் அதிசயித்தார். 'ஆஹா! இனாயத்கான் இன்னும் உயிரோடிருக்கிறார்! இங்கே, இந்த பையனுள்ளே!'

மேலும் நிலைய இயக்குனர் விலாயத்தின் சிற்றப்பாவான வாஹித்கான் (ஹைதராபாத் - சிதார் இசைக்கலைஞர்) மற்றும் வாய்வழி பாட்டனாரான பந்தே ஹுசைன்கான் (வாய்ப்பாட்டுக்காரர் - [illegible]) ஆகியோருக்கு

மாதம் இரு வானொலி இசை நிகழ்ச்சிக்கு அனுமதி அளித்து டெல்லிக்கு வரவழைத்து அவர்களது தொடர் வருகையின் மூலம் பையனுக்கு பயிற்சியளிக்கச் செய்தார். இப்படியாக இளைஞன் காதற்ரசமிக்க 'கயால்' முறையில் பாடவும், பாரம்பரியமிக்க இசை வடிவமான 'த்ருபதங்'-ஐ சிதார் மற்றும் சுர்பஹாரில் வாசிக்கவும் ஒருங்கே பயிற்சி பெற்றான். அவனால் கயாலாக வாய்ப்பாட்டு மற்றும் சிதார் இசை நிகழ்ச்சி இரண்டிலும் சமபங்களிப்புடன் மகிழ்ச்சியாக பரிமளிக்க முடிந்தது.

"நீங்கள் பார்த்தீர்களானால் இயற்கையாகவே 'கயால்' என்னுள் நுழைந்து எனது சிதார் வாசிப்பையும் ஆக்ரமித்தது. மேலும் நான் பாரம்பரிய மெல்லிசை வடிவங்களான தும்ரி, தாப்பா, தாரானா, சைத்தி, பர்ஸாதி போன்றவற்றில் பூரணத்துவத்தோடு மகிழ்ச்சியாக பரிணமிக்க முடிந்தது." என்பார் அவர்.

தந்தை இனாயத்கான் உடன் விலாயத் (பிறப்பு 1928) இணைந்து மேடையில் இசைத்து இசை நுணுக்கங்களைக் கற்கும் முன்பாகவே இறந்து போனார். ஆனால் தந்தை விட்டுச் சென்ற இசைப் பொறியை கனன்ற வண்ணம் செய்தார் தாயார் பஷீர்செண்பேகம். அவர் சஹாரான்பூர் மற்றும் நஹானின் புகழ்பெற்ற வாய்ப்பாட்டுகாரரின் மகள்.

அப்போது அவருக்கு 68 வயது. விலாயத்கானின் வளர்ச்சிக்கு வித்திட்ட, ஆகர்ஷித்த, புதுமையை உருவாக்கின நிதர்சனமான அவரின் கடந்த கால நினைவுகளில் ஈடுபட மகிழ்ச்சியாக விழைந்தார்.

"அதீதமான பாரம்பரியம் எதையும் புதிதாக உருவாக்க இயலாதவர்களுக்காகத்தான். அத்தகைய வளர்ச்சியில் நான் எனது தனித்துவத்தை இழக்க விரும்பவில்லை" என்று சிரித்தவாறே, அவரது வாத்திய நரம்புகள் மனோடக்குரலின் அழுத்தமான அதிசயத்தக்க பல்வித பரிமாணத்துடனான தொடர்ச்சியைப் பிரதிபலிக்கும்படி கடந்து போன வருடங்களில் அவரது பாணி மற்றும் வாத்தியத்தில் செய்த மாற்றங்களைப் பற்றி விளக்குகிறார்.

அவர் தனது மூதாதையரின் வாத்திய இசை முறையில் (தந்த்ரகாரி/கட்காரி) திருப்தி அடையாததால் தான் வாத்திய இசைக்கான ஒரு புதிய பாதையை ஏற்படுத்தினாரா? 'இல்லை... இல்லை' என்று விரைவாக குறுக்கிடுகிறார் கான்சாஹேப். 'லயத்ரி (லயம்) மற்றும் சுரிலபன் (இனிமை) இல் என் தந்தைக்கு சமமானவர் அப்துல் கரீம்கான் மட்டும் தான்.

இன்றுவரை அவர் இசைத்தது போன்று முழுமையாக என்னால் வாசிக்க இயலவில்லை. ஆகையால் தான் எனக்கென தனி பாணியை உருவாக்கினேன்.

நண்பர்களும் உறவினர்களும் எள்ளி நகையாடியபோது, "எனக்கு நானே சபத மேற்றுக்கொண்டேன். என் தந்தைக்கு ஏற்ற மகன் என எனது திறமையை நிரூபிக்காமல் திரும்ப மாட்டேன்" என்று. தனது தந்தையின் மரணத்தால் விளைந்த வலியை நினைவு கூர்ந்தவாறே அவரது கரங்கள் கண்களைத் தழுவுகின்றன. அந்நிகழ்வு அவரை அவரது கடினமான பாதையில் தனியாக முன்னேற நிர்ப்பந்தித்தது. அத்துடன் ஒரு குளிர்கால மாலைப் பொழுதில் 'கப்பஹாரின்' (இன்னிசை மாலை) புல்வெளியில் டெஹ்ராடூனின் இல்லத்து விருந்தினராய் அவர். "மகனே! இதோ பார் உனது தேனீர் குளிர்ந்துவிட்டது." ஒரு பறவையின் அழைப்பு அவரது காதைக் கவர்ந்தது. "எவ்வளவு சிறிய பறவை, எவ்வளவு அற்புதமான குரல்" "நீ எங்கிருக்கிறாய்?" என்று அது வினவுகிறது. அவர் அதன் குரலை இசைக் குறிப்பாக காய்ந்த சருகுகளின் ஒலியினூடே பதிவு செய்தார். இந்தியா மற்றும் வெளிநாட்டு சுற்று பயணங்களுக்கு பிறகு வருடத்தில் நான்கு மாதங்கள் இந்த ரம்மியமான அமைதியை அனுபவிக்க அதிர்ஷ்டம் செய்தவன் நான். ஆனால் எவ்வளவு காலம் இப்படியே அழிக்கப்படாமல் இருக்கும்? ஏற்கனவே நாம், சுற்றுலா பயணிகள், லாரிகள் போன்றவற்றால் மிகுந்த சீர்கேடு அடைந்துள்ளோம். காடுகள் அழிந்துவிட்டன. 'கப்பஹாரில்' - ஜீவ களை ததும்பி நிறைந்துகொண்டிருக்கிறது. மாலைக்கப்பாலே அவரது இளைய மகன் ஹிதாயத், மகள்களான யாமன், ஷில்லா மற்றும் பேரன் டாட்லர் போன்றோர் ஓர் சமவெளியில் விடுமுறையைக் கொண்டாட வந்திருக்கிறார்கள். நாய்க்குட்டிகள், பூனைக் குட்டிகள், கோழிக்குஞ்சுகள், சின்னஞ் சிறு வாத்துகள் மற்றும் வேலையாட்கள் சிறுவர்கள் என உள்ளே வெளியே என்று நிறைந்த வண்ணமாய் இருக்க, அமைதியாக எல்லாம் அவரது இரண்டாம் மனைவியான சுபேதா பேகமால் பராமரிக்கப்படுகிறது. அப்பண்ணை வீடானது தானியம், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியுடன் பால் பண்ணை, கோழிப்பண்ணை, பழத்தோட்டம், காய்கறி மற்றும் ரோஜாத் தோட்டங்கள் நிறைந்தது.

விலாயத்கானின் முகத்தில் உள்ள அவரது சந்தோஷ சிரிப்பானது, திடீரென மாறும் சுபாவம், படைப்பாளியின் கர்வம், பிரவகிக்கும் படைப்புத்திறன், விரிப்புகள், போர்வைகள், முகலாய சிறு ஓவியங்கள் என அதிசயத்தக்க மற்றும் ஆச்சரியமான சேகரிப்பு ஆர்வங்களை தன்னகத்தே மறைத்துள்ளது. அவரது துப்பாக்கி சேகரிப்பு, சைனா, ஜப்பான், இங்கிலாந்திலிருந்து பைப்புகள், ஜார் மற்றும் கெய்சர் மேசையிலிருந்து சீனத் தட்டுக்கள், கிண்ணங்கள், பாத்திரங்கள், அருக்கி, பொஹிமியா மற்றும் வெனிஸின் பல வண்ணமயமான கண்ணாடி வில்லைகள், பல்வேறு கிளை விளக்குகள் கொண்ட தொங்கும் சரவிளக்கு போன்றவை மிகக் கவனமாக உன்னதத்தால் சேகரிக்கப்பட்டுள்ளதைக் காணும் பார்வையாளர்கள் ஸ்தம்பித்துப்



போவார்கள். அவரது இளம் பருவத்தில் பில்லியர்ட்ஸ், குதிரையேற்றம், நீச்சல் மற்றும் பால்ரூம் நடனம் போன்றவற்றில் எல்லாம் அசாத்திய திறமை உடையவராய் இருந்தார்.

விலாயத் ஒரு புதுமையான வடிவமுள்ள வாசனை திரவிய பாட்டிலை எடுத்து ஆழ்ந்து முகர்கிறார். கண்களைத் திறக்கிறார். கண்களில் கண்ணீர். "இது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த எகிப்து ராணிக்கு சொந்தமானது. இங்கே இதை முகருங்கள் நீங்கள் ஒரு வித்யாசமான உலகத்தில் இருக்கிறீர்கள் அல்லவா?"

கான்சாஹேபால் 1951ல் பிரிட்டன் இந்திய விழாவில் என்ன வாசித்தார் என்பதை நினைவு கூற இயலவில்லை. ஆயினும் அந்த பயணம் முடிந்து திரும்ப வரும்போது கொணர்ந்த ஜாகர் XK 150 I ஐ இன்னமும் வருத்தமுடன் நினைவு கூர்கிறார். அவருக்கென முன்னெப்போதும் சொந்தமாக கார் இல்லாததையும்கூட. "நான் இளமையாய் இருந்தபோது வேகமாக ஓட்டுவதில் வெறித்தனமாக இருந்தேன். மரணத்திற்கருகே சென்ற விபத்துக்களும் நிகழ்ந்திருக்கின்றன. நான் அதை இப்போது நினைத்துப் பார்க்க விரும்பவில்லை. பகட்டான உடைகள், ஆரவாரப் பேச்சு, புகழுக்கான ஆர்வமிகுதி, வேகமாக வாகனம் ஓட்டுதல் ஆகியவை ஒரு மோசமான விருப்பத்தின் ஆழமற்ற குறியீடுகள்.

இந்த சுய மதிப்பீடு அவரது இசை வளர்ச்சியின் ஒரு பகுதி. அவரது பழைய கருத்துக்கள் பகட்டான வாழ்க்கையை அனுபவித்த ஆர்வத்தை

வெளிப்படுத்துகின்றன. அவர் அதை உணர்ச்சி பூர்வமாய் உணர்கிறார் ஆனால் பகிரங்கமாக விவாதிக்கிறார்" என்று ஒருவர் கூறினார். ஆனால் அழகாக நவீன உடையணிபவரான அவர் வருந்துகிறார், "மோசமானவற்றை கடைப்பிடிக்கவே முயல்கிறேன். ஆழமாக, நல்லவனாக." அவர் குறிப்பிட்ட பன்முக விவரிக்க இயலாத மகிழ்ச்சியான அற்புத நிலையை அடைந்திருந்தார். அவர் தனக்கு எது தேவையென்று சரியாக வெளிப்படுத்தும் போதெல்லாம் எல்லையற்ற மகிழ்ச்சியோடு சுவர்க்கத்தை கண்டவர் போன்று இருப்பார்' என்று விமர்சகர் ஒருவர் பின்பு குறிப்பிட்டார். 'இதயத்திலிருந்து இசைக்கின்றார், சிதாரின் மூலமாக பாடுகின்றார்' என்று குறிப்பிட்டார்.

நண்பரும் 50 வருடங்களாக இவரைப் பின்பற்றுபவருமான சிதார் இசைக் கலைஞர் அர்விந்த் பரீக் விலாயத்கான் தனது சொந்த பாணியை உருவாக்க மேற்கொண்ட கஷ்டங்களையும் அவமானங்களையும் நினைவு கூர்கிறார். திரைப்படப் பிரிவின் குறும்படம் ஒன்று உறுதியற்ற அம்மைத் தழும்புகளால் உருவான பள்ளங்களுடனான முகம் கொண்ட இளைஞனைக் காண்பித்தது. ஆனால் அவரது இசையைப் பற்றி வெறுப்புடன் கூற ஒன்றும் இல்லை. அது மிகவும் முற்போக்கானது. அவரது இடது கையால் உண்டாக்கும் ஒலியானது வழக்கத்திற்கு மாறானது. மெல்லிசைக்கான கவனமான கண்டுபிடிப்பையும் அதீத மேதமைக்கான ஆர்வத்தையும் தவறாக புரிந்து கொண்ட மக்கள் அவரை ஒரு தும்ரி இசைக்கலைஞர் என மதிப்பிட்டனர். அவரை அவமானப்படுத்தியவர்களிடம் விலயாத்கான் ஆக்ரோஷத்தோடு நடந்து கொண்டார். ஒரு முறை இசை நிகழ்ச்சியின்போது அவர் விமர்சகர் ஒருவரை பெயரிட்டு அழைத்துக் கூறினார் "இப்பொழுது நாம் பார்ப்போம் எது மிகவும் வலிமையானது உமது பேனாவா அல்லது என்னுடைய வாத்திய நரம்புகளா" என்று.

அப்படிப்பட்ட தவறாக புரிந்து கொள்ளப்பட்ட கட்டுமானங்கள் தான் இந்திய பாரம்பரிய இசைக்கு விலாயத்கானின் தனிப்பெரும் பங்களிப்பின் ஆரம்பம். அந்த வகை சிதார் வாசிப்பு பாணியானது இன்று 'விலாயத்கானி பாஜ்' என்றழைக்கப்படுகிறது. இதுதான் 'காயகி அங்' (பாடகரின் பகுதி) அல்லது முழுவதும் வாய்ப்பாட்டைச் சார்ந்த பாணி. அவரால் உருவாக்கப்பட்டு, முழுமையாக்கப்பட்டு, மாணாக்க பரம்பரைக்கும் இட்டுச் செல்லப்பட்டது. அடிப்படை நாதம், கம்பிகளுக்கிடையேயான அமைப்பு முறை, அதன் இணைப்பு, சிதாரின் கம்பிகள் என இருக்கி அமைத்ததன் மூலம் இசையின் பன்முகத்தன்மை மற்றும் இசையாள் வரம்பின் தாக்கத்தில் அவர் முழுமையான மாற்றத்தைக் கொணர்ந்தார். அதனால் தான் வலது கைப்புற கம்பிகளின் வியத்தகு சக்தியை மற்றும் நீண்ட விஸ்தாரமாக முன்னும் பின்னும் வாசிப்புக்கேற்றவாறு கையாள முடிந்தது. பாட்டுக்

ப்ரவாகத்தன்மை தும்ரி மற்றும் க்யால்-இன் முர்கிகளுக்கு ஏற்ற வாறு சரியான குரல் அவற்றை உருவாக்கியது. மிகக் குறுகிய காலத்தில் ஹிந்துஸ்தானி இசைக்கு ஒரு புதிய பாதையை அளித்தார் அவர்.

கான்சாஹேப் பார்ப்பதற்கு மிகப்பெரும் மகிழ்ச்சிப் பெருக்கோடு உற்சாகமாய் இருந்தார். அவர் அதை எங்கனம் சாதித்தார் என்பதை சாதாரண வார்த்தைகளால் விவரிக்க இயலாது ஆனால் பொங்கும் மகிழ்ச்சியோடு பாடியவாறே (சந்தன் ஃபூல் பங்கே தருன் கர்வா ...") நம்மை அழைத்து 'கேளுங்கள்' (சுனோ) மற்றும் 'புரிந்ததா?' (சம்ஜே?) என்றார்.

தாத்தா பந்தே ஹூசைன் கானின் வார்த்தைகள் தெளிவாக கரையும் வகையில் மென்மையாக ஏற்ற இறக்கங்களோடு அமைந்திருக்கும். அவரது தானங்கள் (taans) மிகவும் அதீத வேகத்தோடு சிக்கலான அமைப்போடு ஒவ்வொரு சுரமும் சிறிய ஏற்ற இறக்கத்துடன் வார்த்தை இணைப்புடன் சேர்க்கப்பட்டிருக்கும். பழைய நுணுக்கங்கள் மூலம் வாய்ப்பாட்டில் உயர்ந்த மிகச்சரியான நிலையை அடைய இயலாது. அதனால்தான் விலாயத்கான் அதற்கான மாற்றை வடிவமைத்தார்.

அந்நிலையில் அவ்வகையில் இல்லாத பாரம்பரிய இசைக்கலைஞரான கான்சாஹேப் எல்லாவற்றையும் உணர்ந்து இசையின் தரத்தை இனிமையை மேம்படுத்தினார். முந்தைய நாள் அவர் பார்த்த ஹாலிவுட் படத்தின் (Bathing Beauty) சாக்ஸஃபோன் இசையின் ஒரு சிறிய பகுதியை தன்னுடைய பைரவியில் மலரச் செய்து காட்டினார். நாட்டுப்புறப் பாடல் முதல் பெங்காலின் மனதைக் கவரக் கூடிய 'பால் பாடல்கள்' (Baul Songs) என எதையும் எளிதாக கொணர்ந்து விடுகிறார்.

விலாயத்கான் மீண்டும் தனது பழைய நினைவுகளில் ஆழ்ந்து விடுகிறார். கல்கத்தாவில் உள்ள அவரது தந்தையாரின் கிராமத்திற்கு மாபெரும் இசைக் கலைஞர்கள் வந்திருந்தார்கள். பாட்டியாலாவிலிருந்து வந்த அப்துல் அஜிஸ்கான் வீணை வாசிக்க, அதையே மைசூரில் இருந்து வந்த வெங்கட்டகிரியப்பாவும் வாசித்தார். அல்லாதியாகான் மற்றும் ஃபையஸ்கான் இருவரும் பாட, ஷோம்பு மஹாராஜ் அபிநயம் பிடிக்க, தாயார் ஜெயம்மாளின் பாடலுக்கு பாலசரஸ்வதி நாட்டியமாடினார். "ஆஹா, அவர்களைப் பாருங்கள். எத்தகைய தெய்வீகமான காட்சி!" எல்லோரும் இசையை அனுபவித்தார்கள், உணவு உண்டார்கள். மற்றும் சிலர் 'பங்' என்ற பானம் அருந்தினர். எல்லோரும் ஆனந்த நிலையில் ஒன்றாக கூடி இருந்தனர். ஒருவரேனும் தங்களுடைய இசை மேதமையைப் பற்றி கர்வப்படவில்லை. மாறாக ஒவ்வொருவரும் மிகவும் பணிவுடன் காணப்பட்டார்கள். நான் அவர்களது இசையை காப்பியடிக்கும்போது எனது காதைப்

பிடித்து செல்லமாக திருகி என்னை ஆசிர்வதித்தார்கள் ..."

"இசையை பற்றிய அவரது முதல் ஞாபகம்?" நான் 1932-க்கு பின்னோக்கிச் செல்ல வேண்டும். கல்கத்தாவில் உள்ள ஆல்பர்ட் அரங்கம். எனது தந்தையார் நுழைகிறார், ஒவ்வொருவரும் எழுந்து கைகளை கொட்டி ஆராவரம் செய்கிறார்கள். மேதகு பிரிட்டிஷ் கவர்னர் மற்றும் அவரது பெருமைமிகு ஆலோசனை பிரபுக்கள், அவர்களது துணைவியர் என அனைவரும் அவருக்கு முன்பாக அங்கு பாடிய அப்துல் கரீம் கானின் இசையை ஈடுகட்ட வேண்டிய சவாலான சந்தர்ப்பம். ஆனால் எனது தந்தையார் புதியதொரு முறையில் வாசிக்க ஆரம்பித்தார். நான் நித்திரையில் ஆழ்ந்தேன். கண்களைத் திறந்தபோது எங்கும் மக்கள் திரள். 'முட்டாள் பையா! அது தான் பஸந்த் ராகத்தின் வண்ணம்' என்று அடுத்த நாள் காலையில் எனது தந்தையார் கூறினார்.

மூன்றாம் வகுப்பில் மூன்று முறை தோற்ற பின்னர் பள்ளிக்குச் செல்வதை நிறுத்திவிட்டு சிதார் வாசிக்க முடிவு செய்தான் சிறுவன் விலாயத். அவனது தந்தை சிவந்த விழிகளுடன் கர்ஜித்தார். "சிதார் ஒரு தேள் உனக்குத் தெரியுமா?" என்று.

ஆனால் பையனுக்கு அவனது பாதை கிடைத்துவிட்டது. இங்கே கான் சாஹப் மகிழ்ச்சியில் ஆங்கிலத்தில் கூறுகிறார். 'அதன் பின் நான் திட்டு என்பது வாங்கவே இல்லை. சிதாருக்காக எப்போதும் யாரும் என்னை பேசவில்லை!' அவரது இயல்பான திறமைகள் குடும்ப பாரம்பரிய மிக்கவர்களால் பட்டை தீட்டப்படும் பயிற்சி அளிக்கப்பட்டது.

இந்த மனநிலை மகிய உலகிற்கு பிறகு மாறியது. இசையின் தரத்தை குறைத்து சமாதானம் செய்து கொள்பவர்களுக்கு எதிராக காட்டமான நீண்ட விமர்சனத்தை முன் வைத்தார். பார்வையாளர்களை சோர்வுறச் செய்யும் நாடகத்தனமான செயல்களை அகற்றினார். இசை நிகழ்ச்சியின் நடுவே இந்திய ஜனாதிபதி உரை நிகழ்த்துவதை அனுமதிக்க மறுத்தார்.

"அவர் ஆரம்பத்தில் அல்லது முடிவில் நிகழ்த்தட்டும். இசை என்பது அவ்வளவு ஒன்றும் மலிவானதல்ல. எனது இசையை ஏற்க இயலாதவர்களுக்காக நான் வாசிக்கவில்லை. மின்னுகின்ற நிலவொளியில் நான் வாசிக்க விரும்பவில்லை. அல்லது நாம் அதை எதிர்கொள்ள வேண்டும்: சில திரைப்பட பாடல்கள்" என்று உஸ்தாத் அறிவார். இளம் இசைக் கலைஞர்களின் விருப்பம் அதன் தரத்தில் மிகவும் தாழ்ந்து விடுவதை. ஆனால் அரங்கத்தில் அங்ஙனம் வாசிப்பதை ஏற்றுக்கொள்ள இயலாது. "நாம் திரைப்பட இசைக்கு செல்வோம். கர்நாடக இசையைக் காட்டி

லும் அங்கே நிறைய பணம் சம்பாதிப்போம்'' என முணு முணுக்கின்றனர். (சத்யஜித் ரேயின் 'ஜல்சாகர்' மற்றும் மெர்ச்சன்ட் ஐவரியின் 'குரு' ஆகியவற்றிற்கான இவரது சொந்த இசைக் கோர்வை யானது கண்டிப்பான கர்நாடக இசை) பிறகு அவர் தன்னை பெருமையாக கூறிக் கொள்கிறார். 'இந்நாட்டின் உயர்ந்த மதிப்பிற்குரிய இசைக் கலைஞன் நான்' என்று. அவரது இந்த குழந்தைத்தனம் வளரும் காலங்களின் பயமாகவும் பாதுகாப்பற்ற தன்மையுமாகிறது.



அமெரிக்க கலப்பு இசை, இந்திய ஆர்கெஸ்ட்ராவுடன் ராக் இசை விழாக் களில் பங்கெடுத்தல் என நீ ஆர்வம்கொள்வாயின் உனது ஆன்மா உன்னைத் தூற்றும். புதிய ராகக் கண்டுபிடிப்பு என்பது மக்களை அறிவிலியாக்குதல் அல்லது இரண்டு வயலினை ஒரு வில்லைக் கொண்டு வாசிப்பது போன்றது என்கிறார். மகிழ்ச்சிக்காக செய்வது எனில் ஜுகல்பந்திகள் எல்லாம் ஸ்ரீ. ரவிசங்கர் மற்றும் அலி அக்பர் கானுடனான இவரது அனுபவம் கசப்பானது போட்டியுடன் பழிவாங்கும் தன்மையுடையது. ''நான் அவர்களை நினைக்கவே பயப்படுகிறேன்.''

அதே காரணத்திற்காக நிகழ்ச்சியின் புரம் இசையை குற்றஞ்சாட்டுகிறார். இவை எல்லாம் 'சவால்-ஜவாப் ரஸ்மதால்'' என்று ரவிசங்கரால் அறிமுகப் படுத்தப்பட்டது. (கேள்வியும் பதிலுமான இசையனுபவம்) இதில் சிதார் இசைக் கலைஞரும் வாசிக்கிறார். பார்வையாளர்களும் பங்கேற்கின்றனர். அல்லா ரக்காஜி மற்றும் ஜாகிர் ஹுசைன் என்னுடன் இவ்வாறு இசை நிகழ்ச்சி செய்ய தைரியமற்று இருந்தனர். யாராவது தந்திரமாக முயன்றால்

கலெனில் நான் அவர்களை பிழிந்தெடுத்துவிடுவேன். எனக்கு தபலா வாசிப்பதென்பது மரணத்தை போன்றது என்று ஒரு முறை ஹுமார் போஸ் கூறினார். நான் மூன்று தாளத்தில் வாசித்த ஒரு சாதாரண கட் (லூப்) பிரயோகத்திற்கு அவரால் சாதாரணமான தாளத்துடன் ஈடுகொடுக்க இயலவில்லை!

அடுத்து ரேடியோ மற்றும் தொலைக்காட்சிகள் குற்றஞ்சாட்டியது. 'அவர்கள் பாம்பாட்டிகள் மற்றும் கரடி வித்தை காட்டுபவர்களுடன் சேர்ந்து பொழுது போக்கட்டும். எதிர்காலத்தை கிரிக்கெட்டில் செலவழிக்கட்டும் இசைக்கலைஞர்களுக்கு பிச்சையிடுங்கள்'' என்று அகில இந்திய வானொலி நிலையத்தின் ஒலிபரப்பு கொள்கையை எதிர்த்து வெளிநடப்பு செய்தார். அவர் இந்திய அரசாங்கத்திடமிருந்து வந்த எந்த ஒரு விருதையும் ஏற்க மறுத்தார். திறமையைக் காட்டிலும், நியாயமாக தேர்ந்தெடுக்கப்படாமல் மற்றவர்களின் விருப்பங்களுக்கேற்ப சங்கீத நாடக அகாடமியின் தேர்வு இருந்ததால் தனது 37 ஆவது வயதில் கிடைத்த அதன் விருதையும் ஏற்க மறுத்தார்.

பட்டம் மற்றும் பட்டய இசை வகுப்பு பயிற்சிகள் என நிறுவனத்தின் மூலமாக இசை கற்பிப்பதற்கு எதிராக குரல் எழுப்புவது தான் சாஹேபின் இயற்கை. வேறு வார்த்தைகளில் குறிப்பிட்டோமானால் அது வேலைக்கான அடையாளம். அது கலையின் தரம் மற்றும் பார்வையாளனின் ரசனையை குறைத்துவிடுகிறது.

அப்படியானால் கற்பிப்பராக கான்சாஹேப்? சிரிக்கிறார். ''பாரீக். கிட்டத் மற்றும் முறையை எதிர்பார்க்காதீர்கள். நீங்கள் விழிப்புணர்வோடு இருப்பீர்களானால் அலாவுதீனின் பொக்கிஷத்தை திறக்க முடியும். நிறுத்திவிட்டு கூறினார். நீங்கள் 'ச' சுரத்தை அப்படியே நிறுத்த முடியாது 'ப' சுரத்திற்கு போக?

'நான் அதைப் போல் உணர்கிறேன் என்று சொல்லாதீர்கள்'' இசையில் எல்லாம் தவறாது காரணத்தோடு வெளிப்பட வேண்டும். அல்லது அவர் அறிவுறுத்தினார். சுர இணைப்பை உருவாக்க நடுவிரலை உபயோகியுங்கள் மால்கௌஸ்-க்காக 'ச' - விலிருந்து 'ம' - மவையும், பாகேஸ்வரிக்காக க' - விலிருந்தும் ...''

மேலும் சிதார் இசைக்கலைஞரான குழுத்தலைவர் கன்றியமான கோபத்துடன் பதிலளிக்கிறார். 16 முறை ஒரு வார்த்தையை வாசித்தீர்கள் ஒரு முறை தவறாகிவிடுகிறது. நீங்கள் விரலை விசிறியெறிந்து ஓடுங்கள். உங்கள் உள்ளங்கையின் குறுக்கே அடிப்பார். பலமுறை இவ்வாறு செய்திருக்கின்றார். அவரது கோபம் கட்டுப்படுத்த இயலாதது

இசைப் பயிற்சியுடனான ஈடுபாட்டை பற்றிய குடும்பக் கதைகளை அப்பா கூறுவார் - தனது மகள் இறந்த செய்தியை கேட்ட பிறகும் தாத்தா இம்தாத்கான் அவரது 'பல்தாஸ்' இசைப் பயிற்சியை முடிக்காமல் எழவில்லை. இத்தகைய கதைகள் மாணவர்களை ஆகர்ஷிப்பதற்கு பதிலாக பயத்தையே தோற்று வித்தது!

அவ்வாறு போராடி வென்ற மாணவர்கள் சகோதரர் இம்ராத்கான், மகன்களான சுஜாத் மற்றும் ஹிதாயத், சகோதரரின் மகன்களான நிஷாத், இர்ஷாத் மற்றும் ஷாஹித் பர்வேஷ் மேலும் வகுப்புகளுக்கு வந்த அர்விந்த் பரீக், பெஞ்சமின் கோமேஷ், கல்யாணி ராய், நிகில் பானர்ஜி மற்றும் ரைஸ் கான் ஆகியோருடன் பூர்வி முகர்ஜி மற்றும் சுப்ரா குஹா இருவரும் இவரது வாய்ப்பாட்டு இசையின் மாணாக்கர்கள்.

தாழ்ந்த மேகங்கள் தழுவிய வண்ணம் உடைய லிசாம் மரங்கள் சூழ்ந்தவாறு நாங்கள் வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருந்தோம். வேண்டுகோளுக்கிணங்க உஸ்தாத்திடமிருந்து கிளம்பியது ராகம் 'காபி' இசை உருகிய தங்கமென ப்ரவகித்தது. தொண்டையில் ஏற்படும் அதிசய உணர்ச்சியை கண்டு நீங்கள் அதிசயிக்கலாம். மிகவும் இயல்பாய் கைவரக்கூடிய அவருக்கு வாய்த்த பாடுதலை ஏன் அவர் எப்பொழுதோ விட்டுவிட்டார் என்று, அவர் இசை நிகழ்ச்சியில் ரசிகர்கள் பாடலை அதிக நேரம் சுவைக்க மாட்டார்களா, அப்படி சொல்ல இயலாதவாறு பாடல் முடிந்தவுடன் வாத்திய இசை ஆரம்பிக்கும்?

அவர் அதற்கு பதிலளிக்கும் போது நீண்ட நாளைய சோகத்துடன் குரல் நடுங்கிற்று. எனது சிதார் மூலமாய் செய்ய இயலாதது கூட எனது குரலின் மூலம் செய்ய இயலும். அதுதான் என் தாயார் என் மார்பில் குத்திவிட்டார். நான் வாய்ப்பாட்டு பாடுவதை விட வேண்டும் என்று அவர் கூறினார். நான் எதிர் கேள்வி எழுப்பாமல் கீழ்படிந்தேன். பல வருடங்கள் கழித்து அதன் ரகசியத்தை, காரணத்தை வெளிப்படுத்தினார். "நான் வாய்ப்பாட்டு காரர்களின் சந்ததி வழி வந்தவள். நீ ஒரு வேளை பாடகனானால் நான் மணம் செய்து கொண்ட வாத்திய இசைக் கருவி வாசிக்கும் குடும்பத்தினருக்கு நேர்மையற்றவளாய் தூற்றப்படுவேன். மேல் உலகத்தில் நான் எங்கனம் உனது அப்பா மற்றும் தாத்தாவின் முகத்தை எதிர் கொள்ள முடியும்? அதனால் நீ ...?

அதற்கு முன்னமே அவள் அவர்களுடைய குடும்ப பொக்கிஷமான 'சுர்பஹாரை' அவர் வாசிப்பதை தடை செய்திருந்தாள். அது அவரது இளைய மகன் இம்ராத்துக்காக ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது.



அவர் அச்சலுகையை தனது திறமை மிக்க மூத்த சகோதரனிடமிருந்து பெற வேண்டி இருந்தது.

கான் சாஹேப் பகற்கனவில் ஆழ்ந்தார், யார் அறிவார் அவரது மனதில் மேக மிட்டிருந்த எண்ணங்களை அவராலேயே அவரது சகோதரருக்கு பயிற்சியளிக்கப் பட்டு, பத்து வருடங்களாக சிதார் மற்றும் சுர்பஹாரில் அவர்களது இணைந்த வாசிப்பிற்கு பிறகு ஒரு இரும்பு சுவர் ஏற்பட்டு அவர்களிடையே எல்லா தொடர்பையும் அடைத்திருந்தது. தந்தையுடன் நல்ல நட்புறவைக்கொண்டிருந்த முற்போக்கு மகனான சுஜாத்கான் வருத்தத்துடன் அதைப்பற்றி வெளிப் படுத்துகிறார். அப்பா ஒரு மாபெரும் மேதை. சிங்கத்தின் கர்ஜனையும் கம்பீரமும் அவரிடம் இருக்கும். இது எனது சித்தப்பாவை கண்டிப்பாக புண்படுத்தியிருக்க வேண்டும். அது மட்டுமல்லாமல் அப்பா முழுமையான ஒப்படைப்பை வேண்டுவார். மகிழ்ச்சியாக கல்கத்தா பார்வையாளர்கள் முன் அப்பா, சித்தப்பா, நான் மற்றும் எனது சகோதரன் நிஷாத் என்று அனைவரும் ஒன்று சேர்ந்து வாசித்ததை அந்த நல்ல தருணத்தை நினைத்துப் பார்க்கிறேன். ஆனால் கடந்த பத்து வருடங்களில் சகோதரர்களுக்கிடையேயான நட்புறவு முற்றிலும் மாறிவிட்டது. கான்சாஹேப் குடும்பம் மற்றும் நண்பர்கள் அவருக்கு ஆதரவாக அவரின் கட்டுப்பாட்டில் ஒவ்வொருவரும் இயங்க வேண்டும் என்று விரும்புவார் என்கிறார் சுஜாத். அவர் எவ்வளவு அன்பும் பெருந்தன்மையும் கொண்டவரோ அந்த அளவிற்கு உரிமையையும் கொண்டாடுபவர். அதனால் தான் அவரது முதல் திருமணம் முறிந்து விட்டது. என்னுடைய தாயார் மோரிஸ் கல்லூரியில் படித்த ப்ராஹ்மணப் பெண். மிகவும் சுதந்திரமானவள். இம்மாமனிதருக்கு மிகவும் அடிபணிந்து இருந்தவள். உண்மையில் அவரது அழகான தோற்றம் மற்றும் நடன அரங்கில் கவரும் பாவனை போன்றவற்றால் அவரை நேசித்தவள். வருட கணக்கில் விவாதம் மற்றும் மூன்று குழந்தைகளுக்கு பிறகு அவரை விட்டுப் பிரிந்தாள்." நேர்மையான கருத்துக்களை பயமற்று புகுத்துவது என்பது விலாயத்கானுக்கு இயற்கையாக அமைந்தது. அவரது சமகாலத்திய போட்டியாளரான ரவி சங்கருக்கு ஏற்பட்ட புகழையும் ஒப்புக் கொண்டார்.

கரானா இசைக்கலைஞர்களுக்கே உரித்தான மேதைமை நுணுக்கங்கள் மற்றும் திகழ்ச்சிப் படைக்கும் திறன்கொண்ட. விலாயத்கான் இன்றைய வாழும் ஒவ்வொரு இசைக்கலைஞர்களுக்கும் மேலாக தான் சுயமாக நிலைப்பதில் விழிப்புணர்வோடு இருந்தார்.'' என்கிறார் ஃபரீக்.

எப்படி ரவிசங்கருக்கு கிடைத்த பெரிய தேசிய மற்றும் உலகளாவிய அங்கீகாரம் கிடைத்தது பற்றி வெறுப்படையாமல் இருக்க முடியும்? ஒருவரின் உயர்ந்த நிலை மற்றும் கசப்புணர்வு ஒருவருக்கொருவர் கொண்ட உண்மையான மரியாதையை கெடுத்துவிட்டது. சுறாக் ஒப்புக்கொள்கிறார். ஆனால் மற்ற காரணங்களைத் தருகிறார். 'அப்பா அதை அனுமதித்தார். ஆனால் ரவிசங்கருக்காக அவ் உயரிய நிலையை அடைய பயிற்சி அளிக்க கூடியவர்கள் அங்கே யார் இருக்கிறார்கள்? அவர்களது போட்டித்தன்மை நிறைந்த சுற்றுச்சாட்டுகள் அவரை ஊக்குவித்து உயரிய நிலையை அடைய வைத்தது.

வானத்தை மாலைநேர சாந்தமான மெல்லிய சூரிய கதிர்கள் வண்ணமடித்தது. பறவைகள் கோட்டத்தில் இசையமைக்கத் திரும்பின. அவரது நன்கு அலங்கரிக்கப்பட்ட வெள்ளி டப்பாவில் இருந்து ஒரு பிடியை பற்ற வைத்தார். மிகவும் புகழ்பெற்ற மனிதர் என்ற சுமை மற்றும் பாதுகாப்புத் திரையினின்று விடுபட்டு அந்த சிதார் பேரரசர் 'பஹாடிதுன்' (Pahadi dhun) என்ற பாடலை முணுமுணுக்கிறார். அப்பொழுது நீங்கள் அவரை, 'வீட்டில் உங்களது மகிழ்ச்சியான தருணங்கள் என்ன' என்று வினவினால் சிறுமையான பொருட்களை அகற்றுவதை பார்த்துக்கொண்டே அவர் கூறுகிறார். 'இரவில் தங்கும் வேலையாட்களின் விடுதிகளில் உள்ள இந்த காப்பாளி குழந்தைகள் எல்லாம் என்னுடைய அறைக்கு வருவார்கள். நாங்கள் ஒன்று சேர்ந்து பேசுவோம், சிரிப்போம், பாடுவோம். கரானாவின் இசைக்கலைஞர்களான நாங்கள் ஒரு ராகத்தை மற்றும் அதன் ரசத்தை உருவாக்க ஒரு மணிநேரம் எடுத்துக்கொள்கிறோம். ஆனால் குழந்தைகள் அதை நொடியில் சர்வ சாதாரணமாக செய்கிறார்கள். நான் மிகவும் பரவசமடைகிறேன். அப்புறம்.....

அதுதான் விலாயத்கான். ரசிக்க இயலாத கிடைசென்று மாறுதல்களை அடைபவர். வருத்தமோ. பச்சாதாபமோ அற்ற எளிமையான மகிழ்ச்சியுடையனான மேதமை, ஆக்ரோஷத்துடனான கருணை கொண்டவர், முழுவதும் போராடியவர். சகிக்க இயலாது வாழ்நாள் உயர்ந்த புதுமை படைப்பாளர். இசைக்கலைஞர்களின் கலைஞர். அவரது நாட்டின் வாழும் கலாச்சாரத்தில் சமாதானம் செய்து கொள்ள விரும்பாத மேதைமையை தேடியவராக, எதிர்காலம் இந்திய நாட்டின் மாபெரும் மகனாகவும் உதாரண புருஷராகவும் அவரை மதிப்பிடும். □

ஓர் உயர்ந்த பாரம்பர்யத்தில் இசைப்பரம்பரை

அக்பர் அவையின் மாபெரும் மேதையான மியான்தான்சேன், [illegible] சார்ந்த இட்டாவா கிரானாவின் சொத்து வாய்ப்பாட்டு காரர்களான சரோஜன் சிங் மற்றும் அவரது மகன் தூரப்சிங் ராஜபுத்திர [illegible] செய்திகள் கூறுகின்றன. பேரன் சாஹேப்தாத்கான் சிதாரைக் [illegible] நாதம் ஏற்படுத்தக்கூடிய பெரியதான கம்பி வாத்தியமான சுர்பஹாரை கண்டுபிடித்த பெருமைக்குரியவர். சிதார் மற்றும் சுர்பஹாரில் ஆழ்ந்த தெளிவான இசை மற்றும் த்வனியை மேம்படுத்த மனதை மயக்க கூடிய இசையை உருவாக்குமாறு ஒரு கம்பியை சேர்த்தார் சாரங்கி வாத்திய இசைக் கலைஞரான அவர் இரண்டுக் கும்டையே மாபெரும் இசைத் தொடர்பை இரண்டிலும் ஏற்படுத்த முடிந்தது. உஸ்தாத் இம்தாத்கான் (1848 1920) தந்தையான சாஹேப்தாத் கானின் அற்புதமான பாரம்பரிய இசைப் பயிற்சியை தொடர்ந்தார். அதன் முறையானது மனதை மயக்கக் கூடிய அந்த இசையின் விஸ்தாரம் மெதுவானதாக இல்லாமல் அதிசியத்தக்க வகையிலான தாழும் வேகமும் உடையதாய் இருந்தது. [illegible] மற்றும் எதானங்களுடன் அவர் "ஜலா" (jhala) என்ற அதிவேக முடிவு டைய இசையமைப்பை கண்டுபிடித்தார். சர்பஹாரில் "ஜோட்" ஐ ஏற்றுக் கொண்டார்.

மாமேதையான இனாயத்கான் (1894 1938) மேற்கு வங்காளத்தின் கௌரிபூரின் அரசவை இசைக் கலைஞராக இம்தாத்கானுக்கு அடுத்து வந்தவர். பிறகு அவர் கல்கத்தாவிற்கு குடிபெயர்ந்துவிட்டார். 1944 ஐந் சார்ந்த குறிப்பொன்று அவரை பலதலைமுறைகளின் மாபெரும் சிதார் இசைக் கலைஞர் என வர்ணிக்கிறது. எல்லா பள்ளிகளிலும் சிதார் இசைக்கலைஞர்களிடம் அவரது தாக்கமானது மிகப் பெருமளவில் ஏற்பட்ட தால் "உள்ளங் கவர் கள்வன்" எனப்பட்டார். அவரை நிந்தித்தவர்கள் கூட அவர் முறையை காப்பியடித்தால் ரசிகர்களை அவரைப் போல மயக்க வைக்க முடியும் என நம்பினார்கள்.

இணைப்புகளில் கம்பிகளின் அமைப்பை மாற்றுவது மட்டுமல்லாமல், புதிய போல்ட்களின் அமைப்புகள், என்று மாற்றங்களை விஸ்தரித்து இனாயத்கான் அதன் தரத்தை மேம்படுத்த முக்கியத்துவம் அளித்தார். கதக் நடனத்திலிருந்து சபாக், பேஷ்காரா மற்றும் திஹாய் பாஜ் போன்ற வற்றை அவரது இசையில் கொணர்ந்தார். இவரது இசை அமைப்பான "ஜலா" அதீத நிலையை மட்டுமல்லாமல் வாசிப்பவருக்கும், கேட்பவருக் கும் [illegible] ஏற்படுத்துவதானது.

இப்படியாக இனாயத்கான் சிதார் இசையின் புகழ் பரப்பினார். அவருக்கு மற்றும் அவரது முன்னோர்களுக்கும் சிதார் ஏறக்குறைய புதிய பாதையை ஏற்படுத்திக் கொடுத்தது.

[illegible] இம்ராத்கானால் வாசிக்கப்படுகிறது. □

'பூவுலகின் நண்பர்' நெடுஞ்செழியன்

அமரந்தா



ஒரு தனிநபர் தனது செயல்பாடுகளின் வாயிலாக எத்தனை பேருக்கு நண்பராக இருக்க இயலும் என்பதற்கு அரியதொரு சான்றாக நம்மிடையே இருந்து மறைந்தவர் நெடுஞ் செழியன். 'பூவுலகின் நண்பர்கள்' எனும் பெயரில் செயல்பட்ட குழுவினர் பல அரிய நூல்களைத் தமிழில் மொழியாக்கம் செய்துவெளியிட்டது பலருக்கும் நினைவிருக்கலாம். இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் பணிபுரிந்து வந்த சிலர் ஒரு குழுவாக இணைந்து சூழலியல் குறித்த நூல்களை மட்டுமின்றி, லத்தீன் அமெரிக்காவில் எண்பதுகளில் வெடித்தெழுந்த விடுதலைப் போராட்டங்களையும், அவற்றில் ஈடுபட்டோர் கூட்டங்கூட்டமாக கொன்றொழிக்கப்பட்ட வரலாற்றையும் தமிழுக்கு மொழிபெயர்ப்பின் மூலமாக வழங்கியவர்கள் பூவுலகின் நண்பர்கள். நெடுஞ்செழியன், ஆம்னஸ்டி இன்டர்நேஷனல் உள்ளிட்ட பல்வேறு மனித உரிமை அமைப்புகளின் செயல்பாட்டிற்கு பங்களிப்பு செய்துள்ளார்; அனைத்து தரப்புகளிலும் நண்பர்களைச் சம்பாதித்துள்ளார். அவரது இறப்பிற்கு இரங்கல் தெரிவிக்க அவரது அலுவலகத்தினர் மட்டுமின்றி, காங்கிரஸ் கட்சியின் இதயத்துல்லாஹ், தி.மு.க.வின் டி.கே.எஸ். இளங்கோவன், தமிழினத் தலைவர் பழ. நெடுமாறன், வழக்கறிஞர் மோகன், தலித் முரசு இதழாசிரியர் புனித பாண்டியன், பூவுலகின் நண்பர்கள் மொழிபெயர்த்த நூலை வெளியிட்ட சவுத் விஷன் பதிப்பாளர் பாலாஜி, தமிழ் மொழிபெயர்ப்பாளர் சங்கத்தின் செயலர் அமரந்தா ஆகியோர் அவரது பணி குறித்துப் பேசினார்கள். ஆம்னஸ்டி இன்டர்நேஷனல், தலித் பெண்கள் அமைப்பு, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஊழியர் சம்மேளனம் ஆகிய அமைப்புகளின் பிரதிநிதிகளும் பேசினார்கள்.

மனித குலத்தின் நல்வாழ்வின் மீது கொண்ட அக்கறையின் காரணமாக சூழலியல் மாசு குறித்த செய்திகளை உடனுக்குடன் தமிழில் மொழி பெயர்த்து வெளியிடுவதில் அவரது அர்ப்பணிப்புணர்வு, சுயநலமின்மை, பெருந்தன்மை, தலித்துகள் உள்ளிட்ட உழைக்கும் மக்கள், அரவாணிகள், பெண்கள், வன்கொடுமைகளுக்கு ஆட்படும் சிறைவாசிகள் என ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவர் சார்பாகவும் குரல் கொடுத்த அவரது நினைவைப் போற்றியவர்கள் ஏராளம்.

நெடுஞ்செழியனின் அந்தரங்க நண்பர்களான பாலாஜியும், புனித பாண்டிய னும் சாதி-வர்க்க அடையாளமின்றி அனைவரோடும் இயல்பாகப் பழகிய நெடுஞ்செழியன், குடும்பம் உட்பட தனது இயங்கு தளங்கள் அனைத்திலும் ஒரே மாதிரியான கொள்கையோடு திகழ்ந்ததைக் குறிப்பிட்டதோடு, செய்திப் பரவலுக்கு அவரைவிட அதிகமாக யாரும் எதுவும் செய்துவிட முடியாது என்றே வலியுறுத்திக் கூறினார்கள். நெடுஞ்செழியனின் நண்பர்கள் என்று கூறிக்கொள்ளும் நாம் - உயிரோடு இருக்க வேண்டும் - அடுத்து அவர் கூறியவற்றில் நாம் எவற்றைச் செய்துள்ளோம் எவற்றைச் செய்யப் போகிறோமென்று ஆண்டுக் கொருமுறை சந்தித்துப் பேசவேண்டும் என்றார் மனித உரிமை வழக்குகளை இலவசமாக நடத்த உதவும் வழக்கறிஞர் மோகன். 'பொதுமக்களைச் சென்ற டைய வேண்டிய முக்கியமான செய்தியொன்று உடனடியாக ஒரு துண்டறிக்கை யாக வெளியிடப்பட்டாலே ஒரு புத்தகம் வெளியிட்டதற்கு இணையாகும்'' என்று கூறி உடனுக்குடன் மொழிபெயர்த்து வெளியிட்டவர் நெடுஞ்செழியன் என்றார் சவுத்விஷன் பதிப்பாளர் பாலாஜி. நெடுஞ்செழியன் தீர்க்கதரிசி - உருகுவே சுற்றுப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்ற உடனேயே உலக வர்த்தக அமைப்பினால் ஏற்படக் கூடிய சீரழிவுகளை துல்லியமாக இனங்கண்டு எச்சரிக்கை விடுத்தவர் அவர். ஆனால் பொதுவாழ்வுக்கும் அகவாழ்வுக்கும் இடையே அவர் கனமான ஒரு திரையை ஏற்படுத்திவிட்டதால் தனிப்பட்ட வாழ்வைப் பற்றி, உடல் நலக் குறைவு பற்றி ஏதும் தெரியாமலே போய்விட்டது, அவரை நாம் இழந்து விட்டோம் என்று வருந்தினார்.

நூல்கள் வழி அறிமுகமான நெடுஞ்செழியனை நேரில் காணும் வாய்ப்பு கிடைத்தது 2004 ஆகஸ்ட் 15 அன்று சென்னையில் நாங்கள் ஏற்பாடு செய்த 'தமிழ் இலக்கியத்தில் மொழிபெயர்ப்பின் இடம்' என்னும் கருத்தரங்கில் நடை பெற்ற தமிழ்மொழிபெயர்ப்பாளர் சந்திப்பில்தான். பூவுலகின் நண்பர்கள் குழுவிலிருந்து நெடுஞ்செழியனும் செந்தில் குமாரும் கலந்துகொண்டார்கள். அதிகமான நூல்களை விரைவாக மொழிபெயர்த்து வெளியிட்டவர்கள் என்ற வகையில் பூவுலகின் நண்பர்கள் இந்த நிகழ்ச்சியில் கௌரவிக்கப்பட்டார்கள். கூட்டத்தினரின் ஒருமித்த கருத்துப்படி தமிழ் மொழிபெயர்ப்பாளர் சங்கம் என்ற பெயரில் மொழிபெயர்ப்பாளர்கள் அவ்வப்போது சந்தித்து ஆலோசித்துச் செயல்படும் வகையில் அமைப் பொன்று உருவாக்கப்பட்டது. மார்ச் 2005இல் உருவான இவ்வமைப்பில் முதுபெரும் மொழிபெயர்ப்பாளர் மாஜினி சிறப்புத் தலைவராகவும், பேராசிரியர் கோச்சடை தலைவராகவும், அமரந்தா செயலா ளராகவும், நெடுஞ்செழியன் பொருளாளராகவும் பொறுப்பேற்றனர்.

ஒரு சில மாதங்களிலேயே உடல் நலம் குன்றிய நிலையில் நெடுஞ்செழியன், பொருளாளர் பொறுப்பிலிருந்து விலகுவதாகத் தெரிவித்து சிகிச்சைக்காக மதுரை சென்றுவிட்டார். அதன் பிறகு ஆகஸ்ட் 14, 2005 அன்று சென்னையில் நடைபெற்ற தமிழ் மொழிபெயர்ப்பாளர் சங்கத்தின் சிறப்புப் பொதுக் கூட்டத் தில் வந்து கலந்துகொண்டு பேசினார். பின்பு மறுபடியும் அவரை சந்திக்க இயல வில்லை. இறப்பதற்கு முதல் நாள் காலையில் எதேச்சையாக செந்திலுடன் பேசியபோது, எந்த நிமிடமும் நெடுஞ்செழியன் மரணமடையலாம் என்ற அதிர்ச்சி யூட்டும் செய்தியைத் தெரிவித்தார். 2006 பிப்ரவரி 28 அன்று இரவு 48 வயதான நெடுஞ்செழியன் என்னும் இயக்கம் பாதியில் முடிந்து போனது. ❒

பலாபெண்

ரஞ்சித்



அடிப்படையில் நான் ஓவியன் என்பதாலோ என்னவோ ஒரு கல்லைக்கூட கல்லாகப் பார்க்கத் தவறிவிட்டேன். ஒரு சாதாரண மனிதனின் மனநிலையிலிருந்து விலகி நெடுதூரம் சென்றுவிட்டிருக்கிறேன். என்னைச் சுற்றிலும் இருக்கும் சூழலுக்கு எதிர்த்தவனாக எனக்கான சூழலை உண்டு பண்ணாதவனாய் எனக்கான மொழியில் எனக்கான வண்ணங்களில் புதைந்துகொண்டுள்ளேன். ஒரு குழந்தை சிரிப்பதைப் பார்த்தால்கூட சிரிப்பில் ஆழ்ந்து அதன் சிரிப்பதற்கான காரணங்களில் ஆழ்ந்து அதன் வண்ணங்களை மனதில் ஏற்றி காகிதத்தில் பதியும் வரை சிரிப்பு வெவ்வேறு வடிவங்களை அடைந்து முடிவில் எனக்கானதாய் முடிந்து இருக்கும். முடிவில் குழந்தையின் சிரிப்பு சில சமயம் வெற்றி அல்லது தோல்வியில் முடியும். இப்படித்தான் ஒரு சிரிப்பைக்கூட எனக்கானதாக மாற்றி அந்தக் குழந்தையின் சிரிப்பின் அழகியலை சாதாரண மனிதனின் மனநிலையிலிருந்து தொலைவில் சென்றுவிட்டேன். அந்தத் தொலைவுகூட என் தேடலில் கிடைத்ததுதான். என்னுடைய தேடல்கள், பிம்பங்கள், காட்சிகள் சாதாரண மனிதனின் மனநிலையிலிருந்து என்னை நான் தொலைத்துக்கொண்டிருக்கிறேன்.

மாலை நேரத்தில் இன்னும் பூர்த்தி செய்யப்படாத காகிதத்துடன் மனதுக்குள் இருக்கிற பிம்பத்தை, நினைத்துக்கொண்டிருக்கிற மாதிரியே பதிவு செய்வதற்கு ஏற்ற கோடுகளை வரைவதற்குக் காத்துக்கொண்டிருந்தேன். இப்படிப்பட்ட சூழ்நிலையில் நான் யாருடனும் பேசுவதில்லை. பொதுவாக தனிமையில் தவழ்ந்துகொண்டிருப்பேன். இப்படி ஒரு கருத்தைப் பற்றி நினைக்கும்போது இன்னொரு கருத்து இடையிடையே வந்து செல்வது வழக்கம். சில சமயம் இடையே வரும் கருத்தே முழுமையாக ஆக்கிரமித்துக்கொள்ளும். கையில் இருந்த பென்சிலோ என் நினைவின்றி ஏதேதோ காகிதத்தில் நிரப்பி வழிந்து கொண்டிருந்தது. வரைய நினைத்தது மறைந்து வேறொன்று வந்து நின்றது. முடிவில் அது காதலாகி போனது.

காதல். ஆம், காதல் இப்போது என் மனதில். அது என் மனதில் ஏற்படுத்தும் சித்திரம் அதற்கானது எந்தக் குறியீடு என்று தேடிக்கொண்டிருக்கிறது. நீண்ட நேரம் எனக்கான விவாதங்கள் காதலை எப்படி பதிவு செய்வது அவைகளைக் குறியீட்டில் குறிப்பது. பின்பு சில குறியீடுகளைக் குறித்து காதலுடன் பொருத்திப் பார்த்தால் ஒன்றும் பொருந்தாமல் வேறொரு பொருளைக் காட்டிச் சென்றது. இவ்வோவியம் குறித்த விவாதங்களை எனக்குள் என் கேள்வியெழுப்பும் [illegible] இடையே பேச்சு. காதல் ஏற்பட நினைக்கும் பொழுதும் எட்டாது விலகி சென்றுகொண்டிருக்கிறது.

அன்று அதிகாலையிருந்தும் எதற்காக எழுந்தேன் என்று தெரியவில்லை. இன்றைக்கு காதலைப் பதிவு செய்தே ஆக வேண்டும் என்று என்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டு [illegible] குறியீடுகளால் குறித்துப் பார்த்தேன். ஒரு காகிதத்தில் ஆண் பெண் இருவருக்கு மான வரைந்தேன் - காதல் பூர்த்தியாகவில்லை. ஆண்பெண் இருவருக்குமான இடை வெளியைக் குறைத்தேன் - காதல் பூர்த்தியாகவில்லை. ஆண்பெண் இருவரும் [illegible] கொண்டிருக்கும்படி வரைந்தேன் காதல் பூர்த்தியாகவில்லை. இப்பொழுது இருவரையும் நெருக்கமாக வரைந்து ஆண் அவளை முத்தமிடச் செய்வது போலவும் பெண் அதற்காக ஏங்குவது போல வரைந்து முடித்தேன். காதல் மௌனமாய் சிரித்துக் கொண்டிருந்தது. காகிதத்தில் காமத்தின் குறியீடுகள் காதலாய் நின்று போனது. தொடுதல், உணர்தல், பகிர்ந்துகொள்ளுதல்-காகிதத்தில் இம்மூன்றும் காதலை. காதலை காமம் இல்லாமல் குறிக்க முடியாதோ? பார்வையாளன் இப்படி வரைந்தால்தான் இருவரும் காதலர்கள் என்று ஒப்புக்கொள்வானோ? காமம் இல்லாது காதலைக் குறிக்க முடியாதோ? என்னால் முடியவில்லை, எனக்கு காதல் காமமாகத்தான் நின்றுவிட்டது. எந்த நிர்ப்பந்தமும் யாருடைய எதிர்பார்ப்பும் இல்லாதுதான் இவ்வோவியத்தை வரைந்து முடித்தேன். பகல் இரவாகிப்போனது, நான் தூங்கிப்போனேன்.

ஏதாவது வரைய வேண்டும் போலிருந்தது, வரைவதற்கு எந்த உந்துதலும் இல்லாது வரைவதற்கான சூழலுக்கு வெளியில் இருந்த என்னை, [illegible] சாலை வரைந்துச் செல்லும் வழியெல்லாம் [illegible] கொண்டிருந்தேன். எனக்கான சூழல் வெறிச்சோடிக் கிடந்தது. [illegible] பொருந்தவில்லை. மனதுக்கு மென்மை ஒன்றும் [illegible] என்று தேடிக்கொண்டிருந்தது. வெயில் என் மேல் படர்ந்து நானே வெப்பமாகிவிட்டேன். மர நிழலில் குளுமையைத் தொட்டுக்கொண்டிருந்த நேரம் எதிர் வீட்டின் *Don't park in Front of the Gate* என்ற தகவல் பலகை தாண்டி ஒரு மரத்தில் நின்றது என் பார்வை. பார்த்தவுடனே அது பலாப்பழ மரம் என்று தெரிந்துகொண்டது [illegible] குறிப்பிட்ட அடிக்குமேல் குடைபோல் தழைகள் விரித்து நின்றுகொண்டிருந்தது. தழைகளின் இடையில் [illegible] இடையில் குண்டு குண்டாக காட்சியளித்துக்கொண்டிருந்தது பலாப் பழங்கள். அதற்குமேல் என் பார்வை அங்கு நில்லாது சற்றே கீழிறங்கி ஒவ்வொரு ஒன்றுபிணைந்து கொண்டிருந்த பழங்களில் வந்து நின்றது. அது பார்க்க [illegible] இருதலைகள் பின்னித் தொங்கிக்கொண்டிருக்கும் அமைப்பினை உறுதிப்படுத்திவிட்டது. பின்பு அம்மரத்தை சுற்றிலே எனது எண்ணங்களும் எனது கோடுகளும் எனக்குள் புதுப்புது பிம்பங்களை ஏற்படுத்திக்கொண்டே போனது. அதன் உருவம் நான் எங்கோ பார்த்து இரசித்தவைகள் போல் இருந்தது. அதனுருவம் என் எல்லைகளை அதனுள் புகுத்தி

எனக்குள்ளலைகளாக மாற்றின. அம்மரம் உயர்ந்து, அதன் பருவம் அழகான பழங்கள் போன்றவை என்னுள்ளே பகிர்ந்துகொண்டது. அதனுடனே என் உலையாடல்களும் தொடர்ந்து நிகழ்ந்துகொண்டிருந்தது.

பலாமு அதன் பழங்களும் அதன் தோற்றமும் என்னை வரைவதற்கான சூழலுக்கு இட்டுச் சென்றது. தைல வண்ண முறையைத் தேர்ந்தெடுத்து வரைதலுக்கான உருவிகளை மேஜைமீது வைத்து வெள்ளி கித்தானுடன் வரைதலுக்கான ஆரம்பக் கோடுகளை சரி பார்த்தேன், கித்தானுக்கு ஜாடை காட்டி. சில நிமிடம் என்னுள்ளே இருக்கும் பிம்பங்களைக் கோர்த்து வண்ணங்களைத் தேர்ந்தெடுத்து வட்ட தூரிகையின் தேவையான கோடுகள் மூலம். எனக்கேயுள்ளான பாதிப்பில் எனக்குள்ளே பதிவான முறையில் வரைந்து முடித்தேன். அவ்வோவியம் ஓரளவுக்கு சரியாக பதிவாகிவிட்டது. வரைந்து முடிக்கும் போதே, இவ்வோவியம்தான் சமீபத்தில் வரைந்த ஓவியங்களைக் காட்டிலும் சிறப்பானதான மனது சொல்லிச் சென்றது. இதன் பாராட்டுகள், இதை விலை அதிகமாகத்தான் இருக்கும் என்ற கனவிலும் சென்றுவிட்டேன். இவ்வோவியம் வரைய முழுதாக ஒருநாள் அப்பாடிலே அடக்கமானது இந்த நாள். அவ்வோவியத்தின் பக்கம். இடையில், தூரம், கண்மூடி கண் திறந்து பார்த்தால் இப்படியாக அவ்வோவியத்தை ரசித்து சலிக்காதவனாய் பார்த்துக்கொண்டிருந்தேன். சில நிமிடங்கள் கண்மூடி இருட்டை சுவாசித்து இப்பொழுது கண் திறந்து பார்த்தேன். இப்பொழுது ஒரு பெண் போல காட்சியளித்தது. கண்களை இறுக்கி திரும்பவும் பார்த்தேன். இப்பொழுது ஓவியத்தில் நான் வரைந்த அந்த பலா மரமே நின்றுகொண்டிருந்தது. இந்நிகழ்வுபோல் எனக்கு அடிக்கடி ஏற்பட்டது உண்டு. முன்புகூட ஒரு பாம்பு தூரத்தில் தெரிந்தது. ஆனால் நன்றாக உற்றுப்பார்த்தவுடன்தான் அது கயிறு என்று உணர்ந்தேன். ஆனால் அக்கயிறைத் திரும்பவும் ஓர் பாம்புபோல காண நிறைய முயற்சித்தேன். ஆனாலும் அது கயிறாகவே நின்று போனது. இதுபோலதான் ஓவியமும் பெண் போல காட்சி அளித்திருக்க வேண்டும். சில மணி நேரம் சாதாரண மனிதனின் மனநிலையில் உலாவலாம் என்று காற்றைக்கிழித்துப் புறப்பட்டேன்.

நான் திரும்புவதற்கு இரவாகிவிட்டது. மின்சார தெரு விளக்குகள் என் தலையை நனைத்துக்கொண்டிருந்தது. எதிரே என் நண்பர் ஒருவர் என் நடையை நிறுத்தி, அவர் இப்பொழுதுதான் என்னைக் காண என் வீட்டிற்குச் சென்றதாகவும் நான் இல்லாததால் திரும்பி வந்துவிட்டார் எனவும், திரும்பும்முன் புதியதாய் வரைந்த ஓவியத்தைப் பார்த்தேன் என்றும் சொன்னார். நான் தாமதிக்காது எப்படி இருந்தது என் ஓவியம் என்றேன். அவரும் "அந்த பெண் ஓவியம் தானே" என்றார். இல்லை பலா மரம் வரைந்து வைத்திருந்தேன். அதைப் பார்த்தாயா என்றேன். அதற்கு அவன் வரவேற்பறையில் இருந்த ஓவியம்தானே, ஆமாம் என்றேன். அதுதான் நீ சொல்வதுபோல் ஒரு மரம்போல எனக்குக் காட்சித் தரவில்லை, ஒரு பெண்ணுக்குத் தேவையான அனைத்து அடையாளங்களும் அதனுள் பொதிந்து இருக்கிறது. அவளின் அழகு எந்த வாக்கியத்திலும் பூர்த்தி அடையாது என்று அவன் மேலும் பேச்சு அவ்வோவியத்தின் பெண் பற்றி நீண்டுகொண்டே போனது. இடையில் குறிக்கிட்டு அவ்வுரையாடலை முடித்து நான் வேகவேகமாக ஓவியம் மாட்டியிருக்கும் வரவேற்பு அறையினுள் நுழைந்தேன். மின்சார துண்டிப்பில் நானும் என்னோடு வீடும் இருளில் மூழ்கியது. வெளிச்சத்தோடு வந்த அம்மாவிடம் "என் பெயிண்டிங்கைப் பார்த்தாயா" என்று கேட்டேன். "ஆம் பார்த்தேன்,

பார்த்தேன்" என்று சலித்துக்கொண்டாள். "என்ன சலிப்பு" என்றேன். அதற்கு அம்மா "என்னடா உனக்கு அறிவு இல்ல. இப்பதான் வரையறதுக்கு ஒரு பொம்பளைய துணி கூட இல்லாம, இதுல வேற எதிர்லயே மாட்டிட்டு, பார்க்கறவங்க என்ன நினைப்பாங்க. அதனாலதான் உன் ரூம்ல எடுத்து வச்சிட்டேன்" என்றாள். எதிர்த்து எதுவும் சொல்லாது அம்மாவிடம் இருந்த வெளிச்சத்தைப் பிடுங்கி என் அறையில் வெளிச்சத்துடன் சென்றேன். ஓவியம் மூலையில் திருப்பி வைக்கப்பட்டு இருந்தது. இருட்டில் இருந்து வெளியே எடுத்து அதற்குப் பக்கத்தில் வெளிச்சத்தை வைத்து தூரமாய் நின்று அவ்வோவியத்தைப் பார்த்தேன். ஆம் ஒரு பெண், அதுவும் என் ஓவியத்தில் நான் வரைந்த ஓவியத்தில் என்னால் நம்ப முடியாமலே நான் பெருவியப்பாய் இருட்டிலிருந்து விழித்தேன். எப்படி இருக்க முடியும் என் ஓவியத்தில், நான் வரைந்த பல ஓவியத்தில் என்று நம்பவும் வெளிச்சத்தில் முன்னேறி அவ்வோவியத்தைப் பார்த்தேன். ஆம் ஒரு பெண்தான். ஆனால் இப்பெண் ஆம் நான் சமீபத்தில் இவளைப் பார்த்திருக்கிறேன். அவளின் நீளமான உடல். அவளின் கச்சையான மார்பகங்கள். அவளின் படர்ந்த தொடை போல் முடி, ஆம் இவளை பார்த்திருக்கிறேன். அவ்வோவியத்தைப் பார்க்கும் போதே அவளை ஞாபகப்படுத்தியது. ஆம் அவளை இவ்வோவியம் வரைவதற்கு முன்பு பார்த்துவிட்டேன். நான் பேருந்தில் பயணம் செய்துகொண்டிருந்த நேரம். சென்னை சென்ட்ரலிலிருந்து 17ஏ தடத்தில் நான் பயணித்துக்கொண்டிருந்தேன். வேலையின் அலைச்சல் காரணமாக கண் அயர்ந்து தூங்கிவிட்டேன். நடத்துநரின் அதிக தால் என் உறக்கத்தைக் கலைத்துப்போட்டது. தெளிவில்லாத கண்களுக்கு ஒரு தெளிந்த முகம். ஆம் அந்த நிமிடத்தில் நான் அவளை பார்த்தேன். பிரத்தியேக பெண்கள் இருசக்கர மோட்டார் சைக்கிளையே அவளும் பயன்படுத்தும். நான் பயணிக்கும் பேருந்து பக்கத்திலே பயணித்து வந்தாள். அவளின் பார்வை எதேச்சையாகவே என்னைப் பார்த்துவிட்டது போலவும், அவளைப் பார்ப்பதற்காகவே என்னை எழுப்பிவிட்டது போலவும் இருந்தது.

பேருந்தின் ஒவ்வொரு நிறுத்தத்திலும் அவளும் நின்று என்னுடனே பயணித்து வருவதுபோல்செய்துவிட்டாள். இதற்கு முன் இத்தனை அழகை ஆம் எனக்குப் பிடித்த சிகப்பு வண்ணத்தில்தான், அதனால் தான் நான் வரைந்த பல ஓவியத்தில் சிகப்பு நிறத்தைப் பதிவு செய்தேனோ? சிகப்பு நிறம் - அதன் வலிமை, அதன் ஸ்பரிசம் அதனுடனான எனது பதிவுகள், என்னுடைய ஓவியம் என்று சிகப்பு நிறம் கண்டாலே நண்பர்கள் சொல்லிவிடுவார்கள். அவ்வளவு ஆழ்ந்து இருக்கிறேன் அந்நிறத்தில். அவ்வளவு நிகழ்வும் இவளைக் கண்ட மாத்திரத்திலே உணர்ந்து கொண்டது. இவளை என் நண்பர்கள் பார்த்தால், ஒரு வேளை இவளும் எனக்கானவள் என்று சொல்லிவிடுவார்களோ. அவள் அழகாய் பறந்துகொண்டிருக்கிறாள். என்னைப் பார்க்க வண்ணம் இடைவிடாமலே என் எண்ணத்தில் என் காதலி வந்து உறுத்துவாள் - தவறு செய்கிறேன் என்று. அவளுக்கு அந்நினைவுக்கு எந்தப் பதிலும் சொல்லாதவனாய் எதிரில் இருப்பவளை கண் சிமிட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தேன். அவளின் பார்வை பாதையில் செல்வதை காட்டிலும் என்னிலே சென்று கொண்டிருந்தது. அவளின் அழகு முன்பும் பின்பும் இறுக்கமான இடுப்பும் உடம்போடு ஒட்டியிருந்த சிகப்பில் சொக்கவைத்தது. சில நிமிடங்களிலே என்னுடன் உரையாடி, உடலுறவில் களித்துத் திரும்பாமல் சென்றுகொண்டிருப்பதுபோல் பாவனை செய்து கொண்டிருந்தாள். என் மனக்கண்ணை அவளின் பின் பக்க இருக்கை கட்டித்துப் பார்த்துவிட்டேன். எங்கோ தூரமாய் சென்றுவிட்டாள். குருவிக்கு பொருந்தாத கனவு போல எனக்கும் கனமாகிவிட்டதோ

சென்றுவிட்டாள் சன்னல் ஓரத்திலே பயணித்துக்கொண்டே அவளுடன் சேர்ந்து கனவுலகத்தில் பயணித்துக்கொண்டிருந்தேன். திடீரென ஓர் அலறல் சப்தம் கேட்ட மாத்திரத்திலேயே பேருந்தும் அலறி நின்றது. காற்றில், விபத்து, இறந்துவிட்டாள், உயிருடன்தானா சக்கரத்தின் கீழ். பொறுக்கவே முடியாது என்று உதிரிய வார்த்தைகள். கண்காட்சிக்கு சூழ்ந்த மக்கள், அழுதும், இச் கொட்டியும், மயக்கமடைந்தும், தூரமாய் நின்றும், சிலர் பயந்த முகத்துடன் என்னைக் கடந்து சென்றார்கள். இதுபோன்ற சம்பவங்களைப் பார்க்க ஆக வேண்டும் என்பதற்காகவே காத்திருந்தவன்போல் சன்னலின் வழியே வெளியேறி ஒவ்வொருவராய் கடந்து விபத்து ஏற்படுத்திய பேருந்தைக் கடந்தேன். பேருந்து வலது பக்க சன்னலை இழந்துவிட்டிருந்தது. கண் இருந்த என் பார்வை மெல்ல கீழ் இறங்கி பேருந்தின் சக்கரத்தடியில் நின்றுபோனது. சக்கரத்தின் தீராபசி இன்று தீர்ந்துவிட்டதுபோல் காட்சி தந்துகொண்டிருந்தது. என்னை சடலத்தின் அருகே இட்டுச்சென்றது. நிச்சயம் சிகப்பு வண்ணமாகத்தான் இருக்கும். அச்சடலம் ஒரு பெண்ணைப்போல காட்சியளித்தது. அவள் பூட்டி இருந்த உடைகள் சில நிமிடங்கள் முன்பு என்னுடன் உறவாடியவளின் உடைபோல் இருந்தது. கண்களை இறுக்கமாக மூடிக்கொண்டேன். இறக்கும்போது அவளாக இருக்கக்கூடாது என்று எனக்குப் பிடித்தப் பெயரைச் சொல்லி வேண்டிக்கொண்டேன்.

கண் திறந்து பார்த்தேன். பக்கத்திலே அவள் ஓட்டி வந்த அந்த இருசக்கர வாகனம். ஆம், இது அவளேதான் என்று கூவி அழுதுவிட்டேன். யாரும் என்னைப் பார்க்காதது போலவே அவரவர் பார்த்துப் பரிதாபங்களைக் கொட்டிச் சென்றுகொண்டிருந்தனர். முன்பு என்னுடன் உறவில் கலந்த மாயை பெண் இறந்துவிட்டாள். அந்தப் பெண் உடல் எவ்வளவு தூரம் என்னுள் பயணித்துவிட்டாள். ஆனால் அந்த உடல் இங்கு, [illegible] அவள் உடல் என்று பார்த்தேன். அவளின் சிதைந்த காலுக்கு இடையில் ஏறி, அவள் குறி சிதைந்து, அவளின் மார்பகம் அறுபட்டு, பற்கள் சிதறி, கண்கள் வெளியே தொங்கிக்கொண்டிருந்தது. அத்தனை கொடிய விளைவுகளை ஏற்படுத்திய சக்கரம் வெறும் சிகப்பை அப்பிக்கொண்டிருந்தது. ஒருவிதமான போதைக்கு ஆட்பட்டு, ஏன் அப்படி? என்ற கேள்விகளுடனே என்னை ஒரு பெட்டகத்தில் அழுத்திக்கொள்ளாதவனாய் ஓவென்று அழுதுவிட்டேன். வீட்டிற்குச் செல்லும்வரையிலும் என் இப்பொழுதும் மலத்தோடு பிசைந்துபோன அந்த அழகின் நாற்றம் என்னைக் கட்டுப்படுத்தாத மனநிலைக்கு இட்டுச் செல்லும். என்னை அறியாமலே அந்த உடல் அவளின் [illegible], அவளின் உடல் மொழி எப்படி இங்கு ஒளியக்கூடும்? என்று கேள்விகள் என்னை [illegible] மனநிலைக்கு இட்டுச் செல்லாத வண்ணம் என்னைக் கட்டுப்படுத்தது. அவ்வறைக்குள்ளிலிருந்து வெளியேறி வரவேற்பறையில் உறங்கிவிட்டேன்.

கருமை என் கண்களில் அப்பியிருந்தது. இடையிடையே சிறுகோடுகள் எங்கிலும் வெளிச்சம் கொட்டிச் சென்றது. இடையில் எங்கிருந்து வந்தாளோ அதே இரு சக்கர வாகனத்தில் அந்த அழகி. ஆனால் இன்று மேகங்களின் நடுவே வந்தாள். எப்படி மேகங்களின் நடுவே? என்று கேட்டதற்கு இப்படி என்று இறக்கை முளைத்த வாகனத்தைக் காட்டினாள். மேலும் தான் பறக்கக் கற்றுக்கொண்டதாகவும் என்னையும் பறக்க வைப்பேன் என்று உறுதி சொன்னாள். என் சுட்டு விரல் பிடித்துப் பறக்க கற்றுக்கொடுத்தாள். எனக்கான ஒரு சிகப்பு குளத்தில் இருவரும் குளித்தோம்.

தொடர்ச்சி 176 ஆம பக்கத்தில்....

ஆல்ப்ரட் ஹிட்ச்சாக்



தமிழில் : அசதா

நேர்காணல்

ஒரு போதும் ரசிகர்களோடு சேர்ந்து உங்கள படங்களை நீங்கள பார்ப்பதில்லை. அவர்கள் சீகில் விரிடுவதைக் கேட்கும் வாய்ப்பை நீங்கள் இழந்துவிடுகிறீர்கள், இல்லையா?



இல்லை. படத்தை எடுக்கும்போதே அந்த விசிலை நான் கேட்கிறேன்.

அமெரிக்க சினிமா மிக முக்கியமான ஒன்றாக இருப்பதாக நீங்கள் நினைக்கிறீர்களா?

ஆமாம், உலகெங்கும் அமெரிக்காவுக்கென்று ஒரு படத்தை நாங்கள் எடுக்கும்போது அதன் போக்கில் அது உலகிலுள்ள அனைவருக்குமான படமாக ஆகிவிடுகிறது. காரணம் அமெரிக்கா பல வெளிநாட்டவர்களால் நிறைந்தது. அது பலவகையான குடியேறிகளால் நிறைந்தது. அது எங்களை வேறொரு புள்ளிக்கு/நிலைக்கு கொண்டு வருகிறது.

'ஹாலிவுட்' படங்கள் எனும்போது அவர்கள் எதைக் குறிப்பிடுகிறார்கள் என்று எனக்குத் தெரியாது. நான் கேட்கிறேன், "அப்படங்கள் எங்கே உருக்கொள்கின்றன?" இந்த அறையைப் பாருங்கள் - இதன் ஜன்னல்களைத் தாண்டி வெளியே நீங்கள் பார்க்க முடியாது. இது லண்டனில் இதே போன்றதொரு ஹோட்டல் அறையாகவும் இருக்கலாம், அல்லது நீங்கள் விரும்பும் உலகின் வேறெந்த நகரத்திலும். இங்குதான் அந்தப் படங்களை நாங்கள் காகிதத்தில் உருவாக்குகிறோம். எப்போது நாங்கள் வெளியே செல்கிறோம்? படமாக்கத் தோதான இடங்களைத் தேடி வேண்டுமானால் வெளியே போகிறோம்; பிறகு நாங்கள் எங்கள் வேலையைச் செய்வது எங்கே? அதன் பெரிய கதவுகள் அடைக்கப்பட்டிருக்க நாங்கள் ஒரு அரங்கினுள் இருக்கிறோம்; ஒரு நிலக்கரி சுரங்கத்தினுள் இருக்கிறோம். வெளியே என்ன சீதோஷ்ணம் நிலவுகிறது என்பதுகூட எங்களுக்குத் தெரிவதில்லை. எங்கள் படத்தினுள் நாங்கள் ஆழ்ந்துவிடுகிறோம். நாங்கள் உருவாக்கும் ஒரு விஷயத்துடன் ஒன்றிவிடுகிறோம். இதனால் தான் இங்கே 'இடம்' பற்றிப் பேசுவது அவ்வளவு முட்டாள்தனமான ஒரு விஷயமாகிவிடுகிறது. 'ஹாலிவுட்' இந்த வார்த்தையில் எந்த அர்த்தமும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. 'ஹாலிவுட்டில் பணிபுரிவதை ஏன் நீங்கள் விரும்புகிறீர்கள்?' எனக்கேட்டால் நான் சொல்வேன், இரவுச் சாப்பாட்டிற்கு ஆறு மணிக்கு என்னால் வீட்டுக்குச் சென்றுவிட முடிகிறது.



"தூய சினிமா" (Pure Cinema) என்பதை நீங்கள் எவ்வாறு வரையறுப்பீர்கள்?

தூய சினிமா என்பது ஒன்றையொன்று இட்டு நிரப்புவதான பல துண்டு சினிமாக்கள் ஒன்று சேர்ந்தது. பல இசைக் குறிப்புகள் சேர்ந்து ஒரு இனிய இசையைத் தருவது போல. வெட்டி ஒட்டும் உத்தியினால் விளையும் முக்கியப் பயன்கள் இரண்டு. ஒன்று கருத்தாக்கத்தை உருவாக்குவது. இரண்டாவது வன்முறை மற்றும் உணர்ச்சிகளைத் தூண்டுவது. உதாரணமாக Rear Window படத்தின் கடைசியில் ஜிம்மி ஸ்டுவர்ட் வெளியே தூக்கியெறியப்படும்போது அக்காட்சியை பாதங்கள், கால்கள், கைகள், தலைகள் என துண்டுத்

துண்டாகப் படம் பிடித்தேன். முழுக்க முழுக்க வெட்டி ஒட்டல். அதையே முழுமையும் தொலைவிலிருந்தும் படம் பிடித்தேன். இரண்டுக்குமிடையே எந்தத் தொடர்புமில்லை. எப்போதும் இல்லை. மதுவிடுதிச் சண்டைகள் அல்லது பேர்துப் பகுதிகளில் அவர்கள் செய்வது எதுவானாலும் பருமனான ஒருவனை அடித்து வீழ்த்தும்போது அல்லது மேசை உடைய எதிரே அமர்ந்திருப் பவனை தாக்கும்போது என (எப்போதும் அவர்கள் மதுவிடுதிகளில் மேசையை உடைப்பது வழக்கம்) எல்லாமே தொலைவிலிருந்தே படம் பிடிக்கப்படுகின்றன. ஆனால் வெட்டி ஒட்டும் உத்தியில் படமாக்கப்பட்டால் இக்காட்சிகள் பெரிதும் வலுவுடன் அமையும். காரணம் ரசிகர்களை அது காட்சியில் அதிகம் ஈடுபடுத்துகிறது. இதுதான் வெட்டி ஒட்டும் உத்தியின் ரகசியம். மற்றொன்று கற்பனைத் தோற்றத்தையும் தனிமனிதச் சிந்தனையோட்டத்தையும் அருகருகே வைப்பது. ஒரு மனிதன் எதையோ பார்ப்பதாகக் காட்டு கிறீர்கள். பிறகு அவன் எதைப் பார்க்கிறான் என்று காட்டுகிறீர்கள். திரும்பவும் அம்மனிதனைக் காட்டு கிறீர்கள். இப்போது அவனைப் பலவிதங்களில் எதிர்வினையாற்றச் செய்ய முடியும். அவனைக் குறிப்பிட்ட ஒரு பொருளைப் பார்க்கச் செய்யலாம், பிறகு பேசாமலே மற்றொன்றைப் பார்க்கச் செய்யலாம், அவன் சிந்தனை யோட்டத்தை நீங்கள் காட்டலாம். பொருட்களை ஒப்பிட்டுக் காட்டலாம். எந்த வழியில் சென்றாலும் உங்களுக்குப் பரிபூரண சுதந்திரம். நான் சொல்வேன், பிம்பங்களை வெட்டுவதற்கும் அவற்றை ஒருங்கிணைத்துக் காட்சியாக்குவதற்கும் எல்லையே இல்லை. The Birds-ல் வரும் அந்தப் பார்வையற்ற மனிதனைப் போல -கேமரா மிக நெருக்கத்தில் செல்கிறது. தொடர்பற்ற துண்டு துண்டான எதிரொலிகள் கிட்டத்தட்ட மூச்சையே நிறுத்திவிடுகின்றன இல்லையா? மூச்சு நின்று நின்று வருகிறது. ஆமாம், இளம் இயக்குநர்கள் எப்போதும் இது போன்ற எண்ணத்தோடே வருகிறார்கள். 'கேமரா ஒரு நபரைப் போல இயங்கட்டும், ஒரு அம்பைப் போல அது நகரட்டும், ஒரு மனிதனை நீங்கள் கண்ணாடியின் முன் நிறுத்து கிறீர்கள் பிறகு அவனைப் பார்க்கிறீர்கள்'. இது பெரும் தவறு. பாப் மான்ட்காமரி அதை Lady in the lake-ல் செய்தார். எனக்கு இதில் நம்பிக்கை இல்லை. உண்மையில் நீங்கள் செய்வதென்ன? அது யாரென்று ரசிகர்களுக்குக் காட்டாமல் மறைக்கிறீர்கள்? எதற்காக? நீங்கள் செய்வதெல்லாம் அதுதான். அது யாரென்று ஏன் காட்டக்கூடாது?

படப்பிடிப்பின் போது எப்படி வேலை செய்கிறீர்கள்?

ஒருபோதும் நான் கேமரா வழியாகப் பார்ப்பது கிடையாது. உங்களுக்குத் தெரியும். எனக்கு என்ன தேவை என்பதை அறியுமளவுக்கு கேமராமேன் என்னைப் புரிந்து வைத்திருக்கிறார். சந்தேகம் ஏற்படும்போது ஒரு செவ்வகம் வரைந்து அதற்குள் காட்சியை வரைந்து காட்டுவேன். அதில் முக்கிய விஷயம் என்னவென்றால் நாம் பணிபுரிவது இரு பரிமாண ஊடகத்தில் இதை மறக்க



கூடாது. ஒரு செவ்வகத்தை நீங்கள் நிரப்ப வேண்டும். அதை நிரப்புங்கள். அதை நிரப்புவதற்கான விஷயங் களை பொருத்தமுடன் ஒன்றமையுங்கள். இதற்கு கேமரார் வழியாக பார்க்க வேண்டிய

அவசியமில்லை. காட்சியை உருவாக்கும்போது உருவங்களைச் சுற்றிலும் அவற்றின் தலைகளுக்கு மேலும் இடம் [illegible] இருப்பது எனக்குப் பிடிக்காது என்பது கேமரா மேனுக்குத் தெரியும்.

அவை அங்கு தேவையில்லை என நான் நினைக்கிறேன். அது பத்திரிகையாளன் ஒருவன் புகைப்படமொன்றை எடுத்து அதன் முக்கிய அம்சம் மட்டும் தெரியும் வகையில் அதைவெட்டி ஒழுங்குப் படுத்துவது போன்றது. என்னுடைய மாறாத உத்தரவு அது என்பது அவர்களுக்குத் தெரியும். நான் சொன்னாலொழிய அவர்கள் உருவங் களைச் சுற்றி வெற்று வெளிகள் இருக்கும்படி அமைப்பதில்லை. வெற்றிடம் தேவைப்படுகிறதென்றால் வேண்டாம் என்பேன்.

இப்போது, நான் படப்பிடிப்புத் தளத்தில் இருக்கும் போது உண்மை யில் அங்கே இருப்பதில்லை. நடிப்பை கவனித்துக்கொண்டிருக்கும் போது, ஒரு காட்சி எப்படி நடிக்கப்படுகிறது எனப் பார்த்துக் கொண்டிருக்கும் போது, அல்லது அவர்களை வெறுமனே நான் பார்த்துக் கொண்டிருக்கும்போது நான் சினிமா திரையையே பார்க்கிறேன். படப்பிடிப்புத் தளமோ சூழக்கும் முழக்கும் நடக்கும் ஆட்களோ என் கவனத்தில் இருப்பதில்லை. வேறு வார்த்தைகளில் சொன்னால் நான் திரையின் புலியியலை கவனித்தபடியிருக்கிறேன். திரையைப்பற்றி மட்டுமே நான் சிந்திக்கிறேன். பெரும்பாலான இயக்குனர்கள் சொல்வது, "அவர் அந்தக் கதவு வழி உள்ளே வரவேண்டும். அதனால் அவர் அங்கிருந்து இங்கு நடந்து செல்ல வேண்டும்." அது மோசமானது, உப்புச்சப்பில்லாதது. அது மட்டு மில்லை. அது காட்சியை மிக வெறுமையானதாகவும், தளர்வானதா கவும் செய்துவிடுகிறது. நான் சொல்வேன், "அவர் ஒரு மனநிலை யில் இருந்தால் - எந்த மனநிலையானாலும் சரி - அவர் நடந்து செல்வதை நெருக்கத்தில் (Close-up) காட்டுங்கள். அதனால் அவரது மனநிலை திரையில் பதிந்திருக்க வேண்டும்." நான் அந்த் தொலைவு பற்றி ஆர்வமில்லை. எப்படி அவர் அறையைக் கடந்து சென்றார் என்பது பற்றி அக்கறையில்லை. அவரது மனநிலை என்ன? திரையைப் பற்றி மட்டுமே நீங்கள் சிந்திக்க வேண்டும். படப்பிடிப்புத்தளம் அல்லது ஸ்டுடியோ அல்லது அது மாதிரியான

எதைப் பற்றியும் நீங்கள் சிந்திக்கக்கூடாது.

நடிகர்களுடன் நீங்கள் வேலை செய்யும் முறை எப்படி?

அவர்களை நான் இயக்குவதில்லை. நான் அவர்களோடு பேசுகி றேன். காட்சி என்ன, காட்சியின் நோக்கம் என்ன, அவர்கள் ஏன் சில விஷயங்களைச் செய்கிறார்கள் காரணம் அவை கதையுடன்

தொடர்பு கொண்டுள்ளன, காட்சியுடன் அல்ல-என்பது பற்றியெல்லாம் விளக்குகிறேன். முழுக் காட்சியும் கதையுடன் தொடர்பு கொண்டது. ஆனால் அந்தச் சிறு பார்வை கதைக்கு எதோவொன்றைத் தருகிறது. அந்தப் பெண் கிம் நோவக்கிடம் நான் விளக்க முற்பட்டதுபோல, 'உன் முகத்தில் உணர்ச்சிகள் ஏராளம். அதில் எதுவும் எனக்குத் தேவையில்லை - பார்வையாளருக்கு நாங்கள் எதைச் சொல்ல விரும்புகிறோமோ, அதாவது நீ என்ன நினைக்கிறாயோ - அது மட்டும் முகத்தில் தெரிந்தால் போதும்." மேலும் நான் விளக்கினேன், "உன் முகத்தில் தேவையற்ற உணர்ச்சிகள் நிறைந்திருப்பது ஒரு காகிதத்தை எடுத்து இடைவெளியில்லாமல் அதில் கிறுக்குவதைப் போன்றது. யாராவது வாசிக்கும் பொருட்டு அதில் ஒரு வாக்கியத்தை எழுத விரும்புகிறாய். முழுக்கக் கிறுக்கல்கள் நிறைந்த தாளில் எழுதப்பட்ட அந்த வாக்கியத்தை யாராலும் வாசிக்க முடியாது. கிறுக்கல்கள் இல்லாத வெறும் காகிதத்தில் எழுதினால் அதை வாசிப்பது சுலபம். நாங்கள் விரும்பும் உணர்ச்சியைக் காட்ட வேண்டுமானால் உன் முகம் வெற்றுக் காகிதமாய் இருக்க வேண்டும்." Birds ஐ எடுத்துக்கொள்ளுங்கள். வெயிட்டரின் முகத்தில் தேவையற்ற உணர்ச்சிகள் எதுவுமிருக்காது. ஒவ்வொரு உணர்ச்சி வெளிப்பாடும் ஒரு விஷயத்தைச் சொல்கிறது. "உங்களுக்கு என்ன வேண்டும் சார்?" எனக் கேட்கும்போது அவரிடம் வெளிப்படும் அந்த நுட்பமான சிறுபுன்னகை கூட ஒரு விஷயத்தை உணர்த்தி விடுகிறது. அவரது ஒரு பார்வை "இவனிடம் கொஞ்சம் கலாட்டா செய்ய வேண்டும்" என்கிறது. இதுதான் அதிலுள்ள சிக்கனம்.



நீங்கள் படப்பிடிப்புத் தளத்தில் கால் வைக்கும் முன்பே அதாவது ஸ்கிரிப்ட் தயாரானதுமே உங்கள் படங்கள் முடிக்கப்பட்டுவிடுவதாகச் சொல்கிறீர்கள். திரைப்பட எழுத்தாளர்களுடன் நீங்கள் பணியாற்றும் விதம் எப்படி?

ஆரம்ப காலத்தில் அதாவது இங்கிலாந்தில் இருந்த காலத்தில கதைக் கருவை அல்லது கதையை உருவாக்குபவரோடு சேர்ந்து செம்மை செய்யும் பணியில் ஈடுபடுவது வழக்கம். வாரக் கணக்கில் இந்த வேலை நடக்கும். அது முழுக் கதையாக காட்சிப் பகுதிகள் கூட விவரிக்கப்பட்டு லாங் ஷாட் அல்லது க்ளோஸ்-அப் என இவற்றை மட்டும் முடிவு செய்ய மாட்டோம். அதில் எல்லாமும், எல்லா விவரங்களும் இருக்கும். பிறகு அதை பெரிய எழுத்தாளர் ஒருவரிடம் தந்து வசனம் எழுதச் சொல்வேன். வசனம் கிடைத்ததும் காட்சிகளைத் தொடராக அமைப்பேன். இப்படி படம் ஒரு கதையாக காகிதத்தில் உருவாகிறது. துவக்கம் முதல் முடிவு வரை ஒவ்வொரு காட்சியாக படம் அதில் விவரிக்கப்படுகிறது. சில நேரம் வரையப்பட்ட படங்களுடன் சில நேரம் படங்கள் இன்றி.

அமெரிக்காவுக்கு வந்தபின் இந்த முறையைக் கைவிட்டுவிட்டேன். அமெரிக்க திரைப்பட எழுத்தாளர்களுக்கு இந்த முறை ஒத்து வரவில்லை. அதை நான் இப்போது எழுத்தாளருடன் வாய் மொழியாகச் செய்கிறேன். திருத்தங்களையும் மாற்றங்களையும் பிற்பாடு செய்கிறேன். எழுத்தாளருடன் சேர்ந்து பல வாரங்களுக்கு நான் வேலை செய்கிறேன். அவர் குறிப்புகள் எடுத்துக் கொள்கிறார். தயாரிப்பு வடிவமைப்பாளர்களுக்கும் படத்தை விளக்குகிறேன்.

Marine படத்தின் வடிவமைப்பு முழுதும் முடிந்துவிட்டது. வசனம் மட்டும் இல்லை. வசனம் எழுதும் முன் மூன்றில் இரண்டு பங்கு வேலையைச் செய்கிறேன். வசனம் எழுதிய பின் மூன்றில் ஒரு பங்கு வேலை. அவர் எழுதும் வார்த்தை களைத் தவிர சொந்தமாக அவர் சேர்க்கும் விஷயம் எதையும் நான் படமாக்க மாட்டேன். நான் குறிப்பிடுவது ஒரு விஷயத்தை சினிமா முறையில் சொல்வதை. அது எப்படி அந்த எழுத்தாளருக்குத் தெரியும். On North by Northwest படத்தில் எர்னி லீமன் ஒரு வருடத்துக்கு அலுவலகத்தில் இருந்து என்னை வெளியே விடவில்லை. ஒவ்வொரு காட்சியிலும், ஒவ்வொரு காட்சிப்பகுதியிலும் அவரோடு நான் இருந்தேன். காரணம் அது அவருடைய சரக்கு அல்ல.



சிறுவயதில் உங்கள் தந்தை உங்களை சிறையில் அடைத்ததாக கேள்விப்படுகிறோம். உங்களுடைய வளர்ச்சியில் அதன் பாதிப்பு இருக்கிறது என்று நினைக்கிறீர்களா?

இருக்கலாம். ஒரு குறிப்பு எழுதிக் கொடுத்து என்னை போலீஸ் அதிகாரியிடம் அனுப்பி வைத்தார். அந்தக் குறிப்பைப் படித்த அதிகாரி ஒரு சிறை அறைக்குள் என்னை ஐந்து நிமிடம் பூட்டி வைத்தார். பிறகு "உன்னை மாதிரி அடங்காத பிள்ளைகளுக்கு இப்படித் தான் செய்வோம்" என்று சொல்லி விட்டுவிட்டார். இந்நிகழ்ச்சி அப்போது என்னில் என்ன பாதிப்பை ஏற்படுத்தியது என்று தெரியவில்லை. உளவியல்படி, சில விஷயங்களின் மூலத்தைக் கண்டுபிடிக்கும்போது அது நமக்குள் இருக்கும் பலவற்றையும் வெளியேற்றிவிடுகிறது. இயற்கையாக போலீஸிடம் இருக்கும் பயத்தை அது என்னிடமிருந்து அகற்றவில்லை என்றே நினைக்கிறேன்.



உங்களது படைப்புகளில் சேசு சபைப் பள்ளிகளில் நீங்கள் பயின்றது எந்த வகையிலேனும் பாதிப்பு ஏற்படுத்தியுள்ளதா?

ஒன்று சேர்த்தல், கட்டுப்படுத்துதல், ஒரு குறிப்பிட்ட அளவுக்கு ஆய்ந்து நோக்குதல் ஆகியவற்றை சேசு சபையினர் கற்பித்தனர். அவர்களது கல்விமுறை மிகவும் கறாரானது. ஒழுங்கு என்பதும் இதிலிருந்து வரும் ஒரு விஷயம் என்றே நான் நினைக்கிறேன்.

என்னுடைய ஒழுங்குத்தன்மை தொடர்ச்சியாக அமையாதது என்ற போதும், பதினெட்டு அல்லது பத்தொன்பது வயதில் ஒரு மின் பொறியியல் நிறுவனத்தில் மதிப்பீட்டாளராகப் பணிபுரிந்தேன். மதிப்பீடு செய்வதற்கான விண்ணப்பங்கள் நிறைய வந்தபடி இருக்கும். சோம்பேறித்தனத்தினால் அவற்றையெல்லாம் அப்படியே கோபுரம் போல அடுக்கி வைத்திருப்பேன். "இதையெல்லாம் உடனே பார்த்து முடிக்க வேண்டும்" என்று சொல்லிக் கொள்வேன். பிறகு அந்தப் பணிகளை குறையின்றி செய்தும் முடித்துவிடுவேன். ஒரே நாளில் இவ்வளவு அதிக வேலையை செய்து முடித்ததற்கு எனக்கு பாராட்டு வேறு கிடைக்கும். பதில்கள் கிடைப்பதில் தாமதம் ஏற்படுவதாக புகார்கள் வரத் தொடங்கும் வரை நான் இப்படித்தான் ஓட்டிக்கொண்டிருந்தேன். வேலையை இந்த முறையில் செய்வதையே நான் விரும்புகிறேன். சில எழுத்தாளர்கள் நாள் முழுக்க வேலை செய்வதை விரும்புகிறார்கள். அவர்கள் அதிக திறமைசாலிகள். நான் அப்படியில்லை. நான் சொல்வேன், 'சற்று நேரத்துக்கு வேலையை ஒதுக்கி வைப்போம், விளையாடுவோம்' பிறகு மறுபடியும் வேலைக்குள் இறங்குவோம். நிச்சயம் சேசு சபையினர் இதை சொல்லிக் கொடுக்கவில்லை. அப்போது மதம் என்மீது செலுத்திய பாதிப்பு என்னவென்றால் பயம்தான். ஆனால் இப்போது மதம் சார்ந்த பயத்திலிருந்து நான் வெளியே வந்துவிட்டேன். வெளியே வந்துவிட்டதாகத்தான் நினைக்கிறேன். அக்காலக் கட்டத்தில் ஒருவர் கடைபிடிக்க நேர்ந்த கறாரான ஒழுக்கத்தைக் கடைபிடிக்கும் படிக்கு சேசு சபைக் கல்வி என்னை பாதிக்கவில்லை என்றே நினைக்கிறேன்.



The Thirty-Nine Steps **உங்களுக்குப் பிடித்தமான படங்களில் ஒன்றா?**

ஆமாம் மிகவும் பிடித்தது The Thirty-Nine Steps ஐப் பொறுத்தவரை எனக்குப் பிடித்தது அந்த திடீர் திருப்பங்களும் ஒரு சூழ்நிலையில் இருந்து மற்றொன்றுக்கு மிக வேகமாகத் தாவுவதும்தான். கையில் பாதி விலங்குடன் போலீஸ் ஸ்டேஷனின் ஜன்னல் வழியே டோனட் குதிப்பதும் உடனே சால்வேஷன் ஆர்மி வாத்தியக் குழுவில் கலந்து விடுவதும் குறுக்குச் சந்து ஒன்றில் ஓடி ஒரு அறைக்குள் நுழைவதும். "நல்லவேளை நீங்கள் வந்தீர்கள் மிஸ்டர்..." என்று அவரை அவர்கள் மேடைமீது அமர வைக்கிறார்கள். இரண்டு நபர்களுடன் ஒரு பெண் வருகிறாள். ஒரு காரில் அவரை போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்கிறாள். ஆனால் உண்மையில் போலீஸ் ஸ்டேஷனுக்கு அல்ல. அவர்கள் இருவரும் உளவாளிகள். திருப்பங்கள் ஏற்படும் வேகம். அதுதான் அதில் முக்கியமானது. மீண்டும் நான்



The Thirty Nine Steps- ஐ எடுத்தால் பழையபடியே தான் எடுப்பேன். ஆனால் அது அதிகம் வேலை வாங்குவது; தொடர்ந்து ஒரு உத்தியை அடுத்து மற்றதை நீங்கள் கையாள வேண்டும், மிக வேகமாக.

Rope (1948)

தொழில் நுட்ப ரீதியாக நீங்கள் அதிக பரிசோதனைகள் செய்து பார்த்த படம் Rope என நினைக்கிறீர்களா?

மேடை நாடகத்தை நகரக்கூடிய ஒன்றாக மாற்ற வேண்டி தூய சினிமா என்கிற சித்தாந் தத்தைக் கைவிட்ட வகையில் [illegible] நீங்கள் சொல்வது சரி. தடையற்ற கேமரா ஓட்டத்து டன் நிஜமான கால அளவை யில் எவ்வித வெட்டுதலும் அற்ற தொடர்ச்சியான நடிப்பு அது. அதில் தடையில்லாத கேமரா கதையாளும் இருக்க வேண்டுமென நான் நினைத் தேன். தொழில் நுட்ப ரீதியில் அது தவறு. காரணம் அதற்காக தூய சினிமா கைவிடப் பட்டது. ஆனால் அறை ஒன்றுக்குள் மேடை நாடகமொன்றை எடுக்கும் போது அதை வெட்டுவது மிகவும் சிரமமே.



Psycho-வில் இருந்தது போன்ற உங்கள் வேடிக்கையான அணுகுதல் Rope-ல் இல்லை?

இல்லை. இங்கு குற்றத்தின் தன்மை மிகவும் பயங்கரமானது அவ்வகையில் நகைச்சுவைக்கு இங்கு இடமில்லை.

இந்தப் படம் வெற்றிபெறவில்லை. ஆனால் அனேகம் பிரெஞ்ச் விமரிச கர்கள் இதை உங்களது சிறந்த படங்களில் ஒன்றாகக் கருதுவது ஏன்?

மக்கள் எதை எதிர்பார்க்கிறார்கள் என்ற கோணத்தில் பார்க்காமல் படம் என்னவாக இருக்கிறது என்று மட்டுமே அவர்கள் பார்த்தார்கள். இது ஹிட்ச்காக்கின் வரலாற்று காலப்படம். படத்தின் இறுதிக்கு முன்புவரை ஒரு திகில் படம் என்ற கோணத்தில் எடுக்கப்படாத படம். ஒரு ஹாலிவுட் விமர்சகர் எழுதியது நினைவுக்கு வருகிறது, "படத்தின் முதல் திகிலைப் பார்க்க நாம் 105 நிமிடங்கள்

காத்திருக்க வேண்டியிருக்கிறது." அவர்கள் ஸ்காட்லாண்ட் யார்டுக்குச் செல்கிறார்கள். அது அவர்களுக்கு கிடைக்கவில்லை. அதனால் படத்தின் முக்கியமான குறைபாடு. நகைச் சுவை இல்லை. அது ஒரு வழக்கமான காதல் கதை. பெர்க்மேன் ஜோசப் காட்டனிடம் காதல் வயப்படுகிறார். ஜோசப் காட்டன் குற்றவாளியாக கப்பலில் ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பப்பட பெர்க்மேன் அவரை பின்தொடர்கிறார். காதலுக்காக காதலி தாழ்ந்து போகிறாள். அதனால் இங்கே பிரச்சனை. காட்டனின் தேர்வு சரியாக அமையவில்லை. நான் படம் எடுக்காமல் அப்படியிருக்கலாம். எந்த வேலையும் விரும்பவில்லை. அது சாதாரணமானது நகைச் சுவை, ஒருவேளை கவனக்குறைவாகவோ அல்லது நான் ஒப்பந்தத்தில் கிளைமாக்ஸ் இல்லாத கேமராவைப் பயன்படுத்தவில்லை. இந்த ஒரு சிறிய படம் இல்லை என்பதை அது உறுதிசெய்தது. கேமரா சலசலக்க நகர்ந்தது.



இந்தப் படத்தை நீங்கள் விரும்பாதது ஏன்?

பாத்திரங்களில் ஒன்று யதார்த்தமானதாக இல்லை. ஜேன் வைமேன் பாத்திரம் ஒன்றுமறியாத ஒரு பெண்ணாக இருந்திருக்க வேண்டும். அவர் அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. என்னால் அவரை மாற்றவும் முடியவில்லை. படத்தின் திகில் அப்படி வலுவானதாக இல்லை. இந்த திகில் மர்லின் டயட்ரிச் மற்றும் அவரது காதலனிடமிருந்து வந்தது. இருவரும் வில்லன்கள். அவர்களிடம் திகில் எதும் இருக்கவில்லை. காரணம் அவர்கள் பயந்து போயிருந்தார்கள். ஆக, படத்தில் என்னதான் இருந்தது? படத்தில் திகில் முழுவதுமாக மறைத்து வைக்கப்பட்டிருந்தது. மக்களிடம் பெரிய குழப்பமிருந்தது. ஆம்; ஃப்ளாஷ்பேக் காட்டி ஒரு பொய் என மக்கள் குறை சொன்னார்கள். ஏன் ஒரு மனிதன் பொய் சொல்லக் கூடாது? எனக்கு புரியவில்லை. ஆனால் மக்கள் சொன்னார்கள், "ஓ... அந்த ஃப்ளாஷ்பேக்கில் எங்களை ஏமாற்றிவிட்டீர்கள்." அதெப்படி பொய்யாக இருக்கக்கூடாது? மாயை உடைக்கும் ஒவ்வொரு முறையும் அது பிரச்சினையாகத்தான் ஆகிவிடுகிறது.



Dial.M for Murder (1954)

Dial. M for Murder படத்தை எடுக்க முக்கிய காரணம் என்ன?

நான் மறைவிடம் தேடி ஓடிக் கொண்டிருந்தேன். ஊக்கமும் க்ரியேட் சக்தியும் வறண்டு போன நிலையில் கொட்டித்து பணியாற்றுவதைத் தான் மறைவிடம் தேடி ஓடுவது என்பேன். என்னிடமிருந்து அதிக படைப்புத்திறனை வேண்டாத ஒரளவு வெற்றிகரமான நாடகத்தை

எடுத்துக்கொண்டு படமாக்குவது ஒப்பந்தப் பணி செய்வதைப் போலாகும். இந்தத் தொழிலின் நம்பிக்கையை வற்புறுத்தாத எதனையும் படைப்பாக மாற்றக்கூடாது. ஒரு படம் எடுக்க விரும்பினால் - அப்போது நான் பார்வையில் ஒப்பந்த அடிப்படையில் பணியில் இருந்தேன் - அகலக்கால் வைக்கக் கூடாது. ஒரு நாடகத்தைத் தேர்ந்தெடுத்து ஒரு சுமாரான படமாக எடுக்க வேண்டும் - மக்கள் பேசிக் கொண்டிருப்பதான காட்சிகளாக. இது சாதாரண தொழில் திறமை. ஆனால் திரைப்படமாக்கப்பட்ட நாடகத்தில் இன்னொரு சுவாரஸ்யமான விஷயம் உண்டு. சிலர் நாடகத்தை திரைக்கென விரித்துக்கொள்வதாக நான் நினைக்கிறேன். அது பெரும் தவறு. நாடகம் என்பது மேடையின் எல்லைகளுக்குள்ளாக தன்னை குறுக்கிக்கொள்வது. அதைப்போல தான் நாடகாசிரியர் நாடகத் தன்மையுடன் பயன்படுத்திக்கொள்கிறார். இப்போது நீங்கள் புதிதாகப் பின்னிய ஸ்வெட்டர் ஒன்றை பிரிக்கிறீர்கள். பிரித்த பின் அங்கே ஒன்றுமில்லை. Dial M-ல் என்னால் எவ்வளவுக் குறைவாக முடியுமோ அவ்வளவுதான்(நாடகத்துக்கு) வெளியே சென்றேன். உண்மையிலேயே ஊடுபாவிய ஒரு தரை, கதவுக்கடியில் விரிசல், பாதத்தின் நிழல் ஆகிய நாடகத்தின் பாகமாகிய அம்சங்கள் விட்டுப் போகாமல் பார்த்துக்கொண்டேன். மற்றபடி நீங்கள் (நாடகத்துக்கு) வெளியே சென்றால் உங்களுக்குக் கிடைப்பது என்ன? வெளியே ஒரு டாக்ஸி வருகிறது. கதவு திறக்கிறது. அவர்கள் இறங்கி உள்ளே செல்கிறார்கள்.



Vertigo(1958)

Vertigo மாயத்துக்கும் யதார்த்தத்துக்கும் இடையேயான போராட்டம் இல்லையா?

உண்மைதான். அதன் ஆதாரச் சூழல் எனக்கு ஆர்வ மூட்டியது. காரணம் அது பாலுறவுடனான ஒப்புமைகளை அதிகம் கொண்டிருந்தது. அந்தப் பெண்ணை ருசிப்படுத்த ஸ்டுவர்ட் மேற்கொள்ளும் முயற்சிகள், சினிமாப் பூர்வமாக, ஆடை அணிவிப்பதற்கு பதிலாக அவளது ஆடைகளை அவிழ்க்க முயற்சிப்பது போன்றதாக இருந்தது. அந்த மற்றொரு பெண்ணை தன் மனதிலிருந்து அவரால் வெளியேற்ற முடியவில்லை. புத்தகத்தில் அந்த இருவரும் ஒரே பெண் தான் எனக் கடைசியில் தான் தெரியவரும். இக்கதையில் பணியாற்றிய சாம் டெய்லரிடம் நான், "சாம், கருத்த கேசமுடைய அந்தப் பெண்ணிடம் ஸ்டுவர்ட் வரும்போது, அதுதான் சரியான நேரம், நாம் உண்மையைப் போட்டு உடைத்துவிடுவோம்." சாம் அதிர்ச்சியடைந்தவராய்.

"அய்யோ, ஏன்?" என்றார். நான் கேட்டேன். இப்போது அப்படிச் செய்யவில்லையென்றால் கடைசியில் உண்மை வெளியாவது வரை கதையை எப்படி நகர்த்துவது. ஒருவன் கருத்த கேசமுடைய பெண்ணைத் தேர்ந்தெடுக்கிறான். அவளில் மற்றொரு பெண்ணின் சாயலைக் காண்கிறான். இந்த இடத்தில் நம் ரசிகர்களின் மனநிலையில் நம்மை வைப்போம்: "ஆக நீங்கள் கருத்த கேசமுடைய பெண் ஒருத்தியை படத்தில் வைத்திருக்கிறீர்கள். அவளை மாற்றப் போகிறீர்கள்." நாம் சொல்லிக் கொண்டிருக்கும் கதை என்ன? ஒருவன் பெண் ஒருத்தியை மாற்ற விரும்புகிறான். கடைசியில் மாறிய பெண் அவளேதான் என அறிகிறான். அவன் அவளைக் கொல்கிறான் அல்லது வேறு ஏது வேண்டுமானாலும் செய்கிறான். நாம் மறுபடியும் பழைய இடத்துக்கே வருகிறோம். மர்மத்தை உடை அல்லது மறைத்துவை. மறுபடியும் நாம் வெடிகுண்டு என்ற உவமைக்கு வருகிறோம். நீங்களும் நானும் ஒரு அறையில் அமர்ந்து பேசிக்கொண்டிருக்கிறோம். அங்கே வெடிகுண்டு இருக்கிறது. எதைப் பற்றியுமில்லாத ஒரு சாதாரணமான உரையாடலை மேற்கொண்டுள் ளோம். சலிப்பூட்டுகிறது. அது எதையும் அர்த்தப்படுத்தவில்லை. திடீரென பெரும் சத்தம். குண்டு வெடிக்கிறது. பதினைந்து வினாடிகளுக்கு. அவர்கள் அதிர்ச்சியில் உறைந்திருக்கிறார்கள். இப்போது அதை நீங்கள் மாற்றுங்கள் அதே காட்சியை அமையுங்கள். வெடி குண்டைநடுவில் நுழையுங்கள். வெடிகுண்டு அங்கு இருப்பதைக் காட்டுங்கள். அது ஒரு மணிக்கு வெடிக்கப் போகிறதென்று உணரச் செய்யங்கள். இப்போது பன்னிரண்டே முக்கால். பன்னிரண்டு ஐம்பது. சுவரில் உள்ள ஒரு கடிகாரத்தைக் காட்டுங்கள். மறுபடியும் அதே காட்சிக்குத் திரும்புங்கள். இப்போது நமது உரையாடல் மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது அதிலுள்ள முட்டாள்தனத்தினால். "டேபிளுக்கு அடியில் பார் முட்டாளே." பதினைந்து வினாடிகளுக்கு அதிர்ச்சியூட்டுவதற்கு பதிலாக இப்போது அவர்கள் பதினைந்து நிமிடங்களுக்கு காட்சி அமைக்கிறார்கள். இப்போது நாம் Vertigo- வுக்குத் திரும்புவோம். அவர்களுக்கு உண்மை தெரியாத பட்சத்தில் பலவிதங்களிலும் கற்பனை செய்வார்கள். என்ன நடக்கிறதென்று சரியான வகையில் அவர்களுக்குப் புரியாது. "இப்போது" நான் சொன்னேன், "சாம் எல்லா மர்மங்களிலுள்ள அபாயகரமான விஷயம் என்னவென்றால் குழம்பிய மனநிலை தான்." மற்றபடி பார்வையாளர்கள் உணர்ச்சி மயமாவதில்லை. தெளிவுபடுத்து. தெளிவுபடுத்து. தெளிவுபடுத்து. "அது எந்தப் பெண்ணென்று தெரியவில்லை, அது யார்? என அவர்கள் கேட்கும்படி செய்யக்கூடாது. "எனவே" நான் சொன்னேன்.

"சிங்கத்தை அதன் குகையிலேயே சந்திக்கிறோம். எல்லாவற்றை யும் ஃப்ளாஷ் பேக்கில் வைத்துவிடுவோம். அங்கேயே அப்போதே அந்த இரண்டு பேரும் ஒரே பெண் எனக் காட்டிவிடுவோம். [illegible] ஸ்டீவர்ட் அவளைத் தேடி ஹோட்டலுக்கு வரும்போது [illegible] யாளர்கள் சொல்வார்கள், "அவளுக்கு சொந்த விஷயங்கள் [illegible] தெரியும்."

அடுத்து படத்தின் ஆரம்பப் பகுதியில் அந்தப் பெண் [illegible] எதிர்ப்புக்கு காரணம் இருப்பதில்லை. இப்போது உண்மையான காரணம் கிடைக்கிறது. அவள் தான் யாரென்று அறியப்பட [illegible] வில்லை. அதனால்தான் அவள் அந்த சாம்பல்நிற ஆடை [illegible]



வில்லை. தன்னுடையதை [illegible] [illegible] எனவும் விரும்பவில்லை. [illegible] அப்படி மாற்றிக் கொள்ள [illegible] நிமிடமே அவளுக்குப் [illegible] ஆரம்பித்துவிடும். இப்போது [illegible] பக்கம் அதிக மதிப்பிருக்கி [illegible] றன. ஒரு இறந்த பெண்ணை [illegible] [illegible] நாடகத்தை தொடர்ந்து [illegible] கிறோம். ஒரு பெண்ணை [illegible] தீவிரமாக மாற்றுகிறா [illegible] தீவிரமாக ஈடுபட்டிருக்கிறான். [illegible] அலங்காரக் கடையிலிருந்து [illegible] வரும்போதும் அவளது [illegible] கேசம் அப்படியே இருக்கிறது [illegible] சொல்கிறான். "உன் [illegible] வாரி முடிந்திருக்க [illegible] றாள். "வேண்டாம்." அவன் [illegible] கிறான், "தயவு செய்து" [illegible] அவளிடம் அவன் சொல்வது [illegible] "உன்னுடைய உள்ளாடைகளைத் தவிர அனைத்தையும் [illegible] [illegible] தயவுசெய்து அவற்றையும் [illegible] [illegible] சொல்கிறாள் "சரி." குளியலறைக்குள் செல்கிறாள். அவள் [illegible] மாக வெளியே வருவாள் அவனோடு படுக்கைக்குச் [illegible] என அவன் காத்திருக்கிறான். அதுதான் காட்சி. அவள் வெளியே வந்ததும் அவன் ஒரு ஆவியைப் பார்க்கிறான். அந்த [illegible]

பெண்ணைப் பார்க்கிறான். இதற்குத் தான் அந்தப் பெண்ணை பச்சைநிற ஒளியில் காட்டினேன். படத்தில் இதற்கு முன்பு ஸ்டீவர்ட்டின் மனதில் இடம்பெறுவதாகக் காட்டப்படும் காட்சிகளில் அப்பெண் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு போவதை அவர் கண்காணித்தபடி இருக்கிறார். அப்போது அவள் உண்மையிலேயே பொய்த் தோற்றத்தில் இருக்கிறாள். கடந்த காலத்தைச் சேர்ந்த பெண் போல நடந்துகொள்கிறாள். அது ஒளி நிறைந்து இருந்தபோதும் இக்காட்சிகளை பனிமூட்டத்திற்குப் பயன்படுத்தும் ஃபில்ட்டரைக் கொண்டு படம் பிடித்தேன். பிரகாசத்தின் மீது பனிமூட்டப் படிந்து பச்சைநிற ஒளி கிடைத்தது. அதனால் தான் குளியலறையிலிருந்து அவள் வெளியே வரும்போது பச்சைநிற ஒளியில் காட்டினேன். இதற்காக போஸ்ட் தெருவில் உள்ள எம்ப்பயர் ஹோட்டலை தேர்ந்தெடுத்ததற்கும் காரணம் இதுதான். அந்த ஹோட்டல் அறையில் ஜன்னலுக்கு வெளியே பச்சைநிற நியான் விளக்குகளாலான பெயர்ப்பலகை இருந்தது. எல்லா நேரத்திலும் பச்சை வெளிச்சம் பாய்ந்தபடி இருந்தது எனக் காட்ட விரும்பினேன். எனவே தேவைப்பட்டபோது எங்களுக்கு அது கிடைத்தது. காமிராவில் பனிமூட்ட லென்ஸைப் பொருத்தினேன். அப்பெண் முன்னே வந்தபோது, அவனுக்கு கடந்த காலத்தில் அவன் கண்ட உருவம் தெரிகிறது. அவள் முகம் அவனை நெருங்கி வந்த போது லென்ஸை நான் எடுத்துவிட்டேன், அவன் யதார்த்தத்துக்கு திரும்புகிறான். அவள் ஆவியாக வந்திருக்கிறாள் என நினைக்கிறான். அச்சம் கொள்கிறான். ஆனால் அவள் கழுத்திலிருக்கும் லாக்கட்டைப் பார்க்கிறான். தான் தந்திரமாக ஏமாற்றப்பட்டுவிட்டதை உணர்கிறான்.



Psycho (1960)

அடிப்படையில் சைக்கோ ஒரு நகைச்சுவைப் படம் எனக் கருதுகிறீர்களா?

நகைச்சுவை என நான் குறிப்பிடுவது என்னுடைய நகைச்சுவை உணர்வைத்தான். இந்த நகைச்சுவையுணர்வு படத்தின் சிறப்பிதுந்த தன்மையைத் திறம்படக் கையாள எனக்கு உதவியது. இதே கதையை நான் நகைச்சுவையற்று தீவிரமானதொரு வகையில் சொல்லி இருந்தால் ஒரு தனி நபர் வரலாறாக இன்றி மர்மம் த்ரில் போன்ற விஷயங்கள்கொண்ட ஒன்றாக செய்திருக்க முடியாது. கடைசியில் அந்த மனநல மருத்துவர் சொல்வதுபோல இருந்திருக்கும்.



Psycho வில நடிகர்களை விடவும் பார்வையாளர்களை அதிகம் இயக்கியிருக்கிறீர்கள் இல்லையா?

ஆமாம். தூய சினிமா மூலம் பார்வையாளர்களது உணர்ச்சிகளைத் தூண்டுவது. இயன்ற எல்லா வழிகளிலும் அமைக்கப்பட்ட காட்சிகளைக் கொண்டு இது சாத்தியமாக்கப்படுகிறது. குளியலறையில் நடக்கும் கொலை மிகவும் கொடூரமாக இருக்கிறது. காரணம் அதன்பிறகு படத்தில் கொடூரம் குறைவு. அந்தக் காட்சி பார்வையாளரின் மனதில் ஆழமாக நின்றுவிடுகிறது.

எனவே அதைக் காட்டிலும் கடுந்தவாக எதையும் செய்யத் தேவையில்லை. Psycho -வில் பார்வையாளர்கள் தம்மைப் படத்தின் கதாபாத்திரங்களாக உணர்வதில்லை என நினைக்கிறேன். பாத்திரங்களை அப்படி உருவாக்க நேரம் இல்லை. அதற்கான அவசியம் இல்லை. படத்தின் திரை உணர்ச்சிப் பெருக்குகளை வேரா மைல்ஸ் அல்லது ஜான் கைவின் பற்றிய உணர்வு இன்றியே பார்வையாளர்கள் அனுபவிக்கிறார்கள். அவர்கள் பார்வையாளர்களை படத்தின் முடிவுக்கு அழைத்துச் செல்லும் கதாபாத்திரங்கள் அல்லவே. எனக்கு அவர்களில் எந்த ஈடுபாடும் இல்லை. உங்களுக்குத் தெரியும் படத்தில் அவர்கள் இருந்ததாக யாருமே சொல்வது இல்லை. அவர்களைப் பொருத்தமட்டில் இது வருந்தத்தக்கது. தயாரிப்பாளர் அலுவலகத்தில் இருப்பவர்கள் படத்தை எப்படி விளக்கியிருப்பார்கள் என கற்பனை செய்யலாம். அவர்கள் சொல்வார்கள், "அந்தப் பெண் முதல் ரீலிலேயே இறந்து போகிறாள். யாரையாவது அந்த இடத்தில் போடுவோம். காதல் ஈடுபாடுடைய இரண்டாம் பாகத்தை ஜேனட் லீக்குத் தருவோம்." அது முட்டாள் தனமான யோசனை. நட்சத்திரத்தை கொன்று அப்புறப்படுத்துவது தான் இங்கு முக்கியம். அதனால் தான் இது எதிர்பாராத ஒன்றாக அமைகிறது. பார்வையாளர்கள் ஆரம்பத்திலிருந்தே இதை உணரச் செய்வதற்கான அடிப்படைக் காரணம் இதுதான். பாதி படத்தில் வந்திருந்தால் அவர்கள் கேட்பார்கள், "ஜேனட் லீ எப்போது திரையில் வருவார்." சஸ்பென்ஸ் பற்றி குழப்பமான சிந்தனைக்கு இடமில்லை



Psycho-வில் நீங்கள் தொலைக்காட்சி தொழில்நுட்பங்களை பரீட்சார்த்தமாய செய்து பார்த்திருக்கிறீர்கள்?

அப்படம் ஒரு தொலைக்காட்சிக் குழுவால் எடுக்கப்பட்டது. அது சிக்கனம் சம்பந்தப்பட்ட விஷயம். செட்களை குறைத்து வேகமாகவும் சிக்கனமாகவும் படப்பிடிப்பை நடத்தியது உண்மையிலேயே சினிமாத்தனமான விஷயங்களில் நாங்கள் சற்று பொறுமையாகச் செய்தோம். குளியலறைக் காட்சிக்கு ஏழு நாட்கள் ஆனது. படத்தின் கடைசியில் இடம் பெறும் மனநல மருத்துவர் தொடர்பான காட்சிகளோ ஒரே நாளில் எடுக்கப்பட்டன.



படத்துக்கு சால் பாஸின் பங்களிப்பு என்ன?

முக்கிய டைட்டில் மற்றும் கிரெடிட்டுகள் மட்டும். Psycho-வில் நானொரு காட்சியை எடுக்கட்டுமா என்றார். நான் சரி என்றேன். கொல்லப்படுவதற்கு முன் அந்தத் துப்பறியும் நிபுணன் படிகளில் ஏறிச் செல்லும் காட்சி. காகிதத்தில் படங்களாக வரைந்திருந்தார். ஒரு நாள் எனக்கு உடம்புசரியில்லை. என் உதவியாளர்களை அழைத்து பாஸ் அமைத்திருந்த காட்சிகளை படமாக்கச் சொன்னேன். இருபது டேக்குகள் அமைத்திருந்தார்.

அதைப் பார்த்ததும், "இதில் ஒன்றையும் பயன்படுத்த வேண்டாம்" என்று சொல்லிவிட்டேன். அவர் காட்சி அமைத்திருந்த விதம் அந்தக் துப்பறியும் நிபுணன் தீங்கை ஏற்படுத்தக்கூடியவனாக எனக் காட்டியது. உண்மையில் அவன் ஒன்றுமறியாதவன். அதனால் அந்தக் காட்சியும் வெகுளித்தனமாக இருக்க வேண்டும். பார்வையாளர்களைத் தூண்டக் கூடாது. ஏற்கனவே நாம் இதைச் செய்தாயிற்று. அந்தத் துப்பறியும் நிபுணன் படியில் ஏறும் காட்சியே போதுமானது. அது எளிமையாக இருக்கட்டும். சிக்கல்கள் எதுவும் வேண்டாம். ஒரே ஷாட்.



படத்தில் ஒழுக்க நெறிகள் எதையேனும் வலியுறுத்தியுள்ளீர்களா?



ஒழுக்க நெறி சார்ந்த நிலைப்பாடுகள் எதுவும் இப்படத்தில் இருக்க முடியாது. காரணம் இப்படம் மனநிலை பிறழ்ந்தவர்களைப் பற்றியது. மனநிலை சரியில்லாதவர்களிடம் ஒழுக்க நெறிகளைப் பொருத்திப் பார்க்க இயலாது.

The Birds (1963)

The Birds -ல் உங்களது அனேகம் படங்களில் போல் நீங்கள் சாதாரண, அடிப்படையில் சராசரியான மக்களை எடுத்துக்கொண்டு அவர்களை அசாதாரணமான சூழல்களில பொருத்துகிறீர்கள்.

இது பார்வையாளர்கள் தம்மை கதாபாத்திரங்களாக உணர்வதற்காக. The Birds -ல் மிகச் சாதாரணமான துவக்கம். பெண்ணொருத்தி ஒரு பையனைச் சந்திக்கிறாள். அதிலிருந்து நேரே ஒரு சிக்கலுக்குள் மாட்டிக் கொள்கிறாள். அந்தப் பையனுக்கும் அவன் அம்மாவுக்குமிடையிலான விசித்திர உறவு. அவனை வழி நடத்தும் அவனது பள்ளி ஆசிரியை. ஒரு சாதாரண ஏமாற்றுக்காரியும் விபச்சாரியுமாக இருக்கும் அவள் முதல் தடவையாக யதார்த்தத்தைச் சந்திக்கிறாள். அது பெரும் துயரமாக மாறுகிறது. அந்தப் பெண்ணின் வாழ்விலும் மாற்றத்தை உண்டாக்குகிறது?



அந்தப் படம் உண்மையில் எதைப் பற்றியது?

பொதுவாகச் சொன்னால் மக்கள் மிகவும் மெத்தனமானவர்கள். படத்தில் அப்பெண் மெத்தனத்தின் உருவம். ஆனால் வாழ்வில் பெரும் துயரங்கள் வரும்போது அதற்கேற்ப மக்கள் மாறவும் செய்கிறார்கள் என்பது என் நம்பிக்கை. அந்தத்தாய் திகிலடை கிறாள். காரணம் தன்னை மிக வலிமை மிக்கவள் என அவள் எண்ணிக்கொண்டு செயல்படுவதுதான். உண்மையில் அவள் வலிமைமிக்கவள் அல்ல. அது வெறும் வெளித்தோற்றம். தன் கணவனது இடத்தில் மகனை வைக்கிறாள். கதையில் மிகவும் பலவீனமான பாத்திரம் அவள்தான். ஆனால் சமயம் வரும்போது ஒருவர் வலுமிக்கவராக முடியும் என்பதை அந்தப் பெண் நிருபிக்கிறாள். அது போர் சமயத்தில் விமானத் தாக்குதல்களின்போது லண்டன் மக்கள் நடந்துகொண்ட முறையைப் போன்றது.



பைபிளில் வரும் 'இறுதித் தீர்வை' போன்று படம் உள்ளது. இல்லையா?

ஆமாம். அது அப்படித்தான் இருக்கிறது.

அவர்கள் எல்லாம் எப்படி வெளியே வரப் போகிறார்கள் என நமக்குத் தெரியாது. அந்தத் தாய் உச்சபட்ச கலவரத்தில் இருக்கிறாள். அந்தப் பெண் பறவைகளை அடித்து விரட்டுமளவுக்கு தைரியம் கொண்டவளாய் இருக்கிறாள். ஆனால் ஒரு குழுவாகப் பார்க்கையில் அவர்கள் இறுதித் தீர்வையினால் பாதிக்கப்பட்டவர்கள். சாதாரண மக்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் சான்பிரான்சிஸ்கோவுக்குத் தப்பிச் சென்றுவிடுகிறார்கள். ஆனால் காரிலிருக்கும் அவர்களை lap-dissolve செய்யலாமென்று எனக்கு எண்ணம். பார்த்துக்கொண்டிருக்கும்போதே அங்கே முழுவதும் பறவைகளால் மூடப்பட்ட கோல்டன் கேட் பாலம்.

The Birds ஐ சினிமாவாக எடுக்க நீங்கள் தேர்ந்தெடுத்தது எப்படி?

Psycho-வுக்குப் பிறகு அதைக் காட்டிலும் சிறந்த ஒன்றை மக்கள் எதிர்பார்ப்பார்கள் என்பதை உணர்ந்தேன். On the Beach போன்ற பேரழிவினை மையமாகக்கொண்ட படங்களில் தனி மனிதர்களது கதைகள் ஒரு பகுதியாக அமையாததை நான் கவனித்திருக்கிறேன். The Pride and the passion படம் நினைவுக்கு வருகிறது. அது ஒரு பெரிய பீரங்கியை இருப்பது பற்றியது. ஒவ்வொரு இரவும் ஒரு தனி நபர் கதையைச் சொல்வதற்காக அவர்கள் இருப்பதை நிறுத்தினார்கள். மறுநாள் காலை திரும்பவும் அவர்கள் துப்பாக்கியுடன் செல்வார்கள். அது மோசமாக திட்டமிடப்பட்டிருந்தது. ஒருங்கிணைப்பே இல்லை. பீரங்கியைத் தள்ளும்போதும் மனிதர்கள் வாழ்கிறார்கள், உணர்ச்சிவயப்படுகிறார்கள் என்பதை அவர்கள் உணரவில்லை. The Birds-ல் இவ்வாறு செய்யக்கூடாது என நான் உறுதி செய்து கொண்டேன். வேண்டுமென்றே நான் கவனில்லாத, சாதாரணமான, தொடர் விளைவுகளற்ற நடத்தையுடன் ஆரம்பித்தேன். ஏதோ விரும்பத்தகாதது எனத் தோன்றும் வகையில் காட்டியதன் மூலம் ஆரம்ப டைட்டில்களில் நான் சமரசம் கூட செய்து கொண்டேன்.

சாதாரண எளிய சீன ஓவியத்திலமைந்த பறவைகளின் மெல்லிய வரைபடங்கள் பயன்படுத்த விரும்பினேன். ஆனால் நான் அப்படிச் செய்யவில்லை. காரணம் விளம்பரத்தைப்பார்த்துவிட்டு பொறுமையற்றவர்களாக, "எப்போது பறவைகள் வரும்?" என மக்கள் கேட்கக் கூடும் என எண்ணினேன். அதனால்தான் அவ்வப்போது சிறு அதிர்ச்சியை அவர்களுக்கு அளித்தேன். கதவில் மோதும் பறவை, மின்கம்பிகளில் அமர்ந்த பறவைகள், அந்தப் பெண்ணை கொத்தும் பறவைகளை. படத்தின் பாத்திரங்களைப் புரிந்துகொள்வது அவசியம் என நினைத்தேன். குறிப்பாக அந்தத் தாயை. அவர் முக்கியமானவர் அதே நேரம் நாம் போதுமான அவகாசம் எடுத்துக் கொள்ளவேண்டும். பறவைகள் வருமுன் சூழலோடு ஒன்ற வேண்டும். மறுபடியும் அது ஒரு அதி கற்பனை. ஆனால் எல்லாமே முடிந்தவரையில் யதார்த்தமாக இருக்க வேண்டும். சுற்றுப்புறம், அரங்க அமைப்பு, கதை மாந்தர்கள். பறவைகளும் அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த பறவைகளாக இருக்க வேண்டும். பருந்துகள் கிடையாது. எந்த வகையான பெரிய பறவையும் இல்லை.



படத்தில் ஏராளமான தந்திரக் காட்சிகள் இல்லையா?

அத்தனை தேவைப்பட்டது. மொத்தம் 371 தந்திரக்காட்சிகள். அதில் மிகவும் கடினமானது கடைசிக் காட்சி. அது 32 வேறுபட்ட படத் துண்டுகள் சேர்ந்தது. வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலேயே

அவர்களுக்கு கடற்பறவைகள் அனுப்பிக்கப்பட்டன. எனவே காட்சியின் முன்னணி (fore ground) மூன்று தனிப்பிரிவுகளாக படம் பிடிக்கப்பட்டது. இடமிருந்து வலமாக கட்டைமீது அமர்ந்த பறவைகள் வரை, எங்களிடமிருந்த சில கடற்பறவைகள் முதல் பிரிவில் படம் பிடிக்கப்பட்டன. அவற்றையே நடுப்பகுதியிலும் வலதுபுறமாக அமைந்த மூன்றாவது பகுதியிலும் மறுபடியும் வைத்து படம்பிடித்தோம். காக்கைகளுக்கு மேலே நீண்ட அடர்த்தி குறைந்த வரிசையாக மறுபடியும் கடற்பறவைகள் பரத்தி வைக்கப் பட்டன. இரண்டு பக்கமும் இரண்டு பறவைகளைக் கொண்ட சாலையில் இறங்கிச் செல்லும் கார் இன்னொரு துண்டுப்படம். வானம் இன்னொரு துண்டு. ஆந்தையும் தனியாக எடுக்கப்பட்டது



தான். இதுபோல இன்னும் பல. இவையெல்லாம் லேபில்(Lab) ஒன்று சேர்க்கப்பட்டன.

மொத்தத்தில் தந்திரக்காட்சிகள் தொழில் நுட்பத்தில் உருவாக்கப்பட்ட காட்சிகளாக பயன்படுத்துவது பற்றி என்ன நினைக்கிறீர்கள் ?

ஒரு முடிவை அடைவதற்கான வழிகள் இவை. எப்படியேனும் அதை நீங்கள் அடைந்தே ஆக வேண்டும். The Birds பற்றிய ஒரு முக்கியமான விஷயம் என்றால், 'இது முடியுமோ?' என்ற கேள்வியை நான் ஒரு போதும் எழுப்பியதே இல்லை. அப்படிச் செய்திருந்தால் இதையெல்லாம் செய்து முடித்திருக்கவே முடியாது. எந்தத் தொழில்நுட்பக்காரரும் "முடியவே முடியாது" என்றே சொல்லியிருப்பார். எனவே அந்த விஷயத்துக்கே நான் போக வில்லை. நான் வெறுமனே சொன்னேன். "நாம் இப்போது செய்ய வேண்டியது இதுதான்." முன்னோடியான அந்தத் தொழில்நுட்பங்கள் முயற்சி செய்யப்படாதிருக்க அந்தப் படமே எடுக்கப்பட்டிருக்க முடியாது என்பதை யாருமே உணரவில்லை. கிளியோபாட்ரா, பென்ஹர் எல்லாம் இதற்கு முன் ஒன்றுமே இல்லை. வெறும் மக்கள் திரளும் இயற்கை காட்சிகளும்தான். பறவையைப் பயிற்றுவித்தவரது பணி அபாரமானது. காகங்கள் தெருவில் குழந்தைகளைத் துரத்துவதை, அவர்களைச் சுற்றி காணப்படுப்பதை, முதுகின் மீது உட்காருவதைப் பாருங்கள். கார் பானெட் மீது அமரவும் குறிப்பிட்ட நேரத்தில் எல்லாம் பறந்து செல்லவும் பறவைகளுக்குப் பயிற்சியளிக்கவே பல நாட்கள் ஆனது. பாப் பர்க்ஸும் (Bob Burks) மற்றும் எஞ்சிய நாங்கள் அனைவரும்



தொழில்நுட்பக் கலைஞர்களாக மாறாதிருந்தால் The Birds படத்தை எடுக்க சாதாரணமாக ஐம்பது லட்சம் டாலர்கள் செலவாகியிருக்கும். □

கோஸ்டிஸ் பேபகங்காஸ்

தமிழில் : லாவண்யா



Thomas Brill

1.

வசந்தம்

மரம் குனிந்து பறவையைப் போல்
கிணற்றில் நீரருந்திற்று.
பறவை ஒற்றைக் காலில் நின்று
மரம்போல் பாவனை செய்தது
வேடன் பறவையின் கீழே
தன் முழங்காலை மடித்து
மரத்தைக் குறிவைத்தான்
கிணற்றிலிருந்து பீறிட்டது பச்சை ரத்தம்.

கோஸ்டிஸ் பேபகங்காஸ் கிரேக்க நாட்டில் பிண்டு மலைகளுக்கிடையில் ஒரு கிராமத்தில் தலைமுறைகளாகப் புரட்சியாளர்களின் வம்சாவளியில் 1936ல் பிறந்தவர். கிரேக்கத்தை நாஜிகள் ஆக்ரமித்துக்கொண்டபோது கிரேக்க விடுதலைப்படையின் இளைஞரணியில் பணியாற்றியவர். ஆயுதம் தாங்கிய விடுதலை வீரர்களுடன் சேர்ந்து ஆக்ரமிப்புக்கெதிரான எதிர்ப்பியக்கத்தை அநுபவப் பூர்வமாகக் கண்டவர். கிரேக்கத்தில் நடந்த உள்நாட்டுப் போரின்போது மலைகளிலும், அவர் தந்தை போரில் கொல்லப் பட்டபோது இரண்டு வருடங்கள் ஆதென்ஸ் நகரத்திலும் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்தவர்.

1967ல் ஏழு வருட சர்வாதிகாரம் பிரகடனம் செய்யப்பட்டபோது பேபகங்காஸ் முதலில் இத்தாலிக்கு தப்பி ஓடினார். பிறகு ஸ்வீடனுக்கு குடிபெயர்ந்தார். இருபது வயதில் "சிலுவைப்பட வில்லை' என்ற முதல் கவிதைத் தொகுப்புடன் துவங்கி "மாயை" "கனவுகள்" போன்ற பிரபலமான கவிதைத் தொகுப்புகளுடன் மொத்தம் 12 கவிதைத் தொகுப்புகள் 3 உரைநடை நூல்கள் வெளியிட்டுள்ளார்.

பேபகங்காஸின் கவிதைகள் அடக்குமுறைக்கெதிரான எதிர்க்குரல் கொண்டவை. அற்புதமான சொற்சிக்கனம், நிழற்படம் எடுப்பது போன்ற விவரிப்பு, வாழ்வுக்கும் சாவுக்குமான இடைவெளி, நம் காலத்தின் அர்த்தமற்ற தன்மைகளை இவருடைய கவிதைகள் வெளிப்படுத்துகின்றன.

ஆங்கில வழித் தமிழாக்கம் : **லாவண்யா**

2.

வழிப்போக்கன்

ஒரு சிறிய மனிதன்
உணவகத்தில் நுழைந்தான்
மூன்று இறந்த மனிதர்களை
முதுகில் சுமந்தவாறு -
காபி அருந்தி நகைச்சுவையாகப் பேசி
காசைத் தந்து பயணித்தான்.
முதுகின் மீதிருந்த மூன்று இறந்த மனிதர்கள்
ஒருவரை ஒருவர் கீறிக்கொண்டார்கள்
கிழித்துக் கொண்டார்கள் துண்டு துண்டாய்

உறுமிக் கூச்சலிட்டபடி
நகரம் அவனைக் கவலையுடனும்
பயத்துடனும் பார்த்தது
சுற்றியிருந்த நாய்கள் குரைத்தன.
அவன் அமைதியாக நடந்தான்
மேலசாக, இறகைப் போல, புன்னகை ததும்ப
துக்கமும் அங்கலாய்ப்புகளுமில்லாமல்
நகரின் இடுகாட்டுத் தூரமாக.

3.

கனி தரா மரம்

யாரோ ஒரு குழந்தையின் சிறிய தலையை
தோட்டத்தில் புதைத்தார்கள்
அது வளர்ந்தொருநாள்
பெரிய மரமாயிற்று.

அதன்கிளைகளில் நிறைய
தலைகள் முளைக்கத் தொடங்கி
கண்களைச் சிமிட்டி
மென்மையாய் இசைத்தன.

பிறகு அண்டை வீட்டுக்காரர்கள் வந்தார்கள்
தலைகளை வெட்டி
குளிர்பதனப் பெட்டியில் வைத்தார்கள்
பனிக்காலத்தில் சூப் வைக்க.

அப்போதிருந்து அந்த மரம் கனி தருவதில்லை
மௌனத்தில் தன்னை மூடிக்கொண்டது
இரவில் சில சிறிய சிறிய நீலநட்சத்திரங்கள்
அதன் கிளைகளில் மினுமினுத்தன.

நிறையப்பேர் சொன்னார்கள் தாங்கள் கேட்டதாக
குழந்தைகள் அழுவதையோ அல்லது சிரிப்பதையோ -
எதுவென உறுதியாகத் தெரியாமல்

ஆனால், எல்லோரும் ஒருமித்துச் சொன்னார்கள்
சப்தங்கள் மரத்திலிருந்து வந்ததாகவும்
குளிர்பதனப் பெட்டியிலிருந்து வரவில்லையென்றும்.

4.

இறைகிணறு

வரண்டெரிந்த நிலம் புராதன மலை முகடுகள்
வரண்ட மனிதர்கள்
கண்களின் மீது தொங்கும் கண்பட்டையோடு
கிணற்றிலிருந்து தண்ணீரிறைக்கும் கழுதைநான்.

என்னிருளில் நான் புல்லைக் காண்கிறேன்
என் தாகம் எனக்கு நீரோட்டத்தைக் காட்டுகிறது
இந்தச் சதுப்பு நிலத்தின் தாகம் தீர்க்க
நான் கடுமையாய் உழைக்கிறேன்
என்னை இடைமறிக்காதே
எனக்குதவுவதாகப் பாவனை செய்யாதே

கணினியிலிருந்து பிறக்கும்
செயற்கை மழை பற்றிப் பேசாதே-
நான் உன்னை நம்பவில்லை

என் கனவுக்கு வெளியில்
தண்ணீர் குறித்து என்னிடம் பேசாதே
என் கண்பட்டையை
என் கண்கள் மீதிருந்து அகற்றாதே.

5.

வேட்டை

ஒரு மனிதன் ஒரு மரத்தை
வேட்டையாடிக் கொண்டிருந்தான்
வேலிகளையும் வீடுகளையும் தாண்டிக் குதித்து
நொண்டிக் கொண்டோடியது மரம்
பின்னாலந்த மனிதன் மூச்சிரைக்கத் தொடர.

மரம் என்னில் ஒளிந்து கொண்டது
கிளைகளை உள்வாங்கிக் கொண்டு
நடுக்கமும் முனகலுமாக
வேட்டையாடிக்கும் கேட்டது
இப்போது அவன் என் மார்பின் மீது
கோடாரியாலடிக்கக் குறிவைக்கிறான்
என் காயத்தைப் பார்த்து.



அது தன் கால்களைத் தின்றுவிட்டது
அவன் சொல்கிறான்
துரதிருஷ்டவசமாக நான் மிகவும்
காயதிக்கேன்

வானில் மற்றொரு மரம்
தொழிற்சாலையின் புகைபோக்கியிலிருந்து
தன் வேர்களை பிரயாசையுடன்
வலியோடு விடுவித்துக் கொள்ள முயன்றது.

அது அணிந்திருந்த மணப்பெண்ணின் தலைச் சீலையில்
நட்சத்திரங்களை நோக்கிச் செலும் நோய் செல்கள்
வளரும் கறுப்புப் பழங்களிருந்தன.

வேடன் பெஞ்சிலமர்ந்து
சிகரெட்டைப் பற்ற வைக்கிறான்
அவனுடைய கோடரி ரத்தம் சொட்டிக் கொண்டிருந்தது.

6.

78-கோடைகாலத்தின் மத்தியில்

கிழவி திறந்த கண்களுடன் உறங்குகிறாள் அவற்றுள்
நீங்கள் அவள் கனவுகளைக் காணலாம்

அங்கே அர்ஜெண்டைனியர்களும் ஹாலந்தியர்களும்
காற்பந்து விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்

அவளுக்கு எதிர்புறமாக
பச்சைக் கண்ணாடியணிந்த கருப்புப்பூனை

விளையாட்டை பார்த்துக் கொண்டிருக்கிறது.

பிறகு, புகைபோக்கியிலிருந்து
இறந்தவர்களெழுந்து
கிராமிய நடனத்துக்குச் செல்கிறார்கள்

தொலைவில் கடலில் மீனவன் ஆயத்தமாகிறான்
தன் வலைகளை விரிக்க
காற்பந்து வீரர்களை கிழவியை பூனையை
அவன் பிடித்து டின்னிலடைத்த உணவாக்குவான்

காலையில் பள்ளத்தாக்கில் கவலையற்று
மரங்களுடன் கைகோர்த்து
இறந்தவர்கள் நடனமாடிச் செல்வார்கள்.

7.

சட்டவிரோதமாக

இந்த வருடம் தொட்டிச் செடிகளில்
இலைகள் துளிர்க்கவில்லை
மாறாக நீண்ட கூரிய பற்கள்.

இரவின் விரிவில் அவை அரைபடும் போது
ஒரு பெரும் சப்தம் எங்களை எழுப்புகிறது
நாங்கள் படுக்கையிலிருந்து எழுந்திருக்கிறோம்
ரத்தம் சொட்டும் கூரிய பற்களிலிருந்து
தப்பிக்கிறோம்
பெண்கள் சமையலறைக்குள் ஓடுகிறார்கள்
காபி தயாரிக்க.

ஒவ்வொரு விடியற்காலையிலும்
எங்களைத் தேடி வரும்
(போலீஸ் சீருடையணியாமல்)
மாற்றுடையணிந்த பெயர் தெரியாதவர்களுக்காக
இந்த வரும் நாங்கள் உழைப்பது
பற்பசைக்கும் காபிக்கும்
வாங்கிய கடனை திருப்பித்தர மட்டுமே.

பேட்டி

டோபியாஸ் உல்ஃப்



தமிழில் : ஜி. குப்புசாமி

■ கதையெழுதுதலைக் கற்றுத்தர முடியுமென்று கருதுகிறீர்களா?

இல்லை.

■ அப்படியென்றால் ஸிராக்யூஸில் உங்களது எழுத்துப் பயிற்சியரங்கில் என்ன கற்றுத்தருகிறீர்கள்?

அவர்களுடைய சொந்தப்படைப்பிற்கு அவர்களே மிகச் சிறந்த தொகுப்பாசிரியர்களாக இருக்கவும், அவர்களால் நன்றாகச் செய்யமுடிகிற விஷயங்களை அவர்களே அறிந்து

பேட்டி காண்பவர்:

ஜோவன் ஸ்மித்

கொள்ளவும், அவர்கள் மேலும் கவனம் செலுத்தத் தேவையான விஷயங்களை அடையாளம்காட்டவும். அவர்கள் இன்னமும் ஆராய்ந்து தேடத்தொடங்காத விஷயக்கிளைகளைக் கண்டுகொள்ளவும் நான் உதவிசெய்ய முயல்கிறேன். தம்மிடமிருந்து மேலும் அதிகமாக ஈடுபாட்டைக்கொண்டு வரவும் ஒவ்வொரு வாக்கியத்திலிருந்தும் அதிகபட்ச சாத்தியங்களை எடுக்கவும் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். தொடர்பற்ற தகவல் துணுக்குகளைவிட சிந்தனைச்சட்டங்கள்தான் உண்மையில் இன்றியமையாதவை என்று கருதுகிறேன். எழுத்துப்பட்டறையில் தகவல்களைக் கற்றுத்தர முடியாது.

■ உங்கள் மாணவர்கள் யார்?

நான் ஒரு வருடத்தில் ஒரு செமஸ்டருக்குத்தான் கற்றுத்தருகிறேன். இந்த வருடம் அந்த செமஸ்டரில் ஒரே ஒரு பாடம்தான் எடுக்கிறேன், ஏற்கனவே கைப்பிரதி ஒன்றைத்தயாரித்து அதை முழுமையாக்க முயன்று கொண்டிருக்கும் பின் இருபதிலிருந்து முன் முப்பது வயது வரையுள்ள பெரிய மாணவர்களுக்கு அதில் ஒரு எழுத்துப்பட்டறை நடத்துகிறேன். நாங்கள் சாதாரணமாக பள்ளியிலிருந்து நேராக மாணவர்களை சேர்த்துக் கொள்வதில்லை. வெளியுலகிற்கு வந்து வேலைப்பார்த்துக் கொண்டே எழுதவும் செய்கிறவர்களைத்தான் தேர்ந்தெடுக்கிறோம். ஏனெனில் இந்தப்பயிற்சியை முடித்தபிறகு அவர்கள் தமது வேலையில்தான் தொடரப்போகின்றனர் என்பதால் ஓர் இளம் எழுத்தாளனின் பார்வையில் இது முக்கியமானதொரு பரீட்சையென்று எனக்குப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் புனைகதை பிரிவில் ஆறு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கிறோம். அவர்களோடு மிகநெருக்கமாக நான் பணிபுரிகிறேன். சில வேளைகளில் இலக்கிய வகுப்புகள் எடுக்கிறேன். கடைசியாக நான் எடுத்த வகுப்புகளில் ஒன்று ரஷிய சிறுகதைகள். எனக்குப் பிடித்தமான பாடம்.

■ செகாவ்வை உங்களுக்கு மிகவும் பிடிக்கும்?

அவருடைய படைப்புகளை நான் தொகுத்து, சில வருடங்களுக்கு முன் பான்டம் வெளியிட்டிருக்கிறது. ஆங்கிலத்தில் வெளிவந்திருக்கும் அவருடைய கதைகள் அனைத்தையும் சேகரித்து, நான் தேர்ந்தெடுத்த கதைகளின் மிகச்சிறந்த மொழிபெயர்ப்புகளை எடுத்து வெளியிட்டிருக்கிறேன். இதற்காக ஏராளமாகப் படிக்க வேண்டியிருந்தது. ஆனால் சந்தோஷமாக இருந்தது. நான் விரும்பிச்செய்த விஷயம் அது.

■ அவரிடம் உங்களுக்குப்பிடித்ததென்ன?

அவரது மனிதநேயம், அதே நேரத்தில் அவரது இரக்கமின்மை. அவர் ஒரு மிக நல்ல டாக்டரைப் போல-அவர் நிபுணத்துவம் வாய்ந்ததொரு

நோய் நாட்ட வல்லுனர், அதே சமயத்தில் மிகவும் கருணை மிக்கவர். ஆனால் மென்மையானவரல்ல. விஷயங்களின் அளவீடுகளில் மனிதர்கள் எங்கே பொருந்திப் போகின்றனர் என்பது அவருக்குத் தெரிந்திருக்கிறது. மஞ்சூரியாவிலிருந்து ஒரு போர்க்கப்பலில் திரும்பி வருகிற ஒரு போர் வீரனைப்பற்றிய அவரது அற்புதமான கதை ஒன்று இருக்கிறது. அவன் படுகாயமுற்று மரணப்படுக்கையில் இருக்கிறான், ஆனால் அதை அவன் உணருவதேயில்லை. அந்தளவிற்கு அறிவீனன். மிருகத்தனமான மனிதன், அது நன்றாகவே வெளிப்படுகிறது. ஆனால் அவனுக்கு மிக மென்மையான பக்கமும் இருக்கிறது. எனவே ஏக்கத்திலும், மீட்டெடுத்துக்கொள்ளா அறியாமையிலும் அவன் இறந்துபோகிறான். பெரும்பான்மையான கதைகள் இங்கே முடிந்துவிடும். ஆனால் செகாவ் கடலில் சவஅடக்கம் செய்கிறார், பின் அந்த உடலைத்தொடர்ந்து செல்கிறார். பாரத்தோடு பிணைக்கப்பட்ட உடல் நீரில் மூழ்கி ஆழமான ஆழத்திற்குச் செல்கிறது, ஒரு சுறாமீன் உடலுக்கருகே நீந்திவருகிறது. நிரடிப்பார்க்கிறது. பின் விலகிச்சென்றுவிடுகிறது. செகாவ்பார்வையை கடலுக்கு மேலே கொண்டு வருகிறார். மேகங்களுக்கிடையே சூரியன் உதித்தெழுந்து கொண்டிருக்கிறது. நீர்ப்பரப்பில் சூரியக்கதிர்கள் நாட்டியமாடுவதைப் பற்றி-நான் இதைச்சரியாகக் கூற முயல்கிறேன்-மனித மொழிகள் எவற்றின் வார்த்தைகளிலும் இல்லாத பரவசத்தோடு பேசுகிறார். எனவே பரிபூர்ண அறியாமையில் ஒருவன் இறந்து போகும் சோகத்தை, எப்போதுமே வெளிப்பாடாக அவன் இயற்கையின் நற்குணங்களை, அவன் மீது ஏற்படும் அப்பக்கத்தான துவியத்தைக் காட்டி விட்டு பின் திடீரென்று அனைத்தையும் நிறுத்திவிடுகிறார். இவையனைத்திலும் நாம் எங்கே பொருந்தியிருக்கிறோம். எவ்வளவு சிறியவை இவையனைத்துமென்று நமக்கு உறைக்கிறது. அந்தப் பாத்திரத்தைப் பற்றிய உங்கள் உணர்வுகளை இது குறைத்து விடுவதில்லை ஆனால் இங்கேயமைந்த நமது இருப்பின் கால அளவுக்கும் நமது பிரச்சனைகளுக்குமான ஒரு வரைநிலையுணர்வை இது தருகிறது. அவர் ஓர் அபாரமான எழுத்தாளர். செகாவ்வை நான் நேசிக்கிறேன். நாள் முழுக்க அவரைப்பற்றி நான் பேசிக்கொண்டேயிருக்கமுடியும்.

■ எதைக்கற்றுதர முன்னுரிமை தருவீர்கள்- இலக்கியமா, எழுதுதலா?

இலக்கியம். ஏனென்றால் நான் இலக்கியம் பயில்விக்கும் போது மனிதர்களின் உணர்வுகளைப்பற்றி ஜாக்கிரதையாக இருக்க வேண்டியிருக்கிறது. ஆனால் எனது நேர்மை பெரும் அழிவையேற்படுத்திவிடாத ஒரு வயதில் வருகிறதாவென்பதில் மிகச்சுலபமாக அப்படியாகி விடுமென்பதால் நான் கவனமாக இருக்கவேண்டியிருக்கிறது. அந்த நிலையில் இருக்கும் எவரும், அந்த உத்தேசம் எதுவுமின்றியே பெரும் நிலைக்குலைவை உண்டாக்கி விடமுடியும். கடந்த காலங்களில் நான் கூட சிலரிடம் சில நேரங்களில்

தவறுதலாக பேரழிவை ஏற்படுத்தியிருக்கிறேன் என்பதை உணர்கிறேன்.

■ ஒரு நாவலாசிரியராகத் தொடங்கினீர்கள். பின்னர் சிறுகதைகளுக்கு உங்களை மாற்றியது எது?

பல எழுத்தாளர்களை போல வேறு எதைச்செய்யவும் எனக்கு அதிகப் நேரமில்லாததால் கதைகள் எழுத தொடங்கினேன். கவிதைகள் எழுதுவதைப் பற்றி பிலிப் லெவின் குறிப்பிடும்போது அவர் நாவலாசிரியராக இருப்பதையே எப்போதும் விரும்பிவந்தாலும் அருமையான கவனத் திட்டத்திற்கு கவிதைகளே பெரிதும் பொருந்திப்போயிருப்பதாகக் கூறுகிறார். அவருடைய கவிதைகள் உண்மையில் அழுத்திச்சுருக்கப்பட்ட நாவல்களைப் போலத்தான். அந்தளவிற்கு தெளிவான வர்ணனைகள் தெளிவான மனிதர்கள். அவர் ஓர் அற்புதமான கலைஞர்.

■ உண்மைதான். வாஸ்தவத்தில் உங்கள் கதைகளும் எனக்கு கவிதைகளைத்தான் நினைவு படுத்துகின்றன.

நல்லது. சிறுகதை என்பது கவிதையைப் போல நாவலிலிருந்து ஒரு வேறுபட்டவடிவமென்று நான் நம்புகிறேன். சிறந்த கதைகள் என்பவை ஆன்மரீதியில் நாவல்களை விடவும் சிறுகதைகளுக்கு நெருக்கமாக இருப்பதாக எனக்குத்தோன்றுகிறது; அப்படிதான் இருக்கவும் வேண்டும். வர்ணனையில் எந்தவிதமான தளர்த்தலும் இருக்க முடியாது. சிறுகதை முதல் தரமானதாக இருக்கவேண்டுமானால், அனைத்தும் இறுக்கமாக ஏற்றப்பட்டு விண்ணென்றிருக்கவேண்டும். நாவலில் அதை உங்களால் செய்யமுடியாது. வாசகன் அவ்வளவு நீண்ட நேரத்திற்கு இறுக்கமாகப் பிடித்து வைக்கப்பட்டிருப்பதைத் தாங்க முடியாதென்பதால், விலகலையும், பிடியில் கொஞ்சம் தளர்வையும் நாவல் கோருகிறது.

■ நாவல்கள் வாசிக்க எளிமையானவை.

வாசகர்கள் அவற்றிற்குள் படிந்துகொள்கின்றனர். நீங்கள் அந்தளவிற்கு கவனிப்புடன் இருக்கவேண்டியதில்லை. நம்மெல்லோருக்கும் இருக்கும் நேர நெருக்கடியில் வாசகர்கள் ஏன் சிறுகதைகளை வாசிப்பதில்லையென்று பலரும் என்னைக்கேட்கின்றனர். தர்க்கரீதியாக நமது காலச்சாரத்திற்கேற்ற வடிவமாக அது தோன்றுவதால் இருக்கலாம். ஆனால் வாசகர்கள் கவிதைகளை வாசிக்காத காரணமேதான் இதற்கும் காரணமென்று நான் கருதுகிறேன். ஏனென்றால் சிறுகதைகள் அவற்றிற்கான பாத்திரத்தில் நம்மைப் பெரிதும் வற்புறுத்துபவை. அவற்றின் மறைசெய்திகளோடு ஒருவித பிணைப்பை நீங்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது. அவை தமக்கானதொரு தனி உலகத்தில் இருக்கின்றன. மிகச்சிறந்த சிறுகதைகள் நாவல்களை போல கட்டமைக்கப்படுவதில்லை என்பதால்

பெரும்பான்மையோர் அவற்றில் ஏமாற்றம் அடைந்து விடுகின்றனர். அவற்றில் தெளிவான முடிவுகள் இருப்பதில்லை. அவை உங்களுக்கு எல்லாவற்றையும் கூறிவிடுவதில்லை. உட்குறிப்பாக இருப்பவற்றிற்குள் தான் பெரும்பாலும் அவை நகர்கின்றன. எனவே செகாவ், அல்லது மாப்பஸான், அல்லது ரேமண்ட் கார்வெர் அல்லது ஆலிஸ் மன்றோ அல்லது, மாவிஸ் காலண்ட் போன்றோரின் கதைகளைப் படித்துவிட்டு நிறையப்பேர் 'சரி அப்புறம் என்ன நடந்தது?' என்று வியக்கின்றனர். ஒரு நாவலைப் போல தெளிவாக வழியைக் காட்டி முடிய விரும்புகின்றனர். மிகச்சிறந்த சிறுகதையாசிரியர்கள் அந்த வழியில் பணியாற்றுவதில்லை.

■ ஒரு நாவலுக்குள் நீங்கள் தடம் பதிக்க முயல்கிற இடத்திலேயே சிறுகதைகள் பெரும்பாலும் முடிவடைந்துவிடுவதாகத் தோன்றுகிறது.

அது சரிதான். ஒரு தினத்தின் முடிவில் அந்த மனிதர்களிடம் திரும்பி வந்து வாழ்க்கைக்குள் அவர்கள் மேலும் ஆழமாக நுழைவதை கவனிப்பதில் ஒருவித சுகம் இருக்கிறது. இப்போது ஐரிஷ் எழுத்தாளர் கோம் தோய்பின் என்பவரின் 'The Heather Blazing' என்ற அற்புதமானதொரு நாவலை வாசித்துக் கொண்டிருக்கிறேன். 'The Death of Ivan Ilynch' ல் வருகிற அந்த மகத்தான வரி என்ன? - இவான் இலிச்சின் வாழ்க்கை மிகவும் எளிமையானது, மிகவும் சர்வசாதாரணமானது; அதனால் மிகவும் பயங்கரமானது - இந்த உணர்வைத்தான் இந்தப் புத்தகத்திலிருந்து நீங்கள் அடைகிறீர்கள். இந்தப் பயங்கரமான, துர்ச்சகுனமான பாரத்தை மெதுவாக ஏற்றுக்கொள்வது தினசரி வழமைகள்தாம். அத்தகையதொரு, அழகான நாவல். அதை வாசிக்க உங்களுக்குப் பொறுமை வேண்டும்.

■ ஒரு கதையை எழுத எவ்வளவு நேரம் எடுத்துக் கொள்கிறீர்கள்?

ஆறு வாரங்களுக்கு குறைவாக எப்போதுமில்லை. வெகு காலத்திற்கு அதனுடன் நான் வாழ்கிறேன். அந்தக் கதை எப்படிப்பட்டதென்று முடிவெடுத்துக்கொள்ளவே சாதாரணமாக இரண்டு அல்லது மூன்று வாரங்கள் பிடிக்கிறது.

■ ரொம்ப நேரத்திற்கு எதிரே சுவரை முறைத்துக் கொண்டிருப்பீர்களா அல்லது கடமையாக தட்டச்சு இயந்திரத்தின் முன் உட்கார்ந்து விடுவீர்களா?

பல்வேறு வகைகளில் முயன்று பார்க்கிறேன், துருவித்துருவி ஆராய்கிறேன். தொப்பியில் விளக்கைப் பொருத்திக் கொண்டு குகை ஆராய்ச்சி செய்வதைப்போல, வெவ்வேறு அறைகளுக்குள் போய் வந்து கொண்டேயிருக்கிறீர்கள். கடைசியில் சரியானவொன்றிற்கு வந்தடைந்துவிட்டதைப் போலப்படுகிறது; இருட்டிற்குள், முன்பின் அறிந்திராத பிரதேசத்திற்குள்



இறங்குகிறீர்கள். உங்களுக்கு முன்பு கொஞ்ச தூரத்திற்கப்பால் எதுவும் கண்ணிற்குத் தெரிவதில்லை.

■ இது போகப்போக சுலபமாகிவிடுகிற வேலை கிடையாது, இல்லையா?

இல்லை. ஒரு விதத்தில் கடினமாகிவிடுகிறது. கடினமாகிவிடுவதோடு மேலும் திருப்தியளிக்கக் கூடியதாகிவிடுகிறது. வினைவில் அதிகமாக நீங்கள் எழுத, எழுத, உங்கள் மரபின் பாரத்தையும், வடிவத்தில் உள்ள சிரமங்களையும், ஏற்கனவே அதிகமும் நீங்கள் செய்தவற்றை மீண்டும் செய்ய விரும்பாததையும் அறிந்து கொள்கிறீர்கள். எனவே நீங்கள் கூறும் கதையை மிகப்பரிபூரணமாக அடக்கி வெளிப்படுத்தும் புதுப்புது கதை வடிவங்களுக்காக தொடர்ந்து தேடிக்கொண்டே யிருக்கிறீர்கள். ஆர்வத்தைக் தக்க வைத்துக் கொள்ள இலக்கில் உயரத்தை ஒவ்வொரு முறையும் கொஞ்சம் உயர்த்திக் வைத்துக் கொள்கிறீர்கள். சில எழுத்தாளர்கள் ஒரே விஷயத்தைத் திரும்பத் திரும்ப எழுதத்தொடங்கி, ஏறக்குறைய தவிர்க்கவியலாமல் சுய எள்ளலுக்கு ஆளாகிவிடுகின்றனர்.

அவர்கள் தம்மைத்தாமே எளிதில் வெறுத்துக்கொள்வதில்லை போலிருக்கிறது.

அந்த விதத்தில் அவர்களைப் பார்த்து நான் பொறாமைப்படுகிறேன். தம்மின் மீதும் தமது படைப்புகளின் மீதும் அதிருப்தியுறுகிற வழக்கம் அவர்களுக்கிருப்பதில்லை. ஆனால் பல எழுத்தாளர்கள் - நானும் அவர்களில் ஒருவன் - சுலபமாக அதிருப்தியுற்றுவிடுகிறோம். இப்படிப்

பட்ட குணத்தை வைத்துக்கொண்டு வாழ்க்கை நடத்துவது கொஞ்சம் கடினம்தான். ஆனால் அது ஒரு தாற்றுக் கோல் போல. உங்களை அது விழிப்போடும் அமைதியற்றும் வைத்திருக்கிறது. இன்றும் கொஞ்சம் கூடுதலாக உங்களை முன் தள்ளிக் கொள்கிறீர்கள். மேலும் அதிகமாக விழைகிறீர்கள். அவ்வாறிருக்கும் எழுத்தாளர்களை உங்களால் கூறிவிட முடியும். உதாரணத்திற்கு ராபர்ட் ஸ்டோன். ஒவ்வொரு புதிய நாவலிலும் புதியதாக எதையோ செய்கிறார். வேறு சில எழுத்தாளர்களிடமும் இதை நான் காண்கிறேன்.

■ *மிகவும் பிரயத்தனம் தேவைப்படுகிற வேலையாகத்தான் தெரிகிறது.*

எழுதுவதே பிரயத்தனமிக்கதுதானே? மற்றவர்கள் வேலை என்று கூறப்படும் ஒன்றிற்குச் சென்று, மேசையில் கொஞ்ச நேரம் உட்கார்ந்துவிட்டு, புள்ளி விபரங்களைப் பார்த்துவிட்டு, மின்னஞ்சலை சரிபார்த்து பதிலளித்துவிட்டு, சில அறிக்கைகளைப் படித்துவிட்டு, அடுத்தக் கட்டிடத்திலுள்ள அலுவலகத்திற்குச் சென்று, வியாபாரம் பேசிவிட்டு, கொஞ்சம் அரட்டையடித்துவிட்டு, திரும்பச் சென்று உட்கார்ந்து, கொஞ்சம் படித்துவிட்டு, சில மெமோக்கள் டைப் அடித்துவிட்டு, மீட்டிங்கில் கலந்து கொண்டு, சாப்பிட்டு விட்டு, திரும்ப வந்து, காலையில் செய்தவற்றையே மீண்டும் செய்யத் தொடங்கி ..., பலருக்கும் வேலை என்பது உண்மையில் மிகவும் குழுமமாகவும், கூட்டாக செயல்படுவதுமாகவே உள்ளது. ஒருவர் மட்டும் தனியாக அமர்ந்து ஒரு நாளைக்கு ஐந்து அல்லது ஆறுமணி நேரங்கள் கடுமையாக சிந்தித்து ஆற்றுகிற வேலைகள் மிகச்சிலவே இருக்கின்றன. ஆனால் அதற்காகத்தானே நீங்கள் எழுத்தாளனாக விரும்பியதே, இல்லையா? அதைச் செய்கிற சுதந்திரம் உங்களுக்கிருக்கிறது. அந்த சுதந்திரம் வந்தவுடன், அதைச் செய்து முடிக்க கட்டாயமும் கூடவே வந்துவிடுகிறது.

ஒரு கதையை நீங்கள் கூறமுற்படுவதற்கு குறிப்பிட்ட நடை ஒன்று இருப்பதாக கருதுகிறீர்களா? உங்களது நினைவுக் குறிப்புகள் புனைவுகள் அல்லவென்றாலும், அவை தன்மைக்கூற்றிலேயே சொல்லப்பட்டிருந்தாலும் உங்கள் கதைத் தொகுப்புகளில் காணப்படும் உருவமும், லயமும் அவற்றில் இருக்கின்றன.

அது நான் ஒரு சிறுகதையாசிரியராக இருப்பதனால் இருக்கலாம். கடந்த கால ஞாபகங்களை நான் கதை கூறல் வடிவத்தில், கதை வடிவத்தில் நினைவு கூற முனைகிறேன். நாளெல்லாம் கதைகள் சொல்லிக்கொண்டிருந்தவர்களுக்கு மத்தியில் நான் வளர்ந்தேன். அவர்களுக்கு நிகழ்ந்த சம்பவங்களை அப்படித்தான் அவர்கள் வெளிப்படுத்தினர். நாமெல்

வேலைநேரமே வேலையிலிருந்து வீட்டிற்கு வந்து நமக்கு என்ன நடந்ததென்று கதையாகத்தான் கூறுகிறோம்.

■ நமது வாழ்க்கைகளை நாவல்தனமாக இல்லாமல் அத்தியாயங்களாக நினைத்துப்பார்க்க முனைகிறோம் இல்லையா?

சரியாகக் கூறுகிறீர்கள். நாவல்தனமான வெளிப்பாடுகளைக் கொண்டிருக்கிற வாழ்க்கையை நம்மில் பலரும் வாழநேர்வதில்லை. ஏனெனில் நம் வாழ்வு துண்டுதுண்டாக்கப்பட்டுள்ள ஒன்று. ஒரு நாவலில் குறிப்பிட்ட ஒரு சமுதாயத்தின் நீண்ட அனுபவச் சங்கிலிக்குப் பதிலாக இத்தகைய தருணங்கள்தான் அமைந்திருக்கின்றன. ஒருவேளை இதனால்தான் இங்கிலாந்தில் நாவல் செழிப்பாக வளர்ந்திருக்கலாம். ஓரேயிடத்தில் ஸ்திரமாகத் தங்கியிருக்கும் சமூகங்கள், காலங்காலமாக ஒருவரையொருவரே பார்த்துக் கொண்டிருக்கும் மனிதர்கள், ஒருவருக்கு நேர்கிற மாற்றம் காலப்போக்கில் தலையெடுக்கும் விதத்தை கவனித்தறியும் வாய்ப்பு - இவையெல்லாம் ஆங்கிலேய அம்சங்கள். ஆனால் சிறுகதை என்பது பரிபூரணமாக அமெரிக்க வடிவம்.

■ எப்படி?

ஏனென்றால் பெரிதும் குடிநிலவரமற்ற நாடோடிகளாக நாம் இருப்பதுதான். அமெரிக்கர்களில் 80 சதவீதமானோர் ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் ஒருமுறை குடிபெயருகின்றனர். இந்தக் கலாச்சாரத்தில் ஓர் அசாதாரணமான சமுதாயப் பெயர்வும், அதனால் ஏராளமான சமுதாயக் கலவைகளும் கலந்திருக்கின்றன. அவர்களுடைய வாழ்நாளில் தமது சமுதாய நிலையங்களைப் பெரும்பாலும் அவர்கள் மாற்றிக் கொள்கின்றனர், அல்லது அவர்களுடைய புதல்வர்கள் மாற்றுகின்றனர். இது மற்ற இடங்களில் இந்தளவிற்கு நடைபெறுவதில்லை.

இவற்றில் பெரும்பாலானவை உங்களது நினைவுக் குறிப்புகளில் காணப்படுகின்றன. உங்கள் அப்பா அவரது பின்னணியைப் பற்றி ஏன் உங்களிடம் பொய் சொன்னதாக நினைக்கிறீர்கள்? ஒரு காரணத்திற்கு யூதக் கலப்பினராக இருந்ததை மறைத்தது.

அவராக இருந்ததைத் தவிர வேறொருவராக இருப்பதன் ஆழ்ந்த சுயசோகத்தில் அவர் வயமாற்றிக் கொண்டிருந்ததாக நான் நினைக்கிறேன். அவருக்கு இந்தப் பரிதாபகரமான WASP* கற்பனை இருந்தது. யூத எதிர்ப்பு அதிகமாக இருந்த தொடக்கப்பள்ளிகளில் அவர் ஆரம்பத்தில் பயின்றது

* WASP : White Anglo-Saxon Protestant என்பதன் சுருக்கம். அமெரிக்க சமுதாயத்தின் மேட்டுக்குடியினரைக் குறிப்பிடும் இகழ்ச்சிச் சொல்.

இதற்கு காரணமாக இருந்திருக்கலாம். ஆனால் என் சகோதரர் எங்கள் அப்பாவைப்பற்றிய ஆராய்ச்சிப் புத்தகத்தை எழுதிக்கொண்டிருக்கும் போது, என் அப்பா சந்தித்த மிக மோசமான யூத எதிர்ப்பு அவர் யூதர்களுக்கு மத்தியில் வளர்ந்து வந்தபோதுதான் இருந்ததாகக் குறிப்பிடுகிறார். ஏனெனில் அவருடைய உறவினர்கள் ஜெர்மனிய யூதர்களும் மருத்துவர்களும். எங்கள் பாட்டனார் ஒரு மருத்துவர், எங்கள் முப்பாட்டனார் ஒரு மருத்துவர், அவரது முப்பாட்டனார் நெப்போலியனுக்கு மருத்துவர். அவர்கள் அனைவருமே மற்றவர்களுடன் கலக்காமல் மிகுந்த கர்வமும் குறுகிய மனப்பாங்கும் கொண்டிருந்தவர்கள். நூற்றாண்டின் தொடக்கத்தில் போலந்திலிருந்தும் ரஷியாவிலிருந்தும் பெருமளவில் அலையலையாக யூதர்கள் அகதிகளாக இங்கே வரத்தொடங்கியதும் ஜெர்மானிய யூதர்கள் அவர்களை யித்துகள் என்றும் ஹீபீக்களென்றும் இகழ்ச்சியாக அழைக்கத் தொடங்கினர். ஜெர்மனானிய யூதர்கள் மிகவும் மதச்சார்பு கொண்ட, மிகவும் சனாதனமான, மிகவும் குழுமனப்பான்மை கொண்ட இனத்தினர். இந்த சமாச்சாரங்கள் பலவற்றை என் அப்பாவும் ஸ்வீகரித்துக் கொண்டார். இது மிக விநோதமானதொரு விஷயம்.

■ *நீங்கள் யூதக் கலப்புடையவர் என்பதை அறிந்ததும் எவ்வாறு உணர்ந்தீர்கள்?*

ஒரு விதத்தில் அது எனக்குப் பிடித்திருந்தது. ஐரிஷ்ஷும் யூதமும் நல்லதொரு கலப்பாக எப்படியோ எனக்குப்பட்டது. நாய்களில் கோலியும் லாப்ராடரும் எப்படி ஒரு நல்லக்கலப்போ அதைப் போல! அதில் ஏதோவொன்று நிச்சயமாக இருக்கிறது.

■ *விவரணைகளில் உங்களுக்கு அபாரமான ஞாபகசக்தி இருப்பதாகத் தெரிகிறது. சிறுவயதில் மற்றவர்களை விட நீங்கள் அதிகமாக கவனிப்பவராக இருந்திருக்கிறீர்கள் என்று சொல்லலாமா?*

மற்றவர்களை உன்னிப்பாகப் பயின்று வந்திருக்கிறேன். ஏனென்று தெரியாவிட்டாலும் நான் கூர்ந்த அவதானிப்புடன் இருந்திருக்கிறேன். ஞாபகம் என்பது வேடிக்கையானது. ஒரு நரம்பைத் தட்டிவிட்டால் எப்படி நினைவிற்கு கொண்டுவருவது என்பதில் இல்லை பிரச்சனை. எப்படி அந்த பிரவாகத்தைக் கட்டுப்படுத்துவது என்பதில்தான். அனைத்தும் வெடித்துக்கொண்டு வெளிவர அனுமதிக்க வேண்டும். ஞாபக வெள்ளத்தில் வரும் அனைத்துமே முக்கியத்துவம் வாய்ந்ததோ, சுவாரசியமானதோ அல்லவென்பதால் இந்த ஞாபக வெடிப்பை எவ்வாறு உருவப்படுத்தி, உங்களது கடந்த அர்த்தத்தைக் கருகிற கதைக்கூற்றாக்குவது என்பதுதான் பிரச்சனை. ஞாபகத்திலிருந்து எடுத்தாள்வதில் நான் மிகவும் கவனத்துடன் இருக்கிறேன். ஆனால் அதே தருணத்தில் இருந்த வேறொருவர்

என்னுடையதிலிருந்து வேறுபட்டதாக ஒன்றை எழுதுவார் என்பதையும் அறிந்திருக்கிறேன்.



■ நீங்கள் எழுதப்போகிறீர்கள் என்பதை எப்போதுமே அறிந்திருந்தீர்களா?

எனக்கு 14 அல்லது 15 வயதாக இருக்கும்போது ஓர் எழுத்தாளராக வேண்டுமென்று நான் முடிவெடுத்தேன். அதிலிருந்து வேறு எதைச் செய்யவும் நான் விரும்பியதில்லை.

■ அந்த எண்ணத்தை உங்களுக்குத் தந்தது எது?

உண்மையில் என் நண்பனால்தான். என்னுடைய ஆறு வயதிலிருந்தே நான் தொடர்ந்து எழுதிக்கொண்டிருக்கிறேன். என் நண்பர்கள் அவர்களது ஆங்கில வகுப்புகளில் அதிகப்பாராட்டு பெறவேண்டுமென்பதற்காக அவர்களுக்கு நான் கதைகள் எழுதித்தருவதுண்டு. அவர்களில் ஒருவன் ஒருநாள் என்னிடம், "உனக்குத் தெரியுமா, நீ ஒரு எழுத்தாளனாக இருக்க வேண்டியவன்" என்றான். நான் கதைகள் எழுதினாலும், வாசிப்பதில் விருப்பம் இருந்தாலும், நான் எழுதுவதும் எழுத்தாளர்கள் எழுதுவதும் இருவேறு விஷயங்கள் என்று நான் உறுதியாக நம்பியிருந்தேன். அதற்கு முன்பு என் ஆசிரியர்கள் உட்பட யாருமே என்னிடம் அதைப்போல ஒன்றைக் கூறியதில்லை. அதுதான் முதல் முறை. ஏனென்றால் காண்கிரீட் உயர்நிலைப் பள்ளியிலிருந்து எந்தவொரு ஆசிரியருக்குமே தமது மாணவர்களில் ஒருவன் எழுத்தாளனாக வரப்போகிறானென்று தோன்றியிருக்கப் போவதில்லை. ஆனால் அந்தச் சிறுவனுக்குத் தோன்றியிருக்கிறது. அவனும் சொல்லிவிட்டான். வேடிக்கை என்னவென்றால் இந்த விஷயம் எனக்குள்ளே வியாபித்து பூராவும் பற்றிக்கொண்டதுதான். அவன் என்ன சொல்கிறானென்பதை அவனே அறிந்திருக்கவில்லை. ஓர் எழுத்தாளனாக முயற்சிப்பது எத்தகையது என்பதை அவன் அறிந்திருக்கவில்லை. ஆனால் ஒரு சிறுவன்

இவ்வொருவனிடம் வெகுளித்தனமாக, பிரியத்தோடு சொன்ன ஒரு விஷயம் முக்கியத்துவம் பெற்று நிறைவேறியிருப்பது மிகவும் இனிமையானவொன்றுதான்.

■ *உங்கள் கதைகளைத் தொகுக்கும் போது அவற்றை ஒரு தொகுப்பாக திட்டமிட்டுத் தேர்ந்தெடுப்பீர்களா அல்லது சமீபத்தில் நீங்கள் எழுதிய கதைகளின் மாதிரிகளாகவா?*

'The Night in Question' ல் நான் தொகுத்திருந்த கதைகளை விட அதிகமான கதைகளை உண்மையில் நான் எழுதியிருந்தேன். அவற்றைத் தேர்ந்தெடுக்கும்போது கதைகளின் தரம் அல்லது சித்தரிக்கப்பட்ட பிரச்சனை போன்றவற்றிலுள்ள ஏதோவொன்று இந்தத் தொகுப்பில் ஒரு கதையைச் சேர்க்க வைக்கிறது. பாத்திரங்கள் ஒருவித சமுதாயத்தைச் சார்ந்தவர்களைப் போலவும் நினைத்துக் கொண்டேன். பொதுவான ஓர் இடத்தைச் சார்ந்த சமுதாயமல்ல, அவர்களைப் பிடித்திருக்கும் கேள்விகளின் அடிப்படையில் கதையின் வேகத்திலும் ஏதோ இருக்கிறது. மொட்டவிழ்கிற ஓர் உணர்வு இருக்க வேண்டும். ஒரு தொகுப்பை உண்டாக்கும் போது எல்லாவித விஷயங்களும் நடைபெறுகின்றன. அந்தப் பிரச்சனையில் எழுத்தாளர்கள் பெரும் சிரமத்தை எடுத்துக் கொள்கின்றனர்.

■ *'The Night in Question' என்பது எவ்வாறு தலைப்புச் சிறுகதையாக ஆனது?*

ஒரு படைப்பைத் தொடங்கும்போது அதன் தலைப்பு எதுவாக இருக்கப் போகிறதென்று பெரும்பாலும் எனக்குத் தெரிவதில்லை. ஆனால் அக்கதையை நான் எழுதிக்கொண்டிருக்கையில் அந்தப்பாத்திரம் 'The Night in Question' என்ற அச்சொற்றொடரை பயன்படுத்துகிறது. வழக்கறிஞர்களும், அல்லது காவல்துறை அதிகாரிகளும் நடந்த ஏதோ அசம்பாவிதத்தோடு இணைத்து உபயோகிக்கிற சொற்றொடர்! அந்த வரியை நான் எழுதியபோது அந்தப் பிரயோகம் மட்டும் பிற வார்த்தைகளிலிருந்து மாறுபட்ட வண்ணத்தில் இருப்பதைப்போல அந்தப்பக்கத்திலிருந்து மேலெழும்பி வந்தது. அதை என் தலையிலிருந்து அகற்ற முடியாமற் போய்விட்டது. ஒருகதையைத் தொடங்க அது ஓர் அற்புதமான சொற்றொடராகப்பட்டது. ஏதோ ஒரு துர்ச்சகுனத்தைக் குறிப்பது போல. ஒரு வித கட்டவிழ்க்கும் வாசகமாகத் தோன்றியது. 'நமது கதை தொடங்கும் போது' அல்லது 'முன்னொரு காலத்தில்' அல்லது 'ஒரு ஊரில் இரண்டு சகோதரர்கள் வாழ்ந்து வந்தனர்' என்பவற்றைப் போலவே 'பிரச்சனைக்குரிய அந்த இரவு' என்ற அந்தத்துவக்கம் ஒரு முழுத் தொகுப்பிற்கு முதல் படியைப் போல, ஒரு முழுமையான தெளிவாய் அச்சம் பொருந்தி எனது கதைப்பிரதேசத்திற்கு உங்களை வரவேற்கிறாற் போல எனக்குத் தோன்றுகிறது. ❐

சந்தேகத்தின் பலன்



தமிழில் : ஜி. குப்புசாமி

ஸெயின்ட் பீட்டர்ஸில் பஸ் எண் 64 நிற்பதால் எப்போதும் பக்தர்கள் கூட்டம்; அல்லது ஏமாளிகள் கூட்டம் உங்கள் அபிப்பிராயத்தைப் பொறுத்து. பிக்பாக்கெட்காரர்களுக்கு நல்ல வேட்டை. ஃபாரஸ்ட் பக்தன் அல்ல, அல்லது அவனது சொந்த அனுமானத்தின்படி ஏமாளியும் அல்ல. அவனுடைய விவாகரத்தான மனைவி ஸ்விஸ்-இத்தாலிய கலவை என்பதால் அந்த மொழியை அவன்

டோபியாஸ் உல்ஃப்

நான்கு பத்து. அவன் பத்து நிமிடம் தாமதம். தொத்தோர் ஸில்வெஸ்ட்ரின் அலுவலகத்திற்கு நடந்து செல்ல குறைந்தது ஐந்து நிமிடங்களாவது பிடிக்கும். முக்கியமான கூட்டம். தொத்தோரின் பரிந்துரை சரியாக பிரதிநிதித்துவப் படுத்தாததை மேலன் ஆராயப்போய் நேற்றைய கூட்டமும் மோசமாகவே முடிந்திருந்தது. கிழக்கு ஆப்பிரிக்காவில் நீர் சுத்திகரிப்பு திட்டங்கள் பலவற்றை நிர்மாணிக்க யோசித்திருந்த அவர்களது திட்டங்களை மேலன் பணிபுரியும் நிறுவனம் மேம்படுத்தி ஆலோசனைகள் வழங்கும். இவர்களது முதற்கட்ட மானிய விண்ணப்பத்தில் காணப்படும் குளறுபடிகள் எதிர் பார்க்கக்கூடியதென்றாலும், மேலனின் நிறுவனம் இந்தத் திட்டத்தை ஆதரிப்பது என்று ஏற்கனவே முடிவெடுத்துவிட்டிருந்தது. இவன் இங்கே வந்திருப்பது தொத்தோர் ஸில்வெஸ்ட்ரியை இவர்களது ஒப்பந்த விதிகளின் வழியாக அழைத்துச் சென்று வியாபாரத்தை படியவைப்பதுதானேயொழிய, அவர்களது திறமைக் குறைவை பட்டியலிட்டுக்காட்டுவதற்கல்ல. ஆனாலும் நேற்றைய தினம் தொத்தோரின் அபத்தங்களை மேலன் விளாசித்தள்ளி யிருந்தான். அந்தத் திட்டமே குப்பைக் கூடைக்கு போகத்தக்கதுதான் என்கிற மாதிரியான அபிப்பிராயத்தை ஏற்படுத்திவிட்டு வந்திருக்கிறான். ஒப்பந்தம் செழிப்பாக அமைவதற்கு அவன் செய்திருந்த அத்தனை தந்திரம் வேறு விதமாகக் கெடுத்துக்கொண்டு ஜெனீவாவில் உள்ள தனது மேலதிகாரி களை சென்றடைவதற்கு முன் இவனே சென்று சரிப்படுத்தியாக வேண்டும்.

அவன் அந்த பிக்பாக்கெட்டை குனிந்து பார்த்தான். மூச்சிறைப்பும் கேவலும் நின்றுவிட்டிருந்தாலும் இன்னமும் திணறிக்கொண்டிருப்பவனைப் போல காட்டிக்கொண்டிருந்தான். இப்போது பரவாயில்லைதானே, என்றான் மேலன். எழுந்து நிற்கமுடியுமா உன்னால்? எழுந்திரு. அப்படித்தான், என்று அவன் கையைப் பிடித்து நேராக எழுப்பி நிற்க வைத்து, முதன் முதலாக அவனது முகத்தை நேராக வைத்துப் பார்த்தான். வட்டமான கரிய முகத்தில் சின்ன வட்டமாக வாய், பெண்ணைப் போல முழுசான மென்மையான உதடுகள். உப்பலான கன்னத்தில் படிந்திருந்த பளபளப்பை யும், பென்சில் கோட்டு மீசையையும், சாமான நெற்றியில் கற்றையாக ஒட்டிக்கொண்டிருக்கும் முடிக்கொத்துகளையும் மீறி அவனிடத்தில் ஒரு கௌரவமான தோற்றம் தென்பட்டது: கௌரவம். அறுமதிக்கப்பட்ட கௌரவம். அந்த பிக்பாக்கெட் மூச்சுக்காக போராடிக் கொண்டு மேலனை தனது கரிய விழிகளால் ஏறிட்டுப்பார்த்தான். எப்படி இந்தமாதிரி செய்யலாம், என்று அவை கேட்டன.

ஏனென்றால் என்னிடம் நீ திருட முயற்சித்ததால், என்று மேலன் சொல்லி யிருப்பான். ஆனால் அவனது அடி மெத்தென்று அவன் வயிற்றில் இறங்கிய போதும், அவனை செமத்தியாகத் தாக்கியிருக்கிறோம் என்று புரிந்த

போதும் அவனுக்குள் எழுந்த சந்தோஷ இச்சை இன்னமும் ஞாபகத்தில் இருந்தது. அது இன்னமும் அவன் சருமத்தில் மெல்லிய குறுகுறுப்பும், எக்களிப்பும், வெறியும் கலந்த சிலிர்ப்போடு மிச்சமிருந்தது. அந்தக் கூர இச்சை எங்கிருந்து வந்திருக்க முடியுமென்று அவனால் கூறமுடியா விட்டாலும், ஒரு கனவை முடிக்க திருப்தியைத்தாண்டி அதன் வேர்கள் வேறெங்கோ ஆழத்தில் பொதிந்திருக்கின்றன என்பதை அறிந்திருந்தான்.



கனத்த மழைத்துளிகள் அந்த முகப்பில் விழத்துவங்கின

எப்படி இருக்கிறாய், என்றான் பேலன். உன்னால் நடக்க முடியுமா?

பேலனின் போலித்தனமான அக்கறையால் அவமானப்பட்ட மார்ட்டின் அவனை திரும்பிக்கொண்டான். கடை சன்னலில் தனது இரு கைகளையும் ஊன்றிக் கொண்டு தலையைக் கவிழ்த்தான். அவனது தோள்கள் எழும்பித் தாழ்ந்தன. அந்த கடைக்குள்ளிருந்த ஒரு நரைத்த தலை பெண்மணி அவனை அந்த இடத்தைவிட்டு நகர்ந்து போகும்படி கண்ணாடி வழியாக சைகை காட்டினாள். அவள் அவனைப் பொருட்படுத்தாதிருப்பதைக் கண்டு, கண்ணாடிக் கதவை பலமாகத்தட்டி, மிகையாக கைகளை வீசி விரட்டினாள். அவன் உண்மையிலேயே மிகவும் வேதனையாகத் தோற்றமளித்தான். அடம் பிடிக்கும் பையனை அதட்டுகிற பள்ளி ஆசிரியைப்போல அவனை அவள் முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

நான் போயாக வேண்டும், மன்னித்துக்கொள், என்றான் பேலன். வானத்தை அண்ணாந்து பார்த்தான். ஸில்வெஸ்ட்ரியை அழைத்து, வந்து கொண்டிருக்கிறேன் என்று சொல்லிட விரும்பினான். அவனது செல்போன்

ஓட்டல் அறையில் இருக்கிறது. பொது தொலைபேசி எதுவும் கண்ணில் படவில்லை. மீண்டும் ஒருமுறை, மன்னித்துக்கொள்! என்றான். தெருவில் இறங்கி மழைக்குள் நடந்தான்.

எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கும் பங்களாதேஷிகளில் ஒருவன் சாலை மூலையில் குடைகள் விற்றுக் கொண்டிருந்தான். மேலன் அவனிடம் ஏழு யூரோக்களை எடுத்துக் கொடுக்கும் போது அந்தப் பெண்ணின் கத்தல் கேட்டது. திரும்பிப் பார்த்துவிடக் கூடாது என்று நினைத்துக் கொண்டே திரும்பிப்பார்த்துவிட்டான். அந்தப் பெண் கத்திக்கொண்டே கடையிலிருந்து வெளியே பாய்ந்து வந்து சுவரில் சாய்ந்து கொண்டிருந்த பிக்பாக்கெட்காரனை இழுத்துத் தள்ளினாள். குத்துச் சண்டையின் கடைசி சுற்றின் கடைசி விநாடிகளில் போல தடுமாறி எழுந்து, மேலும் அடிகளி லிருந்து தன் முகத்தை கைகளால் மூடிக்கொண்டான். உள்சட்டைப் பைக்குள் பர்ஸை மேலன் செருகிக்கொண்டு அந்த பங்களாதேஷியிடமிருந்து குடையைப் பெற்றுக் கொண்டான். சிறிது தயங்கிவிட்டு பின்னால் திரும்பினான்.

பிக்பாக்கெட் இப்போது நடைபாதையிலிருந்து இறங்கி மழையில் நின்று கொண்டிருந்தான். வாசல் முகப்பில் அப்பெண் கையைக் கட்டிக்கொண்டு நின்று முறைத்துக் கொண்டிருந்தாள்.

அவளை மேலன் நெருங்கி, மன்னிக்க வேண்டும் ஸின்யோரா. இவனுக்கு உடல்நலமில்லை. கொஞ்சநேரம் ஓய்வெடுத்தால் சரியாகி விடுவான் என்றான்.

எனக்கு இவர்களைத் தெரியும், என்றாள். இந்த ஆசாமிகளை இங்கே நாங்கள் சேர்ப்பதில்லை.

மழை பிக்பாக்கெட்டின் தலையை வழித்துக்கொண்டு, முகத்தில் இறங்கி, தோல் ஜாக்கெட்டில் சரசரமாக ஓடி, ஏற்கனவே நைந்து போயிருந்த கால்சராயை மேலும் சொதசொதப் பாக்கிக் கொண்டு அவனது பளபளா ஷூக்களை சேதப்படுத்திக் கொண்டிருந்தது.

இந்தா, என்று மேலன் அவனிடம் குடையைக் கொடுத்தான். மேலனை தனது கரிய விழிகளால் ஒரு அடிபட்ட பார்வை பார்த்துவிட்டு தலையை மீண்டும் கவிழ்த்துக் கொண்டான். குடையின் கைப்பிடியால் அவனது தோளை மேலன் லேசாக இடித்தான். இந்தா எடுத்துக்கொள்! என்றான். இறுதியில், விருப்பமில்லா பாவத் துடன் அந்த பிக்பாக்கெட் குடையை வாங்கிக்கொண்டான். மேலனுக்கும், அந்தப் பெண்மணிக்கும் நடுவே குடையை ஒரு பிரயோசனமற்ற கோணத்தில் பிடித்துக்கொண்டு நின்றான்.

மழை அவனை வழித்துக் கொண்டு விழுந்து கொண்டிருப்பதில் அக்கறை யில்லாதவனாகத் தோன்றினான். அவனால் நகரக்கூட முடியவில்லையா என்ன? அந்த சின்யோராவும் அதே நிலையில் அசைவற்று நின்று கொண்டிருக்கிறாள். மேலன் அக் கடையின் முகப்பு நீட்டலுக்கடியில் நகர்ந்து நின்றான். மழையிலிருந்து ஒதுங்க மட்டுமல்ல, இந்த அபத்த மௌன நாடகத்திலிருந்து தப்பிக்கவும்.

அப்போதுதான் டாக்ஸி ஒன்று மண்டையில் விளக்கெரிய மூலையில் திரும்பி வருவதை கவனித்தான். இதைப் போன்றதொரு மழை நேரத்தில் காலி டாக்ஸியை எதிர்பார்ப்பது அபத்தம். டிரைவர் விளக்கை அணைக்க மறந்து விட்டிருப்பான் என்று தோன்றினாலும் மேலன் மழையில் இறங்கி தேங்கி யிருந்த தண்ணீர் சிதற ஓடி, கைதட்டி அழைத்தான். அந்த டாக்ஸி வேகத்தைக் குறைக்காமலேயே கர்வையாலே கோணத்தில் ஒதுக்கித் திரும்பி அவனுக்கெதிரே நிற்க, தண்ணீர் அவன் ஷூக்களின் மேல் தெறித்தது. கார் கதவைத் திறந்து, தவிர்க்க முடியாமல் பின்னால் திரும்பிப் பார்த்தான். அந்த பிக்பாக்கெட் ,குடையை தலைகீழாக தரையில் ஊன்றி, அதில் தாங்கிக் கொண்டு, கழுத்து வானம் நோக்க தலையை கவிழ்த்துக் கொண்டு நின்றிருந்தான். ஸின்யோரா அதே இடத்தில் நின்றிருந்தாள்.

இரு, மேலன் டிரைவரிடம் சொன்னான். திரும்பிச் சென்று பிக்பாக் கெட்டின் சட்டைக் கைப்பகுதியை கெட்டியாகப் பிடித்து டாக்ஸிக்கு இழுத்து வந்தான். குடையை வாங்கிக்கொண்டு, உள்ளே ஏறு என்று பின்ஸீட்டுக் தள்ளினான். உள்ளே குனிந்து, சரி நீ எங்கே வசிக்கிறாய்? என்றான்.

ஜிப்ஸிகள் கூடாது, என்றான் டிரைவர். தன் உடம்பை பின்னால் சாய்த்துக் திரும்பி பிக்பாக்கெட்டை முறைத்துக் கொண்டிருந்தான்.

ஜிப்ஸியா? இதோ பார், இவனுக்கு உடம்பு சரியில்லை. நான் பணம் தருகிறேன்.

டிரைவர் தலையை ஆட்டி மறுத்தான். ஜிப்ஸிகள் கூடாது. அவன் கனத்த தோள்களும், நீண்ட நீலநிற தாடையும், கழுகு மூக்கும், அடர்ந்த கரிய புருவங் களும் கொண்டிருந்தான். அவனுடைய மொட்டைத்தலை நீலமாக மின்னிக் கொண்டிருந்தது. அவனை முதலில் வெளியே தள்ளு, என்றான். அவனது கோபமும், கண்களின் உணர்ச்சியற்ற வெறுப்பும் மேலனைத் தாக்கின. அவன் பதில் சொல்ல யத்தனிக்கு முன் பிக்பாக்கெட்டின் ஜாக்கெட்டை அந்த டிரைவர் கொத்தாகப் பிடித்தான். உலுக்கினான். இறங்குடா.

முடியாது, என்றான் மேலன். குடையை மடக்கி பிக்பாக்கெட்டின் பக்கத்து

சீட்டில் வைத்தான். இவன் வீட்டிற்குப் போக வேண்டும். நானும் கூட வரப்போகிறேன், என்றான்.

டிரைவர் மேலனை நோக்கி தனது சுட்டுவிரலை நீட்டினான். வெளியே போ.

மேலன் டிரைவரின் பெயர் அட்டையை கவனித்தான்; மிக்கேல் கதாரே. துணிந்து புருகினான். இதோ பார், இது சட்டம். எங்களை அழைத்துச் செல்லாவிட்டால் மிஸ்டர் கதாரே, உன் மேல் நான் புகார் தர வேண்டிவரும். நீ உன் உரிமத்தை இழப்பாய். உண்மையாகவே கூறுகிறேன், நீ நம்பலாம்.

டிரைவர் அந்த வெளிறிய விழிகளை மேலனின் மேல் பதித்தான். வண்டியின் கண்ணாடியை துடைப்பான்கள் கரக்கிட்டுக்கொண்டு துடைத்துக் கொண்டிருந்தன. முன்னால் திரும்பி ஸ்டியரிங் சக்கரத்தின் மேல் தன் கைகளை வைத்தான். அவனது தடித்த விரல்கள் வெளுப்பாக, முடிகளற்று சுண்ணாம்பைப் போலிருந்தன. பின்பக்கம் பார்க்கும் கண்ணாடியில் தனது விழிகளை உயர்த்திப் பார்த்தான். மேலனும் அவனும் விறைத்த பார்வைகளை பரிமாறிக் கொண்டனர்.

ஓ.கே. மிஸ்டர் அமெரிக்கன், என்றான். நீயே பணம் கொடு.

டிரைவர் மெள்ளமாக ஆற்றைக் கடந்து, போக்குவரத்தின் நெருக்கத்துக்குள் புகுந்து சென்றான். அந்த பிக்பாக்கெட் சரியான முகவரி எதையும் தராமல், தனது உடைந்த இத்தாலியனில் டிரைவரிடம் வியா டிபர்டினாவைத் தாண்டி திவோலியை நோக்கி போகச்சொன்னான்; அங்கிருந்து அவன் வழி சொல்வானாம். பின்பு தனது இருக்கை மூலைக்கு பின்னகர்ந்து கண்களை பாதி மூடிக்கொண்டு சத்தமாக மூச்சிறைக்க ஆரம்பித்தான். இவன் கொஞ்சம் கூடுதலாகவே நடித்துக் கொண்டிருக்கலாம்; ஆனாலும் மேலன் மிகவும் வலுவானவன்தான். அவனது இடி மிக மூர்க்கமாகவே அவனைத் தாக்கியிருக்கக்கூடும். சொல்ல முடியாது, எனினும் சந்தேகத்தின் பலனை தந்துத்தான் ஆகவேண்டும்.

மழை தூறலாக இளைத்து, ஸல்ஃபர் மஞ்சளில் வெளிச்சம் காற்றில் பரவியது. மேலன் தனது ஈரமான காலுறைகள் கதகதப்பாக மாறுவதை உணர்ந்தான். அவ்வப்போது கண்ணாடியில் அவனை காரோட்டி பார்த்துக் கொண்டு வந்தான். கதாரே. இத்தாலியப் பெயராகத் தெரியவில்லை. கதாரே என்ற பெயருள்ள அல்பேனிய எழுத்தாளரின் பற்றி ஒரு புத்தகத்தை முன்பு மேலன் படித்திருக்கிறான். ஒருவேளை இந்தக் காரோட்டி அல்பேனியாவைச் சேர்ந்தவனாக இருக்கலாம். அந்தக் காரோட்டி, பிக்பாக்கெட்டைப் பார்த்து 'ஜிப்சி' என்று சொன்னது எவ்வளவு நியாயமோ, அதே அளவு

நியாயம் இந்த அனுமானத்திலும் இருக்கிறது. இதுதான் அந்த ஸின்யோரா 'இந்த ஆசாமிகள்' என்று சொன்னதற்கும், இவனைப் பார்த்தவுடனேயே கூச்சமும் குறுகுறுப்பும் ஏற்பட்டு, அவனை ஒரு விளிம்பிற்குத் தள்ளிக்கொண்டு வந்து அவனுக்கு சுவாரசியமேற்படுத்திய ஒரு மர்மமான வேறுபாட்டிற்கும் காரணம். ஆனால் இந்தக் காரோட்டியும், அந்த சீமாட்டியும் எப்படி இவன் ஒரு ஜிப்ஸிதான் என்று உடனே தெரிந்துகொண்டனர்? இவன் ஒன்றும் கையில் வயலின் வைத்துக்கொண்டு காதில் வளையம் மாட்டிக் கொண்டிருக்கவில்லை. மேலனுக்கு ஜிப்ஸிப் பெண்களை அடையாளம் கண்டுகொள்ள முடியும். அவர்களது கைக்கட்டையை, பளிச்சென்ற நீண்ட பாவாடையையும், நடைபாதையில் திடுத் திடுமென எம்பி, எம்பி நடக்கிற நடையையும் வைத்து சொல்லிவிடலாம். இவன் பார்வைக்கு, இந்த பிக்பாக்கெட் ஒரு போர்த்துக்கீசியனாகவோ, அல்லது இந்தியனாகவோ, இல்லை விட்டால் நேப்பிள்ஸைச் சேர்ந்த கருப்பர்களில் ஒருத்தனாகவோ இருக்கலாமென்று தோன்றியது. ஆனால் அந்த சீமாட்டியும் காரோட்டியும் பார்த்தவுடனேயே கண்டுபிடித்துவிட்டனர் - பண்டைய உலகின் உள்ளுணர்வால், இரத்தத்தில் இருக்கிற எச்சரிக்கை மணியால். ஆனால் இதெல்லாம் மேலனுக்கு, அவனது மூதாதையர்கள் அயர்லாந்திலிருந்தும், போலந்திலிருந்தும், ரஷியாவிலிருந்தும் கொண்டு வந்திருந்ததில் மிகச்சிறிய சீண்டலை மட்டுமே உண்டாக்கியிருந்தது.

இத்தகைய பிச்சைக்கார அபிப்பிராயங்களிலிருந்து பொதுவாக அவன் விலகியே இருந்தாலும் - தோளின் மேல் உப்பு, வாசற்கட்டையில் கட்டித் தொங்கும் வெள்ளைப் பூண்டு, வேட்டையாடிய கருப்பறவைகள், சிதறிய மது, ஸ்தம்பித்த கண்கள் - சிலமுறை அவனுக்கே வியப்பாக இருக்கும். இந்த அமெரிக்க வாழ்க்கையில் கொஞ்சகாலம் வாழ்ந்துவிட்டு வெளி வந்தாலே, ரத்தமெல்லாம் குழம்பி, பின் தீர்ந்துப்போய், சில அடிப்படை ஆதார குணங்களும், அல்லது சுயமாக இப்புராதன இச்சைகளின் கழிவு வழியிலேயே உதிர்ந்துவிடுமோ என்று தோன்றும்.

பிக்பாக்கெட்காரனின் ஈரமான தோல் ஜாக்கெட்டிலிருந்து மெலிதான மூத்திரவாடை வீசியது. மேலன் கண்ணாடியை சில அங்குலங்கள் கீழிறக்கியதும் புத்தம் புதுக்காற்று முகத்தைத் தாக்கியது. பரவசத்தில் கண்களை மூடி அனுபவித்தான். கண்களைத் திறந்ததும் கண்ணாடியில் காரோட்டி தன்னை கவனித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தான்.

நீ அல்பேனியாவைச் சேர்ந்தவனா? மேலன் கேட்டான்.

அந்தக் காரோட்டி மீட்டரைத் தட்டிக்காட்டினான். பதினெட்டு டாலர்கள் ஆகிவிட்டிருக்கிறதாம். இன்னமும் அவர்கள் விமான நிலையத்தை

அடையவில்லை. ரொக்கமாகத்தான் வேண்டும் மிஸ்டர் அமெரிக்கன், மாயாஜால அமெரிக்க கிரெடிட் கார்டுகளெல்லாம் கூடாது.

இன்னும் எவ்வளவு நாள் இருக்கிறது? தன் மார்பை இரு கைகளாலும் தாங்கிக் கொண்டு முன்னும் பின்னும் ஆடிக்கொண்டுவந்த பிக்பாக்கெட் காரனிடம் பேலன் கேட்டான். அவன் பதிலளிக்காமல் எதிரே வெறித்தான்.

சுகாரே, அல்பேனியனாகத்தான் இருக்க வேண்டும். பேலன் படித்த அந்தப் புத்தகத்தில், தனது சகோதரனைக் கொன்ற எதிரிகளின் குழுவைச் சேர்ந்த ஒருவனை அந்தப் பையன் கொன்றுவிடுகிறான். அவர்கள் இவனைக் கொல்வதற்கு காத்திருக்கின்றனர். இரத்த வெறிகொண்ட இந்தப் பழிவாங்கும் படலத்தின் ஆதாரமான காரணம் யாருக்குமே நினைவில் இல்லாமல், ஒருவரையொருவர் மாற்றி மாற்றி கொன்று கொண்டும், கொல்வதற்காகவே வாழ்ந்து கொண்டும் வருகின்றனர். இது ஒரு கடமையாக, கௌரவமாக, பெண்களைக் கவரும் தியாகமாக மாறிவிடுகிறது. வாழ்க்கையை அர்த்த மற்றதாக்கி மரணங்களே இலட்சியமாக நிறுத்தப்படுகின்றன. ஆனால் பேலனுக்கு ஞாபகத்தில் இப்போதும் இருப்பது அந்தப் பையனின் மலர்ச்சியான விழிப்புணர்வும், எப்போதும் தான் கொல்லப்படலாம் என்ற நிச்சயம் ஆழமாக வேரூன்றி, அதில் அவன் சலனமின்றி பிரகாசத்தை மட்டுமே எதிர்நோக்கும் அவனது மனப்பாங்கும்தான். முகத்தில் வெயிலைப் பரவவிட்டு, சுற்றுமுள்ள சுகந்தங்களை ஆழமாக இழுத்து சுவாசித்து, சுற்றிலும் வெள்ளிய கற்பாறைகள் சூழ்ந்திருந்த போதும் தனியனாக எப்போதும் உணராமல், அரவமற்ற சாலைகளில் அலைந்துகொண்டிருந்த அவனது அனாவசியப்போக்கு பேலனால் மறக்கமுடியாதிருந்தது. அவனைத் தொடர்ந்தே வந்துகொண்டிருந்த மரணம் அவன் மீதேறிச் சென்ற பிறகு, தனது இடத்தை மற்றுமொரு கொலைகாரச் சிறுவனுக்கு விட்டு வைத்துச்செல்கிறான்.

பேலன் அந்தப்புத்தகத்தை ரசித்துப் படித்தான் - ஆனால் குற்றவுணர்வோடு இந்தப் பிற்போக்கான வன்முறைக் கலாச்சாரத்தின் மீது இயல்பாக எழுந்த கவர்ச்சியை அவன் அடக்கிக்கொண்டான். முழுங்கை தூரத்திலேயே மரணம் காத்திருப்பதில் வாழ்க்கைக்கு ஒரு அர்த்தமும், அழகும் கிடைக்கிறது என்று சொல்லப்படுவதை அவனால் ஏற்க முடியவில்லை. பெரும்பான்மையோர் தாக்குதலைவிட பத்திரத்தையும், மரணத்தைப்பற்றிய தனிமையான தகவல்களைவிட - அப்படி ஏதேனும் இருக்கிறதா? - பாதுகாப்பான நிழலையும், மேஜையின் மேல் நல்ல உணவையுமே தேர்ந்தெடுப்பர் என்று அவனுக்குத் தோன்றியது. இவையெல்லாம் மதவாத, அழகியல் கோட்பாடு தன் மண்டிய ஒரு கதை என்றுதான் பேலனும் நம்பிக் கொண்டிருந்தான், அவையெல்லாமே அவனுக்கும் ஏற்படத்துவங்கும்வரை.

அவனது மகளுக்கு பதினொராவது பிறந்தநாள் கழிந்த சில நாட்களின் பின் தலைவலி தொடர்ந்து வரத்தொடங்கி, பிறகு மூளையில் புற்றுநோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அவள் அதன் பிறகு குணமடைந்து, கடந்த மூன்று வருடங்களாக சோதித்து வருவதில் அபாயமில்லை என்று தெரிந்து வந்தாலும், லூஸியின் அந்த கதிரியக்க, கீமோதெரபி சிகிச்சைகளின் நீண்ட தினங்களில் மேலனும் அவன் மனைவியும் அவளை இழந்துவிடப் போகிறோம் என்றே உறுதியாக நினைத்திருந்தனர். சியாராவுக்கு கசப்புணர்வு கூடிக்கொண்டே வந்தது. அந்த சித்ரவதை தினங்களில் எதுவும் சாப்பிடாமல், எதுவும் பேசாமல், வீட்டின் விருந்தினர் அறையிலேயே தன்னை குறுக்கிக் கொண்டு, அங்கேயே தூங்கிக்கொண்டு, தான் பிறந்திருக்கவே கூடாது என்றெல்லாம் சுயவெறுப்பில் அரற்றிக்கொண்டு, தன்னைத்தானே வெறியோடு துன்புறுத்திக் கொண்டிருந்தாள்.

மேலன் அதுபோலில்லை. அவனது மகளின் சுகவீன காலத்தில் வாழ்க்கை என்பது அதனளவில் தனக்கும் அவளுக்கும் கூட அற்புதமாகவே இருக்கிறதென்று ஸ்திரமாக அவனுக்கு உறைத்து வந்திருக்கிறது. இது சந்தோஷத்தையோ, நம்பிக்கையையோ அளிப்பதற்கு பதிலாக ஒருவித பொறுமையுணர்வை அவனிடம் உருவாக்கியிருந்தது. சியாராவின் விரக்திக்கு இதுதான் சரியான மாற்று பதிலாக அவன் வைத்திருந்தான். ஆனால் இதனை அவள் புரிந்து கொண்டு, அதற்காக வருந்தவும் செய்கிறாள் என்பதையும் அவன் அறிந்திருந்தான். லூஸிக்கு உடல் நலம் கெட்டுப்போன பிறகு அவன் மட்டும் தனது நிதானத்தை இழக்காதிருந்ததும், தன்னுடைய வேலையை முனைப்புடன் கவனிப்பதும், அவன் குரல், அவனது தோரணை, மேலும் அவனிடம் புதிதாகத் தோன்றியிருந்த சாப்பாட்டு மோகம் - இதனால் முதல் முறையாக அவனுக்கு தொப்பையே விழுந்துவிட்டது - இவையனைத்துமே அவளுக்கு அவன் மீது கோபத்தை உண்டாக்கி, மேலும் மேலும் விலகிப்போக வைத்துக் கொண்டிருந்தது.

ஒரு ஜனவரி பிற்பகலில், மருத்துவமனையையொட்டியிருந்த அந்த ஏரியின் கரையோரமாக நடந்து செல்கையில், கரிய அலைகள் வரிசையாக விளிம்பை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதைப் பார்த்த போதுதான் சியாரா தன்னை நேசிப்பதை நிறுத்திவிட்டாள் என்று அவனுக்குப் புரிந்தது. மறுபடியும் அவளுக்கு தன் மீது அன்பு திரும்புமா? அவனுக்குத் தோன்றவில்லை. காலமும் அவன் கணிப்பை உறுதி செய்தது. லூஸி நலமடைந்து திரும்பியதும் சியாரா அவனுடன் சந்தோஷமாக இருக்க முயற்சி செய்து பார்த்தாள்; ஆனால் அது அவளால் இயலவில்லை. அவளது அசௌகரியத்திற்கு, தான் அவளை மோசமாக நடத்திய அவமானவுணர்வுதான் காரணமென்று அவனுக்குப் புரிந்தது. ஆனால் இதனை சியாரா உணரமாட்டாள் என்பது

அவனுக்குத் தெரியும். புத்திசாலிதான்; நிரம்பப் படித்து, ஜெனீவா பல்கலைக்கழகத்தில் அரியவகை கைப்பிரதிகளை பாதுகாக்கும் பணியில் இருக்கும் அவளுக்கு சுயபரிசோதனை என்பது கைவராத ஒன்றாகவே இருந்தது. முக்கியமாக தன் சொந்த உணர்வுகளை அலசிப்பார்ப்பது. இன்றைய நடைமுறை பயன்பாட்டிற்கு ஒத்துவருகிற எதனையும் அவள் கேள்வி கேட்காமல் மதிப்பாள். அவ்வளவுதான். அவளது இந்த குணத்தை, தனது வீட்டில் நிச்சயம் செய்த மணமகளைத் துறந்துவிட்டு விடாப்பிடியாக தன்னை மணக்க அவள் போராடி ஜெயித்த போது அவன் வியந்து மகிழ்ந்திருந்தான். ஆனால் இப்போது அதே குணம் இன்றைய அவநம்பிக் கைக்கெல்லாம் காரணமாகியிருந்தது.

மேலனும் சியாராவும் பிரிந்து ஒரு வருடத்திற்கு மேலாகிவிட்டது. அவனும் லூஸியும் அந்த குடியிருப்பில் இருந்துகொண்டனர். அவனுக்குப் பக்கத்தில் ஒரு ஸ்டுடியோ இருந்தது. அவனும் லூஸியும் விரும்பிய போதெல்லாம் ஒருவரையொருவர் வந்து பார்த்துக்கொள்ளலாம் என்று திட்டம். நடைமுறையில் சியாராவின் பற்றற்ற நடத்தையால் அங்கே செல்வதே வேதனை தருகிற விஷயமாக மாறி, அவள் வருகை புரிவதே குறைந்து போக, லூஸி மட்டும் வந்து பார்ப்பதற்காக அவன் காத்திருக்க வேண்டியதாயிற்று. இவன் எதிர்பார்த்த அளவிற்கு அவள் அடிக்கடியும் வருகை புரிவதில்லை. அவளையும் குறைசொல்ல முடியாது. பள்ளி இருக்கிறது, சிநேகிதிகள், பையன்கள், அவர்களது இசைக்குழு - இப்படியெல்லாம் அவள் சந்தோஷமாக இருக்க வேண்டுமென்றுதானே அவனும் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தான்!

தனது நிறுவனத்தின் திட்ட மதிப்பீட்டாளராக பணிபுரிவதில் மேலனுக்கு வீட்டிற்காக நேரம் ஒதுக்க மிகவும் போராட வேண்டியிருந்தது. ஆனால் சமீபகாலமாக அந்தளவிற்கு வேலையில்லை. கடந்த இரு மாதங்களில் ஜெனீவாவில் வெறும் ஒன்பது நாட்கள் மட்டுமே செலவழித்திருக்கிறான், ஜிம்பாப்வேவிற்கும், உகாண்டாவிற்கும் போய்வந்ததற்கு மத்தியிலும். இந்த நாடுகளில் அவன் தங்கியதெல்லாம் மிகவும் விலையுயர்ந்த ஓட்டல்களில். பழுதடைந்த குளிர்சாதனங்கள், காலியான நீச்சல் குளங்கள், மணற்பைகள் அடுக்கி வைக்கப்பட்ட, இயந்திரத் துப்பாக்கியணிந்து காவலர்கள் நிற்கும் நுழைவாயில்கள், ஒட்டுக் கேட்கப்படும் தொலைபேசிகள். உள்ளூர் திட்ட மேலாளர்கள், வட்டார அரசு அலுவலர்களை வைத்துக் கொண்டு தமது விண்ணப்ப கோரிக்கைகளை அவனிடம் ஒப்பித்து களைப்படைய வைத்துக்கொண்டிருந்தனர். தமது புத்தம்புதிய லேண்ட் க்ரூஸர் கார்களில் அவனை வெட்டவெளிகளுக்கு அழைத்துச் சென்று அங்கே உருவாகப் போகும் மகத்தான திட்டங்களைப் பற்றி



பிரசங்கம் செய்தனர். அதன் பிறகு நீண்ட தொணதொணப்புகளுக்கிடையே [illegible] விருந்து. சிலவேளைகளில் பழங்குடியினரின் கேளிக்கை நிகழ்ச்சிகள்.

உண்மையில் எதுவும் மாறிவிடப்போவதில்லை. இந்தத் [illegible] ஒப்புதல் அளித்தே தீரவேண்டிய கட்டாயத்திலும், [illegible] செய்தவர்களைக் காப்பாற்ற வேண்டிய நெருக்கடியிலும் இ[illegible] மதிப்பீட்டாளர் வருகை புரிகிற போதும் அவன் பார்க்க [illegible] மனிதர்கள் அப்போது இருந்த அதே இடத்தில், வேகமாக [illegible] கார்களின் கருப்புக் கண்ணாடிகளில் கடந்து, கரைந்து போகி[illegible] இவர்களைப் போன்ற கணக்கற்றோர் அதே ஸ்திதியில்தான் [illegible] இருக்கப் போகின்றனர் என்பதால் கேளிக்குரியவர்களாயி[illegible] தில்லை. கேளிக்குரியவர்கள் இந்த தி[illegible] மேலாளர்கள்[illegible] அண்டு ஹெட்ஜெஸ் சிகரெட்டுகள், கார்டியர் [illegible] தங்க கைக்கடிகாரங்கள், ஆர்மனி கொலோன், வழுக்கிக்கொண்[illegible] இறங்கும் ஐரோப்பிய மதுவகைகளோடு மேலனை க[illegible] தீர்மானமில்லாத பெருமிதத்தோடும் உபசரித்து அவர்கள் இ[illegible] விருந்தினர்களைத்தான் கேளிக்குரியவர்களாக்கிவிடுகின்றனர். [illegible]

பங்காவோடு ஆய்வு நடத்தி, அனைவரையும் அலட்சியமாக ஒதுக்கி, அநாவசியத்திற்கு அவர்களை கவலைக்குள்ளாக்கிவிட்டு, தங்களை வல்லுநர்கள் போல சோதனை செய்து கொண்டு, அபத்தமான ஆலோசனைகளை உதிர்த்துக்கொண்டு, அதையும் அவர்கள் கவனமாகக் கேட்பதை ரசித்துக்கொண்டு, யதார்த்தத்தை சகித்துக்கொள்ளாமல் வெறும் வார்த்தைகளினால் மட்டுமே அவர்களைத் திருப்தியடையச் செய்து, தங்களைத் தாங்களே கேவலப்படுத்திக் கொள்கின்றனர். இத்தகைய வேலைக்காகத் தான் மேலன் நெஸ்லே, வில் தான் பார்த்துவந்த நல்லதொரு வேலையை விட்டுவிட்டு, பணம் சம்பாதிப்பதையும், புகழ்பெறுவதையும் இந்தளவிற்கு எளிய முறையாக்கி வைத்திருக்கும் ஓர் உலகத்திற்கு வந்து, தான் அடைந்து வரும் வெற்றிகளினாலேயே சங்கடமடைந்து கொண்டிருக்கிறான்.

வியா டிபர்டினா வந்துவிட்டது. காரோட்டி, மீட்டரைத் தட்டினான். நாற்பத்தியொரு யூரோக்கள் - எதுவும் பேசாமல் கண்ணாடியில் மேலனை உணர்ச்சியற்று முறைத்தான். கிடைக்கிற சந்திலெல்லாம் ஊளையிட்டுக் கொண்டு சீறிப்புகுந்து செல்லும் இரு சக்கர வாகனங்களைத் தவிர போக்குவரத்து நிதானமாகவே ஊர்ந்து கொண்டிருந்தது. பெட்ரோல் நிலையங்களும், ஆடையவிழ்ப்பு 'மால்'களும், தள்ளுபடி மரச்சாமான்கள் கடைகளும், கார் விற்பனைக் கடைகளும், படபடக்கும் கொடிக்கம்பங்களுமாக வரிசையிட்டு வந்தன. பிளாஸ்டிக் பைகளும், சகல விதமான குப்பைகளும் சாலையில் இறைந்திருந்தன. அவ்வப்போது கண்ணில்படும் ரோமானியச்சுவரும், தூரத்து வயல்களில் கால்வாய் பாலங்களின் வளைவுகளும் தென்படாவிட்டால் மேலனுக்கு ஒஹியோவில் இருப்பதாகவே தோன்றியிருக்கும்.

பிக்பாக்கெட் முன்னால் குனிந்து காரோட்டியிடம் ஏதோ கூறினான்.

எங்கே? என்றான் காரோட்டி.

பிக்பாக்கெட் சாலையின் மறுபுறத்திலிருந்த ஒரு சூப்பர் மார்க்கெட்டை சுட்டிக்காட்டினான். காரோட்டி வண்டியை சாலையின் இடது பக்கத்திற்கு ஒடித்து, அந்தப் பக்கப் போக்குவரத்தில் இடைவெளி பார்த்திருந்தான். ஒன்றன் பின் ஒன்றாக நெருக்கமாக வண்டித்தொடர்கள். அவனிடமிருந்து எந்த வார்த்தையும் எழாவிட்டாலும், தாடையில் தசைநார்கள் முறுக்கிக் கொள்வதை மேலன் கவனித்தான். ஏதாவதொரு வாய்ப்பிற்காக அவன் காத்திருப்பது தெரிந்தது. இரு, என்றான். அதே நேரத்தில் லாரி ஒன்று அவனுக்காக வேகம் குறைய, கிடைத்த இடைவெளியில் மின்னலாக செருகிக் கொண்டு, வண்டியை வளைத்து நிறுத்துமிடத்திற்கு கொண்டு வந்தான். அந்த அங்காடியையொட்டிச் செல்லும் ஒரு கரடுமுரடான சந்தை

பிக்பாக்கெட் சுட்டிக்காட்டினான். வண்டி குதித்து குதித்து [illegible] நுழைந்தது. இருபுறங்களிலும் [illegible], உடைசல்கள் [illegible] கடைகள். வெளியிட்ட மைதானம் ஒன்று [illegible] முடிவில் ஆரம்பித்தது. உள்ளே துருப்பிடித்துக் கொண்டிருக்கும் [illegible]. [illegible] சுற்றும் மிகப்பெரிய மரச்சக்கரங்களும் சிதறியிருந்தன. அந்த பாதைக்கு உகந்ததல்லாத வேகத்தில் அவன் ஓட்டிச் சென்றான். பள்ளங்களில் குதித்து குதித்து வண்டி ஏறக்குறைய மிதந்தது.

இன்னும், என்றான் பிக்பாக்கெட். இன்னும் கொஞ்சதூரம்.

மைதானத்திற்குள் வந்திருந்த அந்தப்பாதை ஒரு சேற்றுப் பரப்பிற்கு வந்து முடிந்தது. தூரத்தில் பல சிறிய டிரெய்லர்களும், வண்டிகளும் பூர்த்தி யடையாத குடியிருப்பு ஒன்றின் பக்கத்தில் நிறுத்தப்பட்டிருந்தன. கண்ணாடி களற்ற சன்னல்கள், தடுப்பில்லாத பால்கனிகள், கான்கிரீட் சுவர்களில் வரிவரியாய் மழை நீர் கறைகள். மழையைப் பொருட்படுத்தாது இரண்டு பையன்கள் பந்தை உதைத்துக் கொண்டிருக்க, இரண்டு ஓட்டைக் கார்களின் மீது ஒரு கும்பல் கொண்டு உட்கார்ந்து ஆரவாரித்துக் கொண்டிருந்தது. இவர்களுடைய வண்டியைப் பார்த்ததும் கீழே குதித்து இரைச்சலோடு ஓடி வந்தனர். உடைந்த உலோக பீப்பாய்களும், டயர்களும், பளீரென்ற வர்ணங்களில் பிளாஸ்டிக் கழிவுகளும், பேப்பர் கூளங்களும் குவிந்திருந் ததற்கு பக்கியில் நெளிந்து நெளிந்து இவர்கள் கார் சென்றது. அட்டைப் பெட்டி ஒன்றிற்குள் தலையை நுழைத்து எதையோ நக்கிக்கொண்டிருந்த ஓர் அழுக்கு குதிரைக்குட்டி இவர்கள் வண்டி நெருங்கியதும் விலகி வழி விட்டு, தன் பின்னங்கால்களை காற்றில் வெற்றாக உதைத்தது. ஒரு பையன் காரின் பானட் மேல் தாவி ஏறினான். அபாயகரமாகத் தொற்றிக் கொண்டு காரோட்டியின் முன்னால் கண்ணாடியில் தன் சேறுபடிந்த முகத்தை ஒட்டிக்கொண்டு சிரித்தான். வலுவான வெள்ளை வெளேர் பற்கள். காரோட்டி உணர்ச்சியற்று நேராக வெறித்துக் கொண்டிருந்தான்.

பிக்பாக்கெட்டும் அந்தப் பையனை கண்டுகொள்ளவில்லை. [illegible] பின்னிருக்கையில் எதையும் கண்டுகொள்ளாது [illegible] ஒரு [illegible] தன்னை அவனிடம் [illegible] ஒரு கட்டிடத்தைக் காட்டி அந்தப் பக்கம் என்று தளர்ந்த பாவனையில் கையைக் காட்டினான். வண்டி வேகம் குறைந்து நிற்க, அந்தப் பையன் வழுக்கி இறங்கி வெற்றி வீரன் போல முஷ்டியை உயர்த்திக் காட்டினான். அவனுடைய சகாக்கள் பெரிதாக சிரித்துக்கொண்டே ஓடிவந்து அவன் இடுப்பில் தூக்கினர்.

வண்டியிலிருந்து பிக்பாக்கெட் இறங்கியதும், அவர்களில் ஒருவன் சத்தமாகக்கூப்பிட்டான், மிரி! மற்றவர்களும் சேர்ந்துகொண்டனர் - மிரி

மிரி – ஆனால் எதுவும் அவன் காதில் விழுந்ததாகத் தெரியவில்லை. மேலனும் கீழே இறங்கினான். கடைசியாக அவனிடம் எதாவது சொல்லலாம் என்று முன் வந்தான். அவன் திரும்பி சில தப்படிகள் சென்று, பின்சென்று, தலையை தூக்கும் அனுஷ்டிப்பவன் போல குனிந்து கொண்டான். காரோட்டியிடம் மேலன், கொஞ்ச நேரம் காத்திரு, என்று கூறிவிட்டு பிட்பாக்கெட்டின் முழங்கையைப் பிடித்தான்.

இல்லை, இப்போதே பணத்தைக் கொடுத்துவிடு. நாற்பத்தியெட்டு யூரோக்கள்.

காத்திரு. மீட்டர் ஓடிக்கொண்டிருக்கட்டும். பணம் தருகிறேன்

அந்த நுழைவாயில் பிளாஸ்டிக் ஷீட்டால் திரையிடப்பட்டிருந்தது. அதை பிக்பாக்கெட் விலக்கினான். மேலன் உள்ளே பாதி நுழைந்து அவனை உள்ளே துருத்தினான். அது ஒரு கான்கிரீட் பொந்து. கூரையிலிருந்து தொங்கும் கெரஸின் விளக்கொளியில் உடைந்த ஓடுகள் மின்னின. ஸ்டவ் அடுப்பின் மேல் வைக்கப்பட்டிருந்த உலோகப்பாத்திரத்தில் ஒரு வயதான ஜிப்ஸிப்பெண் கிளறிக் கொண்டிருந்தாள். இவர்கள் உள்ளே நுழைந்ததும் அடுப்பைவிட்டு விலகி, பக்கத்திலிருந்த திண்ணையை துணியால் துடைத்துக் கொண்டே நிமிர்ந்து அவர்களை நோக்கினாள். அவளது கரிய முகத்தில் உழுத மாதிரி ஆழமான சுருக்கங்கள். பளிச்சிடும் சிறிய கண்களுக்கடியில் குளுப்பையாக தொங்கிக்கொண்டிருந்தன. ஒரு தோள்பட்டை மட்டும் மற்றதைவிட உயர்ந்திருந்தது – குலுக்கிக் கொள்ளும்போது பாதியில் நின்றதைப்போல.ஆழமான ஒரு குரலில் அவள் ஏதோ சொன்னது மேலனுக்கு விளங்கவில்லை. பிக்பாக்கெட் பரிதாபமாக முனகிக்கொண்டே ஒருபுறமாக சரிய முற்பட்டான். அந்தக் கிழவி துணியை தொட்டிக்குள் எறிந்துவிட்டு, தன் உடையில் கைகளைத் துடைத்துக்கொண்டு, அந்த முன்னறையிலிருந்து தள்ளிருந்த இருட்டான கூடத்திற்கு அவர்களை போர்வைத்திரையிட்ட வாசல்வழியாக செலுத்தினாள். அந்தப் போர்வையை அவள் தூக்கிப் பிடித்துக் கொண்டதும் மேலன் அந்த பிக்பாக்கெட்டின் முழங்கையை விடுவித்தான்.

சரி உன் வீட்டிற்கு வந்தாகிவிட்டது, என்றான். பிக்பாக்கெட் எதுவும் பேசாமல் குனிந்து உள்ளே சென்றான்.

அந்தக் கிழவி போர்வையை தொடர்ந்து தூக்கிப்பிடித்துக் கொண்டிருந்தாள். அவனைப் பார்த்து உள்ளே செல்லுமாறு தலையை அசைத்தாள்.

இல்லை, இருக்கட்டும், என்றான்.

அவந்தி, என்றாள் பொறுமையின்றி. அவள் தங்கப்பற்கள் பளிச்சிட்டன.

மேலன் உள்ளே சென்றான்.

இந்த சங்கடத்தை உவப்புடன் ஏற்றுக்கொள்ளும் தனது தற்போதைய இணக்கத்தை நினைத்து மேலன் வியந்தான். ஏன்? எதை எதிர்பார்க்கிறான் அவன்? வாசலைத்தாண்டுகையில் அவன் வயிற்றிற்குள் பிடிச்சிட்டுக் கொண்டது. நிச்சயம் இந்த அறையை அவன் எதிர்பார்க்கவில்லை. அடங்கிய வெளிச்சத்தில், மூலையில் அமைக்கப்பட்டிருக்கும் கச்சிதமான படுக்கை, பளபளவென்ற மஞ்சள் நிற சோஃபா, அதற்கு பொருத்தமான நாற்காலி, செயற்கையான பனைமரம் ஒன்று. இம்மாதிரி ஓர் அறையையோ, அவனையே உற்றுப் பார்த்துக்கொண்டிருக்கும் இரண்டு அழகான குழந்தைகளையோ எதிர்பார்க்கவில்லை. அச்சிறுமிக்கு எட்டு அல்லது ஒன்பது வயதிருக்கலாம்; பையன் கொஞ்சம் பெரியவன். இருவருமே ஒல்லியாக, பெரிய கரிய விழிகளுடன் அழகாக இருந்தனர். பிக்பாக்கெட்டின் இரு பக்கத்திலும் நின்றிருந்தனர். அந்தப்பெண் அவனது கையை அணைத்துக் கொண்டு அவன் மேல் சாய்ந்து கொண்டாள். அந்தக் கிழவி மேலனைக் கடந்துபோகும் போது அவர்கள் பின்னகர்ந்து கொண்டனர். அவள் பிக்பாக்கெட்டின் தோல் ஜாக்கெட்டை முரட்டுத்தனமாக உலுக்கிக் கழற்றினாள். அந்த மேற்சட்டையை எடுத்தவுடன் அவன் மேலும் சிறியவனாக, குள்ளமாகத் தெரிந்தான். முணுமுணுத்துக் கொண்டே அவனை படுக்கைக்கருகே நெட்டித் தள்ளிக் கொண்டு, அந்தச் சிறுமியிடம் ஏதோ கூற அவள் அவனை படுக்கையில் கிடத்துவதற்கு கைத்தாங்கலாக உதவினாள். பிறகு மண்டியிட்டு அவனது சிறிய காலணிகளைக் கழற்றினாள்.

அந்தக் கிழவி இடுப்பில் ஒரு கையை ஊன்றிக் கொண்டு கவனித்தாள். பின் மேலனை நோக்கித் திரும்பினாள். உட்காருங்கள்! என்றாள். அவன் எதுவும் பதிலளிக்குமுன் அந்த மஞ்சள் நிற நாற்காலியை சுட்டிக்காட்டினாள். அவள் பேச்சிற்கு கீழ்படிந்து அவன் அமரும் வரை காத்திருந்து, இருங்கள்! என்று சொல்லிவிட்டு வெளியேறினாள்.

பிக்பாக்கெட் மல்லாந்து படுத்திருந்தான். ஆழமாக தூங்கவிட்டான். அந்தப் பெண் படுக்கையின் கால்மாட்டிலிருந்து மேலனையே பார்த்துக் கொண்டிருந்தாள். பையன் அறைக் கோடியிலிருந்த பெரிய சன்னலுக்குப் பக்கத்தில் நின்று கொண்டு அவனை கவனித்துக் கொண்டிருந்தான். அந்த சன்னல் பிளாஸ்டிக் தாளில் மூடப்பட்டு அதன் வழியாக மங்கலாய் ஒரு சாம்பல் வெளிச்சம் கசிந்துகொண்டிருந்தது. அந்தப் பெண்ணிற்கு மெல்லிய, நீளமாக எலும்பு துருத்திக்கொண்டிருக்கும் கைகள். [illegible] டி-சர்ட் அணிந்திருந்தாள். மேலன் அவளைப் பார்த்து புன்னகைத்தான்.

உன் அப்பாவா? பிக்பாக்கெட்டை தலையால் சுட்டிக்காட்டிக் கேட்டான்.

பதில் இல்லை. ஆனால் மேலனை நோக்கி ஒரு அடி எடுத்து வைத்தான்.

மாமா?

அந்தப் பெண் கூட இருந்தப் பையனைத் திரும்பிப் பார்த்து பெரிய மனுஷத்தனமாக வாய்விட்டு சிரித்தாள். டி-ஷர்ட்டின் காலரை உயர்த்தி தன் வாயின் மீது முகத்திரை போல அமைத்துக் கொண்டு தலையைக் குனிந்து அவனை கீழ்பார்வை பார்த்தாள்.

கிழவி வெளியே எங்கிருந்தோ கூப்பிடுவது கேட்டது. அப்பெண் விழிகளை தயக்கத்துடன் தாழ்த்திக்கொண்டு, கைகளை இடுப்பிற்கு குறுக்காக கோர்த்துக்கொண்டு சிறிய தளுக்கான நடையில் பாதங்கள் பிணைக்கப் பட்ட ஜப்பானிய நாட்டியக்காரி மாதிரி அறையைக் கடந்து சென்றாள். அப்பையன் தொடர்ந்து முறைத்துக்கொண்டிருந்தான். மேலன் எழுந்து சென்றுவிட யோசித்தான். ஆனால் அந்த நாற்காலி மெத்தென்று ஆழமாக இருந்தது. தனது யத்தனிப்பை சேகரித்துக்கொண்டு எழுவதற்குள் அப்பெண் கையில் ஒரு தட்டில் பிரிக்கப்பட்ட சாக்லெட்டுகளும், ஒரு பிளாஸ்டிக் பாட்டில் கோகா-கோலாவுடன் திரும்ப வந்து அவனெதிரே நின்றாள். மேலன் தலையை ஆட்டி வேண்டாமென்று மறுத்தான். அந்தப் பெண் தொடர்ந்து நீட்டியபடி அவன் கண்களுக்குள் பார்த்தாள். அவள் தலையை அசைத்து நிர்ப்பந்தித்தது மறுக்க இயலாதிருந்தது. அவன் கோக்கை எடுத்துக்கொண்டான். அது வெதுவெதுப்பாக இருந்தாலும் வாயில் நுரையாக நிரம்பியது. அவனும் தலையை அசைத்து, ரசிக்கிற மாதிரி பாவித்து தலையைப்பின்னால் சாய்த்து கண்களை மூடிக்கொண்டாள். தரையில் பாட்டிலை வைத்தான்.

பிக்பாக்கெட் முனகிக்கொண்டே சுவர் பக்கம் புரண்டான். அவன் குரல் ஏதோ விவாதத்தில் போல உயர்ந்து பின் தேய்ந்தது. அவள் அவனைத் திரும்பிப்பார்த்துவிட்டு அந்தப் பையனைப் பார்க்க, அவன் மேலனின் நாற்காலிக்குப் பக்கத்திற்கு நழுவி வந்து நின்றான். மேலனின் கால் முட்டியின் மீது அந்தப் பெண் திரும்பிச்சாய்ந்து நின்று கொண்டு சீரான இடைவெளியில் பந்தினால் தட்டுகிற மாதிரி விட்டு விட்டு இடித்துக் கொண்டிருந்தாள். சட்டென்று தோன்றியவனாக அந்தப் பெண்ணின் இடுப்பைப் பிடித்து இழுத்து தன் மடிமேல் தூக்கி உட்காரவைத்துக் கொண்டான். தனியாக நின்றுகொண்டு கவனிக்கும் அந்தப் பையனைத் திரும்பிப் பார்த்தான். அவனையும் வாங்கி மடியில் சேர்த்து உட்கார்த்திக் கொண்டான். இது மிக இயல்பானதாகவே இருந்தது அவனுக்கு.

அவர்களுக்கும் அப்படியே இருந்திருக்க வேண்டும். மெல்லியதாக, நூல்மாதிரி கிடக்கும் இவர்கள் அவன் மடியில் சௌகரியமாக தம்மை அமைத்துக்கொண்டு அவன் மார்பின் மீது தலைகளை சாய்த்துக் கொண்டனர். மேலிருந்து பார்க்க இருவருமே ஒன்றாகத் தெரிந்தனர். இனிமையாக ஒரு மண்வாசனை அவர்கள் கேசத்திலிருந்து எழும்பியது. பிக்பாக்கெட் மீண்டும் புரண்டான். அவனிடமிருந்து குறட்டை ஒலி கிளம்பியது. அந்தப் பையன் கிசுகிசுப்பாக, மிரி! என்றான். தொடர்ந்து மிரி மிரி மிரி என்று கள்ளக் குரலில் ஜெபித்தான். அவனைப் போலவே மூக்கால் குறட்டை சத்தம்போல பண்ணிக்கொண்டு அவ்வப்போது கமறியும் காட்டினான். அந்தப் பெண்ணின் உடல் குலுங்கியது. கைகளை வாயின் மேல் பொத்திக்கொண்டு, பிரிந்த விரல்களூடாக அடக்க முடியாமல் சிரித்தாள்.

மேலன் தலையை பின்னால் சாய்த்துக்கொண்டான். களைப்பாக இருந்தான். அந்த நாற்காலி சௌகரியமாக இருந்தது. அந்தக் குழந்தைகள் கதகதப்பாக, பரிச்சயவுணர்வோடு அவன் மீது பொதிந்திருந்தனர். கண்களை மூடிக்கொண்டான். அந்தப் பையனும் பெண்ணும் அசைவற்றிருந்தனர். அவர்கள் மூச்சுவிடுவதை மேலன் உணர்ந்தான். மேலோட்டமான இளம் சுவாசிப்பு. இரண்டும் விநோதமாக ஒன்று போலவே பொருந்தியிருந்தது. இவர்கள் இருவரும் இரட்டையரோ என்று ஓர் எண்ணம் தோன்றியது. இரட்டையர்களின் அல்லது இரட்டைப்பிறப்பின் மர்மத்தை யோசிக்க யோசிக்க, அவன் முதலில் பார்த்த, கூடவே வளர்ந்த இரட்டையர்களின் ஞாபகம் இவ்வளவு வருடங்கள் கழித்து முதன் முதலாக வந்தது. ஜெர்ரி-டெர்ரி. அல்லது ஜெர்ரி-லேரியா? எண்ண இழை அத்துடன் அறுந்து அலைய, அவன் மிதந்துகொண்டே, பிக்பாக்கெட்டின் குறட்டை தன்னுடையதாகவே மாறி ஏறக்குறைய அவனுக்கே கேட்க, தனக்குள்ளேயே புதைந்து போனான். இது எவ்வளவு நேரம் நீடித்தது என்று அவனுக்கே பிறகு வியப்பாக இருந்தது. அதிக நேரமிருக்காது என்றேதான் நினைத்தான். அந்தக் குழந்தைகள் அவன் மீதிருந்து கீழே இறங்குவதையுணர்ந்து மனசேயில்லாமல் கண்களைத் திறந்தான். மணிக்கணக்காக தூங்கி எழுந்ததைப் போல புத்துணர்ச்சியுடன் உணர்ந்தான்.

அந்தக் கிழவி நாற்காலிக்கெதிரே நின்றிருந்தாள். வெளியே ஒருவன் உங்களைக் கூப்பிடுகிறான், என்றாள்.

வியா டிபர்டினாவிற்கு அவர்கள் திரும்பி வந்தபோது, ரோமின் மையப் பகுதியிலிருந்தும், மேலனின் ஓட்டலிலிருந்தும் அது கணிசமான தூரமாக இருந்த போதிலும் எண்பது நிமிடங்கள் மட்டுமே ஆகியிருந்தது. மேலன் மார்பில் கையை வைத்து அழுத்திப்பார்த்தான். காசோட்டி கண்ணாடியின்

இவன் செய்கையைப் பார்த்து விழிகளை உயர்த்தினான். மேலன், மழை துடைக்கக் கண்ணாடிக்கு வெளியே எதையும் வெளிக்காட்டாமல் பார்த்தான். கணங்கள் கடந்தன. மேலன் மிகையாக கொட்டாவி விட்டுக் கொண்டே, சோம்பல் முறித்துக் கொள்கிற சாக்கில் நீட்டியும் குறுக்கியும் பார்த்துக் கொண்டே சோதித்துக் கொண்டான். அவனது பணப்பை போய்விட்டிருப்பது உறுதியாகியது.

எனக்கு ஒரு பிரச்சனை.

காரோட்டியின் பார்வை சாலைக்கும் கண்ணாடிக்குமாக தாவியது.

எனது பர்ஸைத் தவறவிட்டுவிட்டேன்!

என்னது?

என் பணப்பை காணோம்!

உங்களிடம் பணமில்லை என்று சொல்ல வருகிறீர்களா?

என்னிடமா? அப்படியில்லை. ஓட்டலில் வாங்கித்தர முடியுமென்று நினைக்கிறேன். அவர்கள் எனது பில்லிலிருந்து முன் பணமாகத் தந்தால்.

காரோட்டி முன்னால் குனிந்து மழைக்குள் எதையோ தேடினான். திரும்புவதற்கான விளக்கைப் போட்டான்.

இன்று எனக்குக் கிடைக்கிறதோ என்னவோ, நாளை நிச்சயம் கிடைக்கும். காலையிலேயே! ஜெனீவாவைக் கூப்பிட்டுப் பேச வேண்டும். அவ்வளவு தான். மேலனுக்கே தான் பேசுவது மோசடிக்காரனின் குழறலாகப்பட்டது. எப்படியும் உனக்குரிய பணத்தை நான் தந்துவிடுவேன், என்றான்.

உனக்குத் தெரியும், என்றான் காரோட்டி,

என்ன? என்ன சொன்னாய்?

பதில் இல்லை. காரோட்டி சாலையின் ஓரத்திற்கு கொண்டு வந்து நிறுத்தினான். அவனது தீர்மானித்த நடத்தையிலும், மௌனத்திலும், கழுத்துப் புடைப்பிலும் ஏதோ பயங்கரம் கலந்திருந்தது. கைகளை ஸ்டீயரிங் மேல்வைத்து நேராகப் பார்த்தபடி அமர்ந்திருந்தான். மிஸ்டர் அமெரிக்கன், என்றான். பற்களுக்கிடையில் ஏதோ சத்தமெழுப்பினான். கார்கள் கடந்து சென்றன. கூரையில் மழை மேளமடித்தது. மேலன் எதாவது சொல்ல விரும்பினான். பயமாக இருந்தது. எந்த வார்த்தையை வெளியிட்டாலும்

காரோட்டியின் கோபம்வெடித்துச் சிதறிவிடுமோ என்ற பயம். அப்படி மேல தான் பேசுகிற உரிமையை இழந்து விட்டதாக உணர்ந்தான்.

வெளியே போ, என்றான் காரோட்டி.

உனக்குப் பணத்தைத் தந்துவிடுவேன் ஸின்யோர் கதாரே.

காரிலிருந்து தன்னை பிரித்தெடுத்துக் கொண்டு கதவை மூடுவதற்குள் அவனது கால்சராய்கள் ஈரமாகி கால்களோடு ஒட்டிக் கொண்டன. காரோட்டி சீறிக்கொண்டு கிளம்பியதும்தான் குடை ஞாபகம் வந்தது. மேல் கோட்டை அவிழ்த்து தலைக்கு மேலாகப் பிடித்துக்கொண்டான். சாலையோரம் கொஞ்ச தூரம் நடந்தான். காற்று மழையோடு முகத்தில் அறைந்ததும் திரும்பி நடந்தான்.

எதனால் அந்தக் காரோட்டி அப்படிச் சொன்னான்? உனக்குத் தெரியும்? என்ன தெரியும்? எதனால் என்னை சிக்க வைத்து நிராயுதபாணியாக்குகிற வார்த்தைகளை பதில் பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தேன்? மேலனுக்குத் தெரிந்தது என்ன என்பது காரோட்டிக்குத் தெரிந்திருக்காது. ஆனால் மேலனுக்குத் தெரிந்தது என்னவென்பது மேலனுக்குத் தெரியும். காரோட்டியின் குற்றச்சாட்டால்தான் அதுவே மேலனுக்கு உறைத்தது. ஆனால் அந்த அறையில் அது நிகழ்ந்த போது - தூக்கத்திலல்ல - அந்தக் கரம் மார்பின் குறுக்காக, சட்டைக்குள் ஜாக்கெட்டுக்குள் நந்தோ நுழைந்து, திருட்டுத்தனமான தடவலில் பர்ஸைத் தேடியெடுத்துக் கொண்டு சடுதியில் வெளியேறியதும், அதன் பிறகு ஏதோ பவுண்ட் கணக்காக இருந்தது போனதைப் போல கனமிழந்து உணர்ந்ததும் ... விநோதம்!

தொலைவில் இடி நறநறவென்று முறிந்தது. வீசும் மழை அவன் சட்டையை முதுகில் பிளாஸ்திரி போட்டதைப் போல ஒட்ட வைத்து எதிரே வரும் வண்டிகளின் முகப்பு விளக்குகளைப் பிரதிபலித்தது. ஏதோ யோசனையில் கட்டைவிரலை உயர்த்தி கையை நீட்டினான். கல்லூரி தினங்களுக்குப் பிறகு அவன் லிஃப்ட் கேட்டு வண்டி மாறிமாறிச் சென்றதில்லை. ஒருவேளை இப்போது அணிந்திருக்கும் உடைகளால். அல்லது வண்டியோட்டிக்கு, ஏமாற்றுவதற்காக போட்ட வேஷமாகக்கூட அதுபடலாம். அபாயம்! ஆனால் தொப்பலாக அவன் நனைந்திருப்பது எல்லோருக்கும் தெரியும். தானே இது போல ஒருவனுக்கு லிப்ட் தந்திருப்போமா? கொஞ்ச நேரத்தில் முயற்சியை கைவிட்டு திரும்பி நடக்கத் தொடங்கியதும், சற்று தூரத்திலேயே ஒரு கார் நிற்பதையும் அதன் பின் பக்கத்து சிவப்பு விளக்கு களையும், அதிலிருந்து ஒருவன் விரித்த குடையுடன் இறங்கி அவனை நோக்கி ஓடிவருவதையும் பார்த்தான்.

அது அந்த கார்ரோட்டி. குட்டையான கால்களில் நொண்டிக்கொண்டு வந்தான். மேலனுக்கருகில் வந்து குடையை அவன் தலைக்கு மேலே பிடித்தான். காற்றில் குடை அலைக்கழித்து புரண்டது.

ரொம்பவும் தாமதாகிவிட்டது, என்றான் மேலன்.

தயவுசெய்து வேண்டாம், என்று பயனின்றி மேலனின் தலைக்கு மேல் பிடித்தான். வாருங்கள், தயவு செய்து வாருங்கள். மேலனை அழைத்துக் கொண்டு காருக்கு அழைத்துச் சென்றான். கதவைத் திறந்துவிட்டான். அவன் மீண்டும், தயவு செய்து, என்ற கூறமுற்பட மேலன் தயங்கினான்.

மேலன் உள்ளே ஏறினான். காரோட்டி போக்குவரத்திற்குள் நுழைய, பணம் தந்துவிடுகிறேன், என்றான் மேலன்.

வேண்டாம். 'பணம் வேண்டாம். பாருங்கள்! மீட்டரைத் தொட்டுக் காண்பித்தான். அது நிறுத்தப்பட்டிருந்தது.

அபத்தம்! நிச்சயம் நான் பணம் தந்து விடுவேன்.

இல்லை. ஒரு பரிசு. ஆனால் தயவு செய்து புகார் செய்துவிடக்கூடாது, என்ன?

மேலன் அந்த மனிதனின் கண்களை கண்ணாடியில் கவனித்தான். ஆ, என்றான்.

புகார் கூடாது. ம்?

புகார் இல்லை. ஆனால் கண்டிப்பாக பணம் தருவேன்.

உங்களுக்கு என் பரிசு. அமெரிக்கன், இல்லையா? கலிஃபோர்னியாவா?

மேலன் இதனை எளிதாக்க விரும்பி, ஆம், என்றான். ஒஹியோ என்று சொல்வது கேட்பவர்களைக் குழப்பி விடுகிறது. மேலும் அங்கே இருந்து வருடங்களாகின்றன.

என்ன கார் வைத்திருக்கிறீர்கள்? செவர்லே? இந்த வாடகைக் கார் என் மாமனாருடையது. மிக்கேல். அவருக்கு உடல்நலமில்லை. பணக்கஷ்டம் அதுதான்.

அந்தக் காரோட்டி தொணதொணத்துக்கொண்டேயிருந்தான். அவன் மாமனாரின் உடல் நலக்குறைவு, அவன் சகோதரியின் நோய், வாடகை வண்டி உரிமத்தில் உள்ள பிரச்சனை. பேசும் போது கண்ணாடியில் மேலனின்

ஒப்புதலை சரிபார்த்துக்கொண்டு வந்தான். அவன் பேசுவது கிட்ட மேலாளர் ஒருவர் சமாதானங்கள் கூறுவதைப் போல, ஒப்பந்தத்தை வென்றெடுக்க முனைகிறாற்போல பேசுவதுக்குத் தோன்றியது. [illegible] வும், ஏமாற்றமாகவும் இருக்கிறது. [illegible] னாகவும், வெறி தணிக்க முடியாமல் பழிவாங்கப் புறப்பட்ட அல்பேனிய னாகவும் அவனை நினைத்து பயந்ததற்கு இது போதும்.

ஒட்டலுக்கு எதிரே அவர்கள் வந்து நின்றதும், மழை விட்டு, வாயில் காப்போன் மாலை வெளிச்சக் கதிர்களிலிருந்து தன் கண்களை மறைத்துக் கொண்டு முன் வந்தான். காரோட்டி கீழே இறங்கி, அவனை முந்திக்கொண்டு கதவை மேலனுக்காகத் திறந்து, பெண்ணிற்கு நீட்டுவதைப் போல் தன் கையை நீட்டினான். மேலன் பொருட்படுத்தாது சாபமாக வெளியே வந்தான்.

சரியா? காரோட்டி கேட்டான். உங்கள் குடை, எங்கே உங்கள் குடை? மேலனை ஒதுக்கிவிட்டு காருக்குள் குனிந்தான். இதோ! நண்பர்கள் நாம், சரியா?

புகார் செய்யப்போவதில்லை, என்றான் மேலன்.

வாயில் காப்போனிடம் காரோட்டி, மிஸ்டர் கலிஃபோர்னியா என்று அறிமுகப்படுத்தினான். ஹாலிவுட்! சரியா?

அ,ம், என்றான் மேலன். ஹாலிவுட்.

டோபியாஸ் உல்ஃப்

1945ல் அலபாமாவில் உள்ள பர்மிங்ஹாமில் பிறந்த வர். அமெரிக்க நவீன எழுத்தாளர்களில் குறிப்பிடத் தகுந்தவர். பெரும்பாலும் சிறுகதைகளையே கடந்த 20 வருடங்களாக எழுதி வந்த இவரது இரு நாவல்கள் சமீபத்தில் வெளிவந்துள் ளன. "எனது பெரும்பான் மையான படைப்புகள் ஏதோ ஒரு விதத்தில் என் சொந்த அனுபவங்களிலிருந்தே எடுக்கப் பட்டவையாக இருக்கின்றன. ஓட்டலில் வெயிட்டராக, பேருந்து ஊழியனாக, காவல்காரனாக, நான்கு மாதங்கள் பத்திரிகை நிருபராக, நான்கு வருடங்கள் ராணுவத்தில் என்று என்னென்னவோ வேலை பார்த்திருக்கிறேன்" என்று குறிப் பிடும் உல்ஃப் வியட்நாம் போரின்போது விருப்பமேயின்றி சிறப்பு படை அதிகாரியாக பணி யாற்றியிருக்கிறார். அந்த அனுபவங்களைப் பற்றி In Pharoahs' Army என்ற தலைப்பில் நினைவுக் குறிப்புகளாக எழுதியுள்ளார்.

"ஃபாரோவின் ரதங்கள் விழுங்கப்பட்டன. அவனது குதிரைப் படை வீரர்கள் குழம்பினர். அவரது எல்லா மகத்துவமும் நிலைதெரியாது வீழ்ந்தன. அது ஒரு மலக்குழி" என்று அந்த வியட்நாம் போர் தினங்க ளைப் பதிவு செய்கிறார்.

"நவீன சிறுகதை பல்வேறு வேடங்களைப் பூண்டு, பல்வேறு பட்ட உள்நோக்கங்களைக் கொண்டு வந்து கொண்டிருக்க, இந்த பலதரப்பட்ட மந்தையின் மேய்ப்பாளராக இருக்கக் கூடிய தகுதி டோபியாஸ் உல்ஃபிற்குத்தான் இருக்கிறது" என்று இவருக்கு 1989ம் வருடத்திய ரியா விருது வழங்கப் பட்டபோது நடுவர்களாக இருந்த ஸ்டான்லி பெர்கும் லின்ட் மைகேல் கர்டிஸ்ஸூம் குறிப்பிடுகின்றனர்.

இவரது சிறுகதை தொகுப்புகள்: In the Garden of the North American Martyrs, Back in the world, The Night in Question.

சிராகூஸ் பல்கலைக்கழகத்தில் Writer - in - residence ஆக பணிபுரியும் டோபியாஸ் உல்ஃப் தன் மனைவி யோடும் மூன்று குழந்தைகளோடும் நியூயார்க்கில் வசித்து வருகிறார்.

ஐரீஸ் முர்டாச்

துயரத்தின் சகோதரி



ரிச்சர்ட் அட்டன்பரோ தயாரித்து இயக்கிய 'துண்டிக்கப் பட்ட தலை.' (The Severed Head) திரைப்படத்தை 1991ல் தான் (அது வெளிவந்து 24 வருடங்கள் கழித்து) பார்த்தேன். காட்சிரூபங்கள் நிம்மதியற்ற மனநிலையை அளித்த போது அது ஒரு நாவலின் தழுவல் என்பதை அறிந்து, ஐரீஸ் முர்டாச்சின் The Severed Head நாவலை தருவித்து வாசித்த போது ஒரு எழுத்தாளருக்கும் வேறு ஊடகமான திரைப்பட வடிவத்திற்கும் இருக்கும் வேற்றுமை ரொம்பப் படுத்தியது. ழீன் பால் சாத்தரையும்

இரா. நடராசன்

கட்டுரை



சாத்தர்

சிக்மண்ட் பிராய்டையும் குழைத்து ஐரீஸ் முர்டாச் அளித்திருந்த அதிர்ச்சி வைத்தியம் அவரது மற்ற படைப்புகளின்பால் ஈர்ப்பை ஏற்படுத்தி, பார்க்கும் நண்பர்களுக்கெல்லாம் அவரை சிபாரிசு செய்தேன். The Severed Head ஒரு பெண் எழுத்தாளரின் படைப்பு என்பதே நம்ப முடியாத அதிர்ச்சியாய் இருந்தது. ஆனால் அதைவிட பெரிய அதிர்ச்சி அந்த 1994லிலேயே ஐரீஸ் (Alzhemiers diseas) எனப்படும் 'நினைவிலி' நோயின் ஆரம்ப அறிகுறிகளால் தாக்கப் பட்டிருந்தார் என்பத. இன்றைக்கும் கூட உளயிவியலின் ஒரு அரைவேக்காட்டு கடைசி பெஞ்ச் மாணவனாக என்னைக் கருதும் நான் தொன்னூறுகளின் இறுதியில் அல்கொய்மிர் நோய் குறித்தும் அதன் பின் விளைவுகள் குறித்தும் வெளிவந்து கொண்டிருந்த ஆங்கிலக் கட்டுரைகள் சிலவற்றை மொழி பெயர்க்கத் தூண்டப்பட்டேன். எழுத்தாளர் தொகுதி எனும் (Writers Block) உளவியல் பதம் கொடுத்த கூடுதல் ஆர்வத்தாலும் தனது அக்கறை விஷயங்களையும் விசேஷங்களையும் மெல்ல மெல்ல மறந்து குழந்தை மன நிலைக்குக் கீழாக எப்படி ஒருவரது மூளை ஒருவரை மறதிக்குத் தள்ளிவிடுகிறது என்பதை புரிந்துகொள்வதிலிருந்த சொல்களாலும் அக் கட்டுரைகளின் பால் ஈர்க்கப்பட்ட நான் அங்கே ஐரீஸ் முர்டாச் எனும் பெயரை அல்சொய்மிர் நோயாளிகளில் ஒரு ஆய்வு-நபராக (அப்படிப்பட்டவரை Subject என்று அழைக்கிறார்கள்) குறிப்பிடப்பட்டதைக் கண்டு நண்பர்களிடம் காட்டிக் காட்டி அதிர்ச்சியைப் பகிர்ந்து கொண்டேன்.

1958ல் தொடங்கி 1995 வரையில் ஐரீஸ் முர்டாச் இருபத்தி ஏழு நாவல்களும் தத்துவம் சார்ந்த ஆழமான- குறிப்பாக எக்ஸிஸ்டென்ஷியலிஸம் சார்ந்த ஆறு கட்டுரை தொகுதிகளையும் நான்கு விரிவான நாடகங்களையும் எழுதி வெளியிடும் அளவிற்கு தீவிர வாசக பரப்பைக்கொண்டிருந்தார். மிக அதிக எழுத்துப் பரப்பைக் கொண்டிருந்த தத்துவப் புரிதல் கொண்ட ஒரே பெண் எழுத்தாளராக பல விமர்சகர்களால் ஏற்கப்பட்டவர் ஐரீஸ்.

ஐரீஸ்ஸின் நாவல்களில் குறிப்பிடத்தக்கவை (நான் வாசித்தவரையில்) The Unicorn(1963), A fairly Honourable defeat(1970), The Black prince(1973) மற்றும் புக்கர் பரிசு பெற்ற The Sea The Sea(1978). ஐரீஸ் முர்டாச்சின் முதல் நாவல்

அண்டர் தி நெட் 1954ல் வெளிவந்தது. ஆனால் அது அவரது முதல் நூல் அல்ல. அதற்கு முன்னதாகவே 1953ல் சார்த்தரைப் பற்றிய 'ரொமாண்டிக் ரேஷனலிஸ்ட்' கட்டுரைத் தொகுதி வெளிவந்து விட்டிருந்தது. தொண்ணூறுகளில் மறுபதிப்பு செய்யப்பட்டபோதுதான் அது பலருக்குத் தெரியும்.

மகிழ்ச்சி நிரம்பிய ஞானம். ஒரு வித பேதலிப்பு சந்தைத் திடலாகிக் கொண்டிருக்கும் உறவை பட்டவர்த்தனமாய் பிடித்தாட்டும் நுட்பமான வெளிப்பாடு. இவையே ஐரீஸ் நாவல்களின் தனிச் சிறப்பு. அதை அண்டர் தி நெட் நாவலிலிருந்தே நாம் பார்க்கிறோம். இயக்கங்கள் என்பவை உயர்வுத் தாழ்வுகள் என்றழைக்கப்பட்டவைகளை நிகராக்க மேற்கொண்ட கொச்சையான செயல்பாடுகள் சார்த்தர் வழியில் நின்று விமர்சிக்கப்படுகின்றன. நீட்சே கட்டுரைகளாகவும் கட்டுடைப்புகளாகவும் எழுதிக் குவித்த விஷயங்களை நாவல்களுக்குள் ஐரீஸ் தரிசிக்க வைக்கிறார். யூதர்களின் இருத்தலியலையும் கத்தே (Gothe) வின் நேசிப்பு இயல்போடு முரணாக கலக்கும் சித்திரத்தை முயல்கிறார். கோபுரங்களும் மெழுகுவர்த்திகளும் புராதனத்தின் அர்த்தமுள்ள சின்னங்களாகின்றன. தேவாலய மணி ஓசை இப் பேரண்டப் பாடலில் புதைகிறது. இருத்தல் முதலா, சாரம் முதலா எனும் புறங்களை விசாரிக்கும் தற்கால அனுபவத்தின் தூய நிலைகளை விளக்குவதற்கும் போராடும் சார்த்தரின் நிலைப்பாட்டை நாவல் தன் பன்முகப் பாத்திரங்களின் வழியே அடைகிறது.

தத்துவ நெறிக்குள் உண்மை நிலை (Facticity) என்பதைப் புகுத்தியவர் சார்த்தர். 'இப்போது - இந்த நேரத்தில், இந்த இடத்தில் இந்தப் பண்புகளுடன் வாழுகிற உண்மை நிலைதான் நான்' என்பது அவருடைய நிலைப்பாடு. நான் எனது உண்மை நிலையை வாழ்கிறேன். அது தான் நான் யார் என்கிற எனது முழுமையான சாரத்தை உருவாக்குகிறது என்பார் அவர். இதையே சிக்மண்ட் பிராய்டு தனது உளப்பகுப்பாய்வு மூலம் கூறி இருப்பார். தனிமனிதம் சார்ந்தவர் பிராய்டு. வாழும் வரலாற்றுக் காலத்தின் நிலைமைகள் வாழ்வின் ஒவ்வொரு பகுதியையும் பாதிக்கின்றன, வண்ணம் தீட்டுகின்றன என்று சமுதாயத்தையே ஒரு கூறாக சிந்தித்தது சார்த்தரின் இருத்தலியல். இவற்றை இணைக்கும் அந்த நடுக்கோட்டில் பயணிக்கிறது துண்டாக்கப்பட்ட தலை. ஐரீஸின் சோதனை முயற்சிகளிலேயே மிகவும் அதிக கவனத்தைப் பெற்ற நாவல்.

இருத்தலும் சாரமும் மனிதர்களின் வாழ்க்கையில் ஒன்றை ஒன்று ஊடுருவுகின்றன எனுந் தத்துவ வெளிக்குள் ஐரீஸ் மர்டாச்சை இழுத்து வந்தது எது? துண்டாக்கப்பட்ட ஒரு தலையை பல முண்டங்களுக்கு பொருத்திப் பார்க்கும் பேராசிரியன் நமக்குச் சொல்ல வருவது என்ன? முறைகேடுகளை நியாயப்படுத்திக் கொண்டிருக்கும் முரணை அவரது எழுத்தில் எங்கே பார்த்தாலும் தரிசிக்கின்றோம். கருப்பு இளவரசன் (The Black Prince) நாவலில் வரும் கதாபாத்திரங்கள்



ஐரீஸ் முர்டாச்

சுய வெறுப்பின் உச்சத்திற்கே போய் நாவலின் பிரதி திருத்துபவனிடம் தங்களுக்காக மனமிரங்குமாறு இரைஞ்சுகின்றன. தனிமை என்பது கழிவறையால் கூட கிடைப்பது இல்லை. ஈவு இரக்கமின்றி வாழ்க்கை மனிதர்களை வேட்டையாடுகிறது. விரக்தியை விற்றுப் பிழைப்பது என்று எழுத்தாளன் பிரதிகளாய் அதை உருவாக்க முடிவெடுக்கிறான். மர்மமான ஒரு தணிக்கையாளன் ஒவ்வொருவனின் தலையிலும் இருந்தபடியே நிகழ்வுகளை விமர்சித்துக்கொண்டே இருக்கிறான்.

1978ல் புக்கர் பரிசு பெற்ற The Sea... The Sea நாவல் மேற்கண்ட விஷயங் களிலிருந்து சற்றே வேறுபடுகிறது. பிரபலமடைவது புகழ் சம்பாதிப்பது என்பதன் மீதான மனித குல வெறியை நையாண்டி செய்யும் ஒரு முயற்சி. சர்ச்சை எதையும் ஏற்படுத் தாத புக்கர் தேர்வு என்பதைக் குறிப்பிட வேண்டும். தன்னை கண்ட மாத்திரத்தில் அடையாளம் கண்டுகொள்ளும் ஒரு சமூகத்தில் கிட்டத்தட்ட நாற்பதாண்டுகள் கழித்துத் தன் பழைய சிநேகிதியை சந்திக்கும் ஒரு நடிகன் பிரபலமடைந்தால் கலைந்த நாடக வாழ்வை மீறி பிரிட்டு இயல்புக்கு திரும்பிச் செல்ல முயல்கிறான் தான் அடைய இயலாத யதார்த்த- சுகங்களின் முழுமையை அடைந்துவிட்ட சிநேகிதி மது கடும் பொறாமை ஏற்படுகிறது. காதல் மற்றும் காதலற்ற தன்மை என்பதன் இருத்தலியல் பார்வை அது. தூய உலகிற்கு பின்னே ஒரு ஒரு மறைப்பொருள் இருக்கிறது. அதுவே பூரணமை என்று அதைத்தேடி அலையும் ஆன்மாக்களான ஐரீஸின் கதாபாத்திரங்கள் இறுதியில் அடைவது முழுமையற்ற (Imperfect) நிலையை அற இலட்சியங்கள், கோட்பாடுகள் என்பவை பற்றிய பிரக்ஞை இல்லாமலேயே அது நிகழ்வதுதான் மற்றவர்களிடமிருந்து ஐரீஸ் முர்டாச்சை பிரித்துக் காட்டுகிறது.

நீட்சேவின் 'ஸரதுஷ்டிரா' (Zarathusira) பாத்திரத்திற்கு சற்றும் குறைந்தவை அல்ல ஐரீஸின் பாத்திரங்கள். ஆனால் நீட்சே அளவிற்கு அவர் பேசப்படவில்லை. நம் உலகில் தத்துவஞானிகள் என்போர் ஏன் எப்போதும் ஆண்களாகவே இருக்கிறார்கள்? அதனால்தானோ என்னவோ. ஞானம் கூட சந்தோஷிக்கத்தகுந்த ஞானமாக (Joyful wisdom) இருக்கிறது. நன்மை தீமை இரண்டையும் கடந்த அதீத மனிதன் ஆண்தான். யாரெல்லாம் அறநெறிகளை கடந்து செல்கிறார்களோ அவர்களுக்கே எதிர்காலம் என்று நீட்சேவைப் போலவே ஐரீஸும் கருதினார். ஆனால் நீட்சேவின் ஸரதுஷ்டிராவைப் போல கடந்த கால மனித குலத்தைக் காட்டிலும் மிக உயர்ந்த மட்டத்தில் வாழ்ந்து இதுவரையான

மனித குலு வரலாறு அனைத்தையும் தூக்கியெறிந்துவிட ஐரீஸ் முர்டாச்சின் கதாபாத்திரங்களால் முடியவில்லை. அதீத மனிதனால்தான் எதேச்சதிகாரத்தி லிருந்து தனி மனிதனை காக்க முடியும் எனும் ஆணாதிக்கக் கூற்றை அவரது நாவல்கள் எள்ளி நகையாடுகின்றன. 'கருக்க ராஜகுமாரன்' 'The World must be peopled' என்று ஷேக்ஸ்பியர் போல முகத்தை வைத்துக் கொண்டு வலியின் அழும் ஒரு குழந்தையாகி அறைக்கூவுகிறான்.

ஐரீஸ் முர்டாச் 1919 ஜூலை 15 அன்று டப்ளினில் நடை பராமரிப்பு பாரம்பரை ஒன்றில் பிறந்தார். சிறு வயதில் அரசு வேலை தேடி தாயும் பரம்பரை தொழிலை கைவிட்டு தந்தையும் லண்டன் வந்தபோது அங்கே எளிய பள்ளிகளில் கல்வி கற்று பழங்கால வரலாற்றை சிறப்புப் பாடமாக எடுத்து ஆக்ஸ்போர்டில் தத்துவ இயல் பட்டப்படிப்பு சேர்ந்தார் ஐரீஸ். உயர் கல்விக்கு தந்தை ஜான் ஐரீஸ் முர்டாச் பல இடங்களில் கடன் வாங்கி கேம்பிரிட்ஜ் அனுப்பியபோது அங்கே பிரபல தத்துவ அறிஞர் லுட்விக் விட்ஜென்ஸ்டைனுக்கு கீழ் தத்துவம் படித்து 1948ல் முடித்தார்.

இரண்டாம் உலக யுத்தத்தின்போது அயர்லாந்தின் தென்கோடி ராணுவ முகாமுக்கு ஊனமுற்ற ஆங்கிலேய வீரர் தம் சிகிச்சை பிரிவு கவனிக்க அனுப்பப்பட்டார். போர் முனையில் எதிர் முகாமின் வீரர்களை குறிப்பாக போசமாய் படுகாயங்களுடன் மனித நெறிகளுக்கு எதிர் காழ்ப்புணர்ச்சியோடு நடத்தப்பட்ட ரஷ்ய போர்ப் படையை சேர்ந்த கைதிகளை நல்லெண்ண உறவு அடிப்படையில் பச்சாதாபத்துடனும் பரிவுடனும் நடத்தினார் என்பதற்காக உளவாளியென குற்றம் சாட்டப்பட்டு இழிவாக மதிக்கப்பட்டார். உலகயுத்தம் அவரது மனித வேட்கை தேடலின் ஊற்றா இருந்திருக்க வேண்டும்

ஐரீஸ் முர்டாச் ஒரு பெண் எழுத்தாளர் என்பதாலேயே பல அவமானங்களை எதிர் கொண்டார். இறந்து பல ஆண்டுகள் கழித்தும் 2003ல் ஆங்கிலேய எழுத்தாளர் ஏ.என்.வில்சன் எழுதி வெளிவந்த ஐரீஸ் முர்டாச்-நான் அறிந்தவரை (Iris Murdoch-as I Knew her) நூலே ஒரு சாட்சி. (anti biography)க்கு ஒரு சான்று. முர்டாச்சின் எழுத்துலகிலே புகுந்து விமர்சிக்காமல் யாரோடு வேண்டுமானாலும் படுப்பதற்கு தயாராக இருந்தார் என்பது வரை அவரது வாழ்வை மரியாதை குறைவிற்கு உட்படுத்தி கொச்சையாக்கியவர் வில்சன். அவர் மட்டுமல்ல ஐரீஸ் முர்டாச்சின் எழுத்துக்கள் குறித்து ஆகச் சரியான விமர்சனம் இன்றுவரை பதிவாகவே இல்லை என்றே சொல்லலாம்.

1994 முதல் 1999 வரையிலான கால கட்டத்தில் அல்கொய்மிர் நோய்வாய்ப்பட்டு ஐரீஸ் அனுபவத்தை துயர வாழ்வை அவரது கணவர்-நாவலாசிரியர்-ஜான் பெய்லி- 'ஐரீஸ் நினைவுகள்' நூலாக வடித்ததும் அது பல விருதுகள் பெற்றதோடு அல்கொய்மிர் நினைவிலி நோய் குறித்த திரைப்படமாய்

எடுக்கப்பட்டது. ஐரீஸ் உயிரோடு நினைவோடு இருந்திருந்தால் அவரை மகிழ்வித்திருக்குமா என்பதைச் சொல்ல முடியவில்லை. ஏனென்றால் அது ஒரு கவிதையில் வருவதைப்போல.

உனக்குள்ளேயே சுருங்கிக் கொள்வாயா
அமைதி வெளியே இருக்கிறது.
அமைதியின் நிழல்தான் உள்ளே இருக்கிறது.

ஐரீஸ் முர்டாச் எழுதிய நாவல்கள்



வலைக்குள் (Under the Net) - 1954
பிளைட் ப்ராம் என்சாண்ட்டர் - 1956
மண் மாளிகை (The Sand Castle) - 1957
தி பெல் - 1958
துண்டாக்கப்பட்ட தலை - 1961
அன்-அபிஷியல் ரோஸ் - 1962
தி யூனிகார்ன் - 1963
இத்தாலியப் பெண் - 1964
சிவப்பும் பச்சையும் - 1965
தேவதைகளின் காலம் - 1966
நேர்த்தியும் நல்லதும் - 1968
புருனோவின் கனவு - 1969
ஓரளவு மரியாதைக்குரிய தோல்வி - 1970
ஆக்ஸிடெண்டல் மேன் - 1971
கருப்பு இளவரசன் - 1973
புனிதமான ஆழமான காதல் இயந்திரம் - 1974
வார்த்தை குழந்தை - 1975
ஹென்றியும் காட்டோவும் - 1976
கடல்...கடல் (The Sea The Sea) - 1978
கன்னிகாஸ்திரிகளும் போர் வீரர்களும் - 1980
தத்துவஞானியின் மாணவர் - 1983
நல்ல பணி பயிற்சியாளன் - 1985
சகோதரத்துவமும் புத்தகமும் - 1987
கோளத்திற்கான செய்தி - 1989
கிரீன் நைட் - 1993
ஜாக்ஸனின் குழப்பம் - 1995
சம்திங் ஸ்பெஷல் - 1999 (எழுதப்பட்ட ஆண்டு 1957) ❐

வார்ஸாவின் கடைசி யூதர்கள்



Miroslav Netik

தமிழில் : K. நரசய்யா

சென்ற வருட கோடைகாலத்தின் பிற்பகுதியில் ஒரு நாள் வார்ஸாவின் யூத கல்லறைத் தோட்டத்தில் நடந்து சென்றுகொண்டிருந்தேன். கல்லறைகளில் சில இன்னும் நின்றவாறும், மற்றவை தரையில் கிடந்தும் சீர்கெட்டும், புதர்கள் மண்டியும் கிடக்க, அவற்றுக்கிடையே குறுகலான பாதைகள் சுற்றி வளைத்துச் செல்லும் அது இருண்ட இடமாகும். கல்லறைத் தோட்டங்களுக்குள் எனக்கு பேதம் இல்லை. எனினும் இந்த இடத்திற்கு மட்டும் கடந்த இருபத்தி ஐந்து வருடங்களாக மீண்டும், மீண்டும் வந்து சென்றிருக்கிறேன்: போருக்கு முந்தைய போலந்தில் எஞ்சியிருக்கும் எனது குழந்தை பருவத்துடனான சில கடைசி தொடர்புகளில் இது ஒன்று.

ஆப்ரகாம் பிரம்பெர்க்

போருக்கு முன்னால் 1939-ல் வேனிற்பருவ வாக்கில் ஒரே ஒரு முறைதான் யூதர்களின் கல்லறைத் தோட்டத்திற்கு சென்றிருக்கிறேன். அப்போது எனக்கு பதினொன்று வயது. யூத சோஷியலிஸ்ட் கூட்டரசுக் குழு தலைவர் ஒருவரின் மாபெரும் இறுதி ஊர்வலத்தின் ஒரு பகுதியாக நானும் என் பெற்றோருடன் சென்றிருந்தேன். துக்கம் கொண்டாடுபவர்களை உள்ளே அனுமதிப்பதற்காக அகலத் திறந்து வைக்கப்பட்டிருந்த கல்லறைத் தோட்டத்தின் வாயிற் கதவை நோக்கி ஊர்வலம் துயரத்துடன் நகர்ந்தது. பெருந்திரளான மக்கள், சோபனின் இறுதி ஊர்வலத்தை இசைக்கும் குழுவினர், காற்றில் படபடக்கும் கறுப்பு, சிகப்பு மற்றும் வெள்ளைக் கொடிகள், கல்லறையில் புதைக்கும் இடத்தருகே நடந்த உரையாடல்கள் அனைத்தும் என்னில் மறக்க முடியாத பதிவை ஏற்படுத்தின.

யூத மற்றும் போலந்து நாட்டு (யூதரல்லாதோர்) சோஷலிஸ்டுகள் இருவரும் கூட்டத்தினரிடம் பேருரையாற்றினார்கள். அது கூட்டரசுக் குழு மிகவும் உயர்வாகப் போற்றிய சர்வதேசிய வாதத்திற்கு எடுத்துக்காட்டாக இருந்தது. ஆனால் உள்நாட்டு இளைஞர்கள் (shoktism) கத்தோலிக்க ஆலயத்தை கடந்து செல்கையில் தொப்பியை கழற்றாமல் செல்லுதல் போன்ற குற்றங்களுக்காக சிடுசிடுத்த முகத்துடன், வசைமொழிகள் கூறி அவமதித்து, உதைப்பதாக மிரட்டுதல் ஆகியவற்றால் கூட்டரசுக் குழுவின் உயர்ந்த நோக்கத்தையே சீரழித்தனர். நான் இளமையிலேயே இலட்சியத்துடன் இருந்தேன். எவ்வளவுதான் கம்யூனிஸ்ட்டுகளும், சோஷலிஸ்ட்களும் ஒருவரை ஒருவர் இகழ்ந்துகொண்டாலும் அவ்விரு கட்சியினரும் புனிதமாகப் போற்றும்,'' உலகின் உழைக்கும் தோழர்களே ஒன்று கூடுங்கள்'', என்ற கொள்கையை வெறித்தனமாக நம்ப விரும்பினேன். செமிட்டிக் எதிர்ப்பாளர்கள் (யூத இன எதிர்ப்பாளர்கள்) முதலாளித்துவ சமுதாயம் உமிழ்ந்த கழிவுகள்தானே தவிர வேறெதுவுமில்லை என எண்ணுகிறேன். அவர்கள் வெறும் கலகத்தை ஏற்படுத்திவிட்டு முடிவில் காணாமல் போய்விடுவார்கள்.

அணிவகுத்துச் சென்றோரில் ஆயிரக்கணக்கானோர் எரிந்து சாம்பலாகி நீண்ட காலமாகிவிட்டது, கூட்டரசுக் குழுவில் இப்போது எஞ்சியிருப்பது 1943ஆம் ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் நடந்த கெட்டோ எழுச்சி போரில் மாண்ட பல தலைவர்களின் நினைவுச்சின்னங்கள் மட்டுமே. அவர்களது கல்லறைகளில் பைபிளின் எந்த வாசகங்களும் இல்லை. பதிலாக கற்களில் அவர்களது முகங்கள் செதுக்கப்பட்டு, (மதச்சட்டங்கள் தடை செய்திருக்கும் வழக்கம்) அவர்களது பெயர், பிறந்த தேதி மற்றும் இறந்த தேதி ஆகியவை யிட்டிஷ் மற்றும் போலந்து மொழிகளில் பொறிக்கப்பட்டிருந்தன. இத்தகைய நினைவுச் சின்னங்கள்தான் என்னை மீண்டும், மீண்டும் இந்தக் கல்லறைத் தோட்டத்திற்கு ஈர்த்தன. எனவே

மீண்டும் ஒரு முறை அந்த கெட்டோ போராளிகளின் இளமை பொங்கும் முகங்களை ஆவலுடன் உற்றுப் பார்த்தேன். அவர்கள் திரும்ப உயிர் பெற்றுவருவதாகவும், அவர்களது புரட்சிமிக்க அடுக்கு மொழிப் பேச்சு கல்லறை முழுவதும் எதிரொலிப்பது போலவும் கற்பனை செய்து கொண்டேன்.

கடைசியில் நான் கல்லறையை விட்டுத் திரும்பி வாசலை நோக்கி நடந்தேன். அங்கு கல்லறையின் காவலாளி போல்ஸ்லா ஸெனிஸரை சந்தித்தேன். அப்போழுதுதான் அங்கு நடந்த சிறு உரையாடலில் எனக்கு, பல வருடங்களாக நான் அறிந்திருந்த சில விஷயங்கள் புதுமையாக, சுரீலென எனக்கு தெளிவாகியன.

முப்பதுகளின் நடுவிலிருந்த ஸெனிஸரின் தோற்றம், ஒரு கல்லறைக் காவலாளி எனபதை விட, கோனித்தீவு சலுகை சாவடியில் டிக்கெட் விற்பனை போலிருந்தது. அவனது தொப்பியின் விளிம்பு மூக்கிற்கு மேல் இருந்தது. அவனது ஆடைகள் விவரிக்க இயலாத அளவிற்கு கந்தலாகி சேறு நிறத்திலிருந்தது. அவனது மொழி கிணறும் யிட்டிஷ் மொழியிலிருந்து, உறுதியற்ற ஆங்கிலம் மற்றும் ரஷிய, ஜெர்மனி வார்த்தைகள் கலந்த சரளமான போலந்து மொழிக்கு சுலபமாக தாவியது. அமெரிக்க சுற்றுலாப் பயணிகள் சூழ்ந்திருக்க அவனது அலுவலகத்தின் வாசலின் அருகே அவன் நின்றிருப்பதைக் கண்டேன்.

"இதோ!" அவன் அவர்களை நோக்கி பேசிக் கொண்டிருந்தான். "இந்த யாமுல்க்குகளை (யூதர்கள் அணிகின்ற தொப்பி) அணிந்து கொள்ளுங்கள். அவற்றை மறக்காமல் திருப்பிக் கொடுத்து விடுங்கள் சில எப்போதும் காணாமல் போய்விடுவதாக தோன்றுகிறது. நாங்கள் இங்கு அஞ்சல் அட்டைகளைக்கூட விற்கிறோம், ஒவ்வொன்றும் இருபது ஸ்லாட்டிகள்தான்". பல வருடங்களுக்கு முதன் முதலாக நான் ஸெனிஸரைச் சந்தித்த போது அவன் இறந்து போன முன்னாள் கல்லறைக் காவலாளியான தன் தந்தைக்கு செய்து கொடுத்த சத்தியத்தைக் காப்பாற்றுவதற்காகவே இந்த காவலாளி வேலையை எடுத்துக் கொண்டதாகக் கூறினான். அப்போழுது அவன் இன்னும் ஒரு பத்து வருடத்திற்குள் நான் வார்ஸாவின் கடைசி யூதனைப் புதைப்பேன். பின்பு இந்தக் கல்லறையை பூட்டிக் கொண்டு இஸ்ரேலுக்குச் சென்று விடுவேன் என்றான்.

அவனுடைய வார்த்தைகள் புலம்பல் தன்மையாக இருந்தது. ஆனால் அவன் கூறியதன் உண்மையான பொருளைப் பற்றி என்னை சிந்திக்க வைத்தது. வார்ஸாவில் எத்தனை யூதர்கள் இருக்கிறார்கள்? அவனைக் கேட்டேன். "ஓ! நிச்சயம் அறுநூறுக்கு மேல் இருக்காது." அவன் பதிலிறுத்

தான். "அறுநூறா? நிச்சயமாக உனக்கு தெரியுமா?," நான் ஆச்சரியத்துடன் கேட்டேன். அவன் புன்னகைத்தான். ஏன் இவ்வளவு வியப்பு? நல்லது. ஒரு ஆயிரமாவது இருக்கலாம். போலந்தில் எத்தனை யூதர்கள் இருக்கிறார்கள் என்று நினைக்கிறீர்கள்? நிச்சயம் மூவாயிரத்திற்கு மேல் கிடையாது. ஒரு வேளை மூவாயிரத்து ஐநூறு இருக்கலாம். அவ்வளவுதான்"

அவன் கூறியது எனக்கு ஒருவித மனக்கலக்கத்தை உண்டு பண்ணியது" அதாவது இன்னும் சில வருடங்களில் நீ சொன்னதைப் போல.....?"

"அதிகபட்சம் நான்கு வருடங்கள்." என்றான் லெவிஸர் உண்மையாகவே. "மீதமிருக்கும் யூதர்கள் அவர்களின் எண்பதுகளில் இருக்கிறார்கள். கடந்த சில மாதங்களில் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு அதிகமான சாவுகளைப் பார்த்துவிட்டேன். இதிலிருந்து பாவத்திற்காக வருந்தும் வீதம் முன்பை விட அதிகரித்துள்ளது தெரிகிறது. இது இயல்பான நடைமுறை ஆகையால்..."

அறுநூறு, அல்லது ஒரு ஆயிரம்! ஒரு கச்சேரி அரங்கத்தைக் கூட நிரப்ப முடியாது. போலந்து முழுவதிலும் மூவாயிரத்து ஐநூறு - போருக்கு முந்தைய போலந்தின் மூன்றரை மில்லியன் மக்கள் தொகையில் ஒரு சதவீதத்தில் பத்தில் ஒரு பங்கு. இந்த புள்ளி விவரம் என்னை அதிர்ச்சி அடைய வைத்திருக்கக் கூடாது. போலந்து யூத ஆதாரங்கள் நாடு என்ற மாயை எதையும் நான் மனதில் கொண்டதில்லை. இருந்தும் என்னவோ ஒரு போதும் முழுமையாக அவர்களுடன் இயைந்துபோக முடியவில்லை.

ஏன்? ஒரு வேளை எண்ணிக்கையின் பின்னால் இருக்கும் பயங்கரத்தை நான் சந்திக்க விரும்பாமல் இருந்திருக்கலாம். ஒரு வேளை தவறான எண்ணத்தின் சிதறல்களை நான் விரும்பியிருந்திருக்கலாம். ஏன்? போலந்தில் இன்னும் சில யூதர்கள் மீதமிருக்கிறார்களே. முறையான யூத வாழ்வின் தேய்வுற்ற எச்சங்கள் இன்னும் இங்கே இருக்கின்றனவே!. போலந்து-யூத சமுதாயம், யிட்டிஷ் திரையரங்கு ஒன்று, யூத வரலாற்றுக் கழகம், மேலும் சென்ற வருடம் வரையில் வார்ஸாவில் செயல்பட்டு வந்த யூத தேவாலயம் கூட. போலந்தில் யூதர்களின் வாழ்வைப் பற்றிய ஓர் அருங்காட்சியகம் நிறுவப் போவதாக ஒரு பேச்சு இருக்கிறது. போலந்தில் புதுப்பிக்கப்பட்ட யூத கலாச்சார செயல்பாடுகளின் அலையை ஏற்படுத்துவதற்கென ஒரு சிறப்பு தூதுவர் குழு மேல்நாட்டு போலந்து தூதரக அலுவலகங்களுக்கு வெளியுறவு அமைச்சரவையினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. யூதப் பிரதிநிதிகள், மதப்பற்றுடையவர்கள் மற்றும் மதச்சார்பற்றவர்கள் உலகெங்கிலுமிருந்து சில சிறப்பு நிகழ்ச்சிகளின் (யூத நாகரிக வாரம், வார்சா கெட்டோ எழுச்சியின் ஆண்டு நினைவு

விழா போன்ற நிகழ்ச்சிகளில்) கலந்து கொள்வதற்காகவும் தங்களின் மூதாதையர்கள் வாழ்ந்த நெடுந்தொலைவிலுள்ள shtetlஐ காண்பதற்காகவும், போலந்திற்கு வருகை தருகிறார்கள்.

இப்பொழுது இப்படி உயிர்த்திருக்கும் உணர்வுகள் எல்லாம் பழங்கால நினைவுகளில் மயங்கும் செயல், வரலாற்று ஞாபகங்களை பற்றிக் கொள்தல், ஒரு பொய்த் தோற்றம் அன்றி 'வேறெதுவுமில்லை' என சட்டென்று திரைவிலகினாற் போல் ஒரு சிறு உரையாடல் மூலம் எனக்குத் தெரியவந்தது. போலந்து யூதக் குடியிருப்பு இறந்த காலத்தை சேர்ந்தது - வேறொன்றுமேயில்லை - கண்ணியமான விருப்பங்கள் இல்லை, போலந்து வெளியுறவு அதிகாரிகளுடன், இஸ்ரேல் பிரதிநிதிகளுக்கோ அல்லது வேறு நாட்டு யூத இனத்தவருக்கோ எவ்வித மத சம்பிரதாய சந்திப்புகளும் இல்லை. யூத பள்ளிக்கூடங்களைக் கட்டவோ அல்லது திருப்பவும் அமைக்கப்படக் கூடிய யூத மாணவர் சங்கம் அமைப்பதற்கான முயற்சிகளோ எதுவும் இல்லை.

நான் மதச்சார்பற்ற யிட்டிஷ் பேசும் சூழ்நிலையில் வளர்க்கப்பட்டேன். யிட்டிஷைக் கற்பிக்கும் மொழியாகக் கொண்ட பள்ளிக்கே அனுப்பப் பட்டேன். யிட்டிஸ் மொழிதான் நான் வீதிகளில், வீடுகளில், பள்ளியில், திரையரங்குகளில் கேட்டிருக்கிறேன். மேலும் என் நண்பர்கள் நிறைய பேர் அந்த மொழியைதான் பேசினார்கள். ஐரோப்பிய படைப்பாளிகளான டிக்கன்ஸ், கிப்லிங், செல்மாலாகர்லாஃப், நட் ஹாம்ஸன், ஜாக் லண்டன் போன்றவர்களை யிட்டிஸ் மொழிபெயர்ப்பிலேயே படித்திருக்கிறேன். The call of the wild, மிகவும் கிலியூட்டும் The Sea wolf ஆகியவை யூத பள்ளிக்குழந்தைகளின் நேசத்திற்குரியவை. இப்பொழுது அமெரிக்காவிலுள்ள என்னுடைய நண்பன் ஒருவன், ஜீல்ஸ் வெர்னின் அனைத்துப் படைப்புகளையும் யிட்டிஷில் தனது புத்தக அலமாரியில் சிறந்த கண்காட்சியாக வைத்திருக்கிறான். நான் அவற்றை ஒவ்வொன்றாகப் படித்திருக்கிறேன் (மைக்கேல் ஸ்ட்ரோகேஃபின் Tsarist Russia - என் உலகில் நிலவையும், போர்னியோ காடுகளை விடவும் அல்லது பசிஃபிக் பெருங்கடலின் ஆழத்தை விடவும் அதிக பங்கு வகித்தது என்பதில் ஆச்சரியமில்லை)

ஹென்றிக் செயின்கெய்விக்ஸ், போல்ஸ்லா ப்ரூஸ், ஸ்டெஃபான் ஸிரோம்ஸ்கி, ஆகிய போலந்து நாட்டு படைப்பாளிகளும் எமது கருத்தைக் கவர்ந்தவர்கள். நாங்கள் நல்ல யிட்டிஷ் மொழியாளர்களாகவும் அதே சமயம் கடமை தவறாத போலந்துக்காரர்களாகவும் இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டோம். பத்தொன்பது மற்றும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகால நாவல்கள் எங்களது நாட்டுப்பற்றை அழியாமல் காப்பாற்றின.

(போலந்து இலக்கியத்தின் மீது எனக்கிருந்த கவர்ச்சி நான் 1941இல் அமெரிக்காவுக்கு வந்த பிறகும் தணியவேயில்லை.)

மேற்கு ப்ராங்க்ஸிலிருந்த எங்கள் வீட்டிலிருந்து சுரங்கப்பாதை வழியாக மன்ஹாட்டன் ஏ அவென்யூவிற்கு சேர்ந்த பெருமைமிக்க போலந்து நாவல்களைக் கொண்ட நியூயார்க் நூலகத்தின் கிளைக்கு ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் செல்வேன்.

யூதத்தன்மை, போலந்துப் பற்று இரண்டிலும் உறுதியுடன் இருக்கும் நானும் என் நண்பர்களும் ஐரோப்பிய நிலைப்பாட்டில் போலந்தின் வளர்ச்சியினை (நிலக்கரி உற்பத்தியில் 5ஆம் இடம்) அலட்சியமாகக் கருதினோம். நாங்கள் ததேயுஸ் கொஸியுஸ்கோவின் துணிகரச் செயலில் அல்லது மேரி ஸ்கோடோவ்ஸ்கா க்யூரி ஒரு போலந்துகாரர் என்பதில் மகிழ்ச்சி அடைந்தோம். ஆனால் போலந்து மாணவர்களின் நட்பிற்காக நான் ஏங்கியதில்லை என்பது விசித்திரம். பிற இன இளைஞர்கள் எங்களைக் கெட்ட வார்த்தைகளால் திட்டும்போது தவிர வேறெதற்காகவும் அதிகம் அலட்டிக் கொண்டதில்லை. கெட்ட வார்த்தைகள்! அவற்றை சில சமயம் முழுதாக என்னால் புரிந்துகொள்ள முடிந்ததில்லை. ஒரு முறை என் நண்பர்களுடன் பள்ளியிலிருந்து திரும்பிக்கொண்டிருக்கையில், ஓர் இளைஞர் கூட்டம் நையாண்டியாக 'ஸ்டரோஸகோன்னி! ஸ்டரோஸகோன்னி' என்று கத்தியதைக் கேட்டேன். என் தந்தையிடம் அதற்கு என்ன பொருள் என்று கேட்டேன். 'பழைய ஏற்பாட்டினை பின்பற்றுப்பவர்கள்' என்று விளக்கினார். ஆனால் எனக்கு இன்னும் ஒன்று புரியாததாகவே இருந்தது. நாங்கள் யூதர்கள். உண்மைதான். ஆனால் பழைய ஏற்பாட்டினை பின்பற்றுபவர்கள் அல்ல- அது எதுவாக இருந்தாலும். அவர்கள் குறிப்பிடுவது தெருக்களில் காணப்படும் நீண்ட கருப்பு அங்கி அணிந்த ஹஸிடிக் இளைஞர் களைத்தான்.

1930களின் பிற்பகுதியில் போலந்து செமிட்டிக் எதிர்ப்பு வெறியில் மிதந்தது. யூதர்களின் கடைகள் தாக்கப்பட்டன. அவற்றின் முதலாளிகளும் தாக்கப் பட்டனர். பல்கலைகழங்களில் யூத மாணவர்கள் கெட்டோ பெஞ்சுகளில் இடம்பெற கட்டாயப்படுத்தப்பட்டனர். அவர்கள் சமூக விரோதிகளின் கூரான கத்திகளுக்கு இரையாகினர். அரசாங்கமோ தேசத்தை ஒரு 'யூத ஆதரவான' நாடாக்குவதற்காக கொள்கைகளை வடிவமைத்து பரிந்துரைத்தது. ஆகையால் இது போன்ற சூழ்நிலையில் எப்படி எங்களால் யூதப்பற்றை யும், போலந்துப் பற்றையும் ஒன்றாக சமாளிக்க முடிந்திருக்கும்? இப்படிப் பட்ட இருமுக உணர்ச்சிப் போக்குடைய காலச்சூழலில் ஈடு செய்ய முடி யாத மனச்சேதத்திற்கு ஆளாகாமல் நாங்கள் எப்படி வளர்ந்திருப்போம்?

இதன் விளக்கம் எனது வளர்ப்பு முறையில் இருந்த மூன்றாவது ஆக்கக்



கூறான 'சர்வதேச கூட்டமைப்பு' என்ற பொதுவுடைமைவாதம்தான் என்று நினைக்கின்றேன். சோவியத் பாணி பொதுவுடைமை அல்ல. அது தவறான வழிகாட்டல். எனக்கு உண்மையான பொதுவுடைமைவாதத்தின் புனிதமான நம்பிக்கைகளான, சமத்துவத்தில் வேரூன்றிய கோட்பாடு, தனிமனித சுதந்திரம், ஜனநாயகம் ஆகியவை கற்பிக்கப்பட்டன. இதுதான் மார்க்ஸின் உண்மையான தொண்டர்கள் ஆதரவு அளிப்பது. மேலும் இதுதான் அவர்கள் நம்பிய எதிர்காலம். எங்களுக்கு நிச்சயம் தெரியும்.

ஃப்ரான்ஸில் நீண்ட நாட்கள் தங்கியிருந்து விட்டு வார்ஸாவிற்கு திரும்பிய என் தந்தையை ரயிலிலிருந்து இறங்கும் போதே 'அப்பா' என்று வரவேற்று எனக்கு இப்பொழுது இன விழிப்புணர்வு உள்ளது என்று கூறினேன். எனக்கு அப்போது எட்டு வயது. அப்பா மென்மையாக புன்னகைத்து விட்டு வெளி நாட்டிலிருந்து திரும்பி வந்த தனக்காக காத்திருந்த அழகிய ஆச்சரியம் என்று தன் நண்பர்களிடம் சொல்லிக் கொண்டு சந்தோஷப்பட்டார்.

சில வாரங்களுக்கு முன்புதான் நான் SKIF (குழந்தைகளின் சோஷலிஸ கூட்டமைப்பு)-இல் சேர்ந்திருந்தேன். அது கூட்டரசுக் குழுவின் குழந்தை

களுக்கான பிரிவு. அதைப்பற்றி என் தந்தையிடம் கூறினேன். அத்துடன் அதில் ஆரம்பிக்கப் போகும் புது வட்டத்திற்கு என் ஆலோசனையின்படி கார்ல் மார்க்ஸ் எனப் பெயரிடப்போவதையும் கூறினேன். உயர் குணம் படைத்த என் தந்தை, புதுமையான எனது ஆலோசனையைப் பற்றி எந்தக் கருத்தும் கூறாமல் ஒதுங்கிக்கொண்டார்.

ஒரு SKIF உறுப்பினராக நான் வாரம் இரண்டு முறை கூட்டங்களில் கலந்து கொண்டேன். ஆனால் அதைப்பற்றி ஒன்றும் ஞாபகம் இல்லை. நான் எழுதிய 'மே தினம்' என்ற நையாண்டிப் பாடலை கூட்டத்தின் தினசரியான 'மக்கள் செய்திதாளில்' குழந்தைகளுக்கான பக்கத்தில் பிரசுரிக்கத் தகுதியானது (எந்த விதத்தில் என்று புரியவில்லை) என ஆசிரியர் நினைத்தார். நான் Morning Star என்ற கூட்டக இளைஞர் உடற்பயிற்சி கழகத்தில் சேர்ந்திருந்தேன். ஒவ்வொரு திங்கள் மற்றும் செவ்வாய் கிழமைகளில் மதிய வேளையில் என் நண்பர்களுடன் சுறுசுறுப்பான உடற் பயிற்சியிலோ, கால்பந்து விளையாட்டிலோ பங்கு கொள்வேன். ஒரு ஞாயிறு காலை நாங்கள் எட்டு பேர் நீலச்சட்டை மற்றும் சிவப்பு டை சகிதம் (எங்கள் எதிரிகளான Red square க்கும் இதே நிற உடைதான். எனினும் எங்களிடையே ஒரு போதும் குழப்பம் வந்ததில்லை) தோளோடு தோளாக வார்ஸாவின் விளையாட்டு அரங்கை நோக்கி நடந்து சென்றோம். அங்கு நூற்றுக்கணக்கான SKIF-ன் உறுப்பினர்களும், கூட்டகக் குழுவின் இளைஞர் அமைப்பின் உறுப்பினர்களும் தங்களது விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி திறமைகளை உற்சாகமிக்க பார்வையாளர்கள் முன் காண்பித்துக் கொண்டிருந்தனர்.

மற்ற ஐரோப்பிய இளைஞர் அமைப்புகளைப் போலவே, SKIF-ம் மாபெரும் வெளிப்புற வகுப்புகளில் ஈடுபாடு காட்டுவதாக இருந்தது. நான் அதன் கோடைக்கால பாசறை வகுப்புகளில் சேருவதற்காக ஏங்கினேன். ஆனால் எனக்கு வயது போதாது என்று விட்டு விட்டார்கள். ஆயினும் நான் எப்படியோ 1938 அல்லது 1939ன் முற்பகுதியில் மிக மோசமான குளிர்வாரத்தில் நடைபெற்ற குளிர்காலப் பாசறை வகுப்பில் கலந்து கொண்டேன். அதில் கலந்துகொண்ட ஏறக்குறைய முப்பது சிறுவர் சிறுமியர்கள் ஏதோ ஒரு கிராமத்தில் ஓர் எளிமையான நாட்டுப்புற மாளிகையில் தங்கவைக்கப்பட்டோம். அதிகாலை ஐந்தரை மணிக்கு காதைக் கிழிக்கும் பகிள் வாத்திய இசையின் சப்தத்தில் எழுவதும், எங்கள் படுக்கைகளை சுருட்டி வைத்துவிட்டு, அவசர அவசரமாக உடையணிந்து கொண்டு அருகிலிருந்த காட்டிற்கு பனியை ஊடுருவி ஓடியதும் இன்றும் எனக்கு நினைவிருக்கிறது. சூரியன் தேய்ந்து மறையும் வேளையில், காற்றும் பனிப்போர்வையாக மாற, நாங்கள் எங்களது தங்குமிடத்திற்கு திரும்பி

வந்து, எங்களது உதடுகள் தீய்ந்து போகுமளவிற்கு சூடான சொக்லேட்டினை அருந்துவோம்.

பிற்காலத்தில் ப்ரான்க்ஸில் மிகவும் புகழ்பெற்ற உடற்பயிற்சியாளனாக விளங்கப் போகிற இம்மானுவேல் பாட்தான் எங்களது குழுத்தலைவன். எங்களது தினசரி செயல்முறை வகுப்பில் ஜிம்னாஸ்டிக் புரட்சி பாடல்கள், பாட் மற்றும் வார்ஸாவிலிருந்து விசேஷமாக அனுப்பப்பட்ட கூட்டரசுக் குழு பேச்சாளர்களின் சொற்பொழிவு ஆகியவை இடம்பெற்றன. குளிர் காலப் பாசறை வகுப்புகள் பத்து நாட்கள் வரை நீடித்தன. சபிக்கப்பட்ட காலை நேரங்களைத் தவிர மற்றபடி நாங்கள் எழுச்சியூட்டப் பெற்று, இலட்சிய உணர்வுகள் புதுப்பிக்கப்பட்டு வீட்டிற்கு திரும்பினோம்.

ஒரு சமய சகிப்புத்தன்மை கொண்ட யிட்டிஸ் பள்ளியின் மாணவன் என்பதாலும் SKIF ஐச் சேர்ந்தவன் என்பதாலும் அநேகமாக எங்கள் ஆசிரியர்களே எழுதி, யிட்டிஸ் பள்ளி மாணவர்களை நடிக்க பிரெஞ்சு புரட்சி பற்றிய நாடகமொன்றில் எனக்கு சிறிய வேடமொன்று அளிக்கப் பட்டது. அந்நாடகம் யூதர்கள் சுயமாக நிறுவிய, பல யிட்டிஷ் நாடகங்களை தயாரித்த 'நௌவோஸ்கி' அரங்கத்தில் அரங்கேற்றப்பட்டது. அதில் எனக்கு நினைவிருப்பது, கிழிந்த கால்சட்டையை அணிந்து கொண்டு, கீழ்நிலை பிரெஞ்சு புரட்சியாளனாக "ஓ கெய்ரா, கெய்ரா" என்று பாடிக்கொண்டே சுற்றி சுற்றி ஓடியது மட்டுமே. பிரெஞ்சு மொழி, பாடல்களின் பல்லவிகளில் மட்டும் பயன்படுத்தப்படும். மற்றபடி வசனங்கள் எல்லாம் யிட்டிஸ்

மேதின ஆண்டு விழா நிகழ்ச்சிகளை நாங்கள் மிகப்பெரிய அளவில் எதிர் பார்த்துக் கொண்டிருந்தோம். கூட்டரசுக் குழுவுடன் இணைந்து இயங்கும் ஒரே யூத அரசியல் குழுவான 'யூத இன தொழிலாளர் ஆதரவு இயக்கமும்' சில நிகழ்ச்சிகளை விளம்பரத்திற்காக இணைந்து நடத்தின. சில போலந்து சமூகக் குழுக்களும் இணைந்து இருந்தன. அந்நேரத்தில் கம்யூனிஸ்டுகள் பெரும் ஊர்வலத்தை நடத்த அதிகாரம் இல்லாமல் இருந்தது. அவர்கள் தங்களது கொடியைப் பிடித்துக்கொண்டு அணிவகுத்துச் செல்ல தடைசெய்யப்பட்டிருந்தனர். பலர் தாங்கள் ஆதிக்கம் செலுத்திய வியாபார சங்கங்களின் கொடியை ஏந்திக் கொண்டு அணிவகுத்துச் சென்றனர்.

கண்ணைப்பறிக்க முகங்களுடன் ஆண்களும், பெண்களும், சிவப்பு கொடிகளும், 'வாழ்க! அனைத்து உழைப்பாளிகளின் கட்சி ஒழிக, முதலாளித்துவம்' என்ற வாசகங்களை வலியுறுத்தும் பேனர்களும் காண்பதற்கு ஊக்கமளிப்பவையாக இருந்தன. இந்த ஊர்வலத்துடன் கூட்டரசுக் குழுவின் பாதுகாப்பு குடிபடைகளான பிரம்பு சுழற்றும் அணியும் இணைந்துக்கொண்டது. யூத ஆதரவாளர் சமூகக் குழுவும்,

தங்களது பாதுகாப்பு பிரிவுடன் போலந்து சமூகக் குழுவைப்போல இணைந்துக்கொண்டது. ஆங்காங்கே போலிஸ் படைகளும் இருந்தன. ஆனால் எதிலும் தடையில்லை. வழக்கமான எல்லா நிகழ்ச்சிகளும் எந்த அசம்பாவிதமும் இல்லாமல் நடந்தேறின.

வழக்கமாக என் அம்மாவுடன்தான் நான் ஊர்வலத்திற்குச் செல்வேன். அவளது தாய்ப் பாசம், கட்சி பற்றைவிட அதிகமாக இருக்கும். ஆனால் நானோ எப்போதும் என் தந்தை அணிவகுத்து செல்வதைக் காண ஆர்வமுடன் இருப்பேன். ஒரு முறை, இன்றும் வார்ஸாவில் இருக்கும் போலந்து தேசிய திரையரங்கின் முன் நடந்து கொண்டிருந்த அணிவகுப்பின் போது, என் தாயின் கையை உதறிக் கொண்டு ஓடி குடிமக்களின் வரிசையை விலக்கிக்கொண்டு நானும் அவர்களுடன் சேர்ந்து கொண்டேன். ஒரு படை வீரன் என்னைத் தடுத்துப் பார்வையாளர்களின் பக்கம் தள்ளி, "இனி இப்படிச் செய்யாதே"! என்று கடுமையாக எச்சரித்தான்.

இந்தச் சமயங்களில் என் தந்தை வார்ஸாவிற்கு அருகிலிருக்கும் மெய்ட்செஸ்ஸின்-மீடிய் சானட்டோரியத்திற்கு கண்காணிப்பு இயக்குநராக இருந்தார். ஒரு SKH உறுப்பினராக என்னை வளர்க்கவும், எங்கள் குடும்ப வாழ்க்கையிலும் இந்நாட்கள் முக்கிய பங்கு வகித்தன. 1920ஆம் ஆண்டின் பிற்பகுதியில் நிறுவப்பட்ட சானட்டோரியம் இரு செயல்பாடுகளை நிறைவேற்றி வந்தது. ஒரு சுகாதார மையமாக அதில் மருத்துவர்களும், தாதிகளும் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர். அவர்கள் சுவாச நோயால் அவதியுற்ற நூறு முதல் இருநூறு ஏழை யூதக் குழந்தைகளுக்கு சிகிச்சை அளித்து வந்தனர். அக்குழந்தைகளுக்கு தேவையாய் இருந்ததெல்லாம் நல்ல உணவு, சுத்தமான காற்று, நிறைய ஓய்வு மற்றும் அடிப்படை மருத்துவ கவனிப்பு ஆகியவை. என் தாய் ஒரு மருத்துவ தாதி. பெற்றோர்களை நேர்காணல் செய்வதுதான் அவளது வேலை. ஒவ்வொரு நாளும் சலிப்பூட்டும் உரையாடல்களைக் கேட்டு கேட்டு சோர்வுடன் வீடு திரும்பும் அவள், இரவு உணவின்போது துன்பமும் கசப்பும் நிறைந்த வெறுப்பேற்றும் கதைகளைக் கூறுவாள்.

அதே நேரம் மிக முக்கியமான வகையில் சானட்டோரியம்தான் சோஷலிஸக் கனவின் கருத்து வடிவமாக திகழ்ந்தது. சானட்டோரியம் கூட்டுறவுக் குழுவின் பெருமைமிக்க, மெய்யான குழந்தைகள் குடியரசின் படைப்பாகும். இதையே கூட்டுறவுக் குழு எதிர்கால சோஷலிஸ மாநிலத்தின் மாதிரியாகவும் கருதியது. அதன் கோழி பண்ணைகளையும், இன்குபேட்டர்களையும் பராமரிப்பதையும், உயிரினங்களின் (காளான்கள், மீன், வானிலை ஆராய்ச்சி கருவிகள்) கிடங்குகளை கவனிப்பது, தூய்மையை சோதனையிடுவது,

தினசரி செய்திகளை தயாரித்து காலை உணவின்போது [illegible] போன்ற சில வேலைகளையும் குழந்தைகளே செய்தனர்.

'சானட்டோரியன்' என அக்குழந்தைகள் அழைக்கப்பட்டனர். அவர்கள் சமயப்பிரிவுகள் சார்ந்த மன்றங்களில் பங்கேற்றனர். மேலும் குழந்தைகளின் மன்ற உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறு சிறு ஒழுங்கு சார்ந்த சட்ட மீறுதல் வழக்குகளிற்கு தீர்ப்பளித்து அவற்றை ஒருங்கிணைக்கும் பொறுப்பும் அளிக்கப்பட்டிருந்தனர். 1935ஆம் ஆண்டில் போலந்தின் தலை சிறந்த இயக்குநர் அலெக்ஸாண்டர் ஃபோர்ட், மிர் குமென் ஆன் (இதோ நாங்கள் வருகிறோம்) என்ற திரைப்படத்தை சானட்டோரியத்தை மையமாக வைத்து இயக்கினார். இப்படம், போலந்து அரசுக்கு எதிரானது. கம்யூனிஸ படம் என்று போலந்து அதிகாரக் குழுவினரால் தடை செய்யப்பட்டது. இது அபத்தம். ஆனால் சரியான அரசியல்வாதிகள் எப்போதுமே ஜனநாயக பொதுவுடைமைவாதத்திற்கும், கம்யூனிஸத்திற்கும் இடையே உள்ள மெல்லிய வித்தியாசத்தை தயக்கமின்றி சாதகமாக்கிக் கொள்கிறார்கள். அந்த திரைப்படம் ஃப்ரான்ஸில் நடை பெற்ற திருவிழாவில் முதல் பரிசு வென்றதோடல்லாமல் அந்நிய தேசங்களில் மாபெரும் பாராட்டினையும் பெற்றது. நான் அதில் மூச்சை நிறுத்தக்கூடிய இரண்டு காட்சிகளில் தோன்றுவேன்.

கோடை காலங்களில் என் தந்தை ஒரு பண்ணை வீட்டின் அறையை வாடகைக்கு எடுத்து என்னை சானட்டோரியத்தின் மைதானத்தில் விளையாட அனுமதியளிப்பார். மற்ற குழந்தைகள் அவர்களது தினசரி திட்டமிட்ட வாழ்க்கையை பின்பற்றுகையில் எனக்கு மட்டும் அளிக்கப் பட்ட இந்த தனிச் சலுகையில் மகிழ்ச்சி அடைந்த அதே நேரம் குற்ற உணர்வும் எழுந்தது/ நான் எந்த விளையாட்டையும், விழாவையும் தவற விடக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தேன். அதிலும் குறிப்பாக ஜூலை 14இல் (வழக்கமாக) நடைபெறும் பாஸ்ட் டில்லியை கைப்பற்றி அழித்ததை அடிப்படையாகக்கொண்ட ஒரு விளையாட்டு ஞாபகம் வருகிறது.

என் குழந்தைப் பருவம் புதிர் நிறைந்ததாக இருந்தது. அரை நூற்றாண்டு கடந்த பின்பு இப்போது தோன்றுகிறது. பொருக்க முடியாத வறுமையான ஓரளவிற்கு பின்தங்கிய போலந்தில், பாமரர்கள், யூதர்கள்தான் ஏசுநாதரைக் கொன்றவர்கள், யூதர்கள் மற்ற இனக் குழந்தைகளின் இரத்தத்தினை 'Passover' திருநாளில் மேட்ஸோ ரொட்டி தயாரிக்க பயன்படுத்துவார்கள் என்றெல்லாம் நம்பிய நாட்டில்தான் - சோஷலிஸத்தின் விடுதலை கொள்கைக்கும், சர்வ தேசியவாதத்திற்கும், ஒருமைப்பாட்டிற் கும் தங்களையே போலந்தின் பெரும்பான்மையினரோடு தாராளமாய் சமர்ப்பணம் செய்த ஆயிரக்கணக்கான யூத இளைஞர்கள் வாழ்ந்தார்கள்.

நாங்கள் நாட்டின் வரலாற்றுக்கும், கலாச்சாரத்திற்கும் ஆழ்ந்த மரியாதையையும், அறியாத அதன் நாட்டுப்புறத்தின் மீது நேசிப்பற்றும் கொண்டிருந்தோம். யூதர்கள் போலந்தில் வாழ்வதற்கு உரிமை உள்ளது என்ற நம்பிக்கையையும், அவர்களது சொந்த மொழியான யிட்டிஷிலேயே தங்களது ஸ்தாபனங்களை நடத்திக்கொள்ள உரிமையுள்ளது என்னும் நம்பிக்கையையும் இணைப்பதே எங்களது கொள்கையாக இருந்தது. இந்தக் கோட்பாடு ஒரு விநோதக் கலவைதான். எனினும் அது பலன் கொடுத்தது.

என்னுடைய பெற்றோர் இருவருமே அசல் தேசத் தொண்டர்கள். அவர்கள் பழமையான குடும்ப வாழ்க்கையை உடைத்தெறிந்து, மதச்சார்பற்றவர்களாகவும், சோஷலிஸ்டுகளாகவும் தங்களை அர்ப்பணம் செய்து கொண்டார்கள். அவர்களது மதிப்பீடுகள் பகுத்தறிவுச் சிந்தனைகளில் ஊன்றியிருந்தது. அவர்களது நம்பிக்கைகளிலிருந்து நான் பெற்ற பாதுகாப்பு உணர்வுதான் அந்நாட்களில் எனைக் குழப்பிய மற்றக் கொள்கைகளின் தூண்டுதல்களை ஒதுக்கித் தள்ள வழிவகுத்தது.

போல்ஸ்லா ஸெனிஸருடன் எனது சிறிய உரையாடல்களுக்குப் பிறகு, என் ஹோட்டலுக்கு செல்வதற்கான பஸ்ஸில் ஏறினேன். ஸெனிஸரின் வார்த்தைகளுக்கு நான் காட்டிய திகைப்பு ஒரு வேளை, அவன் வேண்டுமென்றே தன்னை இயல்பாகவும், எளிமையாகவும் காட்டிக் கொண்டதற்கு நான் கொடுத்த பரிசாக இருக்கும் என்று எனக்குத் தோன்றியது. ஏறக்குறைய பதினைந்து வருடங்களாக நான் போலந்து யூதர்கள், போலந்து யூத உறவுகள் மற்றும் யூத எதிர்ப்பு பற்றி எழுதிக்கொண்டும், பேசிக்கொண்டும் இருக்கிறேன். வார்ஸாவில், 'ஏறத்தாழ மூவாயிரம் யூதர்கள்' என்றும் நாட்டில் ஒட்டுமொத்தமாக 'ஏழு அல்லது எட்டாயிரம்' என்றும் நான் கணக்கெடுத்திருந்தேன். இங்கு நான் ஒன்று குறிப்பிட வேண்டும். இந்த கணக்கெடுப்பில் 'அறிவிக்கப்படாத யூதர்கள்' அதாவது தாங்கள் யூத வழிவந்தவர்கள் என்று மறுக்காதவர்கள் ஆனால் அதில் அதிக கவனம் செலுத்தாதவர்கள் (தங்களை யூத எதிரிகள் என வெளிப்படையாகத் தெரிவித்துக்கொள்வதற்காக போலந்து செமிட்டிக் எதிர்ப்பை கைவிட்டவர்கள்) சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

வழக்கமாக எனது சொற்பொழிவுகளிலும் கட்டுரைகளிலும், யூத ஆதரவாளர்கள்' என்னும் சொல்லை பயன்படுத்தும் போதுகூட யூதரில்லா செமிட்டிக் எதிர்ப்பு என்று அடிக்கடி குறிப்பிடுவேன். இரண்டு விஷயங்களும் ஒன்றோடொன்று கலக்காமல் நான் தடுத்து விடுவேன். ஆம். போலந்து முழுதும் ஏறக்குறைய யூதர்களற்ற நாடு ஆனால் மிச்சமிருக்க ஏழு அல்லது எட்டாயிரம் பேர் ஒரு அவலமான சிறுபான்மை சமூகத்தை உருவாக்கியிருந்தாலும் அது நடைமுறையில் இருக்கும் சமூகமேயாகும். விட்டாஸ்

திரையரங்கம் ஒன்று வார்ஸாவில் உள்ளது. ஆனால் அதில் நடிக்கும் நடிகர்கள் போலந்துகாரர்கள். யிட்டிஷ் பேசத்தெரியாதவர்கள். பார்வையாளர்களுக்கு மொழிபெயர்க்கப்பட்ட ஒலி நாடாக்களை தந்துவிடுவார்கள். யிட்டிஷ் செய்தி தாள் வாரத்திற்கு மூன்று முறை வரும். அதை போலந்தில் இருப்பவர்களை விடவும் போலந்திற்கு வெளியே இருப்பவர்கள்தான் அதிகம் படிக்கிறார்கள். அடுத்து யூத வரலாற்று கழகம். போலந்தின் வேறு இனத்தவர்களே அதில் வேலை செய்கின்றனர். இத்துடன் யூத சபைத் தலைவர் சோவை சமீபத்தில்தான் வார்ஸா யூதர்களுக்கு வழங்கப்பட்டது. இருபது வருடங்களில் முதல் முறையாக வார்ஸா யூதர்கள் சமீபத்தில் யூதப் பள்ளிக்கூடத்தை நிறுவினர். அதில் கூட போலந்து கற்பிக்கும் மொழியாக இருந்தது. (அந்தப் பள்ளி துவங்கி இரண்டு வருடம்தான் ஆகிறது. அதில் தங்கள் குழந்தைகளை சேர்த்துக்கொள்ளச் சொல்லி போலந்துப் பெற்றோர்கள் தொடர்ந்து கூச்சலிட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இது முடிவின் துவக்கமா? எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

போலந்து இன்னமும், ஒடுக்கப்பட்ட யூத சமூகத்தினருக்கு புகலிடமாக விளங்குகிறது என்பதெல்லாம் இருபது வருடங்களுக்கு முன்பு பொருத்தமானதாக இருந்திருக்கும் என்பது என் யூகம். இப்போது லெஸ்னியாரின் இரக்கமற்ற வார்த்தைகளைக் கேட்கும் போது அது தெளிவாகிறது. கல்லறைத் தோட்டத்திலிருந்து திரும்பிவந்து எனது ஹோட்டல் அறையில் அமர்ந்து ஆழ்ந்து சிந்திக்கும்போது முதலில் எனக்கு எரிச்சல் வந்தது. நானும் இந்த மண்ணிலேயே பதிந்துகொள்ளாமல் போனதாலும், புனைந்து வைக்கப்படும் இந்த கற்பனைக் கதைகளில் பங்கெடுக்காமல் போனதாலும் எனக்கு கோபம் வந்தது. அப்படியிருந்தால் நான் சரியாக அறிந்து கொண்டிருக்க முடியுமல்லவா? நிச்சயமாக.

நானும் கூட இப்புனைவுருவாக்கப் பயிற்சியில் சிக்கிக் கொண்டுப் பங்கேற்றிருக்கவில்லையா? மற்றும் இன்னும் எனக்குச் சரியாகத் தெரிந்திருக்க வேண்டும் இல்லையா? தெரிந்திருக்க வேண்டும். 1958-இல் போருக்குப் பிறகு முதல்முறையாக போலந்திற்கு வருகையில், நான் மெய்ட்செஸ்ஸின் சானட்டோரியத்தை காணச் சென்றேன். அந்தக் கட்டிடம் இன்னும் அப்படியே இருந்தது. எனினும் அந்த இடத்தின் வரலாற்றை அறியாத, அதன் தற்போதைய குடியிருப்பாளர்களான கல்வித் துறை அலுவலர்களைக் கண்டு நான் பெரும் ஏமாற்றமடைந்தேன். முப்பத்தியொரு வருடங்கள் கழித்து 1989இல், விக்டர் குல்ர்ஸ்கி என்ற முன்னாள் Solidarity தலைவரும், ஆசிரியருமானவர் எடுத்த கணக்கெடுப்பினைப் படித்தேன், அதன்படி 1942இல் Aktionக்கு பிறகு, வார்ஸாவிலிருந்தும் அதன் அருகிலுள்ள நகரங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான யூதர்கள் வெளியேற்றப்பட்டார்கள்,


வார்ஸா கெட்டோவில் 1940இல் நாலரை இலட்சமாக இருந்த யூத மக்கள் தொகையில் வெறும் 40,000 பேரைத் தவிர மற்றவர்கள் ட்ரெப்லின்காவில் இருக்கும் விஷவாயுக் கூடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

மீதுப் சானட்டோரியத்தின் குழந்தைகளும் பணியாளர்களும் எவ்வாறு சுற்றி வளைக்கப்பட்டனர் என்பதை குல்ரெஸ்கி அனல் பறக்கும் வார்த்தைகளால் விவரித்துள்ளார். முன்னேறி வந்து கொண்டிருந்த ஜெர்மானிய படைகளிடமிருந்து தப்பிக்க, என் பெற்றோருடன் நானும் இன்னும் சிலரும் சானட்டோரியத்தை விட்டு 1939, செப்டம்பர் ஆறாம் தேதியன்று குதிரை வண்டிகளில், ஆயிரக்கணக்கான போலந்து மக்களைப் போலவே கிழக்கு நோக்கி பயணமானோம். சானட்டோரியத்தில் இருந்த குழந்தைகள் மற்றும் ஊழியர்களின் இறுதி முடிவைப் பற்றிய செய்தி அமெரிக்காவில் இருந்த எங்களுக்கு 1942ஆம் ஆண்டின் கோடையில் கிடைத்தது. அவர்கள் அனைவரும் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள முடியாதவர்கள் உட்பட சுற்றி வளைக்கப்பட்டு ட்ரெப்லின்காவிற்கு அனுப்பப்பட்டனர்.

முப்பது வருடங்களாக சானட்டோரியத்தை ஒழித்துக் கட்டியதைப் பற்றிய குல்ரெஸ்கியின் நெகிழ்வான வர்ணனைகளை படித்ததனால், நான் மெய்ட்ஸெஸினுக்குத் திரும்பவும் செல்வதென முடிவு செய்தேன். நான் புத்த துறவியான மார்க் எடெல்மன்னுடன் சென்றேன். அவர் போலந்தில் இருந்த கெட்டோ எழுச்சியின் தலைவர். முன்னாள் சானட்டோரியஸ்ட் அவரும் சானட்டோரியத்தில் மீதம் விடுபட்டுள்ளதை பார்க்க விரும்பினார்.

நாங்கள் இருவரும் மெய்ட்ஸெஸினுக்கு விரைந்தோம். ஆனால் எங்களிருவருக்கும் நன்றாக நினைவிலிருந்த கட்டிடங்களின் சுவடு கூட காணவில்லை. எங்கள் விசாரிப்பிலிருந்து எதையும் அறியமுடியவில்லை. உள்ளூர் வாசிகள் இளைஞர்களோ, வயதானவர்களோ, எதுவும் சொல்ல முடியவில்லை. ஓர் இடத்தில், மார்க், 'இங்குதான் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. இங்குதான் ட்ரெயின் நிற்கும்' என்று எழுச்சியுடன் கூறினார். 'பத்து நிமிடங்கள் இங்கிருந்து தோப்பு வழியாக நடந்தால், பிறகு புல்திடல் வரும். அங்கிருந்து நூறு மீட்டர் தொலைவில் சானாட்டோரியம் இருக்கும்' என்றார் தண்டவாளம் எப்போதோ போய்விட்டிருந்தது, புல் திடல் அழிந்துவிட்டது. அப்புறம் அந்தச் சிறிய தோப்பு சந்தேகமில்லாமல் பெருங்காடாக மாறியிருந்தது.

இரண்டு நாட்கள் கழித்து விக்டர் குல்ரெஸ்கியே என்னை காரில் மெய்ட்ஸெஸினுக்கு அழைத்துச் சென்றார். அவர் சில வருடங்களுக்கு முன்புதான் அங்கு இருந்தார். அப்போது அங்கிருந்த கட்டிடங்களின் புகைப் படங்கள் சிலவற்றை எடுத்திருந்தார். ஒரு மணி நேரப் பயணத்திற்கு



பிறகு நாங்கள் நிறுத்தினோம். 'இங்குதான்!' குல்ரெஸ்கி அறிவித்தார். கவனிக்கவும்! அவர் கூறிய இடம் எதுவுமற்ற வெற்றிடம். அங்கே எதுவுமில்லை. பழைய கட்டிடத்தின் எந்த சுவடும் மிஞ்சியிருக்கவில்லை. குல்ரெஸ்கி அவ்விடத்தை அடையாளம் கண்டு கொண்டது அங்கிருந்த லில்லி பூக்கள் பூத்திருந்த 1930ஆம் வருடத்தை சேர்ந்த சிறிய குளத்தை வைத்துதான். எக்காரணத்திற்காகவோ அதிகாரிகள், அவர்கள் யாராயிருப்பினும், அந்த இடத்தின் வசதி வாய்ப்புகளை அழித்து தரை மட்டமாக்கியிருந்தது தெளிவாகத் தெரிந்தது.

அங்கு 'ஒன்றுமேயில்லை' என்று சொல்வது அவ்வளவு சரியானதன்று. அருகில், சிறிய மணல் குன்றின் மீது "இங்கு, இந்த இடத்தில் 1942-45இல் போலந்து குழந்தைகள் இல்லம் உள்நாட்டு இராணுவத்தால் பேணப்பட்டது." என்று பொறிக்கப்பட்ட நினைவுக்கல் ஒன்று இருந்தது. இது மட்டும்தான்! மற்றபடி உள்நாட்டு இராணுவம் இதைக் கைப்பற்றுவதற்கு முன் அங்கிருந்த கட்டிடங்களை அழித்ததையோ, மீடம் சானடோரியத்தில் குடியிருந்த நூற்றுக்கணக்கான யூதக் குழந்தைகள் அனைவரும் ட்ரெப்லின்காவின் வாயு அறைகளுக்கு அனுப்பப்பட்ட உண்மைகளைக் குறித்த விபரங்களோ ஏதுமில்லை. போலந்துனுடனான எனது கடைசித் தொடர்பும் ஒரு நல்ல விஷயத்திற்காகப் பயன்பட்டுள்ளது என்று உணர்ந்தேன்.

எனினும் இந்த நிலைமையை உணர்ந்து கொள்வதற்கு பதில் நான் இன்னமும் 'நம்பிக்கொண்டிருக்கும்' வேடிக்கையை தொடர்ந்தேன். சிலைமைக்கிருந்த உள்நாட்டு இராணுவ கல்வெட்டு. போலந்தில் மீந்தி யிருக்கும் நிஜயூத வாழ்க்கை பற்றி அறிய நினைக்கும் எனது முயற்சியை தணித்திருக்க வேண்டும். ஆனால் தணிக்கவில்லை. இன்னும் கற்பனை யிலேயே இருந்தேன்.

விடாப்பிடியாக தொடர்ந்து வரும் செமிட்டிக் எதிர்ப்பும் இக்கற்பனைக்கு பங்களித்தது. பல போலந்துகாரர்கள் கூறுவதுபோல செமிட்டிக் எதிர்ப்பு 'வரையறுக்கப்பட்ட குறிக்கோளையுடையது' 'தனித்துவமானது' என்றெல்லாம் நம்பி என்னை நானே தாலாட்டிக்கொள்ளவில்லை. முன்னாள் அதிபர் லெ வலேசா 'ஆஷ்விட்ஸ் விடுதலை' பற்றி அதில் பாதிக்கப்பட்டவர்கள் தொன்னூறு விழுக்காடுக்கு மேல் யூதர்கள் என்ற உண்மையை மறைத்து-நீண்ட நினைவு உரையாற்றினார். தனது மதகுருவும், பாவமன்னிப்பு வழங்குபவருமான Solidarity பாதிரி ஹென்றி ஜான்கோவ்ஸ்கி-ஒரு போது விளக்கத்திலும், தொலைக் காட்சியிலும் 'போல்ஷ்விக்' பயங்கரத்திற்கு யூதர்கள்தான் வித்திட்டார்கள் என்றும் அவர்களே இரண்டாம் உலகப் போருக்குக் காரணம் என்று பேசியதை கண்டிக்க லே மறுத்துவிட்டார். அவர் தொடர்ந்து பாதிரியார் ஜான்கோவ்ஸ்கிக்கு ஆதரவு தெரிவித்து வந்தார். வாட்டிகனே இதில் தலையிட்டு பாதிரியாரை மன்னிப்பு கேட்க வலியுறுத்தி 'அவர் விலைக்கு வாங்கப்பட்டுள்ளார்' (யாரால்?) எனக் கூறி, இனி அவர் பாதிரியாருக்குரிய கடமைகளை மட்டும் செய்தால் போதும் என்றது.

இதே நேரத்தில் ஆயுதம் தாங்கிய படையின் மதகுரு பிஷப் லெஸ்லெக் க்ளோட்ஸ் என்ற மற்றொரு பாதிரியார் 'போலந்தில் உள்ள பத்திரிகைகள் யாவும் போலந்து மொழியின் (யூதமொழி என்று படிக்கவும்) ஆதிக்கத்தில் கீழுள்ளது; இரண்டு செய்திதாள்கள் மட்டுமே உண்மையாக நம்பத் தகுந்த போலந்து செய்திதாள்கள். ஒன்று கத்தோலிக்கச் செய்தி மற்றது ஆயுத படையின் செய்தி என்று அறிவிப்பு செய்தார். மேலும் ஆர்ச்பிஷப் ததேயுஸ் கோக்லோவ்ஸ்கி அறிக்கைவிடும் கண்டிப்பான அரசியல்வாதிக்கு மதச்சடங்குகளில் இடமில்லை. அந்த விதத்தில் தான் பாதிரியார் ஜான்கோவெஸ்கியின் வார்த்தைகளால் புண்பட்டிருப்பதாக அறிவித்தார்.

Solidarity தொண்டர்கள், யூதர்களும், அவர்களது ஆதரவாளர்களும் வாயுக் கூடங்களுக்கு அனுப்பப்பட வேண்டும், என்று கொடிதூக்கிக் கொண்டு ஊர்வலம் சென்று கோஷமிட்ட போது (1995 குளிர்கால கூட்டத்தில் செய்தது போல்) பல்லாயிர யூதர்களும், போலந்து மக்களும் நடுங்கினர். இது போன்ற நிகழ்ச்சிகளினால் தூண்டப்படும் சீற்றம், வெறுப்புணர்ச்சியை

மட்டுமல்லாமல், போலந்தில் மீதமிருக்கும் யூதர்களுக்கு கெடுதல் விளைவிக்கும் அவர்களது நோக்கத்தையும் யூகிக்க வழிவகுத்தது. எனவே ஜான்கோவெஸ்கியை கண்டிக்க பேச வலேசாவை (இஸ்ரேல் செய்மன் ஷெவார் வீஸ், அமெரிக்கன் யூத கமிட்டியின் மாலிக் மெலிடெல்மன் மற்றும் பலரால்) வலியுறுத்தியது. ஏதோ இந்த கண்டனம் வலேசாவின் சொந்தக் கருத்தையோ, ஒட்டுமொத்த செமிட்டிக் எதிர்ப்பாளர்களின் கருத்தையோ அல்லது யூதர்களின் கருத்தையோ மாற்றி விடுவதைப் போல.

இது போன்ற நிகழ்ச்சிகள் உண்மையில் மிகக் குறைந்த நபர்களே எண்ணிக்கையில் இருக்கும் போலந்து யூதர்களின் வாழ்க்கையிலும், வேலையிலும் மற்ற இன மக்களுடன் உள்ள அவர்களது உறவிலும் மிக அரிதாகவே தாக்கம் ஏற்படுத்தியது. மற்றபடி அவர்கள் யூதப்படுகொலையின் அறிகுறியை அடையாளம் காணக் தங்கள் ஜன்னலிலிருந்து கூட எட்டிப் பார்க்க, தங்கள் பூட்டை அசைத்ததில்லை.

அந்த நாட்கள் எல்லாம் போய்விட்டன. இன்று போலந்தில், போலந்து - யூத உறவு இல்லை. ஏனெனில் உண்மையில் இன்று போலந்திய யூதர்களே இல்லை. கொதிப்பு, கோபம், அக்கறை இவை அனைத்துமே ஓர் எளிய அறவுணர்வு சார்ந்த, போலந்தின் அரசியல் ஆரோக்கியம் சார்ந்த விஷயங்களாகிவிட்டன.

எனக்கு முன்னமே இதைப் பற்றிய விழிப்பு இருந்தது என்றாலும், இப்போது, கல்லறைத் தோட்டத்தைப் பார்த்த பிறகு லெவினின் வார்த்தைகளைக் கேட்ட பிறகு இருக்கும் தீவிரம், இதற்கு முன் இருந்ததில்லை. இந்த உண்மைகளை முழுதும் உணர்ந்த பிறகு, ஒரு காலத்தில் பேதின அணிவகுப்பாளர்கள் போட்ட கோஷத்தின் சப்தமும், ஆர்ப்பரிப்புகளும் காற்றில் கலந்திருந்த சதுக்கத்தினை நான் எனது ஹோட்டல் அறையின் ஜன்னலிலிருந்து பார்த்து கொண்டே, இத்தனை காலமும் என்னை ஆட்கொண்டிருந்த மாயையை இனி உதிர்க்க வேண்டும் என்று எனக்குள்ளே சொல்லிக் கொண்டேன்.

ஒருவேளை திரும்பவும் கல்லறைத் தோட்டத்திற்கு என்றாவது நான் வருவேன். ஆனால் அது நிச்சயம் போல்ஸ்லா லெவினர் அதன் கனத்த வாசற்கதவுகளை பூட்டிவிட்டு சென்றபிறகுதான். நான் வெளியே நின்று கொண்டு வேலியின் வழியே உள்ளே பார்த்து, நினைத்துக் கொண்டிருப்பேன்.

* **ஆபிரஹாம் பிரம்பெர்க்** : ரஷியாவைப் பற்றியும், கிழக்கு ஐரோப்பாவைப் பற்றியும் அதிகமாக எழுதியிருப்பவர். தற்போது வாஷிங்டனில் வசிக்கிறார்.

மயிலம்மா ஒரு ஜீவிதம்

தமிழில் : காளிங்கராயன்

ஆவணம்



2002 ஏப்ரல் மாதம் 22ம் தேதியன்றைக்குத்தான் போராட்டத்தைத் தொடங்கறதுன்னு முடிவு செஞ்சோம். அன்றைக்கு ஒரு விசேசமான நாளாம். பூமிதினம். எங்களை மாதிரி பாவப்பட்ட சனங்களுக்கு எங்க சொந்த மண்ணுக்காகவும், காற்றுக்காகவும், தண்ணீருக்காகவும் வேண்டி போராடறதுக்கு இதைவிட சரியான நாள் வேற எதிருக்குது?

அந்தன்னைக்கே கம்பெனிக்காரங்க எங்களுக்கு இடையிலே பிரச்சனையை உண்டாக்கி அதை திசை திருப்ப பார்த்தாங்க. உங்களுக்கு தண்ணி தர்றோம், கம்பெனியிலே வேலை தர்றோம்னு எல்லாம் அவங்க சொன்னாங்க. அவங்க (விரிச்ச) வலையிலே விழுகிறதுக்குன்னும் கொஞ்சம் பேர் இங்கே இருந்தாங்க. அப்புறம் வேலுவண்ணாதான் எங்க கூட்டத்துக்கு எல்லா விஷயத்தையும் சொல்லி புரிய வெச்சாரு. ஆனாலும் கொஞ்சம் பேர் கம்பெனி வேலைக்கு போனாங்க. எல்லா இடத்திலேயும் இந்த மாதிரி சிலபேரு இருப்பாங்க இல்லையா அப்படின்னு நாங்க நெனைச்சு விட்டுட்டோம்.

போராட்டத்தன்னைக்கு காலையிலெ சி.கெ. ஜானு எல்லாரோடயும் வாகனத்திலே ஊர்வலமா வந்து சேர்ந்தாங்க. அன்னைக்கு ஜானுதான் போராட்டத்தை தொடங்கி வெச்சாங்க. பந்தலெல்லாம் போட்டு போராட்டம் தொடங்கியாச்சு. முடிஞ்சளவுக்கு எல்லோரும் போராட்டத்திலே கலந்துக்கறதுன்னு தீர்மானம் செஞ்சிருந்தோம். எத்தனை நாள் நடக்கும்னு எல்லாம் யாரும் யோசனைகூட செஞ்சு பார்க்கலை. ஆலோசனைக் கூட்டம் நடக்கும்போதே அதிலெ விஜயகுமாரண்ணன் சொன்னாங்க, "நீங்க நெனக்கற மாதிரி, தடபுடலெல்லாம் கம்பெனிய பூட்டிற மாட்டாங்க அவங்க" அப்படீன்னு. தலைவருங்கள்ளே யாரோ கிறிஸ்தவங்களோட ஒரு கதையை சொன்னாங்க.

தாவீதுவோ என்னவோ பேருள்ள சின்னப்பையன், ஒருத்தன் கோலியாத்துங்கற ராட்சசனை தோற்கடிச்ச கதை. அதைப் போலத்தான் கம்பெனிக்கு எதிரா நின்று நாங்க போராடறதும். கதையிலே அந்த சின்னப் பையன் ஜெயிச்சுட்டான்னுதான் சொல்றாங்க. அது மாதிரியே எத்தனை காலமானாலும் நாங்களும் ஜெயிப்போம்கற ஒரு நம்பிக்கை எங்களுக்கு தோணுச்சு.

ஜானு அன்னைக்கு நிறைய விசயங்களெல்லாம் சொன்னாங்க. அவங்க ஊர்லெ நடந்த போராட்டத்தைப் பத்தியெல்லாம் அவங்க சொன்னத கேட்டப்போ அதுவே எங்களுக்கும் ரொம்ப தெம்பா இருந்துச்சு. அப்படியொண்ணும் தோத்துப் போயிற மாட்டோம்ற உறுதி மனசுல தோணுச்சு. கோத்திரமகாசபையோட முழு ஆதரவும் எங்களுக்கு உண்டுன்னு ஜானு சொன்னாங்க. ரொம்ப சந்தோஷமா இருந்துச்சு. ஆனா பின்னாலே யோசிக்கும்போது ஜானு மேல ஒரு பெரிய வருத்தம் தோணுச்சு. இங்கே போராட்டம் தொடங்கி கொஞ்ச நாள்லேயே முத்தங்கா சம்பவத்தைக் காரணம் காட்டி, போலீஸ் ஜானுவைப் பிடிச்சுட்டுப் போயி ஜெயில்லே அடைச்சிடுச்சு. எங்க ஆட்கள்ளெ ஒருத்தரை பழி வாங்கிட்டாங்கன்னு எங்களுக்கெல்லாம் தோணுச்சு. பாலக்காடு போயி லாந்தர் வெளக்கு எல்லாம் கொளுத்தி ஊர்வலம் நடத்தினோம். திருவனந்தபுரம் போயி ஜானுவையும் பார்த்துட்டு வந்தோம். நாங்களெல்லாம் எங்களுக்கு

துணையாயிருப்போம்னு தைரியம் சொல்லிட்டு வந்தோம். ஆனா ஜெயில்லேயிருந்து வெளியே வந்த பிறகும் கொஞ்ச நாளைக்கு ஜானு எங்க பக்கம் திரும்பிக்கூட பார்க்கலை. இதுக்கிடையிலே ஒரு முறை பாலக்காட்டிலெ வச்சு மகளிர் சங்கக் கூட்டத்திலெ அஜிதா டீச்சரெல்லாம் வந்திருந்தபோது ஜானுவும் கூடெ இருந்தாங்க. அதுக்கப்புறம் ஒரு நாள் போராட்டப் பந்தலுக்கும் வந்தாங்க. ஆனாலும், முன்னத்தெ மாதிரி அத்தனை நெருக்கம் எங்களோட அவங்களுக்கு இல்லை. ஒரு வேளை அது எங்களோட நெனைப்புதானோ என்னவோ தெரியலை. ஆனாலும், எங்கெல்லோருக்கும் அதிலெ பெரிய வருத்தமுண்டு. எங்கள் மக்கள் எல்லோரும் கூடி ஒண்ணா நின்னு போராடினாத்தான் அது பலமுள்ளதா இருக்கும்னு எனக்குத் தோணுது.

அதுபோலவே அய்யங்காளிப்படையின் ஆட்களும் ரெண்டு மாச காலம் என்ன நடந்தாலும் எல்லாத்துக்கும் எங்க கூடவே இருந்தாங்க. ஆதிவாசிகளுடைய ஒரு பிரம்மாண்டமான பொதுக்கூட்டமும் அவங்க நடத்தினாங்க. அது முடிஞ்சதும் விட்டுட்டுப்போனவங்கதான். மறுபடியும் பத்து மாசம் கழிஞ்சப்புறம்தான் வந்தாங்க. அதுக்குள்ளே போராட்டத்திற்கு இடையிலே நாங்கள் ஒருபாடு கஷ்டங்களை அனுபவிச்சோம்.

பிரேமா டீச்சர் மட்டும் இப்பவும் இடையிடையே வந்து போராட்டத்திலே கலந்துக்கறாங்க. பந்தல்லெ எங்ககூட உட்கார்ந்து நிறைய பேசுவாங்க. எப்ப வந்தாலும் எங்ககூடெ உட்கார்ந்து ஒருவாய்ச்சோறு சாப்பிட்டுத்தான் டீச்சர் போவாங்க.

போராட்டம் நடந்துகிட்டிருக்கும்போது ஒருபாடு ஆட்கள் வந்துட்டும், போயிட்டும் இருந்தாங்க. எல்லோரும் எங்களுக்கு துணையா இருக்கறதா சொல்லிட்டுப் போவாங்க. நிறைய புஸ்தகம் எழுதறவங்க எல்லாம் வந்தாங்க. மேதாபட்கரும் அவங்களை மாதிரியுள்ள பெரிய ஆட்களும் வந்திருந்தாங்க. சாரா ஜோசப் டீச்சர், சுகதகுமாரி டீச்சர், வாசுதேவன் (நாயர்) சார், அழிக்கோடு சார் இப்படி நிறைய பேர் வந்திருந்தாங்க. கிருஷ்ணய்யர் அப்பாடீங்கற ஜட்ஜ் சாரும் வந்திருந்தாங்க. மறுபடியும் மறுபடியும் ரொம்ப தூரதூர ராஜ்யங்களிலிருந்து யார் யாரோ வந்தாங்க. அவங்களெல்லாம் எங்களோட பிரச்சனைகளைப் பத்தி அவங்களோட பாஷையிலெ கேட்டாங்க. அவங்ககூட வந்தவங்க அதையெல்லாம் அவங்களுக்கு புரியற மாதிரி சொல்லுவாங்க. அவங்களோட பேரெல்லாம் எனக்கு வாயிலே வர மாட்டேங்குது. வேற வேற பாஷையிலெ அவங்க கூட்டத்திலே பேசறது எங்களுக்கு எதுவும் புரியறதில்லை. எப்பவும் ஏதாவது பிரசங்கம் இருந்துட்டே இருக்கும்.

எல்லாருமே பேசறது ஒரே பிரச்சனையைத்தான். கேட்டு கேட்டு நானும்

கூட்டம் பேசக் கத்துக்கிட்டேன். இல்லேன்னாலும் மனசிலே ஒருபாடு பிரச்சனைகள் அலைக்கழியும்போது [illegible] தோணுது. இப்பவெல்லாம் ஒரொரு எடத்துக்கும் கூட்டம் பேசறதுக்கும், விளக்கு ஏத்தி தொடங்கி வெக்கறதுக்கும் பல பேரு வந்து கூட்டிக் கொண்டு போறாங்க. எங்கே போனாலும் எனக்கு சொல்றதுக்கு ஒரே விசயம்தான் இருக்கு. [illegible] அதைக் கேட்டு யாரு வந்தாலும் அவங்களுக்கு எதிரா நாங்க எப்பவும் போராடுவோம்" இப்படிப் பேசி பேசி தமிழ் வரமாட்டேங்குது. இடையிடையிலே மலையாளத்திலே பேசிடலாம் ...னு எல்லாம் ஆகிப்போச்சு.

போராட்டம் தொடங்கி கொஞ்ச நாள்லே பாக்கிறவங்களுக்கெல்லாம் அதுவொரு பரிகாசமாயிருந்துச்சு. வேலயும் கூலியும் தொலைச்சுட்டு போராட்டம் பண்றதுக்கு உட்கார்ந்துட்டாங்க வெவரம் கெட்டவங்க. இவ்வளவு பெரிய கம்பெனிக்கு முன்னாலே இவங்களாலே என்ன செஞ்சுற முடியும். உடுதுணிக்கு மறுதுணியில்லே, ஒரு துண்டு சோப்புக்கு வழியில்லே போராட்டம் பண்றதுக்கு உட்கார்ந்துட்டாங்க. நாலு நாளைக்கு உட்காருவாங்க அப்புறம் வயிறு காஞ்சா எந்திருச்சு போயிருவாங்க அப்படீன்னுதான் பரிகாசம் பண்ணுவாங்க. வேலை செய்ய சோம்பேறிப்பட்டுத்தான் நாங்க பந்தல்லே உட்கார்ந்திருக்கோம் அப்படீன்னு கம்பெனிலே குப்பி கழுவப் போற பொம்பளைங்க சொல்றாங்க.

அப்படியும் இப்படியுமா போராட்டம் அம்பதாம் நாளைத் தொட்டுருச்சு. அன்னைக்கு எர்ணாகுளத்திலேர்ந்து டாக்டர். நந்தகுமார் சார் வந்து போராட்டத்திலே கலந்துகிட்டு பேசினாங்க. இவங்களையெல்லாம் அடிச்சு நொறுக்கணும் அப்படீன்னு. இங்கே வந்திருந்த போலீஸ்காரங்ககிட்டே எங்க கூட்டத்து ஆள் ஒருத்தனே சொல்லிகிட்டு இருந்ததை நான் காதாரக் கேட்டேன். போராட்டத்தப்ப அந்த மாதிரிதான் போலீஸ் செஞ்சாங்க. நாங்க தீவிரவாதிகளைக் கூட்டிட்டு வந்துதான் கூட்டம் நடத்தறோம். நந்தகுமார் சாரோட டிரைவர் பையனைப் போட்டு, போலீஸ்காரன் பச்சப்பச்சயா கெட்டவார்த்தையிலே திட்டுனான்.

அப்புறம் அய்ம்பத்தஞ்சாம் நாள் முடிஞ்சதும், நாங்க ஒரு வேலை செஞ்சோம். சிறீதர் அண்ணன் சொன்னபடி ஒரு விவசாய நிலத்திலே [illegible] கொண்டுபோயி கம்பெனி வாசல்லேயே போட்டுட்டு வந்துட்டோம். அது எவ்வளவு நாற்றமடிக்கும்ங்கறதை அவங்களும் தெரிஞ்சுக்கட்டும் அப்படீன்னு தான் நாங்க நெனைச்சோம். அன்னைக்கும் நல்லா அடிதடி நடந்துச்சு. அம்பிகாவோட தாலிச்சங்கிலி உடைஞ்சிருச்சு. துணியெல்லாம் கிழிஞ்சு போச்சு. நிறைய பேரை போலீஸ் டேசனுக்கு கொண்டு போனாங்க.



மேதாபட்கரும் மயிலம்மாவும்

ஒருதரம் பஞ்சாயத்து கட்டடத்தை நோக்கி நாங்க ஊர்வலம் போனோம். எந்த நாள்னு நெனவுக்கு வர்லே. அன்னைக்கு எங்களுக்கு இருந்த கோபத்திலெ பஞ்சாயத்து கட்டிடத்திலெ மாட்டுச்சாணி எடுத்தெறிஞ்சோம். உண்மையாலும் அன்னைக்கு எல்லோரும் நல்ல கோபத்திலே இருந்தோம். எங்களுக்கு தோணுனது எல்லாம் இதுதான். எல்லா அரசியல்வாதிகளும் எங்களுக்கு எதிரானவங்கதான். படிப்பும், வெவரமும் இல்லாத எங்களுக்கெல்லாம் என் அதாவுது நிக்கணும்னு அவங்க நெனச்சிருப்பாங்க. பெரிய கம்பெனி முதலாளி மாதிரியா இந்த பாவப்பட்ட மலைசனங்கள். அவங்களுக்கு எங்களோட ஓட்டு வேணும். எங்களுக்கும் தெரியும் ஒரு ஓட்டோட விலை என்னன்னு ஒவ்வொரு கட்சிக்காரங்களும் வந்து அவங்கவங்க கட்சிக்கு ஓட்டுப் போடுங்கன்னு கேட்பாங்க. நாங்களும் அவங்க சொன்னதை நம்பி ஓட்டு போடுவோம். பஞ்சாயத்திலெ ஆள், எம்எல்ஏ காங்கிரஸ், எம்பி மார்க்சிஸ்ட் எல்லாரும் இருக்காங்க. இவங்கெல்லாம் எங்களுக்குத் துணையாக இருப்பாங்கன்னு நாங்க நெனைச்சோம். அப்படியிருக்கும்போது நாங்க எதுக்கு கம்பெனியைக் கண்டு பயப்படணும். பொறந்தாலும் செத்தாலும் தண்ணி வேணும். அப்பேர்ப்பட்ட தண்ணியைத்தான் எங்க கையிலேர்ந்து கட்டிப்பறிச்சிட்டாங்க. அந்தப் போராட்டத்திலே - அதுக்காக - யாரு கம்பெனிக்கு ஆதரவா இருந்தாலும் நாங்கள எதிர்ப்போம்.

ஒவ்வொரு வீட்டிலேயும் ஏழும், எட்டுமா ஓட்டுகள் இருக்குது. அதையும் கொடுத்திட்டு சும்மா கெடக்கறதுக்கு நாங்க ஒண்ணும் தலையாட்டி பொம்மைங்க இல்லையே. அச்சுதன்னன் ஓட்டுப்போடச் சொன்னாரு. அதையும் செஞ்சோம். ஏழுமுப்பது தொண்ணூறு நாளில் தண்ணின்னு அவரு சொன்னாரு. பிரசிடெண்டு சொன்னாரு ஒரு வருசம்னு. கிருஷ்ணதாசன்னன் சொன்னாரு போராட்டம் ஜெயிச்சாலும் தோத்தாலும் நானும் உங்ககூட இருப்பேன்னு. இதெல்லாம் போதுமா? சொல்வாக்கை மட்டும் நம்பி நாங்க எத்தனை நாளிருக்கிறது?

எம்மெல்லே அண்ணன் வீட்டிற்கு நாங்க வெளக்குமாறைக் கையிலே பிடிச்சுட்டுத்தான் ஊர்வலம் போனோம். எல்லோருமே கூட இருந்தாங்க. அன்னைக்கு என்னாலே போக முடியலை. அம்பிகாதான் இதையெல்லாம் சொன்னாள். கலியாணமோ, எளவோ மாதிரியா இந்த விசயம்? நீங்க முதல்லேயே என்னை நேர்லெ வந்து கூப்பிடலைன்னு அவரு சொன்னாராம். பெரிய பெரிய ஆளுங்கெல்லாம் இப்படி சொன்னா நாங்க என்னதான் செய்யறது. வேதனைப்படறதைத் தவிர வேறென்ன வழின்னு எங்களுக்கு புரியலை.

இப்படி போராட்டமும், பொதுக்கூட்டமும், ஆர்ப்பாட்டமும், ஊர்வலமும், பரிகாசமும் எல்லாமாய் ஒரு வருசம் போயாச்சு. அதுக்கிடையிலே யாரெல்லாமோ வந்திட்டுப் போனாங்க. ஒரு கூட்டத்தார் தண்ணியெல்லாம் சுத்தமாயிருக்காண்ணு பார்க்கறதுவங்கன்னு சொல்லக் கேள்வி. தண்ணியெல்லாம் கொண்டு போயி டெஸ்ட்டு பண்ணினப்போ அது குடிக்கறதுக்கே ஆகாதுன்னு கண்டு பிடிச்சாங்களாம். அது போலவே திருவனந்தபுரத்திலே கம்பெனி கழிவையும் (உரம்) டெஸ்டு பண்ணக் கொண்டு போனாங்க. அதிலேயும் உரமோன்னும் இல்லைண்ணு கேள்விப் பட்டோம். ஆக மொத்தம் இந்தக் கம்பெனியாலே இந்த நாட்டு மக்களுக்கு நாசமில்லாதெ ஒரு குணமும் இல்லைங்கறது வரவர உறுதியாயிருச்சு.

கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு நமது இடதுசாரி சிந்தனையாளர்களும் களப்போராளிகளும் (குறிப்பாக ம.க.இ.க. தோழர்கள்) கண்டுணர்ந்து எச்சரிக்கை செய்யப்பட்ட "மறுகாலனியக் கொடுங்கனவு" இன்று பலவிதமாகி விட்டிருந்தது. நமது மண்ணும், காற்றும் நீரும் நஞ்சாகிக் கொண்டிருக்கின்றன. நமது அடுத்த தலைமுறையினருக்கு சிறுசிறுக்கச் சுவைப்பதற்கு மரணத்தை மட்டுமே நாம் கையளித்துவிட்டுச் செல்லவிருக்கிறோம்.

கேரள மாநிலம், பாலக்காடு மாவட்டம் பிளாச்சிமடா என்கிற முப்போகம் விளையும் கிராமத்தில் 2000 மார்ச்சில் கோக் ஆலை நிறுவப்பட்டது. இரண்டே ஆண்டில் சுற்றியுள்ள கிராமங்களின் விளைநிலங்கள் சுடுகாடாகி விட்டன. கடந்த நான்கரை ஆண்டுகளாக தொடர்ந்து கொண்டிருக்கிறது. கோக் எதிர்ப்பு போராட்டம். அபபோராட்டத்தின் முக்கியமான களப்போராளிகளுள் ஒருவரான மயிலம்மா என்கிற பழங்குடியின் பெண்மணியின் தன்வரலாற்று நூலிலிருந்து ஒரு பகுதி இங்கே தரப்படுகிறது.

மயிலம்மா ஒரு ஜீவிதம் சுகுமாரனின் மொழிபெயர்ப்பில் பொள்ளாச்சி எதிர் வெளியீடு பதிப்பகத்தால் விரைவில் நூலாக்கப்படவிருக்கிறது. ❐

86ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...

விதவிதமான கனிகளைப் பறித்துக்கொடுத்தாள். பின்பு இதுதான் நாகரிகம் தோற்றுவித்த கனி என்று கொடுத்து, இக்கனியை உண்ணாதிருந்ததால் நாகரிகம் தோன்றியிருக்காது அல்லவா? என்று ஒரு கேள்வியும் கேட்டுவைத்தாள். ஒரு குழந்தைபோல் என்னைத் தாலாட்டி இடுப்பில் இட்டு நிலாச்சோறு உண்ணக் கொடுத்தாள். நான் முதலில் வரைந்த முட்டை ஓவியத்தை வரைந்து கொடுத்தாள். அவளின் பசிக்கு என் உதடுகளைத் தின்றுகொண்டிருந்தாள். பசி என்ற பெயரே மறந்துவிட்டது என்று சொல்லி உன் பசி போக்க நீ என்னைத் திண்ண வேண்டும் என்ற புதிதாய்ச் சொல்லிக் கொடுத்தாள். முதலில் உச்சத்தில் ஆரம்பித்து ஒவ்வொன்றாய்த் திண்ணக் கொடுத்தாள். இங்குதான் அதிகமாய் உண்ண வேண்டும் என்று அடிக்கடிச் சொல்லிக்கொண்டாள். என் உச்சம் அதிகரிக்காது ஒவ்வொன்றாய்த் திண்ணக்கொடுத்தாள். முதலில் உதடு, அது உப்பாய் ஆனழ. அவள் முனகும் முன்னே என் உதடை எடுத்துவிட்டேன். அவள் என் உதடை இழுத்து அவள் மார்பகத்தில் பூட்டிக்கொண்டாள். அறுந்துவிடும்போல் இருந்தது. விலகிவிட்டேன். பின்பு என் உதட்டைப் பிடித்து அவள் உறுப்பில் திணித்துவிட்டாள். மலத்துடன் கூடிய இரத்த வாடையில் அதிர்ந்து அப்படியே விட்டு விலகினேன். சில நிமிடம் அமைதி, மெதுவாக அவளைப் பார்த்தேன். அவளின் கண்கள் இரண்டும் தொங்கிக்கொண்டி ருந்தது. அவளின் மார்பகத்தை அறுத்துவீசிக்கொண்டிருந்தாள். தொப்புளில் அழுகிய இரத்தம் வழிந்துகொண்டிருந்தது. தொடைகள் அழுகி உதிர்ந்துகொண்டிருந்தது. திடீர் என்று என்னை அணைத்துக்கொள் என்று நாக்கை சுழவி கத்தினாள். விலக,விலக என்னைத் துரத்தினாள். நான் அறுபட்டு கீழே விழுந்தேன்.

என் ஓவியம் இருக்கும் அறைக்கு ஓடினேன். ஓவியம் திருப்பி வைக்கப்பட்டிருந்தது. மெதுவாக அருகில் சென்றேன். ஓவியத்தைத் திருப்பிப் பார்த்தேன். கித்தானில் உள்ள வண்ணங்கள் ஒன்றோடு ஒன்று கலந்து, உருவம் கலைந்து ஓவியம் எழுங்கில்லாது ஒழுகிக்கொண்டிருந்தது. ☐

தொடர்புக்கு
39 ஜே.கே.சி. தெரு
காவேரிப்பட்டணம் 635 112
செல்: 98426 47101
puduezuthu@yahoo.com

புது எழுத்து

புதிய வெளியீடுகள்

தமிழகத் தொல்லியல் கழக
இவது கருத்தரங்கிற்காக வர உள்ள சிறப்பு நூல்கள்

சொ.சாந்தலிங்கம் எழுதிய
வரலாற்றில் தகடூர்

விஜய நகரம்
நூனிஸின் குறிப்புகள்
தமிழில்: சா.தேவதாஸ்

பெரிபுளூஸ்

மன்றோ கடிதங்கள்
தமிழில்: இரா.நடராசன்

ஜூலை இறுதியில் வெளிவருகிறது.
நான்கு புத்தகங்களும் ரூ.200 மட்டுமே
(அஞ்சல் செலவு உட்பட)
மிகக் குறைந்த பிரதிகளே அச்சிடப்படுகின்றன